# ஆண்டறிக்கை 2018

## இலங்கை மகாவலி அதிகார சபை

# இலங்கை மகாவலி அதிகார சபை ஆண்டறிக்கை – 2018

**உள்ளடக்கம்** **பக்கம்**


| | |
|---|---|
| நோக்கு மற்றும் பணி | i |
| வரலாற்றுப் பின்னணி | ii-viii |
| 2018 ஆம் ஆண்டின் போது பணிப்பாளர் சபையின் உள்ளடக்கம் | ix |
| சிரேஷ்ட முகாமைத்துவம் -2018 | x-xi |
| 2018 ஆம் வருடம் தொடர்பான பணிப்பாளர் நாயகத்தின் மீளாய்வு | xii-xiii |
| பணிப்பாளர் சபையின் சுருக்கக் குறிப்பு | xiv |
| 2018 கணக்காய்வு கமிட்டி அறிக்கை | xv-xvi |
| கடந்த 7 ஆண்டுகளில் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் | xvii |
| இலங்கை மகாவலி அதிகார சபையின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் கம்பனிகளின் பணிப்பாளர் சபைகள்- 2018 | xviii |

**01. பாகம்**

**முதலாவது அத்தியாயம்**

| | |
|---|---|
| **இலங்கை மகாவலி அதிகார சபை ஸ்தாபிதம்** | **(01- 16)** |
| இலங்கை மகாவலி அதிகார சபையின் உள்ளடக்கம் மற்றும் கருமங்கள் | 01-04 |
| இலங்கை மகாவலி அதிகார சபையின் பொதுவான நிர்வாக கட்டமைப்பு | 05 |
| மகாவலி வலயங்களின் கட்டமைப்பு மற்றும் நிர்வாகம் | 06-14 |
| தலைமை அலுவலக இயக்குதல் பிரிவு | 15 |
| திட்டமிடல் மற்றும் இயக்குதல் பிரிவு | 16 |
| உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு | 16 |

**இரண்டாவது அத்தியாயம்**

| | |
|---|---|
| **தொழில்நுட்பச் சேவைகள் பிரிவு** | **(17-41)** |
| கருமங்கள் | 17 |
| கருத்திட்ட திட்டமிடல் மற்றும் அமுலாக்கல் | 17-20 |
| ஆற்றுப் பள்ளத்தாக்கு முகாமைத்துவ அலுவலகம் | 21-22 |
| முதன்மை வேலைகள் கட்டுப்பாட்டு, செயற்பாட்டு மற்றும் பராமரிப்புப் பிரிவு | 23-26 |
| நீர் முகாமைத்துவ செயலகம் | 27-31 |
| காணிப் பாவனை திட்டமிடல் பிரிவு | 32-36 |
| வன மற்றும் சுற்றாடல் பாதுகாப்புப் பிரிவு | 37-41 |

**மூன்றாவது அத்தியாயம்**

| | |
|---|---|
| **அபிவிருத்திப் பிரிவு** | **(42-70)** |
| காணிப் பிரிவு | 42-45 |
| விவசாய அபிவிருத்திப் பிரிவு | 46-53 |
| கடற்தொழில் மற்றும் கால்நடை அபிவிருத்திப் பிரிவு | 54-59 |
| நிறுவன அபிவிருத்திப் பிரிவு | 60-62 |
| வணிக அபிவிருத்திப் பிரிவு | 63-70 |

**நான்காவது அத்தியாயம்**

| | |
|---|---|
| **மனித வளங்கள் மற்றும் நிதி முகாமைத்துவப் பிரிவு** | **(70-83)** |
| மனிதவள முகாமைத்துவப் பிரிவு | 71-74 |
| சட்டப் பிரிவு | 75 |
| நிதிப் பிரிவு | 76-77 |
| மகாவலி பாதுகாப்பு படை | 78-79 |
| மகாவலி நிலையம் | 80-82 |
| போக்குவரத்துப் பிரிவு | 83 |

**ஐந்தாவது அத்தியாயம் i பிரிவு**

**இலங்கை மகாவலி அதிகார சபையின் கீழ்**

| | |
|---|---|
| i ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் கம்பனிகள் | 84 |
| ii பிரிவு வருடாந்தக் கணக்குகள் | 85-97 |
| iii பிரிவு கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை | 98-111 |
| iv பிரிவு கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை தொடர்பான பணிப்பாளர் நாயகத்தின் விளக்கக் குறிப்புக்கள் | 112-134 |
| v பிரிவு இலங்கை மகாவலி அதிகார சபையின் ஒட்டுமொத்த செயலாற்றுகை அறிக்கை மற்றும் முதலீட்டுத் திட்டம் - 2018 | 135-152 |

## நோக்கு

நிலைபேறான விவசாயம், புதுப்பிக்கத்தக்க வலு, சுற்றாடல் பாதுகாப்பு மற்றும் மகாவலி பிரதேசங்களில் வசித்து வரும் பிரஜைகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல் என்பவற்றுக்கென நிலம் மற்றும் நீர் என்பவற்றை உச்சமட்டத்தில் பயன்படுத்தி வரும் இலங்கையின் தலைசிறந்த நிறுவனமாக இருந்து வருதல்.

## பணி

மகாவலி சமூகத்தினரையும், அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தையும் மேம்படுத்துவதற்கென புதுப்பிக்கத்தக்க வலு, பசுமை சுற்றாடல் மற்றும் சுற்றாடலைப் பேணும் சுற்றுலாத் துறை என்பவற்றின் பங்களிப்பை பெற்று, புதிய தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட புதுமைப்புனைவிலான மற்றும் நிலைபேறான விவசாய வினைதிறனை எடுத்து வரும் பொருட்டு நிலம் மற்றும் நீர் வளங்களை உச்ச மட்டத்தில் பயன்படுத்திக் கொள்வதற்கென நெறிப்படுத்துதல்.

## வரலாற்றுப் பின்னணி

மகாவலி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் இலங்கையில் இதுவரையில் மேற்கொள்ளப்பட்ட மிகப் பெரிய பௌதீக மற்றும் மனித வள அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டமாக இருந்து வருகின்றது. முக்கியமாக இலங்கை நாட்டின் உலர் வலயத்தின் கிராம அபிவிருத்தி தொடர்பாக அடிப்படையில் கவனம் செலுத்திய இந்த நிகழ்ச்சித்திட்டம் அப்போதைய அரசாங்கத்தினால் 1968 ஆம் ஆண்டில் ஐ நா அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்/ உணவு மற்றும் விவசாயத் தாபனம் (UNDP/FAO) என்பவற்றின் தொழில்நுட்ப உதவியுடன் வடிவமைக்கப்பட்டது. நாட்டின் மத்திய மலைப் பிரதேசங்களின் இயற்கை நீர் ஆதாரங்களை உலர் வலயத்தில் விவசாய மற்றும் குடியேற்ற அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கென பயன்படுத்திக் கொள்வதில் மகாவலி திட்டம் மிக முக்கியமான பாத்திரத்தை வகித்து வந்துள்ளது.

இலங்கையின் துரித குடித்தொகை வளர்ச்சியின் விளைவாக ஏற்பட்டிருந்த பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் அதன் முயற்சியின் போது உற்பத்தியைத் துரிதப்படுத்தும் விடயத்தில் நாடு கவனம் செலுத்த வேண்டிய தேவை இருந்து வந்தது. 1940 களின் அளவுகளுடன் ஒப்பிடும் போது 1969 இல் இலங்கையின் குடித்தொகை இரட்டிப்பாக அதிகரித்ததுடன், அவ்வாண்டில் அது 11. 8 மில்லியன் மட்டத்தை எட்டியிருந்தது. அப்பொழுது நாட்டின் வருடாந்த குடித்தொகை அதிகரிப்பு 3.1 சதவீதமாக இருந்து வந்தது. அக்காலகட்டத்தில் இடம்பெற்று வந்த குடித்தொகை அதிகரிப்பின் பின்புலத்தில் 1980 ஆம் ஆண்டளவில் நுகர்வுக்கென இலங்கைக்கு 1.8 மில்லியன் மெட்ரிக் தொன் அரிசி தேவைப்படும் என அனுமானிக்கப்பட்டிருந்தது. எனினும், அச்சந்தர்ப்பத்தில் நாட்டில் 0.7 மில்லியன் மெட்ரிக் தொன் அரிசி மட்டுமே உற்பத்தி செய்யப்பட்டு வந்தது. மேலும், கைத்தொழில் அபிவிருத்தி, வீட்டு நுகர்வு என்பவற்றுக்கான மின்சாரத்துக்கான கேள்வி 2000 gwh அலகுகள் என மதிப்பிடப்பட்டிருந்தது. எவ்வாறிருப்பினும், 1969 ஆம் ஆண்டில் வருடாந்த மின்சார உற்பத்தி 470 gwh அலகுகளாக இருந்து வந்ததுடன், நீர்மின் உற்பத்தி நிலையங்கள் இதில் 388 gwh அலகுகளை பங்களிப்புச் செய்து வந்தன. குதி மின்சாரம் அனல் மின் நிலையங்கள் மூலம் எரிபொருள் பாவனையுடன் உற்பத்தி செய்யப்பட்டு வந்தது. 1960 – 1967 காலப்பிரிவின் போது வருடாந்த அரிசி இறக்குமதி 466,000 மெ. தொன்களாக இருந்து வந்ததுடன், அதன் விளைவாக ஒவ்வொரு வருடமும் 200 மில்லியன் ரூபா வெளிப் பாச்சல் இடம்பெற்றது. அது தவிர உப உணவுப் பயிர்களின் இறக்குமதிகளுக்கென வருடாந்தம் ரூ. 139 மில்லியன் செலவிடப்பட்டு வந்தது. இந்தச் செலவுகள் அனைத்தும் மிக உயரளவிலான பெறுமதி ஒன்றைக் காட்டின.

நாட்டின் குடித்தொகை ஈர வலயத்தில் மட்டுமே பெருமளவில் ஒன்று திரண்டு வரும் விடயமும் அக்கால கட்டத்தில் அவதானிக்கப்பட்டிருந்தது. ஈர வலயத்தின் குடித்தொகை சதுர கிலோ மீற்றர் ஒன்றுக்கு 465 நபர்களாக காணப்பட்டது. உலர் வலயத்தில் குடித்தொகை அடர்த்தி சதுர கிலோமீற்றர் ஒன்றுக்கு சுமார் 80 நபர்கள் என்ற அளவில் காணப்பட்டது. உலர் வலயம் நாட்டின் மொத்த நிலப்பரப்பில் 66 சதவீதத்தை உள்ளடக்கியிருந்த அதே வேளையில், குடித்தொகையில் 70 சதவீதத்தினர் ஈர வலயத்திலேயே செறிந்து வாழ்ந்து வந்தனர். அதன் பிரகாரம் உலர் வலயம் நெடுகிலும் சனச்செறிவு மிகக் குறைவாக இருந்து வரும் நிலை அவதானிக்கப்பட்டது. நாட்டின் ஏனைய நதிகளுடன் ஒப்பிடும் பொழுது ஈர வலயத்தின் மத்திய மலைநாட்டிலிருந்து ஊற்றெடுக்கும் மகாவலி கங்கை இலங்கையின் மொத்த நிலப்பரப்பில் ஆறிலொரு பிரதேசத்துக்குச் சமமான பிரதேசம் ஒன்றிலிருந்து கிடைக்கும் நீரோட்டங்களைச் சேகரித்து, உலர் வலயத்துக் கூடாக எடுத்துச் சென்று கடலில் கலக்கின்றது. மகாவலி கங்கை வற்றாத ஒரு நதி

எனக் கருதப்படுகின்றது. மேல் மகாவலி பிரதேசங்களில் நீர்மின் உற்பத்தி நிலையங்களுக்கு நீரை விநியோகம் செய்யும் அதே வேளையில், உலர் வலயத்தின் விவசாய அபிவிருத்தியை மேற்கொள்வதற்கென மகாவலி கங்கையின் நீரை திசை திருப்ப வேண்டிய தேவை இருந்து வருகின்றது என்ற விடயம் உணரப்பட்டது. இலங்கை அரசாங்கத்தின் அழைப்பின் பேரில் இங்கு வந்த ஐக்கிய நாடுகள் அமைப்பின் ஒரு தூதுக்குழு உலர் வலயத்தில் காணி அபிவிருத்திக்கான வாய்ப்புக்களைக் கண்டறிவதற்கென 1956 ஆண்டில் ஒரு சாத்தியப்பாட்டு அறிக்கையை மேற்கொண்டது. அதே நேரத்தில் கனேடியன் ஹன்டிங் சேர்வே கோர்ப்பரேஷன் என்ற நிறுவனம் இலங்கை நீர்ப்பாசன மற்றும் நில அளவைத் திணைக்களங்களுடன் இணைந்து அப்போதைய அரசாங்கத்தின் வேண்டுகோளின் பேரில் மகாவலி கங்கை தொடர்பான ஓர் ஆய்வை மேற்கொண்டது. இந்த இரு நிறுவனங்களும் தமது கண்ணோட்டங்களை உள்ளடக்கும் இரண்டு சுயாதீனமான அறிக்கைகளை 1961 ஆம் ஆண்டில் அரசாங்கத்திடம் சமர்ப்பித்தன. சம்பந்தப்பட்ட ஆய்வுகள் 1962 ஆம் ஆண்டில் ஒப்புதலுக்கென பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டன.

ஒட்டுமொத்த மகாவலி வடிநிலத்தினதும் நீர் வளங்கள் தொடர்பான விரிவான ஆய்வொன்றை மேற்கொள்ளாத விதத்தில் மகாவலி கங்கையின் நீரின் ஒரு பாகத்தை திசை திருப்புவது பாதகமான விளைவுகளை ஏற்படுத்துமென இலங்கை நிபுணர்கள் அபிப்பிராயப்பட்டதன் காரணமாக பாளுமன்றம் இந்த அறிக்கைகளுக்கு ஒப்புதல் வழங்கவில்லை. அதனையடுத்து, மகாவலி கங்கையையும் உள்ளடக்கிய அனைத்து நதிகளையும், அனைத்து நீராதாரங்களையும், நிலப்பரப்புக்களையும் உள்ளடக்கிய விதத்தில் விரிவான ஓர் ஆய்வினை மேற்கொண்ட பின்னர், முன்னுரிமை அடிப்படையில் அபிவிருத்திக்கென தெரிவு செய்யப்பட வேண்டிய கருத்திட்டங்கள் எவை என்பது தொடர்பாக சுயாதீனமான பரிந்துரைகளை சமர்ப்பிக்குமாறு 1962 ஆம் ஆண்டில் அரசாங்கம் ஐக்கிய நாடுகள் அமைப்பிடம் ஒரு வேண்டுகோளை விடுத்தது. இந்த வேண்டுகோளை அடுத்து ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் இலங்கைக்கு உணவு விவசாயத் தாபன குழு ஒன்றை அனுப்பி வைத்தது. அது தவிர, இந்தக் குழுவுக்கு உதவுவதற்கென இலங்கையிலிருந்து நிபுணர்களும், அதேபோல ஏனைய உதவி ஆளணியினரும் நியமனம் செய்யப்பட்டார்கள்.

நான்கு ஆண்டுகள் மேற்கொள்ளப்பட்ட விரிவான ஆய்வுகளின் பின்னர் சம்பந்தப்பட்ட ஆராய்ச்சி 1968 ஆம் ஆண்டில் 14 புறம்பான விசேட அறிக்கைகளை உள்ளடக்கிய 3 தொகுதிகளாகப் பிரசுரிக்கப்பட்டது. அதனை அடுத்து, மகாவலி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்துக்கு 1968 ஆம் ஆண்டில் பாராளுமன்றம் ஒப்புதலை வழங்கியது.

இந்த நிகழ்ச்சித்திட்டங்களிலிருந்து பயன்களைப் பெற்றுக்கொள்ளும் வட மத்திய மாகாணத்திலும், கிழக்கு மாகாணத்திலும் அமைந்திருந்த பிரதேசங்கள் 13 வலயங்களாகப் பிரிக்கப்பட்டதுடன், அகர வரிசையில் 'A' தொடக்கம் 'M' வரையில் அவற்றுக்குப் பெயரிடப்பட்டன. பொருளாதார ரீதியில் சாத்தியமானவை எனவும், குறைந்த முதலீடுகளுடன் அதிக அளவிலான பயன்களைப் பெற்றுக்கொடுக்கக் கூடியவை எனவும் கருதப்பட்ட கருத்திட்டங்கள் முதலாவது கட்டத்தின் போது எடுத்துக் கொள்ளப்பட்டன.

**மகாவலி பெருந்திட்டம்**

மகாவலி நீர் ஆதாரங்களிலிருந்து மின்சார உற்பத்திக்கும், நீர்ப்பாசன நடவடிக்கைகளுக்குமென சுமார் 6,900 மில்லியன் கன அடி நீரை வழங்குவதே மகாவலி பெருந்திட்டத்தின் பிரதான நோக்கமாக இருந்தது. 15 நீர்த்தேக்கங்களை நிர்மாணித்து, மின்சார உற்பத்திக்கென அவற்றில்

11 நீர்த்தேக்கங்களைப் பயன்படுத்திக் கொள்வதும் அதன் இரண்டாவது நோக்கமாக இருந்து வந்தது.

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் (UNDP), உணவு மற்றும் விவசாயத் தாபனம் (FAO) என்பவற்றினால் சமர்ப்பிக்கப்பட்ட மகாவலி பெருந்திட்டத்தின் பிரகாரம், மகாவலி வடிநிலத்திலும், உலர் வலயத்தில் அமைந்திருக்கும் ஏனைய வடிநிலங்களிலும் அமைந்திருக்கும் 364,372 ஹெக்டெயார் நிலப்பரப்புக்கு சிறுபோகம் மற்றும் பெரும்போகம் ஆகிய இரு பருவங்களின் போதும் நீர்ப்பாசன நீரை வழங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்தது. இந்த மொத்த நிலப்பரப்பில் 264,777 ஹெக்டெயார் விவசாயத்துக்கென திறந்துவிடப்படவிருக்கும் புதிய நிலங்களாக இருந்தன. மிகுதி 110,404 ஹெக்டெயார் நிலப்பரப்பில் ஏற்கனவே ஒரு பருவத்தின் போது மட்டும் சாகுபடி செய்யப்பட்டிருந்தது. திட்டமிடப்பட்டிருக்கும் நீர்த்தேக்கங்கள் மற்றும் கால்வாய்கள் என்பவற்றின் ஆற்றலைப் பயன்படுத்தி 2037 GWh அலகு மின்சாரம் உற்பத்தி செய்ய முடியும் என்ற விடயமும் சுட்டிக் காட்டப்பட்டிருந்தது. மகாவலி பெருந்திட்டத்தின் பிரகாரம் 30 வருட காலப்பிரிவின் போது இந்த அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்தது. நிதிகளின் உபயோகம் மற்றும் அமுலாக்கம் என்பவற்றின் வசதியைக் கருத்தில் கொண்டு - குறிப்பாக அபிவிருத்தியின் பயன்கள் அனைவருக்கும் கிட்ட வேண்டும் என்ற விடயத்தைக் கருத்தில் கொண்டு - இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் நடவடிக்கைகள் 3 கட்டங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தன:

### I. முதலாவது கட்டம்

முதலாவது கட்டத்தை 1969 - 1980 காலப்பிரிவின் போது அமுலாக்குவதற்கு யோசனை தெரிவிக்கப்பட்டிருந்தது. இக் கட்டத்தின் போது 74,494 ஹெக்டெயார் புதிய நிலங்களுக்கும், 58,300 ஹெக்டெயார் பழைய நிலங்களுக்கும் நீர்ப்பாசன நீரை வழங்குவதற்கும், வருடாந்தம் 820 GWh அலகு மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கும் திட்டமிடப்பட்டிருந்தது. இக் கட்டத்தின நடவடிக்கைகள் 3 கருத்திட்டங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தன:

- பொல்கொல்ல திசைதிருப்பல் (1969 – 1973)
- விக்டோறியா / மினிப்பே திசைதிருப்பல் (1973 – 1977)
- மொறகஹகந்த பல் நோக்கு அலகு

### II. இரண்டாவது கட்டம்

இந்த இரண்டாவது கட்டத்தின் போது மாதுறு ஓயா நீர்த்தேக்கம், பல்நோக்கு கட்டட தொகுதி, கந்தகாடு அணைக்கட்டு போன்ற முதன்மை வேலைப் பிரிவுகளில் மகாவலி மற்றும் மாதுறு ஓயா வடிநிலங்களில் அமைந்திருக்கும் 93,117 ஹெக்டெயார் நிலப்பரப்புக்கு நீர்ப்பாசன வசதிகள் வழங்கப்படும். நீர்ப்பாசன வசதிகளை வழங்குவதற்கென திட்டமிடப்பட்டிருந்த 93,117 ஹெக்டெயார் நிலப்பரப்பில் 8502 ஹெக்டெயார் நிலப்பரப்பு ஏற்கனவே சாகுபடியின் கீழ் இருந்து வந்தது. இக்கட்டத்தின் முக்கிய நடவடிக்கைகள் பின்வருவனவற்றையும் உள்ளடக்கியிருந்தன: தல்தெனவில் 15 MWh நிறுவப்பட்ட ஆற்றலுடன் ஒரு நீர்மின் உற்பத்தி நிலையத்தை நிர்மாணித்தல், றத்கிந்த நீர்த்தேக்கத்திலிருந்து மாதுறுஓய நீர்த்தேக்கத்துக்கு நீர் வழங்கும் பொருட்டு ஓர் சுரங்கப் பாதையை நிர்மாணித்தல், மாதுறுஓய நீர்த்தேக்கத்துக்கு அருகில் 4.9 MWh நிறுவப்பட்ட ஆற்றலுடன் கூடிய ஒரு நீர்மின் உற்பத்தி நிலையத்தை நிர்மாணித்தல்.

### III. மூன்றாவது கட்டம்

இக்கட்டத்தின் கீழ் வட மத்திய மாகாணத்தில் 105,668 ஹெக்டெயார் புதிய நிலப்பரப்பு அபிவிருத்தி செய்யப்படும். நீர் மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கான இறுதித் திட்டத்தின்

அமுலாக்கத்தின் விளைவாக 293 MWh அலகு நிறுவப்பட்ட ஆற்றலுடன் கூடிய நீர்மின் உற்பத்தி நிலையங்கள் நிர்மாணிக்கப்படும். அத்தகைய நீர்மின் உற்பத்தி நிலையங்களுக்கூடாக வருடாந்தம் 1169 MWh அலகு மின்சாரம் உற்பத்தி செய்யப்படும். மினிப்பே குளத்தின் வலது கரைக் கால்வாயின் அபிவிருத்தி, 164 கி.மீ. நீளமான வட மத்திய கால்வாயின் நிர்மாணம், ரொட்டலாவல, உமாஓய, றன்தம்பே, கொத்மலை மற்றும் களுகங்கை நீர்த்தேக்கங்களின் நிர்மாணம் என்பன இக் கட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

எனினும், தற்போதைய முன்னுரிமைத் தேவைகளின் அடிப்படையில் மகாவலி பெருந்திட்டம் 3 அபிவிருத்திக் கட்டங்களின் அடிப்படையில் அமுல் செய்யப்பட்டு வருகின்றது.

**மகாவலி பெருந்திட்டத்தின் அமுலாக்கம் (1 ஆவது அபிவிருத்திக் கட்டம்)**

மகாவலி பெருந்திட்டத்தின் முதலாவது கருத்திட்டமாக 1970 ஆம் ஆண்டில் பொல்கொல்ல மற்றும் போவதென்ன கருத்திட்டம் தொடக்கி வைக்கப்பட்டதுடன், அதன் நிர்மாண வேலைகள் 1976 ஆம் ஆண்டளவில் பூர்த்தியடைந்தன. இக் கருத்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டமையை அடுத்து ஏற்கனவே இருக்கும் 16000 ஹெக்டெயார் நிலப்பரப்புக்கும், 23000 ஹெக்டெயார் புதிய நிலப்பரப்புக்கும் நீர்ப்பாசன நீரை வழங்கக் கூடிய ஆற்றலும், 40 MWh அலகு நிறுவப்பட்ட ஆற்றலுடன் கூடிய விதத்தில் மின்சாரத்தை உருவாக்கக் கூடிய வாய்ப்பும் கிடைத்தது. இக் கருத்திட்டத்தின் கீழ் 1977 ஆம் ஆண்டளவில் மகாவலி H வலயத்துக்குள் கலாவெவ வடிநிலத்தில் 23000 விவசாயக் குடும்பங்கள் குடியேற்றப்பட்டன. இப்பொழுது மகாவலி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வலயம் H பிரதேசத்தில் குடியேற்றங்கள் தொடர்பான அனைத்து நடவடிக்கைகளும் பூர்த்தியடைந்திருப்பதுடன், அங்கு குடியேற்றப்பட்டிருக்கும் குடும்பங்களின் மொத்த எண்ணிக்கை 39,500 ஆக இருந்து வருகின்றது.

1977 ஆம் ஆண்டளவில் இலங்கையின் பொருளாதாரம் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கி வந்தது. அரிசியை உள்ளடக்கிய விதத்தில் இறக்குமதி செய்யப்பட்ட விவசாயப் பண்டங்களின் இறக்குமதிச் செலவு அதிகரித்து வந்தமை ஒரு பிரச்சினையாக இருந்து வந்தது. நாட்டின் மொத்த அரிசித் தேவையில் 69 சதவீதம் மட்டும் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்டதுடன், 31 சதவீதம் அரிசித் தேவையை இறக்குமதிகள் மூலம் ஈடு செய்ய வேண்டியிருந்தது. அது தவிர வேறு பல அத்தியாவசிய விவசாயப் பண்டங்களும் நாட்டுக்குள் இறக்குமதி செய்யப்பட்டு வந்தன.

1977ஆம் ஆண்டில் இலங்கை மின்சார சபையினால் மேற்கொள்ளப்பட்ட மின்சார உற்பத்தி 408 MWh அலகுகளாக இருந்து வந்ததுடன், அது அச்சந்தர்ப்பத்தில் நாட்டில் மின்சாரம் தொடர்பாக நிலவி வந்த கேள்வியை நிறைவேற்றி வைப்பதற்கு போதியதாக இருந்து வரவில்லை. மின்தடை செயலிழப்பு ஒரு சாதாரண விடயமாக மாறி இருந்ததுடன், வருடத்தில் மின்சாரம் துண்டிக்கப்படும் நாட்களின் எண்ணிக்கை 70 ஆக அதிகரித்திருந்தது.

வேலையில்லாத் திண்டாட்டம் தொடர்பான விகிதம் 17 சதவீதமாகக் காணப்பட்டது. வேலையில்லாத் திண்டாட்டத்தைக் குறைப்பது ஓர் அத்தியாவசியமான அம்சமாக இருந்து வந்ததுடன், அத்தகைய பிரச்சினைகளுக்கு உடனடியான தீர்வுகள் தேவைப்பட்டன.

அவசர அடிப்படையில் இத்தகைய பிரச்சினைகளைக் கையாள்வதற்கான ஓர் படிமுறை என்ற விதத்தில் அப்போதைய அரசாங்கம் மகாவலி பெருந்திட்டத்தின் அமுலாக்கத்தை

துரிதப்படுத்துவது தொடர்பான ஒரு முடிவினை 1977 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 12 ஆம் திகதி மேற்கொண்டது.

**துரிதப்படுத்தப்பட்ட மகாவலி நிகழ்ச்சித்திட்டம் (இரண்டாவது அபிவிருத்திக் கட்டம்)**

மகாவலி பெருந்திட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட ஒரு சில கருத்திட்டங்களை அமுல் செய்வதற்கும், அவற்றை குறுகிய 6 வருட காலப் பிரிவுக்குள் பூர்த்தி செய்வதற்கும் அரசாங்கம் 1977 ஆம் ஆண்டில் தீர்மானித்தது. இக் கருத்திட்டங்களை அமுல் செய்வதற்கென புறம்பான ஒரு அமைச்சும் உருவாக்கப்பட்டது. அதன் பிரகாரம் கொத்மலை, விக்டோரியா, றந்தெனிகல மற்றும் மாதுறுஓயா நீர்த்தேக்கக் கருத்திட்டங்களை ஆரம்பித்து, அமுல் செய்வதற்கென நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. பின்னர் றன்தம்பே கருத்திட்டமும் இந்த நிகழ்ச்சித்திட்டத்துக்குள் சேர்த்துக் கொள்ளப்பட்டது. மாதுறுஓயா தவிர, ஏனைய நீர்த்தேக்கங்களில் நீர்மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டதுடன், அதேநீர் நீர்ப்பாசன நோக்கங்களுக்கும் பயன்படுத்தப்பட்டது. அதன் பிரகாரம் விவசாய குடும்பங்களை குடியேற்றுவதுடன் இணைந்த விதத்தில் மகாவலி C மற்றும் B வலயங்களின் அபிவிருத்தியும் துரிதப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டது. வலயம் B மற்றும் வலயம் C என்பவற்றில் முறையே 30,465 குடும்பங்களும் 45,488 குடும்பங்களும் குடியேற்றப்பட்டன.

இக் கருத்திட்டங்களுக்கென முறையே சுவீடன், பெரிய பிரித்தானியா, கனடா, ஜேர்மனி, ஆகிய நாடுகள் நிதியுதவிகளை வழங்கின. ஆற்றின் கீழ்ப்பகுதி நடவடிக்கைகளுக்கான நிதிகளை உலக வங்கி, ஐரோப்பிய பொருளாதார ஆணைக்குழு, ஜப்பான் மற்றும் குவைத் ஆகிய நாடுகள் பெற்றுக் கொடுத்தன. இக் கருத்திட்டங்களை தொடக்கி வைப்பதற்கென 1979 ஆம் ஆண்டில் இலங்கை மகாவலி அதிகார சபை ஸ்தாபிக்கப்பட்டது. பொறியியல் மற்றும் வடிவமைப்பு நடவடிக்கைகளுக்கு மகாவலி பொறியியல் மற்றும் நிர்மாண முகவரகமும், மீள் குடியேற்ற நடவடிக்கைகளுக்கென மகாவலி பொருளாதார முகவரகமும் உருவாக்கப்பட்டன. துரிதப்படுத்தப்பட்ட மகாவலி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பாரிய நீர்த்தேக்கங்களின் முகாமைத்துவத்துக்கென 1986 ஆம் ஆண்டில் முதன்மை வேலைகள் இயக்குதல், பராமரித்தல் மற்றும் நிர்வாகப் பிரிவு ஸ்தாபிக்கப்பட்டது.

துரிதப்படுத்தப்பட்ட மகாவலி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழான கருத்திட்டங்கள் 1990 ஆம் ஆண்டளவில் பூர்த்தி செய்யப்பட்டதுடன், அத்தகைய கருத்திட்டங்களுக்கூடாக மின்சார உற்பத்தி மற்றும் விவசாயம் போன்ற துறைகளில் கணிசமான அளவிலான முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இந்தப் பின்னணியில், விவசாயத்துறையில் நேரடி முதலீடுகளை மேற்கொள்ளும் விடயத்தில் அரசாங்கம் தயக்கம் காட்டி வந்ததுடன், அதன் காரணமாக மகாவலி பெருந்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த மொறகஹகந்த நீர்த் தேக்ககக் கருத்திட்டம் பின்னர் அமுல் செய்வதற்கென ஒத்தி வைக்கப்பட்டது. எவ்வாறிருப்பினும், சார்புரீதியில் நீண்ட காலமாக கோப்புக்களுக்கு மட்டும் வரையறுக்கப்பட்டிருந்த இந்தக் கருத்திட்டம் தற்பொழுது அமுல் செய்யப்பட்டு வருகின்றது. இதன் விளைவாக மகாவலி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் பயன்கள் மேலும் விரிவடையும்.

**மகாவலி நிகழ்ச்சித்திட்டத்தின் தற்போதைய வகிபங்கு மற்றும் எதிர்கால திட்டங்கள் (மூன்றாவது அபிவிருத்திக் கட்டம்)**

மகாவலி நிகழ்ச்சித்திட்டம் நாட்டின் நாலாபக்கங்களிலும் வியாபித்துச் செல்லும் கட்டம் என்ற முறையில் அதன் மூன்றாவது அபிவிருத்திக் கட்டத்தை குறிப்பிட முடியும். மொரகஹகந்த களுகங்க நீர்த்தேக்க கருத்திட்டத்துக்கு ஊடாக, வடக்கு, வட மத்திய, கிழக்கு, வட மேல், மற்றும் மத்திய மாகாணங்களில் அமைந்திருக்கும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான 1200 குளங்களுக்கு நீரை விநியோகிக்கும் நோக்கத்துடன் மொரகஹகந்த - களுகங்க அபிவிருத்திக் கருத்திட்டம் அமுல் செய்யப்பட்டது. எலஹர பிரதேசத்தில் அமைந்திருக்கும் வயல்களுக்கும், பொலன்னறுவை, திருகோணமலை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த அனைத்து பிரதான நீர்த்தேக்கங்களுக்கும் ஆண்டு முழுவதும் தொடர்ச்சியாக நீரை விநியோகம் செய்து, இதன் மூலம் 81,000 ஹெக்டயார் புதிய விவசாயக் காணிகளுக்கு நீர்ப்பாசனம் பெற்றுக் கொடுக்கப்படுகிறது. அதன் ஊடாக விவசாய முன்னேற்றத்தை எடுத்து வருவதும், நாட்டின் சுய தேவைப் பூர்த்திக்கு பங்களிப்புச் செய்வதும், அதன் மின் உற்பத்தி நிலையத்திற்கு ஊடாக உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தின் மூலம் தேசிய மின் கட்டமைப்புக்கு 25 மெகாவோட் மின்சாரத்தை வழங்குவதும் இத்திட்டத்தின் அடிப்படை குறிக்கோள்களாக இருந்து வந்துள்ளன. அதே போல, இக்கருத்திட்டத்தின் மூலம் இடம்பெயர நேரிட்ட மக்களுக்கு தேவையான குடியிருப்புக்களை அமைத்துக் கொடுப்பதுடன், அனைத்து உள்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய புதிய லக்கல நகரத்தை நிர்மாணித்து, மக்கள் உரிமைக்கு பெற்றுக் கொடுக்கும் பாரிய பணியும் இப்பொழுது பூர்த்தியடைந்துள்ளது. இந்தக் கருத்திட்டம் 2019 ஆகஸ்ட் மாதம் பூர்த்தியடையும் பொழுது, அது இலங்கை மகாவலி அதிகார சபையிடம் ஒப்படைக்கப்படவுள்ளது. அதனை அடுத்து, இலங்கை மகாவலி அதிகார சபையின் பிரமாண்டமான அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களில் இவ்விதமாக மற்றொரு திட்டம் வெற்றிகரமாக நிறைவு பெறவுள்ளது.

மகாவலி அதிகாரசபை தனது பணிகளை மேலும் விரிவாக்கும் நோக்கத்துடன் உமாஓய பல்நோக்கு அபிவிருத்திக் கருத்திட்டத்தை ஆரம்பித்து வைத்தது. இதற்கு ஊடாக உமாஓய ஆற்றுப் பள்ளத்தாக்கின் நீர், வெலிமட பிரதேசத்தில் அமைக்கப்படும் இரண்டு நீர்த்தேக்கங்களில் சேகரிக்கப்பட்டு, 15.6 கிலோ மீற்றர் நீளமான சுரங்கப் பாதையொன்றுக்கு ஊடாக கிரிந்திஓய பள்ளத்தாக்குக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது. இலங்கையில் அமைக்கப்படும் மிகப் பெரிய சுரங்கப் பாதையாக இது இருந்து வரும். அதற்கு ஊடாக ஆசியாவின் மிகப் பெரிய தரைக் கீழ் மின்னுற்பத்தி நிலையம் ஆண்டொன்றுக்கு 120 மெகாவோட் மின்சாரத்தை உற்பத்தி செய்து, தேசிய மின் கட்டமைப்பு பங்களிப்புச் செய்யும். அதன் மூலம் தேசிய வலுத் தேவையை நிறைவேற்றி வைத்தல், மிகவும் பின்தங்கிய ஊவா மாகாணத்தின் விவசாய விளைதிறனை மேம்படுத்துதல், மக்களின் குடிநீர் தேவைகளை நிறைவேற்றி வைத்தல் என்பவற்றை அடிப்படை நோக்கங்களாக கொண்டு, இக்கருத்திட்டம் இப்பொழுது வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இது 2019 ஆண்டில் முடிவடையும் பொழுது, இலங்கை மகாவலி அதிகார சபையின் முனைப்பான நீர் முகாமைத்துவ கட்டமைப்புக்குள் உள்வாங்கப்படும்.

இலங்கை மகாவலி அதிகார சபையின் பாரிய நீர்த்தேக்கங்கள் மற்றும் ஏனைய நீர்த்தேக்கங்கள் என்பவற்றை சுத்திகரிக்கும் ஒரு கருத்திட்டமும், அதே போல, நீரேந்து பரப்புக்கள் மற்றும் ஆற்று வடிநிலங்கள் என்பவற்றை பாதுகாக்கும் ஒரு கருத்திட்டமும் ஏற்கனவே இலங்கை மகாவலி அதிகார சபையின் சுற்றாடல் மற்றும் வனவளப் பாதுகாப்பு பிரிவினால் அமுல் செய்யப்பட்டு வருகின்றன.

புதுப்பிக்கத்தக்க வலு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ், மகாவலி நீர்த்தேக்கங்களில் மிதக்கும் சூரிய ஒளித் தொகுப்புக்களை நிறுவுவதன் மூலமும், சிறிய அளவிலான நீர்மின் உற்பத்தி கருத்திட்டங்களை அபிவிருத்தி செய்வதன் மூலமும் சுற்றாடலுக்கு உசிதமான விதத்தில் தேசிய வலுத் தேவைக்கு பங்களிப்புச் செய்வதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அதன் மூலம் பாரியளவிலான வருமானம் ஈட்டப்படவுள்ளது. இலங்கை மகாவலி அதிகார சபையின் புதிய உபாய ரீதியான வருமான மார்க்கங்கள் இப்பொழுது இணங்காணப்பட்டு வருகின்றன.

இதே வேளையில், மாதுறுஓய வலதுகரை அபிவிருத்திக் கருத்திட்டம், வளவே வலயம், ரம்பக்கன் ஓய, மகாவலி ‘B’ வலயம், மகாவலி ‘H’ வலயம் போன்ற வலயங்களைச் சூழ மேலும் பல அபிவிருத்திக் கருத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதன் மூலம் இலங்கை மகாவலி அதிகார சபை அதன் மூன்றாவது கட்டத்தின் அனைத்து அடிப்படை குறிக்கோள்களையும் நிறைவேற்றிக் கொள்ளும் பெர்ழுது, நாட்டின் நாலா பக்கங்களிலும் பொருளாதாரம் வலுப்படுத்தப்படவுள்ளது. விவசாயம், நீர்ப்பாசனம், கால்நடை வளங்கள், வலு, சுற்றாடல் பாதுகாப்பு போன்ற துறைகளில் நாட்டுக்கு வழங்கி வரும் உச்சமட்ட பங்களிப்புக்கூடாக இந்த மூன்றாவது அபிவிருத்திக் கட்டத்தை நோக்கி இப்பொழுது மகாவலி அதிகார சபை நகர்ந்து கொண்டிருக்கின்றது.

# பணிப்பாளர் சபை தொடர்பான விபரம் - 2018

| வரிசை எண். | பெயர்/பதவி | காலம் |
|---|---|---|
| 01 | **திரு. எஸ் எம் கோட்டாபய ஜயரத்ன**<br>பணிப்பாளர் நாயகம்<br>இலங்கை மகாவலி அதிகார சபை | ஜனவரி – மார்ச் 2018 |
| 02 | **திரு. ஆர். ஏ. ஆர். ரூபசிங்க**<br>பணிப்பாளர் நாயகம் (பதில்)<br>இலங்கை மகாவலி அதிகார சபை | மார்ச் 2018 |
| 03 | **திரு. சரத் சந்திரசிரி வித்தான**<br>பணிப்பாளர் நாயகம்<br>இலங்கை மகாவலி அதிகார சபை | மார்ச் - அக்டோபர் 2018 |
| 04 | **கலாநிதி டீ. எம். எஸ். திசாநாயக்க**<br>பணிப்பாளர் நாயகம்<br>இலங்கை மகாவலி அதிகார சபை | 2018 அக்டோபர் தொடக்கம் |
| 05 | **திரு. ஹேமால் கஸ்தூரி ஆரச்சி**<br>பணிப்பாளர் நாயகம்<br>நிதி அமைச்சு | ஜனவரி 2017 – டிசம்பர் 2018 |
| 06 | **பொறியியலாளர் (திருமதி) சீ. எச். தேவேந்திர**<br>மேலதிக செயலாளர்<br>மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு | ஜனவரி 2017 – டிசம்பர் 2018 |
| 07 | **பொறியியலாளர் (திரு.) எஸ். மோகனராஜா**<br>பணிப்பாளர் நாயகம்<br>நீர்ப்பாசன திணைக்களம் | மார்ச் - டிசம்பர் 2018 |
| 08 | **திரு. எம். டீ. ஜே. சி. முரகே**<br>உதவிப் பணிப்பாளர்<br>நிதி அமைச்சு | ஜனவரி – டிசம்பர் 2018 |
| 09 | **திரு. திலக் பண்டார மஹலேகம் -**<br>உறுப்பினர் | ஜனவரி – டிசம்பர் 2018 |

# சிரேஷ்ட முகாமைத்துவம் - 2018

| வரிசை எண். | பதவி | பெயர் |
|---|---|---|
| 01 | பணிப்பாளர் நாயகம் | **திரு. எஸ் எம் கோட்டாபய ஜயரத்ன**<br>ஜனவரி – மார்ச் 2018 |
| | | **திரு. ஆர். ஏ. ஆர். ரூபசிங்க (பதில்)**<br>மார்ச் 2018 |
| | | **திரு. சரத் சந்திரசிரி வித்தான**<br>மார்ச் - அக்டோபர் 2018 |
| | | **கலாநிதி டீ. எம். எஸ். திசாநாயக்க**<br>2018 அக்டோபர் தொடக்கம் |
| 02 | மேலதிக பணிப்பாளர் நாயகம் | **திரு. எம். எச். ஜீ பண்டார**<br>2018 ஆகஸ்ட் தொடக்கம் |
| 03 | பிரதிப் பணிப்பாளர் நாயகம் (நிர்வாகம் மற்றும் நிதி) | திருமதி கே. சீ. எஸ். பெர்னான்டோ (பதில்) |
| 04 | பிரதிப் பணிப்பாளர் நாயகம் (தொழில்நுட்ப சேவைகள்) | பொறியியலாளர் (திரு) கே. ஜீ. பெரேரா |
| 05 | பிரதிப் பணிப்பாளர் நாயகம் (அபிவிருத்தி) | - |
| 06 | பணிப்பாளர் (ஆளணி மற்றும் நிர்வாகம்) | திருமதி கே. சீ. எஸ் பெர்னான்டோ<br>ஜனவரி – மார்ச் 2018 |
| | | திரு. எம். எச். ஜீ. பண்டார (பதில்)<br>2018 ஆகஸ்ட் தொடக்கம் |
| 07 | கருத்திட்ட பணிப்பாளர் (அணைக்கட்டு பாதுகாப்பு மற்றும் நீர் வளங்கள் திட்டமிடல் கருத்திட்டம்) | பொறியியலாளர் (திரு) டி. சி. எஸ் எலகந்த |
| 08 | கருத்திட்ட பணிப்பாளர் (மொரகஹகந்த களுகங்க அபிவிருத்தி கருத்திட்டம்) | பொறியியலாளர் (திரு) ஆர்.பி. தென்னக்கோன் |
| 09 | கருத்திட்ட பணிப்பாளர் (மகாவலி ஒருங்கிணைந்த கருத்திட்டம்) | பொறியியலாளர் (திரு) எம். பி. எம். பெரேரா |
| 10 | கருத்திட்ட பணிப்பாளர் (உமாஓயா பல்நோக்கு அபிவிருத்தி கருத்திட்டம்) | (பொறியியலாளர்) கலாநிதி என். எஸ். கே. என். டி. சில்வா |
| 11 | பணிப்பாளர் (நிதி) | திரு. ரீ.டி. பிரியந்த |
| 12 | பணிப்பாளர் (உள்ளக கணக்காய்வு) | திருமதி. கே. ஏ. எம். சீ. எம் பீரிஸ் (பதில்) |
| 13 | பணிப்பாளர் (மகாவலி நிலையம்) | திரு. அருண பிரபாத் லேகம்கே (ஒப்பந்த அடிப்படை) |
| 14 | பணிப்பாளர் (விவசாயம்) | திரு ஆர். எம். நெவில் ராஜபக்ச |
| 14 | பணிப்பாளர் (மீன்பிடி மற்றும் கால்நடை வளங்கள்) | திரு ஆர். எம். நெவில் ராஜபக்ச (கடமை மேற்பார்வை) |
| 15 | பணிப்பாளர் (காணி) | திரு. டி.ஏ.ஏ. யூ. குணசேகர<br>2018 பெப்ரவரி வரை (விடுவிப்பு) |
| | | திரு. டபிள்யு. கே. பீ. சீ. பெரேரா<br>மார்ச் - ஆகஸ்ட் 2018 |
| 16 | பணிப்பாளர் (நிறுவன அபிவிருத்தி) | திரு. எம். எல். டீ. சீ. அபேவர்தன<br>(கடமை மேற்பார்வை) |
| 17 | பணிப்பாளர் (வணிக அபிவிருத்தி) | திரு. டபிள்யு. கே. பீ. சீ பெரேரா |
| 18 | பணிப்பாளர் (பொறியியல் வடிவமைப்பு மற்றும் திட்டமிடல்) | பொறியியலாளர் (திருமதி) ரீ. எம். அத்தபத்து |
| 19 | பணிப்பாளர் (ஆற்றின் கீழ் பிரதேச அபிவிருத்தி) | பொறியியலாளர் (திரு) பீ. ஜீ. குணபால |

| | | |
|---|---|---|
| 20 | பணிப்பாளர் (முதன்மை வேலைகள், நிர்வாகம் மற்றும் பராமரிப்பு) | பொறியியலாளர் திரு. எஸ். ஆர். கே அருப்பொல |
| 21 | பணிப்பாளர் (ஆற்று வடிநில முகாமைத்துவம்) | பொறியியலாளர் (செல்வி) சந்திரா செனரத் |
| 22 | பணிப்பாளர் (காணிப் பயன்பாட்டு திட்டமிடல்) | திருமதி ஜே. எம். ஐ. எச். ஜயவர்தன (கடமை மேற்பார்வை) |
| 23 | பணிப்பாளர் (வன வளம் மற்றும் சுற்றாடல்) | திரு. ஏ. எம். கே. பி. அத்தநாயக்க |
| 24 | பணிப்பாளர் (நீர் முகாமைத்துவ செயலகம்) | பொறியியலாளர் (செல்வி) ஜீ. கே. ரீ. சமரதுங்க |
| 25 | பணிப்பாளர் (திட்டமிடல் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல்) | திரு. பி. எல். பி. சேனாரத்ன (கடமை மேற்பார்வை) |
| 26 | பணிப்பாளர் (தலைமை அலுவலக செயற்பாடுகள்) | திருமதி டீ. கே. வீ. விஜயவீர<br>ஜனவரி – செப்டம்பர் 2018 |
| 27 | பணிப்பாளர் (பாதுகாப்பு) | மேஜர் (திரு) எல். ஏ. பி. ஜயவர்தன |
| 28 | பணிப்பாளர் (சட்டம்) | திருமதி ஆர். எல். ராஜபக்ஷ |
| 29 | பணிப்பாளர் (ஆராய்ச்சி அபிவிருத்தி மற்றும் விசேட கருத்திட்டங்கள்) | திருமதி டீ. கே. வீ. விஜயவீர<br>2018 செப்டம்பர் தொடக்கம் |
| 30 | வதிவிடக் கருத்திட்டட முகாமையாளர் (வலயம் B) | திரு. எஸ். ரீ. துஷார தந்தநாராயண (பதில்) |
| 31 | வதிவிடக் கருத்திட்ட முகாமையாளர் (வலயம் C) | திரு. கே. ஏ. சீ. விமல்குமார (பதில்) |
| 32 | வதிவிடக் கருத்திட்டட முகாமையாளர் (வலயம் D) | திரு. ஜே. பிரசன்ன ஜயதிலக<br>(கடமை மேற்பார்வை) |
| 33 | வதிவிடக் கருத்திட்டட முகாமையாளர் (வலயம் L) | திரு. எச். கே. பீ ஜயநாத<br>2018 மார்ச் வரையில் |
| | | திரு. பீ. ஜீ. நொயெல் ஜயசிரி<br>2018 மார்ச் தொடக்கம் |
| 34 | வதிவிடக் கருத்திட்டட முகாமையாளர் (வலயம் G) | திரு. ஏ. ஜீ. ரீ. ஹேமந்த ஜயசிங்க<br>கடமை மேற்பார்வை |
| 35 | வதிவிடக் கருத்திட்டட முகாமையாளர் (வலயம் H) | திரு. ஐ. எம். யூ. கே. குமார<br>2018 ஜூன் வரை – பதில்<br>2018 ஜூன் முதல் - நிரந்தரம் |
| 36 | வதிவிடக் கருத்திட்டட முகாமையாளர் (விக்டோரியா) | திரு. ஐ. எம். யூ. கே. குமார<br>2018 ஜூன் வரையில் |
| | | திரு. ஏ. எம். ஏ. பீ. ஜீ. குணவர்தன<br>2018 ஜூன் தொடக்கம் |
| 37 | வதிவிடக் கருத்திட்டட முகாமையாளர் (ஹுருலுவெவ) | திரு. ஈ. எச். ஜயவர்தன<br>(கடமை மேற்பார்வை) |
| 38 | வதிவிடக் கருத்திட்டட முகாமையாளர் (ரம்பக்கன்ஓய) | திரு. ஏ .எம். ஏ. பி. ஜீ. குணவர்தன<br>2018 ஜூன் வரையில் |
| | | திரு. எச். எம். விஜேரத்ன<br>2018 ஜூன் தொடக்கம் |
| 39 | வதிவிடக் கருத்திட்டட முகாமையாளர் (வளவே) | திரு. ஏ. எல். ஒஸ்மன் டி சில்வா |

## 2018 ஆம் ஆண்டுக்கான பணிப்பாளர் நாயகத்தின் மீளாய்வுக் குறிப்பு

மகாவலி பல்நோக்கு அபிவிருத்தித் திட்டத்தை அமுல் செய்யும் பொருட்டு 1979 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் இலங்கை மகாவலி அதிகார சபை ஸ்தாபிக்கப்பட்டது. தற்பொழுது இலங்கையின் 1/3 பங்குக்கு மேற்பட்ட நிலப்பரப்பு முழுவதிலும் பரந்து, வியாபித்திருக்கும் மகாவலி ஆள்புல பிரதேசத்திற்குள் வசித்து வரும் குடித்தொகை பத்து இலட்சத்திற்கு மேற்பட்டதாக இருந்து வருகின்றது. மகாவலி நிகழ்ச்சித்திட்டத்தின் ஆரம்ப குறிக்கோள்களில் உலர் வலயத்தின் விவசாய, மீன்பிடி , மின்சார, கால்நடை வளங்கள் போன்ற துறைகளின் உற்பத்தித் திறனை அதிகரித்தல், வெள்ளக் கட்டுப்பாடு, புதிய தொழில் வாய்ப்புக்களின் உருவாக்கம் என்பவற்றை உள்ளடக்கிய விதத்தில் நாட்டிற்கு செல்வச் செழிப்பை எடுத்து வரும் விடயம் உள்ளடக்கப்பட்டிருந்தது.

தற்பொழுது மகாவலி பிரதேசங்களின் உற்பத்தித் திறனை அதிகரிப்பதற்கென விவசாயத் தொழில்முயற்சிகள், நீர் முகாமைத்துவம், விலங்கு உற்பத்திச் செயன்முறைகள் மற்றும் புதுப்பிக்கக் கூடிய மின்சக்தி உற்பத்தி என்பவற்றுக்கென தொழில்முனைவோரை இனங்கண்டு கொள்வதற்கென சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் தலையீட்டை பெற்றுக்கொள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இது தொடர்பாக விடயத்திற்கு பொறுப்பான அமைச்சுக்கள் மற்றும் ஏனைய அரச திணைக்களங்கள் என்பவற்றுடன் இணைந்து நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. தற்பொழுது இந்தத் துறைகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டு வரும் ஆராய்ச்சி நடவடிக்கைகளிலிருந்து வெற்றிகரமான பெறுபேறுகளை பெற்று, அவற்றின் மூலம் எதிர்காலத்தில் மகாவலி உற்பத்திகளின் விளைதிறனை அதிகரித்துக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. அதன் பிரகாரம் அமுல் செய்யப்பட்டு வரும் லிகிணியாகம, கொத்மலை திசு வளர்ப்பு நிறுவனத்தின் வெற்றிகரமான செயற்பாடுகள், மகாவலி வலயங்களின் விவசாயம் போன்ற துறைகளின் விளைதிறனை அதிகரித்துக் கொள்ளும் எதிர்பார்ப்புடன் அமுல் செய்யப்பட்டு வரும் ஆராய்ச்சி கருத்திட்டங்களாகும். இளைஞர் யுவதிகளை விவசாயத் துறைக்குள் நெறிப்படுத்துவதற்கான ஓர் ஊக்குவிப்பாக எதிர்காலத்தில் விவசாயத் தொழில் முயற்சிகள் அபிவிருத்தி கருத்திட்டம் மற்றும் புதிய தொழில்நுட்ப முறைகள் என்பவற்றை அறிமுகம் செய்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தற்பொழுது மகாவலி திட்டத்தின் கீழ் நாட்டின் பாரிய ஒரு பிரதேசத்தை உள்ளடக்கும் விதத்தில் அமைக்கப்பட்டிருக்கும் நீர்ப்பாசன தொகுப்பின் மூலம் நாட்டின் பாரிய ஒரு பிரதேசத்திற்கு நீர்ப்பான நீர், குடிநீர் என்பன வழங்கப்பட்டு வருகின்றன. அதே போல மின் உற்பத்திக்கும் மிக முக்கியமான ஒரு பங்களிப்பினை இது வழங்கி வருகின்றது. எனினும், எதிர்காலத்தில் தோன்றக்கூடிய நீருக்கான கேள்வியை கருத்தில் கொண்டு, நீர்த் தட்டுப்பாடு ஏற்படக்கூடிய ஒரு சில பிரதேசங்களுக்கு - குறிப்பாக உலர் காலநிலை நிலவும் காலப் பிரிவுகளின் போது தட்டுப்பாடின்றி நீரை வழங்கும் நோக்கத்துடன் (களனி கங்கையின்) கெஹெல்கமுஓயா மேல் நீரேந்து பரப்பு பிரதேசத்திலிருந்து நீரைத் திசை திருப்பி, மகாவலி கங்கையின் நீர் கொள்திறனை உச்ச மட்டத்தில் பெற்று, பயன்பெறக்கூடிய வாய்ப்புக் குறித்து இலங்கை மகாவலி அதிகார சபையின் பொறியியலாளர்களினால் தற்பொழுது பூர்வாங்க பரிசீலனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், கொத்மலை நீர்த்தேக்கத்தின் நீர் கொள்திறனை அதிகரித்துக் கொள்வதற்குத் தேவையான ஆரம்பத் திட்டங்கள் / பரீட்சிப்புக்கள் தொடர்பான நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பாரிய நீர்த் தேக்கங்களை துப்பரவு செய்து, நீரேந்து பிரதேசங்கள் மற்றும் ஆற்றுப் பள்ளத்தாக்குகள் என்பவற்றை பாதுகாக்கும் ஒரு பாரிய கருத்திட்டமும் தற்பொழுது சுற்றாடல் மற்றும் வனவள பாதுகாப்பு பிரிவின் மூலம் அமுல் செய்யப்பட்டு வருகின்றது. ஏற்கனவே இலங்கை மகாவலி அதிகார சபை, மேல் மாகாணம் தவிர்ந்த நாட்டின் ஏனைய அனைத்து மாகாணங்களிலும் பரந்து விரிந்து காணப்படும் ஒரு நிகழ்ச்சித்திட்டமாக செயற்பட்டு வருகின்றது.

மேலே குறிப்பிட்ட பணிகளை நிறைவேற்றிக் கொள்வதற்குத் தேவையான நோக்கு, வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனை என்பவற்றை வழங்கும் மகாவலி, விவசாய, நீர்ப்பாசன, கிராமிய அபிவிருத்தி, உள்நாட்டு வர்த்தக, உணவுப் பாதுகாப்பு மற்றும் நுகர்வோர் நலன்கள் தொடர்பான கௌரவ அமைச்சரான கௌரவ சமல் ராஜபக்ஷ அவர்களிடமிருந்து கிடைக்கும் ஊக்குவிப்பை பெரிதும் மதிக்கின்றேன். அதே போல மகாவலி அபிவிருத்தி கௌரவ ராஜாங்க அமைச்சர், அமைச்சின் செயலாளர் மற்றும் ராஜாங்க அமைச்சின் செயலாளர் ஆகியோரின் நெறிப்படுத்தலின் கீழ் மேலே குறிப்பிடப்பட்ட இலக்குகளை வெற்றிகரமாக சாதித்துக் கொள்வதற்கென செயற்பட்டு வரும் இலங்கை மகாவலி அதிகார சபையின் ஊழியர்களுக்கும், ஒட்டுமொத்த கருத் திட்டங்களின் ஊழியர் அணியினருக்கும் இச்சந்தர்ப்பத்தில் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.

பொறியியலாளர் பீ ஏ எஸ் எஸ் பெரேரா
பணிப்பாளர் நாயகம்
இலங்கை மகாவலி அதிகார சபை

# பணிப்பாளர் சபையின் சுருக்கக் குறிப்பு

31.12.2018 திகதியில் உள்ளவாறு இலங்கை மகாவலி அதிகார சபையின் பணிப்பாளர் சபையின் அறிக்கையை நிறுவனத்தின் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்களுடன் இத்துடன் சமர்ப்பிக்கின்றோம்.

**வருடம் தொடர்பான மீளாய்வு**

பணிப்பாளர் நாயகம் அவர்களினால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் மீளாய்வில் 2018 டிசம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த வருடத்தின் போது மேற்கொள்ளப்பட்ட நிறுவனத்தின் செயற்பாடுகள் தொடர்பான விரிவான ஒரு விளக்கம் உள்ளடக்கப்பட்டுள்ளது.

அதே போல நிறுவனத்தின் சொத்துக்களை பாதுகாத்தல், ஊழல், மோசடி மற்றும் ஏனைய முறைகேடுகள் என்பவற்றை கண்டறிதல் மற்றும் இடர்நேர்வுகளை குறைத்துக் கொள்ளல் என்பவற்றை நோக்காகக் கொண்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான ஒரு சிறந்த முகாமைத்துவத்துடன் நிறுவனம் செயற்பட்டுள்ளது.

மேலும், இலங்கை மகாவலி அதிகார சபையின் அனைத்து ஊழியர்களும், தம்மிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கும் பணிகளை நிறைவேற்றி வைக்கும் விடயத்தில் காட்டியிருக்கும் அதியுயர் அர்ப்பணிப்புணர்வு தொடர்பாக பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் என்ற முறையில் நாங்கள் எமது நன்றியினை அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கின்றோம்.

திரு. எச். ஹேமால் கஸ்தூரிஆரச்சி
பணிப்பாளர் நாயகம்,
நிதி அமைச்சு

பொறியியலாளர் (திரு.) எஸ். மோகனராஜா
பணிப்பாளர் நாயகம்
நீர்ப்பாசன திணைக்களம்

திரு. எம். டீ. ஜே. சீ. முரகே – உறுப்பினர்
உதவிப் பணிப்பாளர்
வர்த்தக மற்றும் முதலீட்டுக் கொள்கைகள் திணைக்களம்

பொறியியலாளர் (திருமதி) சீ. எச். தேவேந்திர – உறுப்பினர்
செயலாளர் மகாவலி அபிவிருத்தி, சுற்றாடல் அமைச்சு

திரு. திலக் பண்டார மஹலேகம்
உறுப்பினர்

# கணக்காய்வு கமிட்டியின் அறிக்கை – 2018

இலங்கை மகாவலி அதிகார சபையின் கணக்காய்வு கமிட்டி பணிப்பாளர் சபையின் நிறைவேற்றுத் தரம் சாராத மூன்று பணிப்பாளர்களை கொண்டு அமைக்கப்பட்டிருப்பதுடன், திறைசேரியை பிரதிநிதித்துவம் செய்யும் பணிப்பாளர் அக்கமிட்டியின் தலைவராக செயற்பட்டு வருகின்றார்.

**<u>வருடத்தின் போது கணக்காய்வு கமிட்டியின் உறுப்பினர்கள்</u>**

- திரு. ஹேமால் கஸ்தூரி ஆரச்சி - கமிட்டியின் தலைவர் - திறைசேரி பிரதிநிதி
- திரு. திலக் பண்டார மஹலேகம் - உறுப்பினர்
- பொறியியலாளர் (திருமதி) சீ. எச். தேவேந்திர - உறுப்பினர்

**<u>கமிட்டி கூட்டங்களில் பங்கேற்றவர்கள்</u>**

- பணிப்பாளர் (நிதி)
- பணிப்பாளர் (உள்ளக கணக்காய்வு)
- கணக்காய்வாளர் நாயகத்தை பிரதிநிதித்துவம் செய்யும் அரசாங்க கணக்காய்வு அதிகாரி ஒருவர்
- தேவையின் பிரகாரம் அழைக்கப்படும் ஏனைய சம்பந்தப்பட்ட அதிகாரிகள்

**<u>கமிட்டியின் பணிகள்</u>**

- ❖ உள்ளகக் கட்டுப்பாட்டு செயன்முறையை கண்காணித்தல், மீளாய்வு செய்தல் மற்றும் தேவையான சந்தர்ப்பங்களில் மீளமைப்புச் செய்தல், வருடாந்த கணக்காய்வு திட்டங்கள் தொடர்பாக கவனஞ் செலுத்துதல்.
- ❖ கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை மற்றும் உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகள் என்பவற்றை மீளாய்வு செய்தல், ஐய வினாக்கள் மூலம் நிலவி வரும் பிரச்சினைகளை இனங்கண்டு, பிரச்சினைகளை தீர்த்து வைப்பதற்கு தேவையான அறிவுறுத்தல்களை வழங்குதல்.
- ❖ 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 142 (C) உட்பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் நாயகத்தினால் எழுப்பப்பட்டிருக்கும் விடயங்களை கவனத்தில் எடுத்து, அதிகார சபையின் உள்ளக கட்டுப்பாட்டு முறைகளை ஒழுங்குபடுத்திக் கொள்வதற்கு அறிவுறுத்தல்களை வழங்குதல்.
- ❖ நிறுவனத்தின் செயலாற்றுகை அறிக்கைகளை காலாண்டு அடிப்படையில் மீளாய்வு செய்தல்.

**<u>உள்ளக கணக்காய்வு பிரிவு</u>**

நிறுவனத்துக்குள் ஆக்கபூர்வமான செயலாற்றுகையை உறுதிப்படுத்திக் கொள்ளும் பொருட்டு நிதிக் கணக்காய்வு, தொகுதி பகுப்பாய்வு, செயலாற்றுகை பகுப்பாய்வு மற்றும் விசேட புலனாய்வுகள் என்பவற்றை மேற்கொள்ளும் நோக்கத்துடன் இலங்கை மகாவலி அதிகார சபையின் உள்ளக கணக்காய்வு பிரிவு ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. அப்பிரிவினால் 2018 ஆம் வருடத்தின் போது கணக்காய்வு கமிட்டியின் ஆலோசனையின் பிரகாரம், ஓர் உள்ளக கணக்காய்வு திட்டத்தின் மூலம் அதிகார சபையின் உள்ளக கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டதுடன், செயல்திறனற்ற நடைமுறைகளை இல்லாதொழித்தல், உள்ளக கட்டுப்பாட்டினை விருத்தி செய்தல், ஊழல் மற்றும் மோசடிகள் ஏற்படக் கூடிய வாய்ப்புக்களை குறைக்கும் விதத்தில் செயற்படுதல் என்பவற்றுக்கென இப்பிரிவின் மூலம் தொகுதி கணக்காய்வு முறைமையியல் ஒன்றை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

**<u>2018 ஆம் வருடத்தின் போது இடம்பெற்ற முன்னேற்றம்</u>**

- உள்ளக கணக்காய்வு திட்டத்தின் கீழ் வருடத்தின் போது 17 கணக்காய்வு அறிக்கைகள் வெளியிடப்பட்டமை.

- 18 புலன் விசாரணைகள் நடத்தப்பட்டு, புலன் விசாரணை அறிக்கைகளை வழங்கியமை.

- கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கூட்டங்கள் 03 நடத்தப்பட்டமை.

- கணக்காய்வு ஐய வினாக்கள் தொடர்பாக வழங்கப்பட்ட பதில்கள் தொடர்பாக முன்னெடுக்கப்பட்டிருக்கும் நடவடிக்கைகளை கவனத்தில் எடுத்து, பரிந்துரைகளை அமுல் செய்வதற்கு அறிவுறுத்தல்களை வழங்குதல்.

**பரிந்துரை**

மேலே குறிப்பிடப்பட்ட செயற்பாடுகளின் போது இனங்காணப்பட்ட பிரச்சினைகளை சரி செய்து கொள்ளுமாறு அறிவுறுத்தல் வழங்கி கமிட்டியினால் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகளின் அடிப்படையில், முகாமைத்துவத்தினால் நிறுவனத்துக்குள் எதிர்காலத்தில் தவறுகளை நிவர்த்தி செய்து கொள்வதற்கென நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# கடந்த 7 வருடங்களின் போது சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள்

| | 2018 | 2017 | 2016 | 2015 | 2014 | 2013 | 2012 |
|---|---|---|---|---|---|---|---|
| | (ரூ.'000) | (ரூ.'000) | (ரூ.'000) | (ரூ.'000) | (ரூ.'000) | (ரூ.'000) | (ரூ.'000) |
| **சொத்துக்கள்** | | | | | | | |
| நடைமுறை அல்லாத சொத்துக்கள் | | | | | | | |
| இயந்திரம், உபகரணம், பொறித்தொகுதி | 4,675,657 | 4,116,187 | 4,195,724 | 4,294,893 | 4,259,208 | 4,549,301 | 3,733,498 |
| | | | | | | | |
| இடம்பெற்று வரும் வேலைகள் | 84,947 | 78,552 | 41,301 | 74,286 | 62,506 | 48,362 | 12,821 |
| முதலீடுகள் | 171,313 | 187,531 | 178,556 | 152,577 | 175,359 | 166,731 | 135,392 |
| நடைமுறை அல்லாத சொத்துக்களின் மொத்தம் | **4,931,917** | **4,382,270** | **4, 415,581** | **4,521,756** | **4,497,073** | **4,764,394** | **3,881,711** |
| | | | | | | | |
| **அசையும் மூலதன சொத்துக்கள்** | 167,027 | 134,578 | 101,940 | | | | |
| பதிவழித்தல்கள் | - | 859 | 859 | | | | |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | | | | | |
| களஞ்சியங்கள்/ கையிருப்புக்கள் | 180,342 | 184,815 | 168,173 | 157,428 | 180,890 | 174,028 | 161,801 |
| அசையும் வியாபார சொத்துக்கள் | 26,312 | 15,875 | 22,630 | | | | |
| வியாபாரம் கிடைக்க வேண்டியவை | 2,032,715 | 2,084,069 | 1,730,015 | 1,307,077 | 1,274,329 | 1,150,958 | 898,804 |
| முன் கொடுப்பனவுகள் | 4,767 | 3,896 | 8,754 | 5,172 | | 38 | 1,548 |
| வங்கி உத்தரவாதங்கள் | 6,262 | 6,164 | 4,153 | 1,372 | 837 | 905 | 2,210 |
| காசு, காசுக்கு இணையானவை | 312,702 | 343,312 | 312,750 | 429,588 | 190,391 | 140,950 | 121,802 |
| மொத்த நடைமுறைச் சொத்துக்கள் | 2,563,130 | 2,638,131 | 2,246,475 | 1,900,637 | 1,646,447 | 1,466,879 | 1,186,165 |
| மொத்தச் சொத்துக்கள் | **7,662,074** | **7,155,838** | **6,764,855** | **6,422,393** | **6,143,521** | **6,231,273** | **5,067,876** |
| **பொறுப்புக்கள்** | | | | | | | |
| நடப்பு பொறுப்புக்கள் | | | | | | | |
| கடனீந்தவர்களுக்கு செலுத்த வேண்டியவை | 651,986 | 879,967 | 376,737 | 341,286 | 491,622 | 528,482 | 478,223 |
| குத்தகைகள் - அலயன்ஸ் பினான்ஸ் கம்பெனி | - | 2,153 | 3,080 | | | | |
| திரண்ட செலவுகள் | 102,067 | 175,733 | 122,286 | 46,159 | 207,705 | 87,145 | 61,525 |
| மொத்த நடைமுறை பொறுப்புக்கள் | **754,053** | **1,057,853** | **502,103** | **387,445** | **699,327** | **615,627** | **539,748** |
| **நடைமுறை அல்லாத பொறுப்புக்கள்** | | | | | | | |
| பணிக்கொடைக்கான ஒதுக்குகள் | 1,379,494 | 1,388,101 | 1498,288 | 1,551,379 | 1,311,876 | 1,157,688 | 1,077,205 |
| வங்கி கடன்கள் | | | 2455 | | | | |
| தாமதப்படுத்தப்பட்ட வரி | 612 | 612 | 612 | 612 | 612 | 612 | 612 |
| குத்தகைகள் | 219 | 271 | 2,653 | 11,247 | 14,329 | 6,243 | 9,269 |
| **நடைமுறை அல்லாத சொத்துக்களின் மொத்தம்** | 1,380,325 | 1,388,984 | 1,495,008 | 1,563,838 | 1,326,817 | 1,164,543 | 1,087,086 |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | 2,134,378 | 2,446,837 | 1,997,111 | 1,950,683 | 2,026,144 | 1,780,170 | 1,626,834 |
| மொத்த தேறிய சொத்துக்கள் | **5,527,696** | **4,709,001** | **4,767,744** | **4,471,710** | **4,117,386** | **4,451,103** | **3,441,042** |
| தேறிய சொத்துக்கள் / உரித்துக்கள் | | | | | | | |
| திரண்ட நிதியம் | 24,649,830 | 24,407,260 | 24,066,161 | 23,702,950 | 23,383,849 | 23,224,435 | 23,116,473 |
| மு / கொ வருமான செலவுக் கணக்கு மீதி | (24,040,551) | (23,755,208) | 52,121 | 53,992 | 67,466 | 53,560 | 53,560 |
| வருமானம் - ஒதுக்கு கம்பனிகள் | 50,865 | 4,006,082 | 4,019,027 | 4,021,721 | 3,837,266 | 3,851,627 | 3,061,097 |
| மீள் மதிப்பீட்டு இலாபம் | 4,867,551 | 50,865 | (23,369,566) | (23,276,474) | (23,171,205) | (22,678,520) | (22,787,889) |
| மொத்த தேறிய சொத்துக்கள் / பங்கு மூலதனம் | **5,527,696** | **4,708,999** | **4,767,743** | **4,502,189** | **4,117,377** | **4,451,102** | **3,443,241** |

## இலங்கை மகாவலி அதிகார சபையின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் கம்பெனிகளின் பணிப்பாளர் சபைகள் – 2018

| வரிசை எண் | கம்பெனி | தலைவர் | பணிப்பாளர் சபை | தலைமை அலுவலக முகவரி |
|---|---|---|---|---|
| 01 | வ/ப மகாவலி கால்நடை வளங்கள் மற்றும் விவசாய தொழில்முயற்சிகள் (தனியார்) கம்பெனி | | 1. திரு. எட்வர்ட் டி மெல் (பணிப்பாளர்)<br>2. திரு. ஒஸ்மன்ட் டி சில்வா (பணிப்பாளர்)<br>3. திரு. பராக்கிரம அபேவர்தன | இல. 260/20, பேஸ்லைன் வீதி, கொழும்பு 09 |
| 02 | வ/ப மகாவலி ஆலோசனை சேவைகள் பணியகம் | டாக்டர் ஹர்ஷ சமரவீர | 1. திரு. கே. எல். எஸ். சஹபந்து<br>2. பொறியியலாளர் திரு. எல் . ஆர் எச். பெரேரா | இல. 11, ஜாவத்த வீதி, கொழும்பு 05 |
| 03 | இயற்கை வளங்கள் முகாமைத்துவ சேவைகள் (தனியார்) கம்பெனி | பொறியியலாளர் (திரு.) ஏ.ஏ.வி. டயஸ் | 1. பொறியியலாளர் (திரு.) பீ. டப். என்.டப். செனவிரத்ன பண்டா<br>2. திரு. என். எம்.கே.பி. அத்தனாயக்க<br>3. திரு. எல். எம். தர்மசிரி<br>4. திரு. எம்.ஜீ. அபேரத்ன பண்டார (கம்பனி செயலாளர்) | அணைக்கட்டு பிரதேசம், பொல்கொல்ல, கண்டி |

# நிர்வாக அறிக்கை

## பாகம் I

# முதலாவது அத்தியாயம்

## இலங்கை மகாவலி அதிகார சபையின் ஸ்தாபிதம் மற்றும் அதன் உள்ளடக்கம்

1979 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் இலங்கை மகாவலி அதிகார சபை ஸ்தாபிக்கப்பட்டிருப்பதுடன், அச்சட்டத்தின் 12 ஆம் பிரிவின் கீழ் குறிப்பிட்ட ஒரு விசேட பிரதேசத்தில் அல்லது ஒரு விசேட பிரதேசம் தொடர்பாக அதிகார சபையின் கருமங்கள் பின்வரும் விதத்தில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளன:

(அ) நீர்த்தேக்கங்கள், நீர்ப்பாசன நீர் விநியோக அமைப்புக்கள் என்பவற்றை நிர்மாணித்து, இயக்குதல் மற்றும் மின்சார உற்பத்தி, மின்சார விநியோகம் என்பவற்றுக்கான இயந்திர உபகரணங்களை நிறுவுதல் என்பவற்றையும் உள்ளடக்கிய விதத்தில் மகாவலி கங்கை அபிவிருத்தி திட்டத்தை திட்டமிடுதல் மற்றும் அமுல் செய்தல்.

எவ்வாறிருப்பினும், மின்சார விநியோகம் தொடர்பான கடமைகள், வேறேதேனும் எழுத்து மூலமான ஒரு சட்டத்தின் கீழ் அவ்வாறு செய்வதற்கென அதிகாரத்தை பெற்றிருக்கும் வேறு ஓர் அதிகார சபையினாலும் மேற்கொள்ளப்பட முடியும்.

(ஆ) முழுமையான, ஒருங்கிணைந்த அபிவிருத்தியை போஷித்து வளர்த்தல் மற்றும் அந்த அபிவிருத்தியை தக்க வைத்துக் கொள்ளல்.

(இ) விவசாயத் துறையின் உற்பத்தித்திறன் மற்றும் வேலைவாய்ப்பு ஆற்றல் என்பவற்றை உயர் மட்டத்தில் நிலை நிறுத்துதல். அத்துடன், விவசாய பொருளாதார அபிவிருத்தியை எடுத்து வருதல் மற்றும் உறுதிப்படுத்திக் கொள்ளல்.

(ஈ) பௌதீகச் சூழலை பாதுகாத்தல் மற்றும் பராமரித்து வருதல்.

(உ) பொதுமக்களின் நலனோம்பல் மற்றும் கலாசார முன்னேற்றம் என்பவற்றை விருத்தி செய்தல் மற்றும் நிர்வகித்தல்.

(ஊ) விவசாய அபிவிருத்தியில் உள் மற்றும் வெளியார் மூலதனத்தை பயன்படுத்துதல், மேம்படுத்துதல் மற்றும் உறுதிப்படுத்திக் கொள்ளல்.

(எ) மகாவலி கங்கை அபிவிருத்தி திட்டத்தை திட்டமிடுவதிலும், அமுல் செய்வதிலும் அரசாங்க திணைக்களங்கள், அரச நிறுவனங்கள், உள்ளூராட்சி நிறுவனங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சபைகள், தனியார் அல்லது வேறு எவரேனும் நபர்கள் ஆகிய தரப்புக்களின் ஒத்துழைப்பை பெற்றுக் கொள்ளல் மற்றும் உறுதிப்படுத்திக் கொள்ளல்.

# இலங்கை மகாவலி அதிகார சபையின் கருமங்கள்

இலங்கை மகாவலி அதிகார சபையின் ஒவ்வொரு விடயப் பரப்பின் கீழும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் கருத்திட்டங்கள் மற்றும் கள அலுவலகங்கள் என்பவற்றின் செயற்பாடுகளை ஒருங்கிணைத்தல் செயற்பாடு பணிப்பாளர் நாயகத்தின் பணிப்புரையின் கீழ் பிரதிப் பணிப்பாளர் நாயகங்கள், பணிப்பாளர்கள், கருத்திட்ட பணிப்பாளர்கள் மற்றும் வதிவிட கருத்திட்ட முகாமையாளர்கள் ஆகியோரினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதன் பிரகாரம், பின்வரும் கருமங்களை இலங்கை மகாவலி அதிகார சபை நிறைவேற்றியுள்ளது:

- தொகுதி திட்டம் மற்றும் வருடாந்த செயல் திட்டம் என்பவற்றின் பிரகாரம் நிறுவனத்தின் முன்னேற்றத்தை மாதாந்த அடிப்படையில் மீளாய்வு செய்து, தேவையான தலையீடுகளின் மூலம் குறிப்பிட்ட இலக்குகளை நிறைவேற்றிக் கொள்ளல்.

- சொத்துக்களை பராமரித்தல் மற்றும் நிர்வகித்தல் தொடர்பான உரிய திட்டமொன்றின் பிரகாரம் செயற்படுவதன் மூலம் சொத்துக்களை கையுதிர்த்தல்.

- கால அட்டவணையின் பிரகாரம் மொறகஹகந்த - களுகங்க நீர்த்தேக்கம் மற்றும் கிவுல்ஓய நீர்த்தேக்கம் என்பவற்றை நிர்மாணித்தல்.

- வலயம் B வலது கரை மற்றும் வலயம் L என்பவற்றின் நீர்ப்பாசனத்தை பெற்றுக் கொள்ளும் நிலப்பரப்பினை அதிகரித்துக் கொள்வதற்கென பிரதேசங்களை இனங்கண்டு, பூர்வாங்க சுற்றாடல் ஆய்வுகளை மேற்கொள்ளல்.

- விவசாயத் துணைச் சேவைகளின் மேம்பாடு, விவசாய மேம்பாடு மற்றும் வருமான உருவாக்க நிகழ்ச்சித்திட்டங்களை விருத்தி செய்தல் மற்றும் நாட்டில் உணவுப் பாதுகாப்பினை ஏற்படுத்துதல்.

- நீர்ப்பாசன கட்டமைப்புக்களின் பராமரிப்பு, முகாமைத்துவம் என்பவற்றை விவசாயிகள் அமைப்புக்களிடம் ஒப்படைக்கக் கூடிய விதத்தில் விவசாயிகள் அமைப்புக்களை பலப்படுத்துவதற்கென உத்தியோகத்தர்கள் மற்றும் விவசாயிகள் பிரதிநிதிகள் ஆகியோருக்கு வலுவூட்டுதல்.

- "செல்வச் செழிப்புமிக்க தேசமொன்றுக்கு மகாவலி கால்நடை உற்பத்திகள்" என்ற தொனிப் பொருளின் கீழ் மகாவலி குடியேற்றவாசிகள் சமூகத்தினரின் வாழ்வாதார அபிவிருத்திக்கென கால்நடை வளங்கள் துறைக்கு வலுவூட்டுதல்.

- விவசாய நிலங்கள் தொடர்பாக பற்றாக்குறையை எதிர்நோக்கி வரும் மகாவலி குடியேற்றவாசிகளின் இரண்டாவது மற்றும் மூன்றாவது தலைமுறையினருக்கு பொருளாதார அபிவிருத்தியையும், தொழில் உருவாக்கத்தையும் எடுத்து வரும் பொருட்டு பாரம்பரிய விவசாயத் துறைக்கு வெளியிலான தொழில் முதலீட்டு கருத்திட்டங்களுக்கு அவர்களை நெறிப்படுத்துதல் மற்றும் வழிகாட்டுதல்.

- அனைத்து மட்டங்களையும் சேர்ந்த அதிகாரிகள் மற்றும் உத்தியோகத்தர்கள் ஆகியோரின் ஆற்றல் அபிவிருத்திக்கென செயற்படுதல்; ஊழியர்கள் தொடர்பான தகவல்களை கணினியில் உட்படுத்துதல் மற்றும் e - மனிதவள முகாமைத்துவ தொகுதியொன்றை அறிமுகம் செய்து வைத்தல்.

- மத்திய அரசு நிறுவனங்களுடன் கலந்துரையாடி, சாகுபடி பருவ செயற்பாட்டுத் திட்டமொன்றை தயாரித்து, நீர்ப்பாசனம், குடியிருப்புக்கள், நீர் மின் வலு உற்பத்தி, வீடுகளுக்கான மின்சார விநியோகம் மற்றும் வீடுகளுக்கான நீர் விநியோகம் என்பவற்றுக்கென முதன்மை நீர்த்தேக்கங்களிலிருந்து நீரை ஒதுக்குதல்.

- வலயங்கள் B, C, H, L, D மொறகஹகந்த, ஹுருலுவெவ, வளவே, விக்டோரியா மற்றும் ஒரு புதிய வலயமாக பிரகடனம் செய்யப்பட்டிருக்கும் ரம்பக்கன்ஓயா ஆகிய கருத்திட்டங்களில் பயிர்பன்முகப்படுத்தல், சமூக, பொருளாதார அபிவிருத்தி மற்றும் தொழில் வாய்ப்புக்களின் உருவாக்கம் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

- நீர் முகாமைத்துவம், மனித வள அபிவிருத்தி, கால்நடை வள அபிவிருத்தி, விவசாய அபிவிருத்தி, மண் மற்றும் நீர் பாதுகாப்பு, நீர்ப்பிரி நிலங்களின் முகாமைத்துவம், சுற்றாடல் மாசடைதல் மற்றும் நீர் மாசடைதல் தொடர்பாக சமூகத்திற்கு அறிவூட்டுதல்.

- முதன்மை நீர்த்தேக்கங்களின் நீர் திசை திருப்பல் அளவுகளை பாதுகாப்பான விதத்தில் மேற்கொள்ளும் பொருட்டு பயனுள்ள செயற்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்களை உருவாக்குதல், அமுல் செய்தல் மற்றும் விவசாய அமைப்புக்களுக்கு அது தொடர்பாக அறிவூட்டுதல்.

## இலங்கை மகாவலி அதிகார சபையின் நிர்வாக கட்டமைப்பு

- பணிப்பாளர் நாயகம்
  - மேலதிக பணிப்பாளர் நாயகம்
    - பிரதிப் பணிப்பாளர் நாயகம் (தொழில்நுட்ப சேவைகள்)
      - பணிப்பாளர் - முதன்மை வேலைகள் நிர்வாகம், இயக்குதல் மற்றும் பராமரிப்பு
      - பணிப்பாளர் - பொறியியல் வடிவமைப்பு
      - பணிப்பாளர் - ஆற்றின் கீழ்ப் பகுதி அபிவிருத்தி
      - பணிப்பாளர் - ஆற்றுப் பள்ளத்தாக்கு முகாமைத்துவம்
      - பணிப்பாளர் - வனவளம் மற்றும் சுற்றாடல்
      - பணிப்பாளர் - காணிப் பாவனை திட்டமிடல்
      - பணிப்பாளர் - நீர் முகாமைத்துவ செயலகம்
    - பிரதி பணிப்பாளர் நாயகம் (நிர்வாகம் மற்றும் நிதி)
      - பணிப்பாளர் - ஆளணி மற்றும் நிர்வாகம்
      - பணிப்பாளர் - நிதி
      - பணிப்பாளர் - சட்டம்
      - பணிப்பாளர் - மகாவலி நிலையம்
      - பணிப்பாளர் - மகாவலி பாதுகாப்பு படை
    - பிரதி பணிப்பாளர் நாயகம் (அபிவிருத்தி)
      - பணிப்பாளர் - காணி
      - பணிப்பாளர் - விவசாயம்
      - பணிப்பாளர் - நிறுவன அபிவிருத்தி
      - பணிப்பாளர் - வணிக அபிவிருத்தி
      - பணிப்பாளர் - கால்நடை வளங்கள் அபிவிருத்தி
      - பணிப்பாளர் - ஆராய்ச்சி அபிவிருத்தி, விசேட கருத்திட்டங்கள் (2018 நவம்பர் தொடக்கம்)
    - வதிவிட கருத்திட்ட முகாமையாளர்கள் B,C,D,H,L, மொரகஹகந்த, விக்டோரியா, ரம்பக்கன் ஓயா, ஹுருலுவெவ, வளவே மகாவலி வலயங்கள்
    - பணிப்பாளர் - உள்ளக கணக்காய்வு
    - பணிப்பாளர் - திட்டமிடல் மற்றும் செயற்பாடுகள்
    - பணிப்பாளர் - தலைமை அலுவலக செயற்பாடு (2018 நவம்பர் வரையில்)

## மகாவலி வலயங்களின் கட்டமைப்பு மற்றும் நிர்வாகம்

மகாவலி கங்கை பள்ளத்தாக்கு அபிவிருத்தி பெருந்திட்டத்தின் பிரகாரம் உருவாக்கப்பட்டிருக்கும் குடியிருப்புக்களின் நிர்வாகம், நீர்ப்பாசன கட்டமைப்புக்களை இயக்குதல், பராமரித்தல் மற்றும் நிர்வகித்தல் என்பவற்றுக்கென மகாவலி பிரதேசம் 10 நிர்வாக அலகுகளாக பிரிக்கப்பட்டுள்ளது. மகாவலி பள்ளத்தாக்குடன் இணைந்த விதத்தில் அருகில் B,C,D,H, மொறகஹகந்த, விக்டோரியா, ஹுருலுவெவ ஆகிய வலயங்களும், உடவளவே, வெலிஓயா (L வலயம்) மற்றும் ரம்பக்கன்ஓயா போன்ற விசேட வலயங்களும் உருவாக்கப்பட்டுள்ளன.

மகாவலி வலயங்கள் மற்றும் விசேட பிரதேசங்கள் என்பவற்றின் அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவ கருமங்கள் வதிவிட கருத்திட்ட முகாமையாளர்களின் அதிகாரங்களின் கீழ் ஒப்படைக்கப்பட்டுள்ளன. வதிவிட கருத்திட்ட முகாமையாளர்கள் நேரடியாக பணிப்பாளர் நாயகம் மற்றும் மேலதிக பணிப்பாளர் நாயகம் ஆகியோருக்கு பொறுப்புக் கூறுவதுடன், பிரதிப் பணிப்பாளர் நாயகங்களின் கண்காணிப்பின் கீழ் வலய மட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகளுக்கென தலைமை அலுவலகத்தில் ஒவ்வொரு விடயப் பரப்பு தொடர்பாகவும் நியமனம் செய்யப்பட்டிருக்கும் பணிப்பாளர்களின் ஒத்துழைப்பு அவர்களுக்கு கிடைக்கின்றது.


அதே போல ஒவ்வொரு வலயத்திலும் வதிவிட கருத்திட்ட முகாமையாளர் பிரதான நிறைவேற்று அதிகாரியாக இருந்து வருவதுடன், தொழில்நுட்பம், காணி, விவசாயம் மற்றும் அபிவிருத்தி ஆகிய துறைகளுக்கான கண்காணிப்பு உத்தியோகத்தர்களாக பிரதி வதிவிட கருத்திட்ட முகாமையாளர்கள் இணைக்கப்பட்டுள்ளார்கள். ஒரு சில அலகுகள் ஒன்றாக இணைக்கப்பட்டு ஒரு பிரிவு முகாமையாளர் அலுவலகம் அமைக்கப்பட்டிருப்பதுடன், அந்த அலுவலகத்தில் ஒவ்வொரு விடயப் பரப்பு தொடர்பாக பிரிவு முகாமையாளர்களின் நேரடியான கண்காணிப்பின் கீழ் ஒரு நீர்ப்பாசன பொறியியலாளர், நிறுவன அபிவிருத்தி உத்தியோகத்தர், விவசாய உத்தியோகத்தர் மற்றும் காணி உத்தியோகத்தர் ஆகியோர் அமர்த்தப்பட்டுள்ளனர். இந்த உத்தியோகத்தர்களின் கண்காணிப்பின் கீழ் அனைத்து விடயப் பரப்புக்கள் தொடர்பாகவும் கடமைகளை நிறைவேற்றி வைப்பதற்கென ஒவ்வொரு அலகுக்கும் ஒரு முகாமையாளர் வீதம் அமர்த்தப்பட்டுள்ளனர். குறிப்பாக, ஒவ்வொரு அலகிலும் காணிகளை பெற்றுக் கொண்ட சுமார் 250 – 300 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் குடியமர்த்தப்படுகின்றனர்.

காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டம் மற்றும் முடிக்குரிய காணிகள் கட்டளைச் சட்டம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்ட அரசாங்கத்தின் காணிக் கொள்கையின் பிரகாரம் மகாவலி வலயங்களில் காணி நிர்வாகம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கென அரச காணிகளை பகிர்ந்தளிப்பது தொடக்கம் அளிப்புப் பத்திரங்களை வழங்குவது வரையிலான அனைத்துச் செயற்பாடுகளும், அதே போல காணிகள் பகிர்ந்தளிப்புக்கு பின்னரான செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இது தவிர, வர்த்தக மற்றும் முதலீட்டு நோக்கங்களுக்கென காணிகளை குத்தகை அடிப்படையில் வழங்குவது தொடர்பான பூர்வாங்க நடவடிக்கைகளும், ஆரம்ப குடியேற்றவாசிகளுக்கு

மேலதிகமாக இரண்டாவது அல்லது மூன்றாவது தலைமுறையினருக்கு காணிகளை பகிர்ந்தளிப்பதும் வலய அலுவலகங்களின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.


அதே போல நீர்ப்பாசன நீர் முகாமைத்துவம், நிறுவன அபிவிருத்தியின் மூலம் நீர்ப்பாசன கட்டமைப்புக்களை பராமரித்தல், முகாமைத்துவம் மற்றும் மேலும் விருத்தி செய்தல் என்பனவும் இடம்பெறுகின்றன. விவசாய அபிவிருத்தியின் கீழ் விதை உற்பத்தி, பண்ணை அபிவிருத்தி, பயிற்சி மற்றும் மாதிரிப் பண்ணைகளை செயற்படுத்துதல், கால்நடை வளங்கள், கடற்றொழில் மற்றும் சுற்றாடல் பாதுகாப்புச் செயற்பாடுகள், கருத்திட்ட அபிவிருத்தி, சிறிய மற்றும் நடுத்தர அளவு கடன் நிகழ்ச்சித்திட்டங்களை அமுல் செய்தல், விவசாய வர்த்தக தொழில் முயற்சிகளை நெறிப்படுத்துதல், விவசாய கைத்தொழில்கள் மற்றும் சுயதொழில் நிகழ்ச்சித்திட்டங்கள் என்பவற்றை செயற்படுத்தல் என்பனவும் வலயங்களின் நிர்வாகத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

# மகாவலி வலயங்களின் வரைபடங்கள்



## B வலயம்


### வலயம் தொடர்பான அறிமுகம்




மகாவலி B வலயம் மாதுறுஓய நீர்த்தேக்கத்தின் கீழ் பள்ளத்தாக்குப் பகுதியின் மொத்த நிலப்பரப்பான 75,441.5 ஹெக்டெயார் முழுவதிலும் வியாபித்துள்ளது. பொலன்னறுவை மற்றும் மட்டக்களப்பு ஆகிய நிர்வாக மாவட்டங்களின் கீழ் வரும் மிகப் பெரிய கருத்திட்டமாக இதனைக் குறிப்பிட முடியும். நீர்ப்பாசன முகாமைத்துவத்தை கருத்தில் கொண்டு கருத்திட்டப் பிரதேசம் 08 நிர்வாகப் பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது. அதே போல நீர்ப்பாசன நிர்வாகத்தின் கீழ் இருந்து வரும் 54 கி. மீ. நீளமான முதன்மையான கால்வாய், 23.16 கி. மீ. நீளமான பிம்புறத்தாவ பிரதான கால்வாய் மற்றும் 67.8 கிலோ மீற்றர் நீளமான கிளைக் கால்வாய்கள் கட்டமைப்பை இது கொண்டுள்ளது. நீர் விநியோக கால்வாய்க் கட்டமைப்பு 459.03 கிலோ மீற்றர் நீளமானதாகவும், வயல் கால்வாய்க் கட்டமைப்பு 2135.9 கிலோமீற்றர் நிளமானதாகவும் இருந்து வருகின்றன.

## C வலயம்


### **வலயம் தொடர்பான அறிமுகம்**




இலங்கையின் கிழக்குப் பிரதேசத்தின் நடுப் பகுதியில் அமைந்திருக்கும் மகாவலி வலது கரை C வலயத்திற்கு உட்படுவதுடன், பொலன்னறுவை, பதுளை மற்றும் அம்பாறை ஆகிய மூன்று நிர்வாக மாவட்டங்களின் கீழ் இது வருகின்றது. இந்த வலயத்தின் மொத்த நிலப்பரப்பு 30,760 ஹெக்டெயராக இருந்து வருவதுடன், இதுவரையில் சாகுபடி செய்யப்பட்டிருக்கும் நிலப் பரப்பு 22,406 ஹெக்டெயர்களாக உள்ளது. இந்த வலயத்தின் பிரதான வாழ்வாதார செயற்பாடுகள் நெல், உப உணவுப் பயிர்களின் சாகுபடி மற்றும் கால்நடை உற்பத்திகள் என்பவாகும். அதே போல இந்த வலயத்திற்கென நீர்ப்பாசன நீரை முகாமைத்துவம் செய்யும் பிரதான நீர்த் தேக்கங்கள் உல்கிட்டிய மற்றும் ரத்கிந்த நீர்த்தேக்கங்கள் ஆகும். இந்த வலயம் 7 பிரிவுகளாகவும், 31 அலகுகளாகவும் பிரிக்கப்பட்டுள்ளது.

## D வலயம்


### வலயம் தொடர்பான அறிமுகம்



இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் பிரகடனப்படுத்தப்பட்டிருக்கும் மெதிரிகிரிய பிரதேசத்தில் 2004ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட மகாவலி D வலயம் இரண்டு பிரிவுகளைக் கொண்டுள்ளது. பிசோபுர மற்றும் சூரியபுர என்பன அப்பிரிவுகளாகும். பிசோபுர பிரிவு 04 அலகுகளைக் கொண்டுள்ளது. வடக்கில் திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய் பிரதேசம் வரையிலும், கிழக்கில் சேருவில பிரதேசம் வரையிலும், தெற்கில் மற்றும் மேற்கில் பொலன்னறுவை மாவட்டத்தில் லங்காபுர, ஹிங்குராக்கொட பிரதேசம் வரையிலும் இந்த வலயம் வியாபித்துள்ளது.

## G வலயம்

### வலயம் தொடர்பான அறிமுகம்





மகாவலி G வலயம் எலஹர, யோத கால்வாயினால் நீர்ப்பாசனத்தைப் பெற்றுக்கொள்ளும் கடந்த கால நீர்ப்பாசன நாகரிகத்தின் பாரம்பரியமாக இருந்து வரும் ஒரு நிலப் பிரதேசமாகும்.

மக்கள் வசித்து வராத காரணத்தினால் காடு வளர்ந்து கிடந்த எலஹர யோதஎல கால்வாய் மீண்டும் 1947ஆம் ஆண்டில் பிரதம மந்திரி கௌரவ டீ. எஸ் சேனாநாயக்க அவர்களினால் மீண்டும் குடியேற்ற வாசிகளைக் கொண்டு ஸ்தாபிக்கப்பட்டது. அன்று தொடக்கம் புதிய குடியேற்றங்கள் அங்கு ஆரம்பிக்கப்பட்டன. 2001 ஆம் வருடத்தின் போது மகாவலி B வலயத்தின் கீழ் ஒரு பிரிவு முகாமையாளர் பிரதேசமாக இப்பிரதேசம் நிர்வகிக்கப்பட்டு வந்தது. பின்னர் 2004ஆம் ஆண்டு தொடக்கம் மீண்டும் அது மகாவலி G வலயமாக அறிவிக்கப்பட்டு, நிர்வாக நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன.

2012ஆம் ஆண்டின் தொடக்கத்தில் மொரகஹகந்த களுகங்கை நீர்த்தேக்கத்தின் நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டதனையடுத்து அந்த நீர்த்தேக்கங்கள் காரணமாக அமிழ்ந்து போகும் காணிகளில் வசித்து வந்த குடும்பங்களை அந்த இடத்திலிருந்து அகற்றி, மீள்குடியேற்றும் நடவடிக்கைகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன. குறுவெல மற்றும் வல்லேவெல ஆகிய பெயர்களில் இரண்டு பிரிவு முகாமையாளர் அலுவலகங்கள் ஆரம்பிக்கப்பட்டன. 2013ஆம் ஆண்டில் இந்த இரு பிரிவுகளுள்ளும் விவசாயக் குடும்பங்கள் குடியேற்றப்பட்டதுடன், 4 பிரிவு முகாமையாளர்களின் கீழ் பக்கமுன, அத்தன கடவெல, குறுவெல, வல்லேவெல என்ற பெயர்களில் நான்கு பிரிவுகள் நிர்வாகப் பிரிவுகளாக செயற்பட்டு வருகின்றன.

## H வலயம்

### வலயம் தொடர்பான அறிமுகம்





மகாவலி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் முதலாவது கட்டம் பொல்கொல்லையில் மகாவலி ஆற்றை திசை திருப்புவதன் மூலம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. அப்பொழுது ஆரம்பித்து வைக்கப்பட்ட மகாவலி அபிவிருத்திச் செயன்முறையின் கீழ் A வலயம் தொடக்கம் H வலயம் வரையில் இதுவரையில் பெருந்தொகையான வலயங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. அத்துடன் வளவே விசேட பிரதேசம், ரம்பக்கன்ஓயா வலயம், L வலயம் போன்ற புதிய வலயங்களையும் சேர்த்து இப்பொழுது அது 10 வலயங்கள் வரையில் வளர்ச்சி கண்டுள்ளது. இந்தப் பெயர் சூட்டலின் பிரகாரம் கலாவெவ பிரதேசத்தை மையமாகக் கொண்ட 57,000 ஏக்கர் புதிய காணிகள் துப்பரவு செய்யப்பட்டு, குடியேற்றங்கள் உருவாக்கப்பட்டன. அவ்விதம் குடியேற்றங்கள் உருவாக்கப்பட்ட முதலாவது மகாவலி நீர்ப்பாசனத் தொகுப்பாக கலாவெவ நீரின் மூலம் நீர்ப்பாசனத்தை பெற்றுக்கொள்ளும் H வலயம் கருதப்படுகின்றது.

இங்கு 1976ஆம் ஆண்டில் முதலில் மக்கள் குடியேற்றப்பட்டதனை அடுத்து இப்பொழுது 42 வருட காலம் கடந்து சென்றுள்ளது. இது மேற்கில் அநுராதபுரம் - புத்தளம் பெருந்தெருவையும், வடக்கில் வலதுகரை கால்வாயையும், தெற்கில் பளலுவெவ கரை, உஸ்கல, சியபலம்கமுவா ஊடாக ராஜாங்கன கரை வரை செல்லும் கால்வாயையும் எல்லையாகக் கொண்டுள்ளது. அது தவிர காகம, கட்டியாவ, உஸ்கல மற்றும் சியபலம்கமுவா போன்ற புராதன குடியேற்றப் பிரதேசங்களும் H வலயத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## L வலயம்


### வலயம் தொடர்பான அறிமுகம்




இப்பிரதேசத்தில் 1984ஆம் ஆண்டில் காணி ஆணையாளர் திணைக்களத்தின் மூலம் குடியேற்றங்கள் ஆரம்பித்து வைக்கப்பட்டன. 1988ஆம் ஆண்டின் 562 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் மூலம் இது ஒரு மகாவலி வலயமாக பிரகடனம் செய்யப்பட்டது. 163,000 ஹெக்டெயார் பரப்பளவைக் கொண்ட இந்த வலயம் வடக்கில் முல்லைத்தீவு, வவுனியா நெடுஞ்சாலையையும், கிழக்கில் முல்லைத்தீவு கடற்கரையையும், தெற்கில் புல்மோட்டை, கெப்பித்திக்கொல்லாவ நெடுஞ்சாலையையும், மேற்கில் சிங்ஹயா உல்பதஹின்ன முக்கோண நிலையத்தையும் கொண்டுள்ளது. மகேட்டியாவின்ன மலைத் தொடர் ஊடாக புளியங்குளம், வவுனியா வீதியும் இதன் எல்லையாக இருந்து வருகின்றது.

## ஹுருலுவெவ வலயம்

### வலயம் தொடர்பான அறிமுகம்





இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் 1997- 07-16ஆம் திகதியிட்ட 984/5 இலக்கம் கொண்ட வர்த்தமானி அறிவித்தல் மூலம் ஹுருலுவெவ கால்வாயின் முகாமைத்துவம் இலங்கை மகாவலி அதிகார சபையிடம் ஒப்படைக்கப்பட்டது. ஹுருலுவெவ வதிவிட கருத்திட்ட முகாமையாளர் அலுவலகம் தம்புள்ள பல்வகர என்ற இடத்தில் 1998- 05- 09 ஆம் திகதி ஸ்தாபிக்கப்பட்டது.

அதன் பிரகாரம் அநுராதபுர மாவட்டத்தின் கெக்கிராவ, பலாகல மற்றும் கலென்பிந்துனுவெவ பிரதேச செயலாளர் பிரிவுகளைச் சேர்ந்த 49 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளும், மாத்தளை மாவட்டத்தின் தம்புள்ளை மற்றும் நாவுல பிரதேச செயலக பிரிவுகளைச் சேர்ந்த 32 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளும், கல்கிரியாகம, மடாட்டுகம, பலுகஸ்வெவ, கலுந்தாவ மற்றும் சீகிரியா ஆகிய பிரிவுகளும் இதன் கீழ் வருகின்றன.

## றம்பக்கன் ஓயா வலயம்


### வலயம் தொடர்பான அறிமுகம்




1979 ஆம் ஆண்டின் 23ஆம் இலக்க மகாவலி அதிகார சபை சட்டத்தின் 3/1 உறுப்புரையின் கீழ் ஒரு விசேட கருத்திட்டப் பிரதேசமாக இந்த வலயம் 2000-05-07 திகதியிட்ட 1130(13) இலக்கம் கொண்ட இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அதிவிசேட வர்த்தமானியின் மூலம் பிரகடனப்படுத்தப்பட்டது. அதன் பிரகாரம் 2010-09-01 திகதி தொடக்கம் மகாஓயா மற்றும் பதியத்தலாவ பிரதேச செயலகப் பிரிவுகளில் காணப்படும் நீர் மற்றும் இயற்கை வளங்கள் என்பவற்றை பயன்படுத்தி, இப்பிரதேசத்தின் நிலைத்து நிற்கக்கூடிய அபிவிருத்தி இலங்கை மகாவலி அதிகார சபையின் மூலம் மேற்கொள்ளப்படும் என்று பிரகடனம் செய்யப்பட்டது. இப்பிரதேசத்தில் நிலவி வரும் வறுமையை ஒழித்தல் மற்றும் மொத்த தேசிய உற்பத்திக்கு வழங்கப்படும் பங்களிப்பினை அதிகரித்தல் ஆகிய நோக்கங்களுடன் உருவாக்கப்பட்டிருக்கும் இந்த அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் நீர்ப்பாசனத் திணைக்களம் மற்றும் மத்திய அரசு நிறுவனங்கள் என்பவற்றுடன் இணைந்த விதத்தில் ஓர் ஒருங்கிணைந்த அபிவிருத்தித் திட்டமாக அமுல் செய்யப்பட்டு வருகின்றது. இதன் பிரகாரம், றம்பக்கன்ஓயா நீர்த்தேக்க கருத்திட்டத்தின் நீர்ப்பாசனக் காணிகளை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கைகள் மற்றும் நிர்வாக நடவடிக்கைகள் என்பவற்றை இலங்கை மகாவலி அதிகார சபை மேற்கொண்டு வருகின்றது.

## வளவே வலயம்

### வலயம் தொடர்பான அறிமுகம்




உடவளவே பல்நோக்கு நிகழ்ச்சித்திட்டம் 1963ஆம் ஆண்டு ஜுலை மாதம் 12ஆம் திகதி ஆற்றுப் பள்ளத்தாக்கு அபிவிருத்தி சபையின் மூலம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. உடவளவே நீர்த்தேக்கத்தை நிர்மாணித்தல், அதனுடன் இணைந்த விதத்தில் மக்களை குடியேற்றுதல் மற்றும் விவசாய நிலங்களை அபிவிருத்தி செய்தல் ஆகிய செயற்பாடுகள் 1981ஆம் ஆண்டு வரையில் ஆற்றுப் பள்ளதாக்கு அபிவிருத்தி சபையினால் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

1979ஆம் ஆண்டின் 23ஆம் இலக்க இலங்கை மகாவலி அதிகார சபை சட்டத்தின் 3(1) உறுப்புரையின் கீழ் வழங்கப்பட்டிருக்கும் அதிகாரங்களின் பிரகாரம் 1981 /04/16 திகதியிடப்பட்ட இல. 137 கொண்ட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் கௌரவ காணி அபிவிருத்தி, மகாவலி அபிவிருத்தி அமைச்சரான காமினி திசாநாயக்க அவர்களினால் வளவே விசேட கருத்திட்டப் பிரதேசம் பிரகடனப்படுத்தப்பட்டது. அதன் பிரகாரம் 1982-01-01 திகதி தொடக்கம் வளவே வலயத்தின் நிர்வாக நடவடிக்கைகள் இலங்கை மகாவலி அதிகார சபையின் கீழ் எடுத்து வரப்பட்டன.

வளவே வலயத்தின் நிர்வாக நடவடிக்கைகள் இலங்கை மகாவலி அதிகார சபையின் கீழ் எடுத்து வரப்பட்டு 34 வருடங்கள் கடந்துள்ளன. இக்காலப் பிரிவின் போது இவ்வலயத்தில் தீவிரமான ஒரு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. அங்குணுகொலபெலஸ்ஸ, முரவெசிஹேன, சூரியவெவ, மயூரபுர, சந்திரிக்காவெவ மற்றும் கிரிஇப்பன்வெவ ஆகிய ஆறு பிரிவுகளைக் கொண்டிருக்கும் இந்த வலயம் 39 பிரிவுகளாக பிரிக்கப்பட்டுள்ளது.

## விக்டோரியா வலயம

### வலயம் தொடர்பான அறிமுகம்

இலங்கையின் மத்திய மலைநாட்டின் கண்டி மற்றும் நுவரெலியா ஆகிய இரு மாவட்டங்களை இணைக்கும் விதத்தில் அமைந்திருக்கும் உலகப் பாரம்பரிய அமைவிடமான நக்கிள்ஸ் மலைத் தொடரினால் போஷிக்கப்பட்டு, வளமார்ந்த தும்பர பள்ளத்தாக்கையும் உள்ளடக்கிய விதத்தில் நிர்மாணிக்கப்பட்டிருக்கும் வலயமான விக்டோரியா மற்றும் கொத்மலை வலயத்தில் இது அமைந்துள்ளது. இந்த வலயம் மகாவலி கங்கையிலிருந்து நீரைப் பெற்றுக்கொள்கின்றது.

விக்டோரியா கருத்திட்ட பிரதேசம் மாப்பாகட பொறுப்பு முகாமையாளர் அலுவலகத்தினால் கையகப்படுத்தப்பட்டுள்ள பிரதேசங்களையும் உள்ளடக்கிய விதத்தில் ரந்தெனிகல, ரண்டம்பே மற்றும் விக்டோரியா நீர்த்தேக்க பிரதேசங்களை கேந்திரப்படுத்திய நிலையில் அமைந்துள்ளது. பொல்கொல்ல நீர்த்தேக்கம் மற்றும் சுதுகங்கை ஆகிய இரு பக்கங்களிலும் போவதன்ன மற்றும் இப்பன்கட்டுவ பிரதேசம் வரையில் இந்த வலயம் வியாபித்துள்ளது.

மேல் மகாவலி வலயம் கொத்மலை தொடக்கம் றண்டம்பே வரையில் உள்ள பிரசேத்தையும், கீழ் மகாவலி வலயம் றண்டம்பே தொடக்கம் மகாவலி கங்கை மற்றும் கிழக்கு மற்றும் வடக்கு, வட மத்திய மாகாணங்கள் என்பவற்றில் அமைந்திருக்கும் இயற்கை ஓடைகள் மற்றும் நீரோட்டங்களின் பள்ளத்தாக்குகள் என்பவற்றுடன் சம்பந்தப்பட்ட பிரதேசங்களையும் அடக்குகின்றன.

## 31-12-2018 இல் உள்ளவாறு நிதிசார் முன்னேற்றம் - வலய அடிப்படையில்

| வ. எண் | வலயம் | 2018ஆம் ஆண்டுக்கென ஒதுக்கப்பட்ட தொகை (ரூ. மில்லியன் ) | 31.12.2018இல் செலவிடப்பட்ட தொகை (ரூ. மில்லியன் ) | நிதிசார் முன்னேற்றம் (%) |
|---|---|---|---|---|
| 1 | B | 189.03 | 189.03 | 100% |
| 2 | C | 206.51 | 203.81 | 99% |
| 3 | D | 73.12 | 72.85 | 100% |
| 5 | H | 165.57 | 178.86 | 108% |
| 6 | L | 2.79 | 2.79 | 100% |
| 4 | மொறகஹகந்த | 74.08 | 73.12 | 99% |
| 7 | உடவளவே | 200.56 | 189.81 | 95% |
| 8 | ஹுருலுவெவ | 88.67 | 79.66 | 90% |
| 9 | விக்டோரியா | 67.30 | 65.30 | 97% |
| 10 | றம்பக்கன் ஓயா | 22.17 | 21.98 | 99% |
| **மொத்தம்** | | **1089.80** | **1077.20** | **99%** |

## பணிப்பாளர் நாயகத்தின் கீழ் நேரடியாக நிர்வகிக்கப்பட்டு வரும் பிரிவுகள்

1. தலைமை அலுவலக செயற்பாடுகள் பிரிவு
2. திட்டமிடல் மற்றும் இயக்குதல் பிரிவு
3. உள்ளக கணக்காய்வு பிரிவு

### 01. தலைமை அலுவலக செயற்பாடுகள் பிரிவு

**பணிகள்**

- இலங்கை மகாவலி அதிகார சபையின் பணிப்பாளர் சபைக் கூட்டங்களை நடத்துதல், அதன் கருமங்கள் தொடர்பான சம்பந்தப்பட்ட அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளல்.
- நிறுவனத்திற்கு கிடைக்கும் தபால்கள் தொடர்பான ஒருங்கிணைப்பு, முகாமைத்துவம் மற்றும் தொடர் நடவடிக்கை.
- பணிப்பாளர் நாயகத்தினால் நடத்தப்படும் அனைத்து உள் மற்றும் வெளி கூட்டங்கள், மாநாடுகள் என்பவற்றை திட்டமிடுதல் மற்றும் நடத்துதல்.
- வலய, தேசிய, சர்வதேச மாநாடுகள் தொடர்பான நடவடிக்கைகளை ஏற்பாடு செய்தல் மற்றும் நெறிப்படுத்துதல், வெளிநாட்டு உதவிக் குழுவினர் மற்றும் தூதுக் குழுவினர் ஆகியோர் இங்கு வருகை தரும் பொழுது அது தொடர்பான ஒருங்கிணைப்பு செயற்பாடுகளை மேற்கொள்ளல்.
- வெளிநாட்டு புலமைப் பரிசில்கள், மாநாடுகள் மற்றும் செயலமர்வுகள் என்பவற்றுக்கு பெயர்களை முன்மொழிதல் மற்றும் அது தொடர்பான ஒருங்கிணைப்புச் செயற்பாடுகள்.
- இலங்கை மகாவலி அதிகார சபையின் செயற்பாடுகள் தொடர்பாக பாராளுமன்றம், ஜனாதிபதி அலுவலகம், நிதியமைச்சு என்பவற்றை உள்ளிட்ட ஏனைய அனைத்து அமைச்சுக்கள், திணைக்களங்கள், சர்வதேச நிறுவனங்கள் என்பவற்றுடன் ஒருங்கிணைப்பினை மேற்கொள்ளல்.
- அமைச்சரவை பத்திரங்கள், வரைவுகள் என்பவற்றை சமர்ப்பித்தல் மற்றும் அமைச்சரவையின் ஒப்புதலின் பிரகாரம் செயற்படுதல்.
- இலங்கை மகாவலி அதிகார சபைக்குள் பிராந்திய கொள்வனவு கமிட்டிகளின் ஒப்புலை பெற்று மேற்கொள்ளப்பட்டு வரும் கொள்வனவுகளுக்கென பணிப்பாளர் நாயகத்தின் மேல் ஒப்புதலையும், கொள்வனவு ஒப்புதலையும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல். உள்நாட்டு கொள்வனவு ஒப்புதலின் பேரில் மேற்கொள்ள வேண்டியிருக்கும் விடயங்களுக்கென கொள்வனவு ஒப்புதல் மற்றும் மேல் ஒப்புதல் என்பவற்றை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல்.
- நிறைவேற்று முகாமைத்துவ / கணக்காய்வு கமிட்டிக் கூட்டங்களை ஒருங்கிணைத்தல், ஆவணப்படுத்தல் மற்றும் முடிவுகளை தெரியப்படுத்துதல்.
- விசேட கருத்திட்டங்கள் தொடர்பான வணிக செயற்பாட்டு கமிட்டி கூட்டங்கள் தொடர்பான ஒருங்கிணைப்பு.
- இப்பிரிவு 2018 அக்டோபர் மாதம் தொடக்கம் முடக்கப்பட்டுள்ளது.

## 02. திட்டமிடல் மற்றும் இயக்குதல் பிரிவு

### பணிகள்

- நிறுவனத்தின் நோக்கு மற்றும் பணி என்பவற்றின் பிரகாரம் தொகுதித் திட்டமொன்றை தயாரித்தல் மற்றும் வருடாந்த திட்டத்தின் பிரகாரம் செயற்படுதல்.
- விசேட கருத்திட்டங்கள் தொடர்பான அறிக்கைளை தயாரித்தல், பொருளாதார – சமூக மதிப்பீட்டாய்வுகள் மற்றும் பகுப்பாய்வு என்பவற்றை மேற்கொள்ளல்.
- செயல் திட்டம் மற்றும் கருத்திட்ட அறிக்கைகள் என்பவற்றின் முன்னேற்றத்தை மாதாந்த, காலாண்டு மற்றும் வருடாந்த அடிப்படையில் மீளாய்வு செய்தல், கருத்திட்ட மதிப்பீட்டை ஒருங்கிணைத்தல் மற்றும் இயக்குதல், மதிப்பீட்டுத் தொகுதி ஒன்றை உறுதிப்படுத்துதல்.
- தொழில்நுட்ப அறிக்கைகள், சாத்தியப்பாட்டு அறிக்கைகள், இயக்குதல் மற்றும் மதிப்பீட்டு அறிக்கைகள் என்பவற்றை பாதுகாத்து வைத்தல் மற்றும் உபயோகத்திற்கு வழங்குதல்.
- மகாவலி கணினி வலையமைப்பை நெறிப்படுத்துதல் மற்றும் பராமரித்தல், உத்தியோகபூர்வ இணையதளத்தை ஸ்தாபித்தல், இற்றைப்படுத்துதல் மற்றும் தகவல் தொழில்நுட்ப உதவியை வழங்குதல்.
- பாதிக்கப்படும் துறைகள் தொடர்பான ஆய்வுகளை ஒருங்கிணைத்தல்.

## 03. உள்ளக கணக்காய்வு பிரிவு

### பணிகள்

- இலங்கை கணக்காய்வு தர நியமங்கள், நல்லாட்சிக்கான பொதுத் துறை தொழில் முயற்சிகள் கொள்கை தொடர்பான சுற்றறிக்கைகள், இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் நிதி ஏற்பாடுகள், நிதி மற்றும் கொள்கைத் திட்டமிடல் அமைச்சின் உள்ளக கணக்காய்வு கொள்கைகள் மற்றும் ஒழுங்குவிதிகள், முகாமைத்துவ முடிவுகள் என்பவற்றின் பிரகாரம் உள்ளக கணக்காய்வு விடயப் பரப்பை தயாரித்தல்.
- தொழில்நுட்ப அல்லது கணக்கியல் பார்வைக்கு அப்பால், முகாமைத்துவ கோணத்திலிருந்து நிறுவனத்தின் செயற்பாட்டு பணிகளை பரீட்சித்துப் பார்த்தல், கணக்காய்வு செய்தல் மற்றும் அறிக்கையிடுதல்.
- வேலைத் திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்கள் என்பவற்றின் முன்னேற்றம் மற்றும் அது தொடர்பான நிகழ்ச்சித்திட்டங்கள் உரிய காலப் பிரிவிற்குள் எந்த அளவுக்கு பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என்பதனை மதிப்பீடு செய்தல்.
- உரிய காலப் பிரிவுக்குள் மேற்கொள்ளப்பட வேண்டிய வேலைகளின் அமுலாக்கம் தாமதமடைவதற்கு வழிகோலும் பிரச்சினைகள் தொடர்பாக உடனுக்குடன் உரிய இடத்திற்கு போய், பரிசீலனைகளை மேற்கொள்ளல்.
- இயக்குதல் பணிகளை கண்காணிப்பதில் பயன்படுத்தப்பட்டு வரும் கட்டுப்பாட்டு
- முறைகளை மதிப்பீடு செய்தல் மற்றும் மீளாய்வு செய்தல்.

# இரண்டாவது அத்தியாயம்

## 2.1 தொழில்நுட்பச் சேவைகள் பிரிவு

### 2.1.1 ஆற்றின் கீழ் பள்ளத்தாக்கு அபிவிருத்திப் பிரிவு

மகாவலிப் பிரதேசங்களிலிருந்து வரும் நீர்ப்பாசனக் கட்டமைப்புக்களை இயக்குதல் மற்றும் பராமரித்தல், கட்டடப் பணிமனைகளை பராமரித்தல் மற்றும் முகாமைத்துவம் செய்தல், வீதி தொகுப்பினை பழுது பார்த்தல் மற்றும் அதனுடன் சம்பந்தப்பட்ட கட்டுமானங்கள் தொடர்பான மதிப்பீடுகளை தயாரித்தல், கட்டுமான வேலைகளின் தரக் கட்டுப்பாடு மற்றும் முன்னேற்ற மீளாய்வு என்பன இப்பிரிவின் பிரதான பணிகளாக இருந்து வருகின்றன.

2018 ஆம் வருடத்தின் போது பொது திறைசேரியின் மூலம் அந்தந்த வலயங்கள் தொடர்பாக ஒதுக்கப்பட்ட தொகைகள் மற்றும் செலவிடப்பட்ட தொகைகள் என்பன வருமாறு:

கருத்திட்டங்களின் கீழ்:

| வரிசை எண் | கருத்திட்டம் | 2018ஆம் வருடத்தின் தொ.சே.பிரிவுக்கு ஒதுக்கப்பட்ட தொகை ரூ. மில். | 2018ஆம் வருடத்தின் நிதிசார் முன்னேற்றம் ரூ. மில். | நிதிசார் முன்னேற்றம் % |
|---|---|---|---|---|
| 1 | நிதிமாலியத்த அபிவிருத்தி கருத்திட்டம் | 50.15 | 50.48 | 100% |
| 2 | றம்பக்கண் ஓயா அபிவிருத்திக் கருத்திட்டம் | 93.02 | 98.35 | 100% |
| 3 | வெலிஓயா ஒருங்கிணைந்த அபிவிருத்திக் கருத்திட்டம் | 174.02 | 174.48 | 100% |
| 4 | ஒருங்கிணைந்த அபிவிருத்திக் கருத்திட்டம் - B | 278.00 | 278.00 | 100% |
| 5 | மாதுறு ஓயா வலது கரை அபிவிருத்திக் கருத்திட்டம் -டீ | 59.15 | 59.82 | 100% |
| 6 | சிறிய மற்றும் நடுத்தர அளவு நீர்ப்பாசனக் கட்டமைப்புக்களை புனரமைக்கும் கருத்திட்டம் | 150.00 | 142.49 | 95% |
| | **உப மொத்தம்** | **804.34** | **803.62** | **99.91** |

**நிறுவன ரீதியான மூலதனத்தின் கீழ்:**

| வரிசை எண் | வலயம் / பிரிவு | 2018ஆம் வருடத்தின் தொ.சே.பிரிவுக்கு ஒதுக்கப்பட்ட தொகை ரூ. மில். | 2018ஆம் வருடத்தின் நிதிசார் முன்னேற்றம் ரூ. மில். | நிதிசார் முன்னேற்றம் % |
|---|---|---|---|---|
| 1 | வயலம் B | 116.0 | 115.92 | 100% |
| 2 | வலயம் C | 136.39 | 136.42 | 100% |
| 3 | வலயம் D | 37.90 | 37.27 | 98% |
| 4 | வலயம் G | 47.89 | 47.32 | 98.8% |
| 5 | வலயம் H | 96.50 | 96.36 | 100% |
| 6 | வலயம் L | 2.17 | 2.17 | 100% |
| 7 | வளவே வலயம் | 116.21 | 116.90 | 100% |
| 8 | ஹுருலுவெவ வலயம் | 70.19 | 69.66 | 99% |
| 9 | ரம்பக்கண் ஓயா வலயம் | 10.10 | 10.10 | 100% |
| 10 | விக்டோரியா வலயம் | 50.17 | 50.96 | 100% |
| 11 | தலைமை அலுவலகம் (தொ / சே) | 55.0 | 18.02 | 33% |
| 12 | இயந்திர வேலைத்தலம் -தம்புத்தேகம | 5.0 | 4.36 | 87% |
| 13 | ஆற்றுப்பள்ளத்தாக்கு முகாமைத்துவ பிரிவு | 2.5 | 2.50 | 100% |
| 14 | முதன்மை அணைக்கட்டுக்கள், நீர்த் தேக்கங்கள் இயக்குதல் பிரிவு | 230.0 | 229.2 | 100% |
| உப மொத்தம் 2 | | 976.0 | 937.2 | |
| மொத்தம் (2+1) உப மொத்தம் | | **1780.36** | **1740.78** | |

## 2.1.2 நிர்மாணிக்கப்பட்டு வரும் சிறு அளவிலான நீர் மின் உற்பத்தி நிலையங்கள் மற்றும் அவற்றின் முன்னேற்ற அறிக்கை

மகாவலி கங்கை மற்றும் அதன் கிளை நதிகள் என்பவற்றின் நீரைப் பயன்படுத்தி சிறு அளவிலான நீர் மின் உற்பத்தி நிலையங்கள் செயற்பட்டு வருகின்றன. இவற்றினால் உற்பத்தி செய்யப்படும் மின்சாரம் இலங்கை மின்சார சபையின் கீழ் இருக்கும் தேசிய மின் தொகுப்புக்கு (National Grid) வழங்கப்பட்டு வருகின்றது. மாதாந்தம் வழங்கப்படும் மின்சார அலகுகளின் அளவின் அடிப்படையில் இலங்கை மின்சார சபை அவ்விதம் வழங்கப்பட்ட மின்சார அலகுகளுக்கென இந்த நீர் மின் உற்பத்தி கருத்திட்டங்களின் மூதலீட்டாளர்களுக்கு ஒரு தொகையை வழங்குகின்றது. முதலீட்டாளர் அத்தொகையின் ஒரு சதவீதத்தை மகாவலி நதியின் நீரைப் பயன்படுத்துவது தொடர்பாக இலங்கை மகாவலி அதிகார சபைக்குச் செலுத்தி வருகின்றார்.

இதுவரையில் 11 சிறு அளவிலான நீர் மின் உற்பத்தி நிலையங்களின் வேலைகள் பூர்த்தி அடைந்திருப்பதுடன், அவற்றின் மூலம் 33.35 மெகாவோட் மின்சாரம் தேசிய மின் தொகுப்புக்கு பங்களிப்புச் செய்யப்படுகின்றது. அதன் மூலம் மகாவலி அதிகார சபைக்கு மகாவலி நதியின் நீரைத் திசை திருப்பும் உரிமை தொடர்பாக வழங்கப்படும் ஒரு வரி என்ற முறையில் இந்தச் சதவீதம் கிடைக்கின்றது.

இது தவிர, இலங்கை மகாவலி அதிகார சபையின் ஒப்புதலுடன் சிறு அளவிலான 10 நீர் மின் நிலையங்கள் இப்பொழுது நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன.

இலங்கை மகாவலி அதிகார சபையின் அனுமதியில்லாமல் நிர்மாணிக்கப்பட்டிருக்கும் 46 சிறு அளவிலான நீர்மின் உற்பத்தி நிலையங்கள் இருந்து வருவதாக அறிக்கையிடப்பட்டிருப்பதுடன், மேலும் பல மின் உற்பத்தி நிலையங்கள் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன.

| வரிசை எண் | கருத்திட்டத்தின் பெயர் | மூதலீட்டாளரின் பெயர் | கொள்திறன் /MW | முன்னேற்றம் |
|---|---|---|---|---|
| 1 | Ukuwela | Onyx Hydro Power Company (Pvt) Ltd. | 2.2 | இலங்கை பொது வசதிகள் ஆணைக்குழுவிலிருந்து உருவாக்க அனுமதிப் பத்திரத்தை பெற்றுக்கொள்ளும் (Generation Licence) பணி இடம்பெற்று வருகின்றது. |
| 2 | Ankanda | Escas Ankanda Power (Pvt) Ltd. | 6.5 | மின் உற்பத்தி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. |
| 3 | Diggala | Escas Diggala Power (Pvt) Ltd. | 4.4 | நிர்மாண வேலைகள் இடம்பெற்று வருகின்றன. |
| 4 | Kiula | Escas Kiula Power (Pvt) Ltd. | 2.8 | திட்டத்தை மாற்றியமைத்தமையினால் ஒரு புதிய சுற்றாடல் மதிப்பீட்டை (EIA) மேற்கொள்ள வேண்டியுள்ளது. |
| 5 | Nayakkubura | Ralic hydro Power Generation (Pvt) Ltd./N.G.P. Panditharathna | 0.5 | இந்தக் கருத்திட்டத்திற்கென இரு முதலீட்டாளர்கள் முன்வந்திருப்பதனால் அப்பிரச்சினையை தீர்த்துக் கொள்ளும் பொருட்டு சட்டமா அதிபரின் ஆலோசனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. |
| 6 | Chandrikawewa | Mahaweli Consultancy Bureau (Pvt) Ltd. | 0.63 | சுற்றாடல் தாக்க (EIA) மதிப்பீடு பூர்த்தியடைந்துள்ளது. |
| 7 | Kubaloluwa I | Noorwood Hydro Power (Pvt) Ltd. | 2.4 | இரு கருதிட்டங்களும் சுதுகங்கையில் அருகருகில் அமைந்திருக்கும் காரணத்தினால், இரு கருத்திட்டங்களையும் ஒரே நேரத்தில் செயற்படுத்துவதில் பிரச்சினை இருந்து வருகின்றது. இரு கருத்திட்டங்களினதும் சாத்தியப்பாட்டு ஆய்வினை மேற்கொள்வதற்கென ஒரு நில அளவையை நடத்துவதற்கு நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டுள்ளன. |
| 8 | Kubaloluwa II | Kumballoluwa Hydro Power (Pvt) Ltd. | 1.0 | |
| 9 | Maduruoya offtake of LBL3 | Nippon Knit (Pvt) Ltd. | 0.15 | சுற்றாடல் தாக்க (EIA) மதிப்பீடு இடம்பெற்று வருகின்றது. |
| 10 | Moragolla Mini Hydro Power Project | Zhejiang Young Energy Co. (Pvt) Ltd. | 2.1 | சுற்றாடல் தாக்க (EIA) மதிப்பீடு இடம்பெற்று வருகின்றது. |

### 2.1.3 பொறியியல் வடிவமைப்பு மற்றும் திட்டமிடல் பிரிவு

பொறியியல் வடிவமைப்பு மற்றும் திட்டமிடல் பிரிவின் மூலம் இலங்கை மகாவலி அதிகார சபைக்குச் சொந்தமான அபிவிருத்தி செய்யப்பட்ட, செயற்படுத்தப்பட்டு வரும் கருத்திட்டங்கள் மற்றும் உத்தேச கருத்திட்டங்கள் என்பவற்றின் பொறியியல் வடிவமைப்பு மற்றும் திட்டங்கள் என்பன தயாரிக்கப்பட்டு வருகின்றன.

இப்பிரிவினால் பின்வரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன:

- மகாவலி நீர் வளங்கள் திட்டங்களை இற்றைப்படுத்தல்.
- அரச மற்றும் தனியார் தொழில் முயற்சியாளர்களினால் சமர்ப்பிக்கப்படும் சிறு அளவிலான நீர் மின் உற்பத்தி கருத்திட்ட யோசனைகள் மற்றும் திட்டங்கள் என்பவற்றை பகுப்பாய்வு செய்தல்.
- செயற்படுத்தப்பட்டு வரும் நீர் வளங்கள் மற்றும் ஏனைய உள்கட்டமைப்பு வசதி அபிவிருத்திக் கருத்திட்டங்களை உருவாக்குதல் மற்றும் அவை தொடர்பான திட்டங்களை தயாரித்தல், பகுப்பாய்வு செய்தல்.
- வடிவமைப்பு மற்றும் திட்டங்கள் என்பன தொடர்பாக சம்பந்தப்பட்ட பொறியியல் மதிப்பீடுகளைத் தயாரித்தல் மற்றும் அளவுகள் தொடர்பான பட்டியல்களை தயாரித்தல், கொள்வனவுக்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளல்.
- இலங்கை பொறியியல் நிறுவனத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தரங்களின் பிரகாரம் பொறியியல் வடிவமைப்பு மற்றும் திட்டமிடல் என்பன தொடர்பாக புதிய பொறியியலாளர்களுக்கு பயிற்சி அளித்தல்.

### 2.1.4 உருவாக்கப்பட்ட பொறியியல் வடிவமைப்புக்கள் மற்றும் திட்டங்கள்

#### கட்டடங்கள்

1. மொறகஹகந்த களுகங்கை கருத்திட்டத்தின் கீழ் அம்பன ஆஸ்பத்தி வெளி நோயாளர் பிரிவுக்கான இரண்டு மாடிக் கட்டடம்.
2. மொறகஹகந்த களுகங்கை கருத்திட்டத்தின் கீழ் லக்கல கலாசார மண்டபத்திற்கான கட்டடம்.
3. மொறகஹகந்த களுகங்கை கருத்திட்டத்தின் கீழ் அம்பன நகரின் சந்தைக் கட்டடம்.
4. மொறகஹகந்த களுகங்கை கருத்திட்டத்தின் கீழ் அம்பன நகரின் மீன் விற்பனை நிலையத்திற்கான கட்டடம்.
5. மொறகஹகந்த களுகங்கை கருத்திட்டத்தின் கீழ் பிசோபுர நகரத்தின் பேருந்து நிலையக் கட்டடம்.
6. மொறகஹகந்த களுகங்கை கருத்திட்டத்தின் கீழ் பிசோபுர நகரின் மீன் விற்பனை நிலையத்திற்கான கட்டடம்.
7. மொறகஹகந்த களுகங்கை கருத்திட்டத்தின் கீழ் பிசோபுர நகரின் சந்தைக் கட்டடம்.
8. மொறகஹகந்த களுகங்கை கருத்திட்டத்தின் கீழ் மெதிரிகிரிய விளையாட்டு அரங்கின் ஒலிம்பிக் தீபத்துக்கான திட்டம்.
9. மொறகஹகந்த களுகங்கை கருத்திட்டத்தின் கீழ் அம்பன உப அஞ்சல் நிலையக் கட்டடம்.
10. மொறகஹகந்த களுகங்கை கருத்திட்டத்தின் கீழ் கூம்பியன்கங்க எல பாடசாலைக்கான இரண்டு மாடிக் கட்டடம்.

11. றம்பக்கண் ஓயா பயிற்சி நிலையத்திற்கான தொட்டி மற்றும் ஏனைய கட்டடங்களுக்கான திட்டம்.
12. மகாவலி வலயங்களில் ஹெல பொஜுன்ஹல (உணவகங்களுக்கான) பொதுத் திட்டம்.

### 2.1.5 நீர்ப்பாசனம்

1. மொறகஹகந்த களுகங்கை கருத்திட்டத்தின் வலது கரை பிரதான கால்வாய் இல. 02 ($LC_2$) இன் உள்ளக கட்டமைப்பு (Inlet Structure)
2. மொறகஹகந்த களுகங்கை கருத்திட்டத்தின் வலது கரை பிரதான கால்வாய் இல. 03 ($LC_3$) வான் கதவுகள் கட்டமைப்பு.
3. மொறகஹகந்த களுகங்கை கருத்திட்டத்தின் வலது கரை பிரதான கால்வாய் இல. 04 ($LC_4$) தொடர்பான திட்டம்.
4. மொறகஹகந்த களுகங்கை கருத்திட்டத்தின் வலது கரை பிரதான கால்வாய் இல. 04 ($LC_4$) லப்ரினின் வான் கதவு கட்டமைப்பு மற்றும் பாலம்
5. மொறகஹகந்த களுகங்கை கருத்திட்டத்தின் வலது கரை பிரதான கால்வாய் இல. 02 கிலோ மீற்றர் 1+554 இடத்தில் கீழ் கடவை அமைப்பு நிர்மாணம்.
6. மொறகஹகந்த களுகங்கை கருத்திட்டத்தின் வலது கரை பிரதான கால்வாய் இல. 02 கிலோ மீற்றர் 2+133 இடத்தில் தரைக்கீழ் கடவை..
7. மொறகஹகந்த களுகங்கை கருத்திட்டத்தின் வலது கரை பிரதான கால்வாய் இல. 02 கிலோ மீற்றர் 3+282 இடத்தில் தரைக்கீழ் கடவை.
8. மொறகஹகந்த களுகங்கை கருத்திட்டத்தின் வலது கரை பிரதான கால்வாய் இல. 02 கிலோ மீற்றர் 4+953 இடத்தில் தரைக்கீழ் கடவை.
9. மொறகஹகந்த களுகங்கை கருத்திட்டத்தின் வலது கரை பிரதான கால்வாய் இல. 02 கிலோ மீற்றர் 1+243 இடத்தில் தரைக்கீழ் கடவை.
10. மொறகஹகந்த களுகங்கை கருத்திட்டத்தின் வலது கரை பிரதான கால்வாய் இல. 02 கிலோ மீற்றர் 2+490 இடத்தில் தரைக்கீழ் கடவை.
11. மொறகஹகந்த களுகங்கை கருத்திட்டத்தின் வலது கரை பிரதான கால்வாய் இல. 02 LC 04 வெளியேற்ற (Outlet) கட்டமைப்பு
12. மொறகஹகந்த களுகங்கை கருத்திட்டத்தின் வலது கரை பிரதான கால்வாய் இல. 02 கிலோ மீற்றர் 3+608 இறுதிப் பாலத்தை நிர்மாணித்தல்
13. மொறகஹகந்த களுகங்கை கருத்திட்டத்தின் வலது கரை பிரதான கால்வாய் இல. 02 கிலோ மீற்றர் 1+750 இடத்தில் கட்டுப்பாட்டு கட்டமைப்பு, திசைதிருப்பலுடன் வான் கதவு கட்டமைப்பு.
14. மொறகஹகந்த களுகங்கை கருத்திட்டத்தின் வலது கரை பிரதான கால்வாய் இல. 02 மில்லி மீற்றர் 900 மற்றும் 1200 நீர் இறக்க கட்டமைப்பு பொதுத் திட்டம்
15. மொறகஹகந்த களுகங்கை கருத்திட்டத்தின் வலது கரை பிரதான கால்வாய் இல. 01 கொங்கிறீட் மூடிக்கான திட்டம்.
16. மெதிரிகிரிய வலயத்தின் முவன்வத்தஹேன குளத்தின் அனைத்து கட்டமைப்புக்களுடன் குளத்தை திட்டமிடுதல்
17. C வலயத்தின் மல்தெணிய குளத்தின் வான் கதவுகளின் கீழ் பிரிவை திருத்துவதற்கான திட்டம்.
18. மெதிரிகிரிய நீர்ப்பாசனக் கருத்திட்டத்தினை விருத்தி செய்வது தொடர்பான சாத்தியப்பாட்டு ஆய்வறிக்கையினை பகுப்பாய்வு செய்தல்
19. வளவே வலது கரை புனரமைப்பு வேலைகளுக்கென சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் அறிக்கைகள் மற்றும் திட்டங்கள் என்பவற்றை பகுப்பாய்வு செய்தல்.

## 2.2 ஆற்றுப் பள்ளத்தாக்கு முகாமைத்துவ அலுவலகம்


### அறிமுகம்

ஆற்றுப் பள்ளத்தாக்கு முகாமைத்துவ அலுவலகம் மடாட்டுகம மகாவலி வளவில் அமைந்திருப்பதுடன், (ஆற்றுப் பள்ளத்தாக்கு முகாமைத்துவ) பணிப்பாளரின் கீழ் செயற்பட்டு வருகின்றது. ஆற்றுப் பள்ளத்தாக்கு முகாமைத்துவ எண்ணக்கருவின் பிரகாரம், சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்கள் முகாமைத்துவத்துடன் சம்பந்தப்பட்ட பணிகளை நிறைவேற்றி வைத்தல் மற்றும் இலங்கை மகாவலி அதிகார சபையின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் கட்டுமான வேலைகள் மற்றும் பராமரிப்பு வேலைகள் என்பவற்றின் தரத்தை பரீட்சித்தல் என்பன இந்த அலுவலகத்தின் முதன்மையான பொறுப்புக்களாக இருந்து வருகின்றன. அதன் பிரகாரம், இந்த அலுவலகத்தின் கீழ் பராமரிக்கப்பட்டு வரும் நீரின் தரம் தொடர்பான ஆய்வு கூடத்தின் மூலம் மகாவலி கங்கை, மகாவலித் தொகுதி மற்றும் அவற்றுடன் சம்பந்தப்பட்ட ஆற்றுப் பள்ளதாக்குகளில் அமைந்திருக்கும் நீரோட்டங்களின் நீரின் தரம் பரீட்சிக்கப்பட்டு வருகின்றது. அத்துடன் அந்தத் தரவுகளின் மூலம் நீரின் தரம் குறிப்பிட்ட ஓரிடத்தில் காலத்திற்கு காலம் மாற்றமடையும் விதம் குறித்தும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### 2.2.1 நிதிசார் முன்னேற்றம்

| வரிசை எண் | விவரம் | ஒதுக்கு ரூ. மில். | முன்னேற்றம் ரூ. மில். |
|---|---|---|---|
| 1 | மூலதனச் செலவு | 2.500 | 2.500 |
| 2 | மீளவரும் செலவுகள் | 18.833 | 21.502 |

**2018 ஆம் ஆண்டின் இலக்குகள் மற்றும் முன்னேற்றம்**



### 2.2.2 தேசிய பொருளாதாரத்திற்கும், சமூகத்திற்கும் வழங்கிய பங்களிப்பு

ஆற்றுப் பள்ளத்தாக்கு முகாமைத்துவ அலுவலகத்தின் மூலம் கணிசமான அளவில் நேரடி நிதிச் சம்பாத்தியங்கள் மேற்கொள்ளப்பட்டாதுவிட்டாலும் கூட, தேசிய பொருளாதாரம் மற்றும் சமூகம் என்பவற்றின் முன்னேற்றம் தொடர்பாக மறைமுகமான ஒரு பங்களிப்பு வழங்கப்பட்டு வருகின்றது. நீரின் தரம் தொடர்பான ஆய்வுகூடத்தின் செயற்பாட்டுக்கு ஊடாக சுற்றாடல் ரீதியில் நீரில் இடம்பெற்று வரும் தர ரீதியான அசைவுகளை எளிதில் அடையாளம் கண்டுகொள்வதற்கான வாய்ப்புக் கிடைக்கின்றது. மேலும், இந்த அசைவுகளின் நீண்ட கால நடத்தைகளை ஆய்வு செய்வதன் மூலம் சுற்றாடலில் சேகரமாகியிருக்கும் சுற்றாடல் மாசாக்கல் செயற்பாட்டினை நிர்ணயித்துக் கொள்ளக்கூடிய வாய்ப்புக் கிடைக்கின்றது. அதனை மிகச் சரியான விதத்தில் அடையாளம் கண்டு கொள்வதன் ஊடாக அதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளக்கூடிய வாய்ப்புக் கிடைப்பதுடன், அது எதிர்காலத் தலைமுறையினருக்கான ஒரு சுற்றாடல் முதலீடாகவும் இருந்து வருகின்றது.

ஆரோக்கியமான சமூகம் ஒன்றை உருவாக்குவதற்கென நீரின் தரத்தை பராமரித்து வர வேண்டிய தேவை இருந்து வருவதுடன், நீர் மாசாக்கலை தடுத்துக் கொள்வது மிக முக்கியமான ஒரு விடயமாக காணப்படுகின்றது. மேலும், அதற்கென மேற்கொள்ளக் கூடிய நடவடிக்கைகள் தொடர்பாக சமூகத்தினருக்கும் - குறிப்பாக பாடசாலை பிள்ளைகளுக்கு - அறிவூட்டுவதற்கூடாக மனப்பாங்கு ரீதியான ஒரு மாற்றத்தை எடுத்துவர முடியும். அதன் மூலம் நீர் ஆதாரங்களின் தூய்மையை பாதுகாத்துக் கொள்வதற்கான வாய்ப்புக் கிடைக்கின்றது. இந்த அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் பெருமளவுக்கு சிறுநீரக நோய்களினால் பாதிக்கப்பட்டிருக்கும் கிராமப் பிரதேசங்களில் மேற்கொள்ளப்படுவதன் மூலம் அப்பிரதேசங்களில் வாழ்ந்து வரும் மக்களின் ஆரோக்கிய நிலையை உயர்த்திக் கொள்வதற்கும் அது உறுதுணையாக இருந்து வருகின்றது.

தரக் கட்டுப்பாடு தொடர்பான பரீட்சிப்புக்களை மேற்கொள்வதன் மூலம் உரிய தரத்தை பேணாத விதத்தில் மேற்கொள்ளப்பட்டிருக்கும் கட்டுமானங்களை இணங்கண்டு கொள்ளக் கூடிய வாய்ப்புக் கிடைக்கின்றது. மேலும், அவற்றை சரியான நிலைமைக்கு எடுத்து வரும் பொருட்டு தீர்வுகளை பெற்றுக்கொள்ளக் கூடிய வாய்ப்பும் கிடைக்கின்றது. அதன் மூலம் கட்டுமானங்களின் ஆயுள் காலத்தை திட்டமிட்ட விதத்தில் பராமரித்து வரக்கூடிய வாய்ப்புக் கிடைப்பதுடன், அவ்வப்பொழுது பழுது பார்ப்பு வேலைகளை மேற்கொள்ள வேண்டிய தேவையும் குறைக்கின்றது. அதன் காரணமாக அவற்றின் பலன்கள் சமூகத்தினருக்கு தொடர்ச்சியாக கிடைத்து வருகின்றன. மேலும், புனரமைப்பு வேலைகளுக்கென செலவிட வேண்டியிருக்கும் செலவுத் தொகைகளை குறைத்துக் கொள்ளக் கூடிய வாய்ப்புக் கிடைக்கின்றது. அது நாட்டின் உற்பத்திப் பொருளாதாரம் தொடர்பாக சாதகமான ஒரு தாக்கத்தை எடுத்து வருகின்றது.

# 2.3 முதன்மை வேலைகள் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பிரிவு

## 2.3.1 இப்பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கும் முதன்மையான பணிகள்

**நிர்வாகம்-** - அணைக்கட்டுக்கள் மற்றும் நீர்த்தேக்கங்களில் இருக்கும் நீர்ப் பரப்பு, 100 மீற்றர் பாதுகாப்பு வலயம் மற்றும் அதற்கு உரித்தான பாதுகாக்கப்பட்ட பகுதிகள் என்பவற்றை பாதுகாத்துக் கொள்வதற்குத் தேவையான ஒழுங்குவிதிகளை அமுல் செய்தல், நீர்த்தேக்கங்கள் மற்றும் பாதுகாக்கப்பட்ட பகுதிகள் என்பவற்றைச் சேர்ந்த பிரதேசங்களின் நிர்வாக நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

**இயக்குதல்**- நீர் முகாமைத்துவ செயலக அலுவலகம் தொடர்ச்சியாக எடுக்கப்படும் தீர்மானங்களை செயற்படுத்துவதற்கென நீர்த்தேக்கங்கள் மற்றும் பள்ளத்தாக்குகளுக்கு இடையிலான கால்வாய்கள் என்பவற்றின் அடிப்படையில் வான் கதவுகளை இயக்குதல்; நீர்த்தேக்கங்கள், கீழ் மற்றும் மேல் பள்ளத்தாக்குப் பகுதிகள் என்பவற்றில் வெள்ளப் பெருக்கினை குறைத்துக் கொள்ளும் பொருட்டு வெள்ளக் கட்டுப்பாட்டுக்கான கதவுகளை இயக்குதல்.

**பராமரிப்பு** - நீர்த்தேக்கங்கள் மற்றும் அந்த நீர்த்தேக்கங்களைச் சேர்ந்த அணைக்கட்டுக்கள், கதவுகள், நீர்த்தேக்கங்களின் முடிவுப் பிரதேசங்கள் மற்றும் நீர்த்தேக்கங்களுடன் இணைந்த அனைத்துவிதமான கட்டமைப்புக்கள் என்பவற்றை சர்வதேச தர நியமங்களின் பிரகாரம் (ICOLD) பராமரித்தல் மற்றும் விருத்தி செய்தல்.

### 2.3.2 பிரதான அணைக்கட்டுக்கள் மற்றும் நீர்த்தேக்கங்கள் இயக்குதல் பிரிவின் கீழ் நிர்வகிக்கப்பட்டு வரும் நீர்த் தேக்கங்கள்

| நீர்த்தேக்கம் | பராமரிக்கப்பட்டு வரும் பிரிவுகள் |
|---|---|
| கொத்மலை | அணைக்கட்டு, வான் கதவுகள், அணைக்கட்டின் அனைத்துக் கதவுகள் மற்றும் நீர்த்தேக்கத்தை சூழவுள்ள பிரதேசம் |
| பொல்கொல்ல திசை திருப்பல் | அணைக்கட்டு, வான் கதவுகள், அணைக்கட்டின் அனைத்துக் கதவுகள் மற்றும் சுரங்கப் பாதைகள் |
| போவதன்ன | அணைக்கட்டு, வான் கதவுகள், அணைக்கட்டின் அனைத்துக் கதவுகள் மற்றும் நீர்த்தேக்கத்தின் முடிவுப் பிரதேசங்கள் |
| தம்புலு ஓயா | அணைக்கட்டு, வான் கதவுகள், அணைக்கட்டின் அனைத்துக் கதவுகள் மற்றும் நீர்த்தேக்கத்தின் முடிவுப் பிரதேசங்கள் |
| கண்டலம | அணைக்கட்டு, வான் கதவுகள், அணைக்கட்டின் அனைத்துக் கதவுகள் மற்றும் நீர்த்தேக்கத்தின் முடிவுப் பிரதேசங்கள் |
| கலாவெவ | அணைக்கட்டு, வான் கதவுகள், அணைக்கட்டின் அனைத்துக் கதவுகள் மற்றும் நீர்த்தேக்கத்தின் முடிவுப் பிரதேசங்கள் |
| விக்டோரியா | அணைக்கட்டு, வான் கதவுகள், அணைக்கட்டின் அனைத்துக் கதவுகள் மற்றும் நீர்த்தேக்கத்தின் முடிவுப் பிரதேசங்கள் |
| றந்தெனிகல | அணைக்கட்டு, வான் கதவுகள், அணைக்கட்டின் அனைத்துக் கதவுகள் மற்றும் நீர்த்தேக்கத்தின் முடிவுப் பிரதேசங்கள் |
| றந்தம்பே | அணைக்கட்டு, வான் கதவுகள், அணைக்கட்டின் அனைத்துக் கதவுகள் மற்றும் நீர்த்தேக்கத்தின் முடிவுப் பிரதேசங்கள் |
| மினிப்பே அணைக்கட்டு | அணைக்கட்டு கதவுகள், வான் கதவுகள், பள்ளத்தாக்குகளுக்கு இடையிலான கால்வாய், பதுலுஓயா நீர் பாலம், சுரங்கப் பாதை மற்றும் நீர் வெளியேற்ற கட்டமைப்பு |
| லொங்கல் ஓயா, ஹேபொல ஓயா மற்றும் திஹபாண ஓயா நீர் வெளியேற்றம் | அணைக்கட்டு, வான் கதவுகள், அணைக்கட்டின் அனைத்துக் கதவுகள் மற்றும் நீர்த்தேக்கத்தின் முடிவுப் பிரதேசங்கள் |
| உல்ஹிட்டிய – ரத்கிந்த | அணைக்கட்டு, வான் கதவுகள், அணைக்கட்டின் அனைத்துக் கதவுகள் மற்றும் நீர்த்தேக்கத்தின் முடிவுப் பிரதேசங்கள் |
| மாதுறு ஓயா | அணைக்கட்டு, வான் கதவுகள், அணைக்கட்டின் அனைத்துக் கதவுகள் மற்றும் நீர்த்தேக்கத்தின் முடிவுப் பிரதேசங்கள் |
| உடவளவை | அணைக்கட்டு, வான் கதவுகள், அணைக்கட்டின் அனைத்துக் கதவுகள் மற்றும் நீர்த்தேக்கத்தின் முடிவுப் பிரதேசங்கள் |
| சந்திரிக்காவெவ | அணைக்கட்டு, வான் கதவுகள், அணைக்கட்டின் அனைத்துக் கதவுகள் மற்றும் நீர்த்தேக்கத்தின் முடிவுப் பிரதேசங்கள் |
| மொறகஹகந்த | அணைக்கட்டு, வான் கதவுகள், அணைக்கட்டின் அனைத்துக் கதவுகள் மற்றும் நீர்த்தேக்கத்தின் முடிவுப் பிரதேசங்கள் |

### 2.3.3 நீர்த்தேக்கங்களை சூழவுள்ள சுற்றாடலை பாதுகாக்கும் நடவடிக்கைகள்

| வரிசை எண் | விபரம் | பௌதீக முன்னேற்றம் | நிதிசார் முன்னேற்றம் ரூபா |
|---|---|---|---|
| 01 | டெங்கு ஒழிப்பு சிரமதான நிகழ்ச்சித்திட்டங்கள், நீலகம மற்றும் அலுவலக வளவு. | 5 | 47,244.00 |
| 02 | விக்டோரியா மற்றும் பொல்கொல்ல நீர்த்தேக்கங்களின் பாதுகாக்கப்பட்ட பிரதேசத்திலிருந்து பிளாஸ்டிக் மற்றும் பொலித்தீன் கழிவுகளை அகற்றும் சிரமதான நிகழ்ச்சித்திட்டங்கள் | 3 | 34,605.00 |
| 03 | விக்டோரியா நீர்த்தேக்கத்தின் பாதுகாக்கப்பட்ட பகுதியிலிருந்து பிளாஸ்டிக் மற்றும் பொலித்தீன் பொருட்களை அகற்றும் மாதாந்த நிகழ்ச்சித்திட்டங்கள் | 12 | 180,000.00 |
| 04 | நீர்த்தேக்கத்தின் பாதுகாக்கப்பட்ட பிரதேசத்தில் மூங்கில் கன்றுகளை நடுதல் | கன்றுகள் 1000 | 70,000.00 |
| வரிசை எண் | விபரம் | பௌதீக முன்னேற்றம் | நிதிசார் முன்னேற்றம் ரூபா |
| 05 | நீர்த்தேக்கத்தின் பாதுகாக்கப்பட்ட பிரதேசத்தின் வன வளர்ப்பு மற்றும் கன்றுகள் நடுகை. | கன்றுகள்2260 | 100,250.00 |
| 06 | அலுவலக வளவுகளில் வீட்டுத் தோட்டச் செய்கை | கன்றுகள் 410 | 75,350.00 |
| 07 | கைத்தொழில்கள் மற்றும் சுற்றாடல் மாசாக்கல் நிறுவனங்கள் மற்றும் இடங்கள் என்பன தொடர்பான வெளிக்கள பரிசோதனைகள் | 50 | 20,000.00 |
| 08 | டெங்கு கமிட்டிகள், சுற்றாடல் கமிட்டிகள் மற்றும் ஒருங்கிணைந்த கமிட்டிகள் என்பவற்றுக்கான நேரடி பங்களிப்பை வழங்கிய நிகழ்ச்சித்திட்டங்கள் | 40 | 20,000.00 |
| | மொத்தம் | | 547,449.00 |

## 2018ஆம் ஆண்டில் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகள் மற்றும் முன்னேற்றம் (நிதிசார் மற்றும் பௌதீக முன்னேற்றம் ) கட்டுமான மற்றும் தொழில்நுட்பப் பரிவு

| வரிசை எண் | விவரம் | | பௌதீக | | நிதிசார் ரூ. மில்லியன் | |
|---|---|---|---|---|---|---|
| | | | இலக்கு | முன்னேற்றம் | இலக்கு | முன்னேற்றம் |
| 01 | அலுவலக மற்றும் வீட்டுக் கட்டடங்களின் நிர்மாணம் மற்றும் விருத்தி நடவடிக்கைகள் | | கட்டடங்களின் எண்ணிக்கை 20 | கட்டடங்களின் எண்ணிக்கை 20 | 37.630 | 29.939 |
| 02 | நீர் விநியோகத் திட்டங்களின் பராமரிப்பு (கொத்மலை, போவதன்ன, மாதுறு ஓயா, றந்தெனிகல, உட வளவே) | | திட்டங்கள் 05 | திட்டங்கள் 05 | 8.460 | 10.694 |
| 04 | உத்தியோகபூர்வ வாசஸ்தலங்கள், முகாம்கள் என்பவற்றை பராமரித்தல் மற்றும் சிறு சிறு திருத்த வேலைகள் (பொறுப்பு பொறியியலாளர் அலுவலகங்ளைச் சேர்ந்த முகாம்களையும் உள்ளடக்கிய விதத்தில்) | | 60 | 56 | 47.184 | 54.500 |
| 05 | நீர்த்தேக்கங்கள் மற்றும் அணைக்கட்டுக்கள் என்பவற்றின் பராமரிப்பு வேலைகள் (பற்றைக் காடுகளை வெட்டித் துப்பரவு செய்தல்) | | ஹெக். 400 | ஹெக். 400 | 93.042 | 94.156 |
| 06 | அணைக்கட்டு பாதுகாப்பு நடவடிக்கைகள் கதவுகளை புதுப்பித்தல் வேலைகள் | | கதவுகள் 64 | கதவுகள் 64 | 66.955 | 73.081 |
| 07 | பிரதான நீர்த்தேக்கங்கள் சம்பந்தப்பட்ட உள்கட்டமைப்பு வசதிகளை புனரமைப்புச் செய்தல் | சுதுகங்கை கரைகளைப் பாதுகாப்பதற்கான பக்க அணையை நிர்மாணித்தல் | நீளம் மீ. 40 | நீளம் மீ. 40 | 3.00 | 2.683 |
| | | லொக்கல் ஓயா நீர் வெளியேற்ற (Tail canal) கால்வாய்யை புனரமைத்தல் | நீளம் மீ. 40 | நீளம் மீ. 40 | 4.00 | 2.683 |
| | | உள்ஹிட்டிய அணைக்கட்டின் கசிவு நீரை வெளியேற்றும் வடிகானை (Toe drain) புனரமைப்புச் செய்தல் | நீளம் மீ. 48 | நீளம் மீ. 46 | 1.00 | 0.974 |
| | | பள்ளத்தாக்குகளுக்கு இடையிலான கால்வாய்களை (TBC) புனரமைத்தல் | நீளம் மீ. 90 | நீளம் மீ. 86 | 0.5 | 0.468 |
| 08 | தொழிற்சாலை இயந்திர உபகரணங்கள் மற்றும் இயந்திரங்கள் | | 17 | 15 | 10.268 | 8.551 |
| 09 | வாகனங்களின் பழுதுபார்ப்பு வேலைகள் | | 80 | 76 | 18.731 | 18.580 |
| 10 | அலுவலக மற்றும் தொழிற்சாலை உபகரணங்களை வழங்குதல் | | 76 | 48 | 14.230 | 6.168 |
| | **மொத்தம்** | | | | **305.00** | **302.47** |

## 2018 ஆம் ஆண்டில் பெறப்பட்ட விசேட முன்னேற்றம் மற்றும் அதன் மூலம் தேசிய பொருளாதாரத்திற்கு வழங்கிய பங்களிப்பு

| வரிசை எண் | நீர்த்தேக்கம் | மின்சார உற்பத்திக்கு நீர் வினியோகம் (MCM) | மின் உற்பத்திக் கொள்திறன் (KWH) | தேசிய வருமானம் ரூ. மில்லியன் |
|---|---|---|---|---|
| 01 | விக்டோரியா kwh ரூ. 18.50 | 2115.08 | 863.91 x $10^6$ | 13,978.00 |
| 02 | ரந்தெனிகல kwh ரூ. 18.50 | 2055.98 | 418.35 x $10^6$ | 5,783.66 |
| 03 | ரண்டம்பே kwh ரூ. 18.50 | 2204.92 | 201.66 x $10^6$ | 2,799.63 |
| 04 | கொத்மலை kwh ரூ. 18.50 | 1071.88 | 590.51 x $10^6$ | 10,924.44 |
| 05 | போவதன்ன kwh ரூ. 18.50 | 680.884 | 83.47 x $10^6$ | 1,544.30 |
| 06 | மாதுறு ஓயா kwh ரூ. 18.50 | 88.65 | 15.33 x $10^6$ | 182.86 |
| 07 | பொல்கொல்ல kwh ரூ. 18.50 | 1117.418 | 195.93 x $10^6$ | 3,526.74 |
| 08 | மொரகஹகந்த kwh ரூ. 18.50 | 652.07 | 54.50 x $10^6$ | 977.84 |
| | **மொத்தம்** | | | **39,717.47** |

## <u>விவசாய நடவடிக்கைகளுக்கென நீரை விடுவித்தல்</u>

| வரிசை எண் | நீர்த்தேக்கம் | | வழங்கப்பட்ட நீரின் கொள்திறன் கன மீற்றர் மில்லியன் (MCM) |
|---|---|---|---|
| 01 | பொல்கொல்ல திசை திருப்பல் (போவதன்ன நீர்த்தேக்கத்திற்கு) | | 1,110.176 |
| 02 | மினிப்பே கால்வாய் | இடது கரை | 19.40 |
| | | வலது கரை | 911.976 |
| 03 | மொரகஹகந்த நீர்த்தேக்கம் | | 652.07 |
| 04 | உடவளவே | இடது கரை | 453.287 |
| | | வலது கரை | 467.787 |
| | **மொத்தம்** | | **3,614.696** |

## 2.4 நீர் முகாமைத்துவ செயலக அலுவலகம்


நீர் முகாமைத்துவ செயலக அலுவலகத்தின் மூலம் வருடாந்த சிறுபோக மற்றும் பெரும்போக சாகுபடிகளுக்கென செயற்பாட்டுக் கொள்கைகள் பரிந்துரை செய்யப்படுவதுடன், மகாவலி கட்டமைப்புக்கென செயற்பாட்டுத் திட்டங்கள் தயாரிக்கப்படுகின்றன. இது அடிப்படையில் நீர்ப்பாசன மற்றும் மின்சக்தி தேவைகளை கருத்தில் கொண்டு, நெல் மற்றும் உப உணவுப் பயிர்களின் உற்பத்திக்கு பரந்தளவிலான பங்களிப்பை வழங்கி வரும் ஒரு தேசிய நிகழ்ச்சித்திட்டமாகும். இதற்குத் தேவையான தொழில்நுட்ப நிபுணத்துவ அறிவுறுத்தல்களை வழங்கும் அலகாக நீர் முகாமைத்துவ செயலக அலுவலகம் செயற்பட்டு வருகின்றது. இந்த அலுவலகம், நீர்க் கட்டுப்பாட்டு கமிட்டியில் இடம்பெறும் உறுப்பு நிறுவனங்கள் தொடர்பாக ஒருங்கிணைப்பினை மேற்கொள்வதுடன், அனைத்து செயற்பாட்டு திட்டங்களையும் வாராந்தம் கண்காணித்து வருகின்றது. மேலும், அவற்றின் முன்னேற்றம் குறித்த மீளாய்வுகளை மேற்கொண்டு, அடுத்து வரும் வாரங்களுக்கான நீர் வினியோகத் திட்டங்களை செயற்படுத்துவதற்கான அறிவுறுத்தல்களையும் அது வழங்கி வருகின்றது. விவசாயம், மின் உற்பத்தி மற்றும் குடி நீர் என்பவற்றுக்கான நீர்த் தேவைகளை கருத்தில் கொண்டு ஒட்டுமொத்த கட்டமைப்புக்குள்ளும் பரிந்துரை செய்யப்படும் நீரின் தேவையை பூர்த்தி செய்து வைப்பதற்கென நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

### 2.4.1 2017 பெரும்போகம் (அக்டோபர் 01, 2017 மார்ச் 31, 2018)

2017/2018 பெரும்போகம் தொடர்பான மகாவலி நீர் முகாமைத்துவ கமிட்டியின் கூட்டம் 2017 அக்டோபர் மாதம் 04ஆம் திகதி பேராதனை கண்ணொருவையில் அமைந்திருக்கும் தாவரங்கள் மற்றும் மரபணு வளங்கள் நிலையத்தில் நடத்தப்பட்டது. அச்சந்தர்ப்பத்தில் மகாவலி வலயத்தின் அனைத்து நீர்த்தேக்கங்களினதும் நீர் மட்டங்கள் கொத்மலை , விக்டோரியா 36%, வளவே 9.5%, ஹுருலுவெவ 7.5%, மாதுறு ஓயா 11.2% என தாழ்ந்த மட்டங்களில் நிலவி வந்தன.


அது வரையில் கிடைத்த பருவக்காற்றுக்களுக்கு இடையிலான இரண்டாவது மழைவீழ்ச்சி மற்றும் தென்கீழ் பருவப்பெயர்ச்சிக் காற்று மழை வீழ்ச்சி என்பன எதிர்பார்க்கப்பட்ட பிரதேசங்களில் கிடைத்திராத காரணத்தினால் நீர் வினியோகம் தாமதப்படுத்தப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டது. மேலும், அதன் பிரகாரம் நீர் வினியோகத்தை வலயங்கள் G, D 01 என்பன தொடர்பாக 2017 டிசம்பர் 15ஆம் திகதி வரையில் தாமதப்படுத்த வேண்டியிருந்தது. அதன் அடிப்படையில் 2017/18 பெரும்போகத்தின் மொத்த சாகுபடி நிலப்பரப்பு 127,466 ஹெக்டெயார்களாக இருந்து வந்ததுடன், அது மொத்த நிலப்பரப்பில் 71% ஆகும்.

மேலும், மகாவலி கட்டமைப்பில் புதிதாக சேர்த்துக் கொள்ளப்பட்ட கருத்திட்டங்களின் கட்டுமான வேலைகள் முடிவடைந்து வந்ததுடன், மொறகஹகந்த நீர்த்தேக்கத்தின் அணைக்கட்டு, அதன் கதவுகள் மற்றும் மின்சார உற்பத்தி இயந்திரங்கள் என்பன தொடர்பான பரீட்சிப்பு வேலைகளுக்கென நீர்த்தேக்கத்தை நிரப்ப வேண்டியிருந்தது. அவ்விதம் நீரை நிரப்புவதற்கு பருவக்காற்று மழைவீழ்ச்சியின் மூலம் கிடைத்த நீர் மற்றும் திசை திருப்பப்பட்ட நீர் என்பன பயன்படுத்தப்பட்டன. 2017 டிசம்பர் 29ஆம் திகதியளவில் அந்நீர்த்தேக்கத்தின் நீர் கொள்திறன் 98.7% வரையில் உயர்த்தப்பட்டிருந்தது. இப்போகத்தின் போது மகாவலி தொகுதியில் 300 மெகாவோட் மணித்தியால மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டது. 2017/2018 பெரும்போகத்தில் மின்சார உற்பத்தியில் ஏற்பட்ட முன்னேற்றம் கீழே உள்ள வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளது.




**முதலாவது வரைபடம்**

நீர் முகாமைத்துவக் கமிட்டியின் கீழ் இருக்கும் வலயங்களில் 2017/18 பெரும்போகத்தில் சாகுபடி திட்டமிடப்பட்ட விதம் மற்றும் முன்னேற்றம் என்பன வரைபடம் இரண்டில் காட்டப்பட்டுள்ளன.





வரைபடம் இரண்டு

### 2.4.2 2017 சிறுபோகம் (ஏப்ரல் 01,2018- செப்டம்பர், 30 2018)

2018 சிறுபோகம் தொடர்பான நீர் முகாமைத்துவக் கமிட்டியின் கூட்டம் 2018 ஏப்ரல் மாதம் 06ஆம் திகதி பேராதனை கண்ணொருவையில் அமைந்திருக்கும் தாவரங்கள் மற்றும் மரபணு வளங்கள் நிலையத்தில் நடத்தப்பட்டது. அச்சந்தர்ப்பத்தில் கொத்மலை நீர்த்தேக்கத்தின் நீர் மட்டம் 35.0% ஆகவும், மாதுறு ஓயா நீர்த்தேக்கத்தின் நீர் மட்டம் 57.4% ஆகவும், கலாவெவ நீர் மட்டம் 35.6% ஆகவும், ஹுருலுவெவ நீர் மட்டம் 2.9% ஆகவும் தாழ்ந்த மட்டங்களில் நிலவி வந்தன. பராக்கிரம சமுத்திரத்தின் நீர் மட்டம் உச்ச மட்டத்தை அண்மித்துக் காணப்பட்டது.


அதன் காரணமாக ஒட்டுமொத்தமாக IH, MH, H வலயங்களில் 50-60% உச்ச மட்டத்திற்கு அமைவாகவும், பராக்கிரம சமுத்திரம், கந்தளாய், அல்லை, மாதுறு ஓயா, ராஜாங்கன ஆகியவற்றின் கீழ் உள்ள காணிகளுக்கு 100% ஆகவும் நீரை வழங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2018 சிறுபோகத்தில் சாகுபடி செய்யப்பட்ட மொத்த நிலப் பரப்பு 174,808 ஹெக்டெயார்களாகும். இது மொத்த சாகுபடி நிலப் பரப்பில் 91.25% அளவில் காணப்பட்டது.

இப்பருவத்தின் போது மகாவலி தொகுதியில் 522 மணித்தியால மெகாவோட் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டது. 2018 சிறு போகத்தின் போது மின்சார உற்பத்தியில் காணப்பட்ட முன்னேற்றம் வரைபடம் மூன்றில் காட்டப்பட்டுள்ளது.




வரைபடம் மூன்று

நீர் முகாமைத்துவ கமிட்டியின் கீழ் இருந்து வந்த வலயங்களில் 2018 சிறுபோகத்தின் போது சாகுபடி திட்டமிடல் மற்றும் கிடைத்த முன்னேற்றம் என்பன தொடர்பான விவரங்கள் நான்காவது வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளன.





வரைபடம் நான்கு

### 2.4.3 2018/ 2019 பெரும்போகம் (அக்டோபர் 01,2018 – மார்ச் 31,2019)

2018/ 2019 பெரும்போகத்திற்கான மகாவலி நீர் முகாமைத்துவக் கமிட்டியின் கூட்டம் 2018 அக்டோபர் மாதம் 19ஆம் திகதி பேராதனை கண்ணொருவையில் அமைந்திருக்கும் தேசிய விவசாய தகவல் தொடர்பாடல் நிலையத்தில் நடத்தப்பட்டது. அச்சந்தர்ப்பத்தில் மகாவலி வலயங்களின் அனைத்து நீர்த்தேக்கங்களினதும் எதிர்பார்க்கப்பட்ட நீர் மட்டம் கொத்மலை 87.2%, விக்டோரியா -83.1%, மொறகஹகந்த 42.9%, வளவே 55.5%, ஹுருலுவெவ 23.5%, மாதுறு ஓயா 38.9% என்ற அளவுகளில் காணப்பட்டது.


அப்பொழுது கிடைத்திருந்த பருக்காற்றுக்களுக்கு இடையிலான இரண்டாவது மழைவீழ்ச்சி மற்றும் தென்கீழ் பருவப் பெயர்ச்சி மழை வீழ்ச்சி என்பன எதிர்பார்க்கப்பட்ட பிரதேசங்களுக்கு உரிய விதத்தில் கிடைத்திருக்கவில்லை. அதன் காரணமாக நீர் வினியோகம் 2018 அக்டோபர் நடுப்பாகம் அளவில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. அதன் பிரகாரம் 2018/19 பெரும்போகத்தின் மொத்தச் சாகுபடி நிலப்பரப்பு 191,561 ஹெக்டெயார்களாக இருந்து வந்ததுடன், அது மொத்த நிலப்பரப்பில் 100% ஆக காணப்பட்டது.

இப்பருவத்தின் போது மகாவலி வலயங்களிலிருந்து 509 மணித்தியால மெகாவோட் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டது. 2018/19 பெரும்போகத்தின் போது மின்சார உற்பத்தியில் ஏற்பட்ட முன்னேற்றம் வரைபடம் ஐந்தில் காட்டப்பட்டுள்ளது.




வரைபடம் ஐந்து

நீர் முகாமைத்துவ கமிட்டியின் கீழ் இருந்து வந்த வலயங்களில் 2018/19 பெரும்போகத்தில் சாகுபடி திட்டமிடப்பட்ட விதம் மற்றும் அதன் முன்னேற்றம் என்பன வரைபடம் ஆறில் காட்டப்பட்டுள்ளது.




வரைபடம் ஆறு

# 2.5 காணிப் பயன்பாடு மற்றும் திட்டமிடல் பிரிவு

**அறிமுகம் :**

மகாவலி பிரதேசங்களின் நிலையான அபிவிருத்தியை குறிக்கோளாகக் கொண்டு பௌதீக, பொருளாதார, சமூக அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் முகாமைத்துவம் ஆகியவற்றின் இலக்குகளுக்கு ஊடாக ஒருங்கிணைந்த திட்டமிடலை மேற்கொள்வது காணிப் பயன்பாட்டு திட்டமிடல் பிரிவின் பணியாக இருந்து வருகின்றது. மகாவலி பெருந்திட்டத்தின் பிரகாரம் அபிவிருத்திப் பிரதேசங்களின் இயல்பை ஆய்வு செய்து, எதிர்கால அபிவிருத்தி இலக்குகளுக்கென எதிர்வுகூறல்களை மேற்கொண்டு, கட்டமைப்பு ரீதியான திட்டங்கள், வலய ரீதியான திட்டங்கள், மீள்குடியேற்றத் திட்டங்கள் நகர மற்றும் கிராமிய நிலையங்கள் தொடர்பான திட்டங்கள் என்பன குறித்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

## 2.5.1 காணி பயன்பாட்டு திட்டமிடல் பிரிவின் முதன்மையான பணிகள்

1. அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்கென காணிகளை இனங்காணல்
2. அபிவிருத்திக் கருத்திட்ட பிரதேசங்கள் தொடர்பான அடிப்படைத் தரவுகளைத் திரட்டுதல், பகுப்பாய்வு செய்தல் மற்றும் எதிர்வுகூறல்களை மேற்கொள்ளல்
3. கருத்திட்ட பிரதேசங்கள் சம்பந்தப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரித்தல்
4. மகாவலி பிரதேசங்களின் திட்டங்களை இற்றைப்படுத்துதல்
5. பேண்தகு விதத்தில் காணிப் பாவனையை உறுதிப்படுத்தும் விதத்தில் காணிகளை பகிர்ந்தளிப்பதற்கென பௌதீக ரீதியான திட்டங்களை பரிந்துரை செய்தல்
6. அனுமதி இல்லாமல் காணிகளை கையகப்படுத்துதலை கட்டுப்படுத்துதல் மற்றும் எளிதில் ஊறுபடத்தக்க சுற்றாடல் தொகுதிகள் மற்றும் பாதுகாக்கப்பட்ட பிரதேசங்கள் என்பவற்றை பாதுகாத்துத்துக் கொள்வதற்கான திட்டங்களை தயாரித்தல்.

## 2.5.2 2018 ஆம் ஆண்டின் இலக்குகள் மற்றும் முன்னேற்றம்

| செயற்பாடு | வருடாந்த நிதி ஒதுக்கு (ரூ.மி.) | 31.12.2018 வரையில் இலக்கு | | 31.12.2018 வரையில் முன்னேற்றம் | |
|---|---|---|---|---|---|
| | | நிதி (ரூ.மி.) | பௌதீக இலக்கு | நிதிசார் முன்னேற்றம் (ரூ.மி.) | பௌதீக முன்னேற்றம் |
| 09 குளங்களின் பாதுகாக்கப்பட்ட பிரதேசங்களின் எல்லைகளை அடையாளப்படுத்துதல் | 1.84 | 1.84 | 09 குளங்கள் | 1.79 | 09 குளங்களின் பாதுகாக்கப்பட்ட பிரதேசங்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. |
| பிரிவுத் திட்டங்களை இற்றைப்படுத்தல் | 0.64 | 0.64 | திட்டங்களை ஒருங்கிணைத்தல் | 0.54 | திட்டங்கள் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. |
| 18 குளங்களின் பாதுகாக்கப்பட்ட பிரதேசங்களை நில அளவை செய்தல் | 14.29 | 14.29 | 18 குளங்கள் | 10.644 | 18 குளங்களின் பாதுகாக்கப்பட்ட பிரதேசங்கள் அளவை செய்யப்பட்டுள்ளன. |
| மகாவலி கங்கையின் 60 மீற்றர் பாதுகாக்கப்பட்ட பிரதேச எல்லைகளின் நில அளவை | 1.0 | 1.0 | மகாவலி கங்கையின் 60 மீற்றர் பாதுகாக்கப்பட்ட் பிரதேசம் கி.மீ. 50 | 1.0 | கி.மீ. 50 பிரதேசம் தொடர்பான அளவை வேலைகள் பூர்த்தி அடைந்துள்ளன. |
| வரைபடங்களை ஸ்கான் செய்தல் மற்றும் இலத்திரனியல் தரவுத் தொகுதியை தயாரித்தல், அச்சிடல், அடிப்படைத் தரவுகளை ஆய்வு செய்தல், வெளிக்கள பரிசோதனை மற்றும் நகர அபிவிருத்தி திட்டமிடல் | 2.7 | 2.7 | E வலயம் தொடர்பான ஆய்வு வேலைகள் | 2.479 | E வலயம் தொடர்பான ஆய்வுப் பணிகள் பூர்த்தி அடைந்துள்ளன. |
| காணித்துண்டுகள் தொடர்பான வரைபடங்களை தயாரித்தல் | 1.8 | 1.8 | ஹுருலுவெவ வலயத்தின் காணித் துண்டு வரைபடங்கள் 01 | 1.75 | காணித்துண்டு வரைபடங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன |
| கருத்திட்டங்களை அமுல் செய்தல் | 0.825 | 0.825 | E வலயம் தொடர்பான கருத்திட்ட உள்கட்டமைப்பு வசதிகளை அமுல் செய்தல் | 0.821 | E வலயம் தொடர்பான உள்கட்டமைப்பு வசதிகள் தொடர்பான கருத்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டுள்ளன. |
| புளோட்டர் இயந்திரத்தை கொள்வனவு செய்தல் | 1.563 | 1.563 | 01 இயந்திரம் | 1.563 | 01 இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. |
| **மொத்தம்** | **24.658** | **24.658** | | **20.587** | |

## 2.5.3 2018 ஆம் ஆண்டின் போது பூர்த்தி செய்யப்பட்ட பணிகள்

- **மகாவலி கங்கையின் 60 மீற்றர் பாதுகாக்கப்பட்ட பிரதேசத்தின் எல்லைகளை அடையாளப்படுத்துதல்**

1986.12.26 ஆம் திகதியிடப்பட்ட வர்த்தமானியில் பிரகடனப்படுத்தப்பட்ட மகாவலி கங்கையின் 60 மீற்றர் பாதுகாக்கப்பட்ட எல்லைப் பிரதேசத்தை உருவாக்காத காரணத்தினால் பாதுகாக்கப்பட்ட பிரதேசங்கள் மிகவும் பாரியளவில் சட்டவிரோதமான குடியேற்றவாசிகளின் பிடிக்குள் போய்க் கொண்டிருக்கின்றன. இந்த நிலைமை காரணமாக ஆற்றங்கரை அரிப்பு ஏற்பட்டதுடன், நீரேந்து பிரதேசங்களிலும் அரிப்பு இடம்பெற்று வந்துள்ளது. மேலும், சட்டவிரோதமான கட்டுமானங்கள் காரணமாக ஆற்றங்கரையை அண்டிய, எளிதில் ஊறுபடத்தக்க சுற்றாடல் தொகுதிகள் அழிவடையக் கூடிய அபாயமும் காணப்படுகின்றது.

இந்த நிலைமையை தடுப்பதற்கும், சட்டவிரோதமான காணிப் பாவனையிலிருந்து மகாவலி கங்கையின் பாதுகாக்கப்பட்ட பிரதேசங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கும் 60 மீற்றர் பாதுகாக்கப்பட்ட பிரதேசங்களை அளவை செய்து, அடையாளப்படுத்தும் செயற்பாடு சுமார் 50 கிலோ மீற்றர் பரப்பு பிரதேசத்தில் இப்பொழுது பூர்த்தி அடைந்துள்ளது.

## 2.5.4 குளங்களின் பாதுகாக்கப்பட்ட பிரதேசங்களை அளவை செய்தல்

ஒவ்வொரு வலயத்திலும் காணப்படும் குளங்களின் பாதுகாக்கப்பட்ட பிரதேசங்களின் எல்லைகளை அடையாளப்படுத்தும் செயற்பாடு இடம்பெற்று வருகின்றது. 2018ஆம் ஆண்டின் போது 18 குளங்கள் தொடர்பான பாதுகாக்கப்பட்ட பிரதேசங்களின் எல்லைகளின் நில அளவை வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன. அது தொடர்பான தகவல்கள் வருமாறு:


| வலயம் | அளவை வேலைகள் பூர்த்தி அடைந்த குளங்களின் எண்ணிக்கை |
|---|---|
| B வலயம் | 02 |
| C வலயம் | 05 |
| H வலயம் | 02 |
| L வலயம் | 03 |
| வளவே வலயம் | 04 |
| ஹுருலுவெவ வலயம் | 02 |
| **மொத்தம்** | **18** |

- **குளங்களின் பாதுகாக்கப்பட்ட பிரதேசங்களை அடையாளப்படுத்துதல்**

2017ஆம் ஆண்டில் பாதுகாக்கப்பட்ட பிரதேசங்களின் நில அளவை வேலைகள் பூர்த்தியடைந்திருந்த 09 குளங்களில் எல்லைக் கற்கள் பொருத்தப்பட்டு, எல்லைகளை அடையாளப்படுத்தும் பணிகள் இவ்வாண்டின் போது பூர்த்தி அடைந்திருந்தன. மேலும், ஒரு சில குளங்களின் பாதுகாக்கப்பட்ட பிரதேசங்களை பாதுகாப்பதற்கென கன்றுகளை நடும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

- **நகரத் திட்டங்களை இற்றைப்படுத்துதல்**

மகாவலி L வலயத்தின் பிரதான நகர மையமான சம்பத்நுவர நகரத்தின் தற்போதைய அபிவிருத்திப் போக்குகளை கருத்தில் கொண்டு, பழைய நகரத் திட்டத்தை இற்றைப்படுத்துவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டன. அதே போல இத்திட்டத்தை அந்த வலயத்தின் நகரத் திட்டத்தின் பங்கீடுபாட்டாளர்களிடம் சமர்ப்பித்து, அவர்களுடைய கருத்துக்களை பெற்றுக்கொள்ளும் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டன.



### 2.5.5 E வலயத்தின் சமூக பொருளாதார மதிப்பீட்டாய்வு


மினிப்பே இடது கரை கால்வாய் கருத்திட்டத்துடன் இணைந்த விதத்தில் மகாவலி பெருந்திட்டத்தின் பிரகாரம் உத்தேசிக்கப்பட்டிருக்கும் E வலய கருத்திட்டப் பிரதேசம் இலங்கை மகாவலி அதிகார சபையின் ஒரு விசேட பிரதேசமாக வர்த்தமானியில் பிரகடனப்படுத்தப்பட்டு, அதனை அபிவிருத்தி செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம், மினிப்பே பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த 44 கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் மற்றும் வில்கமுவ பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்த 27 கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் என்பவற்றை ஒருங்கிணைத்து மகாவலி E வலயம் அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றது.

21,800 ஹெக்டெயார் நிலப் பரப்பை உள்ளடக்கும் விதத்தில் 25,500 குடும்பங்களுக்கு பயன்களை பெற்றுக்கொடுத்து பௌதீக, சமூக, பொருளாதார மற்றும் சுற்றாடல் ஆகிய துறைகளை அபிவிருத்தி செய்வதனை நோக்கமாகக் கொண்டு அபிவிருத்தித் திட்டம் ஒன்றை தயாரிப்பதற்குத் தேவையான அனைத்து அடிப்படைத் தகவல்களும் திரட்டப்பட்டதுடன், அதனுடன் சம்பந்தப்பட்ட சமூக, பொருளாதார மதிப்பீட்டாய்வு பூர்த்தி அடைந்துள்ளது.


மேலும், E வலயத்தில் அபிவிருத்தி செய்வதற்கென எதிர்பார்க்கப்படும் பிரதேசங்கள் தொடர்பான வரைபடத் தயாரிப்பு மற்றும் அந்த வலயத்தின் உள்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி தொடர்பான விடயங்கள் என்பன இப்பொழுது இடம்பெற்று வருகின்றன.

### 2.5.6 அம்பன நகர மையம் தொடர்பான திட்டத்தை தயாரித்தல்

மொறகஹகந்த வலயத்தைச் சேர்ந்த அம்பன நகர மையத்தின் திட்டத் தயாரிப்பு வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன. வர்த்தக நடவடிக்கைகளுக்கென காணிகளை ஒதுக்குதல், ஆஸ்பத்திரி, சந்தை என்பவற்றுக்கான காணிகள், நூல் நிலையக் கட்டடம் என்பன உருவாக்கப்படும் விதத்தை மீள் பரிசீலனை செய்வதனை அடுத்து திட்டத்தை பூர்த்தி செய்ய வேண்டி நேரிட்டது.




மொறகஹகந்த களுகங்க விவசாய அபிவிருத்தித் திட்டத்துடன் இணைந்த விதத்தில் அப் பிரதேசத்தில் வாழ்ந்து வரும் சமூகத்தினரின் பொருளாதார நிலையை மேம்படுத்துவதற்கென கைத்தொழில் வலயம் ஒன்றை ஸ்தாபிக்கும் பொருட்டு பெபொல்வத்த பிரதேசத்தில் 21.1 ஹெக்டெயார் காணி ஒன்று அடையாளம் காணப்பட்டுள்ளது. அதற்கென திட்டம் ஒன்றை தயாரிப்பதற்கென ஒருங்கிணைப்புப் பணிகள் கைத்தொழில் சபையுடன் இணைந்து மேற்கொள்ளப்பட்டுள்ளன.




## 2.5.7 சுற்றுலா வலயங்கள் தொடர்பான அபிவிருத்தித் திட்டங்களை தயாரித்தல்

மொறகஹகந்த களுகங்க விவசாய அபிவிருத்தித்திட்டத்துடன் இணைந்த விதத்தில் அப் பிரதேசத்தில் நிலவி வரும் சுற்றுலா கவர்ச்சி இடங்களை ஒருங்கிணைத்து, களுகங்க பிரதேசத்தில் 408 ஹெக்டெயார் நிலப் பரப்பை அடையாளம் கண்டு, அங்கு பயிற்சி மற்றும் சேவை நிலையம் ஒன்றையும், பாரம்பரிய கிராமங்கள், துவிச்சக்கர வண்டிப் பாதை, நடைபாதை மற்றும் படகுத் துறைகள் என்பவற்றையும் ஸ்தாபிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.



## 2.6 வன வள மற்றும் சுற்றாடல் பிரிவு

2018ஆம் ஆண்டில் நிதி ஒதுக்குகள் மற்றும் முன்னேற்றம்

| வரிசை எண் | பிரிவு / வலயம் | நிதி ஒதுக்கு (ரூ.மி.) | நிதிசார் முன்னேற்றம் (ரூ. மி.) | 2019 ஆம் ஆண்டில் கொடுப்பனவுக்கு அனுப்பி வைக்கப்பட்ட கட்டணப் பட்டியல்கள் (ரூ. மி.) | மொத்தம் (ரூ.மி.) | சதவீதம் |
|---|---|---|---|---|---|---|
| 01 | சுற்றாடல் வனப் பாதுகாப்பு பிரிவு – கொத்மலை | 3500. | 30.66 | 2.67 | 33.33 | 95.2% |
| 02 | B, C, D, G, H வளவே, ஹுருலுவெவ, விக்டோரியா, றம்பக்கண் ஓயா வலயங்கள் | 34.56 | 34.39 | 0 | 34.39 | 99.5 % |
| 03 | மகாவலி விசேட கருத்திட்டங்கள், வெலிஓயா ஒருங்கிணைந்த கருத்திட்டம் | 13.91 | 7.72 | 0 | 7.72 | 55.5% |
| 04 | B வலயம் வலது கரை அபிவிருத்திக் கருத்திட்டம் மல்வன்ன மற்றும் மகாவலி தன்ன) | 0.7 | 0 | 0.7 | 0.7 | 100% |
| | **மொத்தம்** | **84.17** | **72.77** | **3.37** | **76.14** | **90.5%** |

### 2.6.1 வனவள மற்றும் சுற்றாடல் பிரிவின் மூலம் 2018 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள்:

- மேல் கீழ் மகாவலி நீரேந்து பரப்பு பிரதேசங்களில் மேல் மகாவலி நீரேந்து பரப்பு பிரதேசத்தில் நுவரெலியா மற்றும் கண்டி ஆகிய மாவட்டங்களில் 04 பிரதேச செயலாளர் பிரிவுகளை உள்ளடக்கிய விதத்தில் 2018ஆம் ஆண்டில் விவசாயிகள் பயிற்சி மற்றும் இயற்கை வள முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டன.

- கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டங்களில் அமைந்திருக்கும் சாய்வுடன் கூடிய விவசாயக் காணிகளின் மண் பாதுகாப்பு தொடர்பாக விவசாயிகளுக்கு அறிவூட்டுதல் மற்றும் மண் பாதுகாப்பு முறைகளை பின்பற்றுவது தொடர்பான கொடுப்பனவுகளை வழங்கி, அவர்களை ஊக்குவித்தல் என்பவற்றின் மூலம் விவசாய நிலங்களின் மண் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டம் அமுல் செய்யப்பட்டது.



இயந்திர மூலம் மண் பாதுகாப்பு– வடிகான் அமைப்பு (பேரவத்த கிழக்குப் பிரிவு)





இயந்திர மூலம் மண் பாதுகாப்பு – வடிகான் அமைப்பு (ஹகுராங்கெத்த உடகல பிரிவு)

- வனவள மற்றும் சுற்றாடல் பிரிவின் மூலம் பல்வேறு விதமான மர நடுகை நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல் செய்யப்பட்டுள்ளன. ஏனைய அரச நிறுவனங்கள், பிரதேசத்தைச் சேர்ந்த உள்ளூராட்சி அமைப்புக்கள், பாடசாலைகள் மற்றும் ஆர்வம் காட்டும் சுற்றாடல் அமைப்புக்கள் என்பவற்றுடன் இணைந்து அத்தகைய 32 நிகழ்ச்சித்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டன.
- தெல்தொட்டை பிரதேச செயலகப் பிரிவின் பேரவத்த கிழக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவின் ஹபுவல்மான கிராமம் இம்முறை பசுமைக் கிராமமாக தெரிவு செய்யப்பட்டு, அபிவிருத்தி வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன.

## நீரேந்து பரப்பு பிரதேசத்தின் தரத்தை மேம்படுத்துவதற்கான ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டம்

i 50% விவசாயிகளின் பங்கேற்பின் கீழ் தரமான நடுகைப் பொருட்களை வழங்குதல்

ii. தனியார் நாற்று மேடைகளை உருவாக்குதல்

iii. வீட்டுத் தோட்டங்களில் தேனீ வளர்ப்பு நிகழ்ச்சித் திட்டம்

iv. கொம்போஸ்ட் உர உற்பத்தி நிகழ்ச்சித்திட்டம்

- **ஆக்கிரமிப்பு இயல்பிலான அன்னியத் தாவரங்களை ஒழிக்கும் நிகழ்ச்சித்திட்டம்**

கொத்மலை நீர்த்தேக்கத்தின் பாதுகாக்கப்பட்ட பிரதேசமான சங்கிலிப் பாலம் பிரதேசத்தில் 01 ஹெக்டெயார் நிலப் பரப்பிலும், கொத்மலை நீர்த்தேக்கத்தின் வட்டந்தர பிரதேசத்தில் 02 ஹெக்டெயார் நிலப் பரப்பிலும், போவதன்ன நீர்த்தேக்கத்தின் வம்பட்டுயாய பிரதேசத்தில் 7.13 ஹெக்டெயார் நிலப் பரப்பிலும் பரவியிருக்கும் பாரிய நிதிகும்பா ஆக்கிரமிப்புத் தாவரத்தை அகற்றும் வேலைகள் பதிவு செய்யப்பட்ட விவசாயிகள் அமைப்புக்களுக்கு நேரடி ஒப்பந்தம் மூலம் வழங்கப்பட்டன. 2018ஆம் ஆண்டின் போது இதற்கென ரூ.111,709 தொகை ஒதுக்கப்பட்டதுடன், கொடுப்பனவுகள் வழங்கப்பட்டன. நிறைவு செய்யப்பட்டிருக்கும் பணிகளுக்கென செலுத்த வேண்டியிருக்கும் ரூ. 819,435.25 தொகையை 2019ஆம் ஆண்டின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.







பாரிய நிதிக்கும்பா தாவரத்தை அகற்றுதல் - போவதன்ன நீர்த்தேக்கத்தின் பாதுகாக்கப்பட்ட பகுதி

விழிப்புணர்வூட்டும் பெயர் பலகைகளை பொருத்துதல் - பொல்கொல்ல

- மேல் மகாவலி நீரேந்து பரப்பு பிரதேச முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் நீரேந்து பிரதேசத்தின் உயிர் பன்முகத்தன்மையை விருத்தி செய்யும் விதத்தில் தாவரப் போர்வையை அதிகரிப்பது இனங்காணப்பட்டிருக்கும் ஒரு பணியாகும். அதற்குத் தேவையான பல்வேறு தாவர வகைகள் நவதெவிட்ட மத்திய நாற்று மேடையில் உற்பத்தி செய்யப்படுகின்றன.

- சுற்றாடல் மற்றும் நீராதார முகாமைத்துவத்தை மேம்படுத்துவதற்கு தொரகல மற்றும் பள்ளேகல ஆகிய இடங்களில் இரண்டு சுற்றாடல் மேம்பாட்டு நிலையங்கள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன.





2018 ஆம் ஆண்டின் போது விருத்தி நடவடிக்கைகள் மற்றும் பண்ணையில் சேதன மரக்கறி உற்பத்தி

## 2.6.2 மகாவலி தூய நதி நிகழ்ச்சித்திட்டம்

01. நீரியல் பிரிவு

மேல் மகாவலி நீரேந்து பரப்பில் அமைந்திருக்கும் உப நீரேந்து பிரதேசங்களின் நீரோட்டங்கள், பிரதான ஓடைகள் மற்றும் மகாவலி கங்கையின் நீரோட்டம் என்பனவற்றுக்கு ஊடாக எடுத்துச் செல்லப்படும் சேற்றின் அளவை அளவிடும் பணி இச்செயற்பாட்டின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

### 02. நீரின் தரம் குறித்த ஆய்வு


இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் மேல் மகாவலி நீரேந்து பரப்பு பிரதேசத்தின் மாற்றமடைந்து வரும் காணிப் பயன்பாட்டு போக்குகள், நீரேந்து பரப்பு தொடர்பான பல்வேறு விதமான பிரச்சினைகள் மற்றும் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் என்பன கவனத்தில் எடுக்கப்படுகின்றன. மேல் மகாவலி நீரேந்து பிரதேசங்களின் இரு நீராதாரங்களில் - அதாவது கொத்மலை மற்றும் பொல்கொல்ல நீர்த்தேக்கங்களுக்கு நீராதாரங்களாக இருந்து வரும் கொத்மலை ஓயா, மகாவலி கங்கை மற்றும் அதன் கிளை நதிகள் என்பவற்றை உள்ளடக்கிய விதத்தில் - பரிந்துரை செய்யப்பட்டிருக்கும் 19 இடங்களில் நீரின் இராசாயன மற்றும் பௌதீக கூறுகள் (Chemical and Physical) பார உலோக வகைகள் (Heavy Metals), நுண் உயிர்கள் (Micro Biology) அளவுகோல்களுக்காக 2018ஆம் ஆண்டில் நீரின் தரம் தொடர்பான ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

## 2.6.3 கழிவு முகாமைத்துவத்திற்கென வலை வேலிகளை அமைத்தல்

கழிவு முகாமைத்துவத்திற்கென கொத்தமலை நீர்த்தேக்கத்தை சூழவுள்ள பிரசேத்தில் 87.4 மீற்றர் வேலியும், மற்றும் பொல்கொல்ல நீர்த்தேக்கத்தை சூழவுள்ள கட்டுகஸ்தோட்ட பிரதேசத்தில் 52 மீற்றர் வேலியும் அமைக்கப்பட்டன.




கொத்மலை அணைக் கட்டுக்கு அருகில் அமைக்கப்பட்டுள்ள வேலி



கடுகஸ்தோட்டை வேலி

## 2.6.4 யானை - மனித மோதலை தணிப்பதற்கான நிகழ்ச்சித்திட்டம்

- வதிவிட கருத்திட்ட அலுவலகத்தைச் சூழ 1.6 கீலோ மீற்றர் மின்சார வேலி அமைப்பதற்குத் தேவையான பொருட்களை கொள்வனவு செய்தல்
- சிங்கபுர சூரியவெவ மின்சார வேலியை பராமரிப்பதற்காகவும், பெலட்டியாவ மின்சார வேலியை பராமரிப்பதற்காகவும் தேவையான பொருட்களை பெற்றுக்கொடுத்தல்
- இஹல அல்லெவெவ பாடசாலைக்கு எதிரிலும், மயானபூமிக்கு இரு பக்கங்களிலும் வளர்ந்துள்ள புதர்களை அகற்றுவதற்கென சிரமதானத்தை நடத்துதல். அசேலபுர பிரிவில் மின்சார வேலிப் பராமரிப்பு தொடர்பாக சிரமதானத்தை நடத்தல். அல்லேவெல பாதுகாக்கப்பட்ட பிரதேசம் தொடர்பான யானை - மனித மோதலை தணிப்பதற்கென பாதையின் இரு பக்கங்களையும் துப்பரவு செய்வதற்கென சிரமதானத்தை நடத்துதல்




**யானை வேலி வாழும்**

**யானை வேலி வாழும்**

## 2.6.5 சுற்றால் மற்றும் வனப் பாதுகாப்பு பிரிவினால் மேற்கொள்ளப்பட்டு வரும் ஏனைய விசேட செயற்பாடுகள்

- சுற்றாடல் மற்றும் வனப் பாதுகாப்பு பிரிவு வெளிக்கள பணிகளுக்கு மேலதிகமாக, மகாவலி அதிகார சபையின் மூலம் செயற்படுத்தப்பட்டு வரும் பாரியளவிலான கருத்திட்டங்களின் சுற்றாடல் பாதுகாப்பு நடவடிக்கைகளின் சுற்றாடல் ஒப்புதலின் நிபந்தனைகளை செயற்படுத்துவது தொடர்பான நடவடிக்கைகளை முன்னெடுப்பதிலும், தொடர் கண்காணிப்பிலும் ஈடுபட்டு வருகின்றது. மகாவலி அதிகார சபையின் மூலம் அமுல் செய்வதற்கென உத்தேசிக்கப்பட்டிருக்கும் கருத்திட்டங்களின் தொழில்நுட்ப கமிட்டிகள், நெறிப்படுத்தல் கமிட்டிகள் மற்றும் நிரந்தர கமிட்டிகள் என்பவற்றிலும் அது பிரதிநிதித்துவத்தை பெற்றுக்கொண்டுள்ளது.
- சுற்றாடல் மற்றும் வனப் பாதுகாப்பு பிரிவு, ஏனைய அரச நிறுவனங்கள் மூலம் அமுல் செய்யப்பட்டு வரும் கருத்திட்டங்கள் தொடர்பான தொழில்நுட்ப கமிட்டியில் பிரதிநிதித்துவத்தை பெற்றுக்கொண்டுள்ளது.
- தேசிய சுற்றாடல் சட்டத்தின் கீழ் கருத்திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கும் ஒரு நிறுவனமாகவும், சுற்றாடல் தாக்கங்களை மதிப்பீடு செய்யும் செயன்முறையின் நிர்வாக நடவடிக்கைகள் மற்றும் தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் ஒரு நிறுவனமாகவும் அது இருந்து வருகின்றது.

# மூன்றாவது அத்தியாயம்
# அபிவிருத்திப் பிரிவு

அபிவிருத்திப் பிரிவு ஐந்து முக்கிய பிரிவுகளைக் கொண்டுள்ளது; அவை வருமாறு:

01. காணிப் பிரிவு
02. விவசாய அபிவிருத்திப் பிரிவு
03. கால்நடை அபிவிருத்திப் பிரிவு
04. நிறுவன அபிவிருத்திப் பிரிவு
05. வணிக அபிவிருத்திப் பிரிவு

## 3.1 காணிப் பிரிவு

### 3.1.1 அறிமுகம்

வரையறுக்கப்பட்ட ஒரு வளமாக இருந்து வரும் காணிகளை மிகச் சிறந்த முகாமை முறைகளுக்கு ஊடாக முகாமைத்துவம் செய்து, மகாவலி பிரதேசங்களில் வசித்து வரும் பயனாளிகளான மக்களின் காணி உரித்தினை உறுதிப்படுத்துவதன் மூலம் அவர்களுடைய பொருளாதார, சமூக நிலையின் விருத்திக்கும் பங்களிப்புச் செய்தல்.

### 3.1.2 காணிப் பிரிவின் செயற்பாடுகள்

01. காணிப் அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஆட்களுக்கு காணிகளை பெற்றுக்கொடுத்தல் மற்றும் அது சம்பந்தப்பட்ட தொடர் நடவடிக்கைகள்.
02. அரச காணிகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஆட்களுக்கும், நிறுவனங்களும் காணிகளை பெற்றுக்கொடுத்தல் மற்றும் அது தொடர்பான தொடர் நடவடிக்கைகள்.

### 3.1.3 அனுமதிப் பத்திரங்களை வழங்குதல் - காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டம் - 2018

| வலயம் | இலக்கு | முன்னேற்றம் |
|---|---|---|
| B வலயம் | 4500 | 2562 |
| C | 4300 | 4257 |
| D | 1000 | 145 |
| H | 2900 | 288 |
| L | 1600 | 1434 |
| விக்டோரியா | 100 | 24 |
| ஹுருலுவெவ | 500 | 92 |
| மொறகஹகந்த | 1000 | 705 |
| வளவே | 3700 | 3597 |
| றம்பக்கண் ஓயா | 1100 | 982 |
| **மொத்தம்** | **20,700** | **14,086** |

### 3.1.4 அளிப்புப் பத்திரங்களை வழங ்குதல் - காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டம் - 2018

| வலயம் | இலக்கு | முன்னேற்றம் |
|---|---|---|
| B வலயம் | 3800 | 1270 |
| C | 4000 | 2478 |
| D | 950 | 514 |
| H | 2000 | 374 |
| L | 1100 | 1065 |
| விக்டோரியா | 250 | 29 |
| ஹுருலுவெவ | 800 | 193 |
| மொறகஹகந்த | 750 | 385 |
| வளவே | 4900 | 4638 |
| றம்பக்கண் ஓயா | 200 | - |
| **மொத்தம்** | **18,750** | **10,946** |

### 3.1.5 நீண்ட கால குத்தகைகள் - அரச காணிகள் கட்டளைச் சட்டம் - 2018

| வலயம் | இலக்கு | முன்னேற்றம் |
|---|---|---|
| B வலயம் | 200 | 32 |
| C | 80 | 64 |
| D | 10 | - |
| H | 200 | 18 |
| L | 10 | - |
| விக்டோரியா | 70 | 43 |
| ஹுருலுவெவ | 10 | 4 |
| மொறகஹகந்த | 30 | 1 |
| வளவே | 350 | 317 |
| றம்பக்கண் ஓயா | 10 | - |
| **மொத்தம்** | **970** | **479** |

### 3.1.5 அரச நிறுவனங்களுக்கு காணிகளை வழங்குதல் - 2018

| வலயம் | ஒப்படைத்தல் கட்டளைகள் | | காணிகளை ஒப்படைத்தல் | |
|---|---|---|---|---|
| | இலக்கு | முன்னேற்றம் | இலக்கு | முன்னேற்றம் |
| B வலயம் | 50 | 39 | 50 | - |
| C | 20 | - | 10 | - |
| D | 5 | - | 5 | - |
| H | 10 | - | 10 | - |
| L | 5 | - | - | 3 |
| விக்டோரியா | 10 | 2 | - | - |
| ஹுருலுவெவ | 20 | - | 20 | - |
| மொறகஹகந்த | 5 | 1 | 5 | - |
| வளவே | 5 | 1 | 5 | 9 |
| றம்பக்கண் ஓயா | 20 | - | 20 | - |
| **மொத்தம்** | **150** | **43** | **125** | **12** |

### 3.1.6 அரச காணிகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் விகாரஸ்தான அளிப்புப் பத்திரங்களை வழங்குதல் - 2018

| வலயம் | இலக்கு | முன்னேற்றம் |
|---|---|---|
| B வலயம் | 50 | 15 |
| C | 10 | 6 |
| D | 5 | - |
| H | 20 | 1 |
| L | - | - |
| விக்டோரியா | 10 | - |
| ஹுருலுவெவ | 6 | - |
| மொறகஹகந்த | 5 | - |
| வளவே | 5 | 4 |
| றம்பக்கண் ஓயா | 5 | - |
| **மொத்தம்** | **116** | **26** |

**3.1.7 அரச காணிகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் வீடமைப்பு (அளிப்புக்களை) வழங்குதல் - 2018**

| **வலயம்** | **இலக்கு** | **முன்னேற்றம்** |
|---|---|---|
| B வலயம் | 100 | - |
| C | 10 | 3 |
| D | 5 | - |
| H | 50 | 17 |
| L | 5 | - |
| விக்டோரியா | 100 | 75 |
| ஹுருலுவெவ | 4 | 1 |
| மொறகஹகந்த | 5 | 4 |
| வளவே | 15 | 14 |
| றம்பக்கண் ஓயா | 5 | - |
| **மொத்தம்** | **299** | **114** |

## 3.2 விவசாய அபிவிருத்திப் பிரிவு

- இலங்கை மகாவலி அதிகார சபைக்குச் சொந்தமான மகாவலி வலயங்களில் வசித்து வரும் விவசாயிகளின் பொருளாதாரத்தை பயனுள்ள விதத்தில் விருத்தி செய்யும் பொருட்டு சுற்றாடலுக்கு உசிதமான விவசாய தொழில்நுட்ப முறைகளை அறிமுகம் செய்து வைத்தல் மற்றும் பரவலாக்குதல்.
- உணவு உற்பத்தி தொடர்பான தேசிய இலக்குகளின் பிரகாரம் மகாவலி பிரதேசங்களில் நீர்ப்பாசனம் பெறும் காணிகளிலும், நீர்ப்பாசனம் பெறாத காணிகளிலும் பயிர்ச்செய்கை, விலங்கு உற்பத்தி மற்றும் விவசாய தொழில் முயற்சிகள் என்பவற்றை உருவாக்குவதற்கென வருடாந்த இலக்குகளை தயாரித்துக் கொள்ளல்.
- வருடாந்த பயிர் உற்பத்தி இலக்குகளை சாதித்துக் கொள்வதற்கென வழங்கப்படும் வருடாந்த நிதி ஒதுக்குகளின் பிரகாரம் விரிவாக்கல் இலக்குகள் மற்றும் உத்திகள் என்பவற்றை தயாரித்தல், அவற்றை வலய மட்டத்தில் ஒழுங்குபடுத்துதல், அமுல் செய்தல், தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளல், கண்காணிப்பு மற்றும் அறிக்கையிடல்.
- விவசாய அபிவிருத்தி நடவடிக்கைகளில் மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு, விவசாய அமைச்சு, விவசாய திணைக்களம், சிறு ஏற்றுமதிப் பயிர்கள் திணைக்களம், ஏனைய அரச நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் ஆகிய அனைத்து வெளி நிறுவனங்களுடனும் ஒருங்கிணைப்பினை மேற்கொள்ளல்.

### 3.2.1 விவசாய விளைதிறன் நிகழ்ச்சித்திட்டத்தின் பௌதீக முன்னேற்றம் - 2018

| செயற்பாடு | அலகு | இலக்கு | முன்னேற்றம் |
|---|---|---|---|
| **நெற் சாகுபடி மேம்பாடு** | | | |
| மாதிரி வயல்வெளி நிகழ்ச்சித்திட்டம் | எண்ணிக்கை | 278 | 209 |
| அறுவடை மதிப்பீட்டாய்வுகள் | மதிப்பீட்டாய்வு | 614 | 600 |
| பரசூட் முறையில் நெற் சாகுபடி விஸ்தரிப்பு | ஹெக். | 17 | 17 |
| இலை நிறமி குறிகாட்டிகளின் பயன்பாடு | ஹெக். | 2,000 | 2,000 |
| சுய நெல் விதை உற்பத்தி | ஹெக். | 2,447 | 2,603 |
| **ஏனைய களப் பயிர்கள்** | | | |
| மாதிரி சோள சாகுபடி | எண்ணிக்கை | 56 | 49 |
| சலுகை அடிப்படையில் சோள விதைகளை விநியோகித்தல் | கி. கிராம் | 2,185 | 1,687 |
| மாதிரி சோயா சாகுபடி | எண்ணிக்கை | 11 | 11 |
| சோயா சந்தைப்படுத்தல் மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டம் | எண்ணிக்கை | 2 | 1 |
| சோயா விதை உற்பத்திக்கென டப்போலின் விநியோகம் | எண்ணிக்கை | 50 | 43 |
| தாய்தண்டு உற்பத்திக்கென பெரிய வெங்காய கொள்வனவு | கி. கிராம் | 112 | 113 |
| பெரிய வெங்காய தாய்தண்டு உற்பத்தி | கி. கிராம் | 36,000 | 10,000 |
| நீர் விநியோகத் தொகுப்புக்களை வழங்குதல் | எண்ணிக்கை | 112 | 95 |

| | | | |
|---|---|---|---|
| பெரிய வெங்காய போக்குவரத்துக்கென பிளாஸ்ரிக் கூடைகள் | எண்ணிக்கை | 49 | 36 |
| சலுகை அடிப்படையில் மிளகாய் விதைகளை விநியோகித்தல் | கி. கிராம் | 197 | 194 |
| சாகுபடி பைகளுக்குள் மிளகாய் உற்பத்தியை மேம்படுத்தல் | சாகுபடி பை | 20,000 | 17,395 |
| மிளகாய் செய்கை கிராமங்கள் | ஹெக் | 18 | 33 |
| சலுகை அடிப்படையில் பயறு விதைகளை விநியோகித்தல் | கி. கிராம் | 2,096 | 3,182 |
| இடைப் பருவத்தில் பயறு உற்பத்தி | கி. கிராம் | 900 | 850 |
| சலுகை அடிப்படையில் நிலக்கடலை விதைகளை விநியோகித்தல் | கி. கிராம் | 6,150 | 5,889 |
| நிலக்கடலை விதை உற்பத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்கென விதைகளை விநியோகித்தல் | கி. கிராம் | 660 | 1,041 |
| சலுகை அடிப்படையில் கௌப்பி விதைகளை விநியோகித்தல் | கி. கிராம் | 1,234 | 907 |
| **செயற்பாடு** | **அலகு** | **இலக்கு** | **முன்னேற்றம்** |
| சலுகை அடிப்படையில் உளுந்து விதைகளை விநியோகித்தல் | கி. கிராம் | 667 | 617 |
| சலுகை அடிப்படையில் குரக்கன் விதைகளை விநியோகித்தல் | கி. கிராம் | 155 | 150 |
| குரக்கன் விதை உற்பத்திக்கென விதைகளை விநியோகித்தல் | கி. கிராம் | 360 | 601 |
| விவசாயக் கிணறுகளை வழங்குதல் | எண்ணிக்கை | 44 | 44 |
| நீர் பம்புகளை வழங்குதல் | எண்ணிக்கை | 66 | 67 |
| வீட்டுத் தோட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் | வீட்டுத் தோட்டம் | 10,203 | 7,894 |
| விவசாய விரிவாக்கல் நடவடிக்கைகள் (உத்தியோகத்தர் / விவசாயிகள் பயிற்சி/ கள தினங்கள் / பயிர் முகாம்கள் | எண்ணிக்கை | 1,634 | 1,470 |
| **பழச் செய்கை அபிவிருத்தி** | | | |
| மா மர புனரமைப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் | எண்ணிக்கை | 126 | 101 |
| பழங்களைத் தாக்கும் பீடைகளை கட்டுப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டங்கள் | எண்ணிக்கை | 71 | 67 |
| புதிய பழச் செய்கை | ஹெக். | 111 | 175 |

அனைத்து வலயங்களிலும் 2018 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்ட நிதி ஒதுக்குகளின் பிரகாரம் ஊழியர்கள் வெற்றிகாரமான விதத்தில் பௌதீகச் செயற்பாடுகளை மேற்கொண்டதுடன், அவர்களுடைய ஆர்வம் காரணமாக இந்த பௌதீக முன்னேற்றத்தை சாதித்துக் கொள்ளக்கூடிய வாய்ப்புக் கிடைத்தது.

### 3.2.2 பயிர் உற்பத்தியில் ஏற்பட்ட முன்னேற்றம் மற்றும் பங்களிப்பு – பெரும்போகம் 2017/2018 மற்றும் சிறுபோகம் 2018 சாகுபடி பருவங்கள்

| பயிர் | சாகுபடி நிலப்பரப்பு (ஹெக்டெயார்) | மகாவலி உற்பத்தி (மெற்றிக் தொன்) | தேசிய உற்பத்தி (மெற்றிக் தொன்) | மகாவலி பங்களிப்பு (%) |
|---|---|---|---|---|
| நெல் | 165,421 | 906,051 | 3,806,000 | 24% |
| சோளம் | 3,930 | 16,083 | 306,801 | 5% |
| பயறு | 520 | 769 | 10,858 | 7% |
| கௌப்பி | 443 | 503 | 16,031 | 3% |
| சோயா | 1,510 | 3,471 | 3,621 | 96% |
| பச்சை மிளகாய் | 683 | 5,246 | 61,141 | 9% |
| நிலக்கடலை | 704 | 1,349 | 24,178 | 6% |
| உளுந்து | 138 | 173 | 8,566 | 2% |
| எள்ளு | 164 | 117 | 7,821 | 1% |
| குரக்கன் | 323 | 498 | 5,688 | 9% |
| பெரிய வெங்காயம் | 572 | 11,358 | 31,880 | 36% |
| மரக்கறிகள் | 6,176 | 87,130 | | |

**பழ வகைகள்**

| பயிர் | சாகுபடி நிலப்பரப்பு (ஹெக்டெயார்) | உற்பத்தி (மெற்றிக் தொன்) |
|---|---|---|
| வாழை | 9,131 | 136,964 |
| பப்பாளி | 694 | 12,488 |
| மா | 2,048 | 8,596 |

(தேசிய உற்பத்தி தொடர்பான தரவுகள் விவசாயத் திணைக்களத்தின் சமூக, பொருளாதார மற்றும் திட்டமிடல் நிலையத்தின் மூலம் வெளியிடப்படுகின்றன. 2016/17 பெரும்போகம் மற்றும் 2017 சிறுபோகம் என்பவற்றின் அறுவடை தொடர்பான எதிர்வுகூறல் அறிக்கைகளிலிருந்து பெறப்பட்டது.

தேசிய உணவுப் பாதுகாப்பினை ஏற்படுத்திக் கொள்வதற்கென இலங்கை மகாவலி அதிகார சபையினால் செயற்படுத்தப்பட்ட விவசாய அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் தேசிய உணவு உற்பத்திக்கு பங்களிப்பு வழங்கப்பட்டிருப்பதுடன், பொருளாதாரத்தை செழிப்படையச் செய்து, உற்பத்தியின் விளைதிறனை மேம்படுத்தும் செயற்பாடு வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

மாதிரி வயல் வெளிகள் நிகழ்ச்சித்திட்டம்





கன்றுகளை நடும் இயந்திரங்களை பயன்படுத்துவதன் மூலம் உயரளவிலான அறுவடையை பெற்றுக்கொள்ளல் மற்றும் களைகளை கட்டுப்படுத்தல் - வெளிக்கள முன்மாதிரிகள்





நெற்செய்கைக்கென பரசூட் தட்டுக்களை பயன்படுத்துதல்





இலை நிறமி குறிகாட்டிகளை பயன்படுத்துவதன் மூலம் யூரியா உரப் பாவனையை குறைத்தல்

VAT முன்மாதிரி





ஒருங்கிணைந்த பீடை நாசினிகள் கட்டுப்பாட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் விதை நெல் உற்பத்தி நிகழ்ச்சித்திட்டம்





சோயா அவரை – முன் ஒப்பந்த சாகுபடி மேம்பாடு



சோயா அவரை சந்தைப்படுத்தல் ஒருங்கிணைப்பு நிகழ்ச்சித்திட்டம



நீர் தட்டுப்பாட்டுக்கான ஒரு தீர்வு என்ற விதத்தில் நீர்த் தெளிப்பு நீர் விநியோகத் தொகுப்புக்கள் மற்றும் சொட்டு நீர் விநியோகத் தொகுப்புக்களை வழங்குதல்





நிலக்கடலைச் சாகுபடி





சோள சாகுபடி விரிவாக்கல்
மிளகாய் சாகுபடி விரிவாக்கல் - உற்பத்தி

கலப்பு சோள விதை உற்பத்தி
மிளகாய் விதை





50 பங்களிப்பின் கீழ் உப உணவுப் பயிர் ˙ தினங்கள்

வெளிக்கள

விதைகள் விநியோகம்





விவசாயக் கண்காட்சி



விவசாயியை தெரிவு செய்யும் போட்டி



மகாவலி தலைசிறந்த விவசாயியை தெரிவு செய்தல்
விசேட விவசாய மேம்பாட்டு வாரம் தொடர்பான நிகழ்ச்சித்திட்டம்





மகாவி விளையாட்டு விழா ஒன்றுடன் இணைந்த விதத்தில் இடம்பெற்ற மர நடுகை நிகழ்ச்சித்திட்டம் மற்றும் புதிர் போட்டி





காலநிலை மாற்றத்தை அனுசரித்துச் செல்லும் நிகழ்ச்சித்திட்டம்





வீட்டுப் பொருளாதாரத்தை வலுவூட்டுவதற்கென காளான் உற்பத்தி

தேன் உற்பத்தி மற்றும் நிழல்வீடுகளை வழங்குதல்





இயற்கை உர உற்பத்தி மற்றும் பாவனையை மேம்படுத்துதல்

வீட்டுப் பொருளாதாரத்தை வலுவூட்டுவதற்கான காளான் உற்பத்தி மற்றும் தேனீ வளர்ப்புக்கென





பெட்டிகளை

வழங்குதல்

வீட்டுத் தோட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்
நிகழ்ச்சித்திட்டங்கள்



உத்தியோகத்தர்கள் / விவசாயிகள் பயிற்சி



மாங் கன்றுகளை வெட்டி சீர் செய்தல நிகழ்ச்சித்திட்டம்



பழங்களை தாக்கும் பீடையை கட்டுப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம்



## 3.3 மீன்பிடி மற்றும் கால்நடை வளங்கள் அபிவிருத்தி பிரிவு

### அறிமுகம்

மகாவலி வலயங்களில் வர்த்தக நோக்கில் செயற்பட்டு வரும் சுமார் 46,185 சிறு அளவிலான பால் பண்ணையாளர்கள் இருந்து வருகின்றனர். மகாவலி பிரதேசங்களில் காணப்படும் பசு மாடுகள் (93,575) மற்றும் எருமை மாடுகள் (15,175) என்பவற்றின் மொத்த எண்ணிக்கை 108,760 ஆகும். 2018 ஆம் ஆண்டின் போது 30.1 மில்லியன் லீற்றர் திரவப் பால் உற்பத்தி செய்யப்பட்டதுடன், நாளாந்த திரவப் பால் உற்பத்தி 82,000 லீற்றர் அளவில் இருந்து வருகின்றது. ஒரு லீற்றர் பாலுக்கான அங்கீகரிக்கப்பட்ட விலை ரூ. 70 ஆக இருந்து வந்த போதிலும், பாலில் காணப்படும் கொழுப்பு மற்றும் கொழுப்பு அல்லாத திடப்பொருட்கள் என்பவற்றின் பிரகாரம் விலைகள் மாற்றமடைகின்றன. அனைத்து மகாவலி வலயங்களையும் எடுத்து நோக்கும் பொழுது திரவப்பால் லீற்றர் ஒன்றின் சராசரி விலை ரூ. 68 ஆகும். அதன் பிரகாரம் உற்பத்தி செய்யப்பட்ட மொத்த திரவப்பால் உற்பத்தி மூலம் 2018 ஆம் ஆண்டின் போது மகாவலி பாற்பண்ணை உரிமையாளர்கள் ரூ. 2046.8 மில்லியன் தொகையை ஈட்டிக்கொண்டுள்ளனர். இவ்வாண்டின் போது 2540 மகாவலி பாற்பண்ணைகள் தொடர்பாக நேரடியாக பயன்களை வழங்குவதற்கு மீன்பிடி மற்றும் கால்நடை மேம்பாட்டு நிகழ்ச்சி திட்டத்திற்கு ஆற்றல் கிடைத்திருந்தது. 2020ஆம் ஆண்டில் வருடாந்தம் 33 மில்லியன் லீற்றர் திரவப் பால் உற்பத்தியை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. அதன் மூலம் தேசிய உற்பத்திக்கு வழங்கப்படும் பங்களிப்பு 8% தொடக்கம் 10% வரையில் அதிகரிக்கப்படும்.

பிரதான பத்து மகாவலி நீர்த்தேக்கங்களையும் உள்ளடக்கிய விதத்தில் இவ்வலயங்களில் 324 நீர்த்தேக்கங்கள் அமைந்துள்ளன. சுமார் 4860 பேர் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வருவதுடன், 2018 இல் நன்னீர் மீன் உற்பத்தி 15,580 மெற்றிக் தொன்களாக இருந்து வந்தது. நன்னீர் இறால் உற்பத்தி 125.3 தொன்களாகும். அதே போல இலக்காக கொள்ளப்பட்ட வெளிநாட்டுச் சந்தைகள் என்பவற்றுக்கு அவை வழங்கப்பட்டுள்ளன. நீர்த்தேக்கத்தின் இறங்கு துறையில் விற்பனை செய்யப்படும் நன்னீர் மீன் ஒரு கிலோவின் சராசரி விலை ரூ. 230 ஆக இருந்து வருவதுடன், நன்னீர் இறால் ஒரு கிலோவின் சராசரி விலை ரூ. 1050 ஆக இருந்து வருவதாக மகாவலி வலயங்களின் மூலம் அறிக்கையிடப்பட்டுள்ளது. அதன் மூலம் 2018 ஆம் ஆண்டின் போது மகாவலி வலயத்தைச் சேர்ந்த மீன்பிடிச் சமூகத்தினர் ரூ. 3814.9 மில்லியன் தொகையை ஈட்டிக்கொண்டுள்ளார்கள். 2020 ஆம் ஆண்டில் நன்னீர் மீன் உற்பத்தி 20,000 மெற்றிக் தொன்களாகவும், நன்னீர் இறால் உற்பத்தி 300 மெற்றிக் தொன்களாகவும் இருந்து வரும். அதன் மூலம் தேசிய நன்னீர் மீன் உற்பத்திக்கு மகாவலி வலயங்களின் மூலம் வழங்கப்படும் பங்களிப்பின் அளவை 21% தொடக்கம் 25% வரையில் அதிகரித்துக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.


வீட்டுத் தோட்டத்துடன் இணைந்த விதத்தில் கிராம கோழி வளர்ப்பில், அதாவது, முட்டை மற்றும் (இறைச்சிக்கென) பிரொயிலர் கோழி வளர்ப்பில் ஈடுபட்டு வரும் விவசாயிகளின் எண்ணிக்கை 17,940 ஆகும். வருடாந்த முட்டை உற்பத்தி 50 மில்லியன் முட்டைகள் அளவில் இருந்து வருவதுடன், கோழி இறைச்சி உற்பத்தி 17,450 மெற்றிக் தொன்களாக இருந்து வருகின்றது. கிராம கோழி முட்டை ஒன்றின் விலை 19 ரூபாவாக இருந்து வருவதுடன், சாதாரண முட்டை ஒன்று ரூ. 15.30 சராசரி விலையில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. உயிர் எடையில் கிலோ ஒன்றின் சராசரி விலை ரூ. 275 ஆக இருந்து வருவதுடன், 2018 ஆம் ஆண்டின் போது கோழிப்பண்ணைகள் உற்பத்திகள் மூலம் மகாவலி வலயத்தில் அமைந்திருக்கும் பண்ணைகள் சுமார் 5563 மில்லியன் தொகையை ஈட்டிக் கொண்டிருந்தனர்.

மகாவலி பிரதேசங்களில் அலங்கார மீன் வளர்ப்பில் 848 விவசாயிகள் ஈடுபட்டு வருவதுடன், 2018 ஆம் ஆண்டின் போது உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தைகளுக்கென ரூ. 17.7 மில்லியன் பெறுமதியான அலங்கார மீன்கள் உற்பத்தி செய்யப்பட்டன. இதன் மூலம் மகாவலி

குடியேற்றவாசிகள் ரூ. 367 மில்லியனுக்கு மேற்பட்ட வருமானத்தை ஈட்டிக் கொண்டுள்ளார்கள். 2020 இல் ரூ. 20 மில்லியன் பெறுமதியான அலங்கார மீன்களை உற்பத்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

பாடசாலை பிள்ளைகளுக்கு மத்தியில் திரவப்பால் நுகர்வை பிரபல்யப்படுத்துவதற்கென 2018ஆம் வருடத்தின் போது 15 கஷ்டப் பிரதேச பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டிருந்தன. பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களின் ஒருங்கிணைப்புடன் பாடசாலை நடத்தப்படும் வாரத்தில் 2-3 தினங்களில் பிள்ளைகளுக்கு திரவப்பாலை வழங்கி, கால்நடை வளர்ப்பு குறித்த அவர்களுடைய பாட விடயங்கள் தொடர்பான அறிவை மேம்படுத்துவதற்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களும் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

பாடசாலையிலிருந்து வெளியேறும் இளைஞர் யுவதிகள் 35 பேரை வருடாந்தம் சுய தொழிலிலாக கால்நடை வளர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவதற்கென கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டிருக்கும் விவசாய குடும்பங்களுக்கு மத்தியில் அனுப்பி வைப்பதற்கும், அவர்களுக்கு அது தொடர்பான வழிகாட்டுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.




## 3.3.2 பால் பண்ணை அபிவிருத்தி

மகாவலி பால் பண்ணைகளில் வருடாந்த பால் உற்பத்தி மற்றும் உள்ளார்ந்த உற்பத்தி ஆற்றல் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு பால் பண்ணைகள் வகைப்படுத்தப்படுகின்றன. அவற்றில் அபிவிருத்தி செய்வதற்கு பொருத்தமான பண்ணைகளை தெரிவு செய்து அத்தகைய ஒவ்வொரு பண்ணையிலும் உற்பத்தியை அடிப்படையாகக் கொண்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் உருவாக்கப்படுகின்றன. அதன் பிரகாரம் தெரிவு செய்யப்பட்ட மாதிரி பண்ணை ஒவ்வொன்றையும் சூழ பத்து பாற் பண்ணைகளை உள்ளடக்கும் விதத்தில் 2400 பாற் பண்ணைகளை இலக்காகக் கொண்டு, அபிவிருத்தி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

## 3.3.3 2018ஆம் வருடத்தின் போது அமுல் செய்யப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் பௌதீக முன்னேற்றம், பண்ணைகளின் உள்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி மற்றும் மாட்டுக் கொட்டில்களை அமைத்தல், பழுது பார்த்தல்

வலயத்தில் தெரிவு செய்யப்பட்ட பால் பண்ணைகள் தொடர்பாக மகாவலி பங்களிப்பின் கீழ் ஆகக் குறைந்தது மூன்று கறவை மாடுகள் மற்றும் இரு கன்றுகள் என்பவற்றை வழங்குவதற்கும், மாட்டுக் கொட்டில்களை வழங்குவதற்கும், பத்து மாடுகளுக்கு மேற்பட்ட மாடுகளை கொண்டிருக்கும் இனப்பெருக்க பண்ணை ஒன்றை உருவாக்குவதற்கும், புதிதாக மாட்டுக் கொட்டில்களை உருவாக்குவதற்கும், அவற்றை பழுது பார்ப்பதற்கென நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

| வ. எண் | செயற்பாடு | இலக்கு | முன்னேற்றம் |
|---|---|---|---|
| 01 | மாட்டுக்கொட்டில்களை நிர்மாணித்தல் மற்றும் பராமரித்தல் (மாடுகளுக்கான இல்லங்கள்) | 103 | 101 |
| 02 | உயிர் வாயு அலகுகளை உருவாக்குதல் (அலகுகள்) | 7 | 7 |
| 03 | புல் கற்றைகளை துண்டுகளாக வெட்டும் இயந்திரம் | 24 | 23 |
| 04 | புல் வெட்டும் இயந்திரம் | 38 | 38 |
| 05 | பால் கறக்கும் இயந்திரங்கள் | 25 | 24 |
| 06 | சைலேஜ் உருவாக்குவதற்கான பீப்பாக்கள் | 390 | 400 |
| 07 | விருத்தி செய்யப்பட்ட கறவை மாடுகளை அறிமுகம் செய்து வைத்தல் (பசுக்கள்) | 56 | 54 |
| 08 | கால்நடை இனப்பெருக்க அலகுகளை உருவாக்குதல் மற்றும் பராமரித்தல் | 35 | 34 |
| 09 | விருத்தி செய்யப்பட்ட பொலி காளைகளை அறிமுகம் செய்து வைத்தல் | 26 | 21 |
| 10 | செயற்கை சினை ஊட்டலுக்கென ஒதுக்கப்பட்டிருக்கும் பண்ணைகள் | 350 | 307 |
| 11 | புல் வளர்த்தல் (¼ ஏக்கர் அலகுகளை உருவாக்குதல்) | 126 | 116 |
| 12 | செறிவூட்டப்பட்ட உணவு மற்றும் கனிப் பொருள் உபயோகம் (கி.கி) | 2150 | 2150 |
| 13 | விலங்குகளுக்கான சிகிச்சை நிலைய நிகழ்ச்சித்திட்டங்கள் | 64 | 57 |
| 14 | விலங்குகள் காப்புறுதி செய்யப்பட்டிருக்கும் பண்ணைகள் | 55 | 49 |
| 15 | புதிய பால் சேகரிப்பு நிலையங்களை ஸ்தாபித்தல் | 3 | 2 |
| 16 | பால் போக்குவரத்துக்கென பால் பாத்திரங்களை வழங்குதல் (எண்ணிக்கை) | 54 | 49 |
| 17 | பாடசாலை பிள்ளைகளுக்கு விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் | 15 | 15 |
| 18 | விவசாயிகள் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் | 60 | 65 |
| 19 | வெளிக்கள தின நிகழ்ச்சித்திட்டங்கள் | 10 | 6 |
| 20 | பயன் பெற்ற மொத்த விவசாயிகளின் எண்ணிக்கை | **2400** | **2320** |

பாற் பண்ணை சார்ந்த பால் உற்பத்தியை அதிகரித்தல், தூய்மையான பால் உற்பத்தியை மேற்கொள்ளல், புதிய தொழில்நுட்பத்துடன் இணைந்த விதத்தில் விவசாயிகளுக்கு மத்தியில் பாற் பண்ணைத் தொழிலை பிரபல்யப்படுத்துதல் மற்றும் அத்தொழில் துறையில் இளைஞர்களை ஈடுபடுத்துதல் என்பவற்றை கருத்தில் கொண்டு 50% மகாவலி பங்களிப்புடன் மாதிரி பால் பண்ணைகளுக்காக நடமாடும் பால் கறக்கும் இயந்திரங்கள் அறிமுகம் செய்யப்பட்டு வருகின்றன.





பால் கறக்கும் இயந்திரங்களின் பாவனையை ஊக்குவித்தல்

பால் சேகரிப்பு நிலையங்களை ஸ்தாபித்தல்

### 3.3.4 கோழி வளர்ப்பை மேம்படுத்துதல்

குடும்ப வருமானத்திற்கு மேலதிக வருமானத்தை சேர்த்துக் கொள்ளல் மற்றும் குடும்பத்தின் போஷணைக்கென உயர் பங்களிப்பை வழங்குதல், அதே போல, குறைந்த செலவில் கூடிய பயனை பெற்றுக்கொள்ளல் என்பவற்றை அடிப்படைக் குறிக்கோளாகக் கொண்டு வீட்டுத் தோட்டங்களில் நாட்டுக் கோழி வளர்ப்பினை விரிவாக்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த வருட இறுதியில் மகாவலி வலயங்களில் வீட்டுத் தோட்டங்களில் 16,940 நாட்டுக் கோழிப் பண்ணைகள் செயற்பட்டு வந்தன.

**அமுல் செய்யப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் - 2018**



| வ. எண் | செயற்பாடு | இலக்கு | முன்னேற்றம் | பயனாளிகள் |
|---|---|---|---|---|
| 01 | கோழிக் கூடுகளை அமைத்தல் | 195 | 192 | 192 |
| 02 | கோழிக் குஞ்சுகள் | 43800 | 33523 | 1196 |
| 03 | விலங்கு சிகிச்சை நிலையங்கள் | 35 | 29 | 310 |
| 04 | பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் | 40 | 35 | 420 |
| 05 | இனப் பெருக்கப் பண்ணை | 20 | 12 | 12 |
| | மொத்தம் | | | 2130 |



### 3.3.5 ஆடு வளர்ப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

**2018ஆம் ஆண்டின் போது அமுல் செய்யப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்**

| வ. எண் | செயற்பாடு | அலகு | இலக்கு | முன்னேற்றம் | பயனாளிகள் |
|---|---|---|---|---|---|
| 01 | ஆட்டு கொட்டில்களை அமைத்தல் | எண்ணிக்கை | 44 | 42 | 42 |
| 02 | இனப் பெருக்கத்திற்கென ஆட்டுக் குட்டிகளை வழங்குதல் | எண்ணிக்கை | 44 | 45 | 15 |
| 03 | விலங்குச் சிகிச்சை நிலைய நிகழ்ச்சித்திட்டங்கள் | நிகழ்ச்சித்திட்டம் | 20 | 17 | 136 |
| 04 | பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் | நிகழ்ச்சித்திட்டம் | 24 | 20 | 240 |
| | மொத்தம் | | | | 433 |

### 3.3.6 நன்னீர் மீன்பிடி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

மகாவலி வலயங்களில பரவலாக் 324 நீர்நிலைகள் காணப்படுகின்றன. அவற்றில் 11 முதன்மை நீர்த்தேக்கங்கள் ஆகும். நீர்த்தேக்கங்கள் நீர் வாழ் உயிரினங்களின் உற்பத்திக்கென பயன்படுத்தப்பட்டு வருகின்றன. விவசாயத்திற்கு மேலதிகமாக 15,580 மொற்றிக் தொன் நன்னீர் மீன் உற்பத்தியும், 125.3 மெ.தொ. நன்னீர் இறால் உற்பத்தியும் மேற்கொள்ளப்பட்டு, தேசிய நன்னீர் மீன் உற்பத்திக்கு 21% பங்களிப்பு வழங்கப்பட்டுள்ளது.








### 3.3.7 அலங்கார மீன் வளர்ப்பு மேம்பாடு

**2018ஆம் ஆண்டின் போது அமுல் செய்யப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள்**

| வ. எண | செயற்பாடு | இலக்கு | முன்னேற்றம் |
|---|---|---|---|
| 01 | சேற்றுக் குட்டைகளை உருவாக்குதல் | 46 | 44 |
| 02 | மீன் தனிமைப்படுத்தல் தொட்டிகள் | 29 | 27 |
| 03 | மீன் இனப்பெருக்க அலகுகளை உருவாக்குதல் | 28 | 22 |
| 04 | நோய்த் தடுப்பு சிகிச்சை நிலைய நிகழ்ச்சித்திட்டங்கள் | 20 | 12 |
| 05 | பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் | 50 | 46 |
| 06 | பயனாளிகளான விவசாயிகள் | **450** | **380** |



### 3.3.8 வறிய குடும்பங்களை விருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டம்

அபிவிருத்திக்கென குறை வருமான குடும்பங்களை தெரிவு செய்யும் பொழுது …

- மகாவலி குடியேற்றவாசிகள் / காணிகளை பெற்றுக்கொண்டவர்கள்
- சராசரி மாதாந்த வருமானம் ரூ. 30,000 இற்கு கீழ்
- விசேட தேவைகளை கொண்ட உறுப்பினர்களைக் கொண்டிருக்கும் குடும்பங்கள்
- குறைந்தளவில் கவனத்தை பெற்றுவரும் பிரதேசங்கள் போன்ற விடயங்கள் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டது.

<table>
<tr><th rowspan="2">செயற்பாடு</th><th colspan="3">வறிய குடும்பங்கள்</th><th rowspan="2">செயற்பாடு</th></tr>
<tr><th>இலக்கு</th><th>தெரிவு செய்யப்பட்டவை</th><th>முன்னேற்றம்</th></tr>
<tr><td>கால் நடை வளர்ப்பு</td><td>240</td><td>240</td><td>40</td><td rowspan="6">• மாட்டுக் கொட்டில்கள் 45<br>• இனப் பெருக்க அலகுகள் - 08<br>• கறவை மாடுகள் -10<br>• கோழிக் குஞ்சுகளை வழங்குல் - 18,000<br>• கோழிக் கூடுகள் 85<br>• 1,000,000 மீன் குஞ்சுகள்<br>• நன்னீர், இறால் 100,000</td></tr>
<tr><td>கோழி வளர்ப்பு</td><td>580</td><td>570</td><td>25</td></tr>
<tr><td>ஆடு வளர்ப்பு</td><td>90</td><td>90</td><td>10</td></tr>
<tr><td>நன்னீர் மீன் வளர்ப்பு</td><td>200</td><td>200</td><td>50</td></tr>
<tr><td>அலங்கார மீன் வளர்ப்பு</td><td>140</td><td>131</td><td>18</td></tr>
<tr><td>மொத்தம்</td><td>1250</td><td>1231</td><td>143</td></tr>
</table>

# 3.4 நிறுவன அபிவிருத்திப் பிரிவு

## நிறுவன அபிவிருத்திப் பிரிவின் வகிபங்கு

### 3.4.1 சமூக அபிவிருத்தி

மகாவலி வலங்களில் மதுப் பாவனையற்ற, வன்முறை இல்லாத கெட்ட பழக்கங்கள் இல்லாத ஒழுக்கத்துடன் கூடிய ஆரோக்கியமான விவசாயிகள் சமூகமொன்றை உருவாக்குவதற்கு வழிகாட்டுவது சமூக அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் அடிப்படை குறிக்கோளாகும்.

இதன் கீழ்,

- மதுப் பழக்கத்தை தடுப்பதற்கென கிராமிய தொண்டர் தலைவர், தலைவிகளை பயிற்றுவித்தல் மற்றும் பாடசாலை பிள்ளைகள், சமூகத்தினர் ஆகியோருக்கு விழிப்புணர்வூட்டுதல்.
- சிறுவர் துஷ்பிரயோகம், பெண்களுக்கு எதிரான வன்முறை, வீட்டு வன்முறை, இள வயதுத் திருமணம் மற்றும் கருத்தரித்தல் என்பவற்றை தடுத்தல் மற்றும் விழிப்புணர்வூட்டல்.
- தொற்றாத நோய்கள் தொடர்பான வழிப்புணர்வூட்டல் மற்றும் சுகாதார மருத்துவ முகாம்களை நடத்துதல் (குறிப்பாக தீவிரமாக பரவி வரும் சிறுநீரக நோயிலிருந்து பாதுகாப்பு பெறுவது தொடர்பாக விழிப்புணர்வூட்டுதல் மற்றும் அடையாளம் காணப்பட்டிருக்கும் நோயாளிகளை சிகிச்சைக்கென அனுப்பி வைத்தல்).
- கல்விக் கருத்தரங்குகளை நடாத்துதல் (ஐந்தாம் ஆண்டு புலமை பரிசில் பரீட்சை, க.பொ.த சாதாரண தரப் பரீட்சை மற்றும் க.பொ.த உயர்தரப் பரீட்சை என்பவற்றுக்கென)
- மகாவலி மன்ற புலமைப் பரிசில்களை வழங்குதல் (மிகவும் வறிய பெற்றோரைக் கொண்டிருக்கும், உடலியலாமையுடன் கூடிய பெற்றோரைக் கொண்டிருக்கும் அல்லது பெற்றோர் மரணமடைந்திருக்கும்) கல்வி பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்திருக்கும் பிள்ளைகளுக்கு இந்தப் புலமை பரிசில்கள் வழங்கப்படுகின்றன.

2018 ஆம் ஆண்டின் போது சமூக அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பாக இலக்கு நிர்ணயிக்கப்பட்ட 630 நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டன. அவற்றில் 531 நிகழ்ச்சித்திட்டங்கள் முன்னேற்றத்தை சாதித்துக் கொண்டிருப்பதுடன், நிதிசார் இலக்கு 24.2 மில்லியன் ஆகும். நிதிசார் முன்னேற்றம் ரூ. 23.9 மில்லியன் ஆகும்.

### 3.4.2 குடியேற்றவாசிகளின் ஆற்றல்கள் மற்றும் தொழில் பயிற்சி

- மகாவலி குடியேற்றவாசிகளின் பொருளாதார மட்டத்தை ரூ. 30,000.00 க்கும் மேல் உயர்த்துவதனை நோக்கமாகக் கொண்டு தொழில் பயிற்சிகளை வழங்குவதும், அதன் ஊடாக அவர்களுக்கு தொழில்களை பெற்றுக்கொடுப்பதும் இதன் அடிப்படை நோக்கமாகும்.

- விவசாயிகள் அமைப்புக்களைச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கு கணக்குப்பதிவு பயிற்சியை வழங்குதல், மகாவலி வலயங்களில் உயர்தரப் பிரிவில் சித்தியடைந்திருக்கும் இளைஞர், யுவதிகளுக்கு பொல்கொல்ல தேசிய கல்வி கூட்டுறவு அபிவிருத்தி நிறுவனத்தின் கீழ் கணக்காய்வு தொடர்பான பயிற்சியை பெற்றுக்கொடுத்து,

விவசாயிகள் அமைப்புக்களின் கணக்காய்வுகளை மேற்கொள்வதற்கென அவர்களுக்கு அதிகாரத்தை அளித்தல் மற்றும் வலயத்தை சேர்ந்த விவசாயிகள் அமைப்புக்களை வருடாந்தம் அவர்களின் மூலம் கணக்காய்வு செய்வித்தல்.

- 2018ஆம் ஆண்டின் போது இதன் கீழ் 136 நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துவதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்ததுடன், அதில் சாதித்துக் கொள்ளப்பட்ட முன்னேற்றம் 136 ஆக இருந்து வருவதுடன், 10.8 மில்லியன் நிதிசார் இலக்கு சாதித்துக் கொள்ளப்பட்டிருந்தது. மேலும், வறுமை ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2018 ஆம் ஆண்டில் ரூ. 30,000 மேல் மாத வருமானம் பெறும் விதத்தில் 1171 குடும்பங்களுக்கு தொழில் வாய்ப்புக்கள் வழங்கப்பட்டன.

### 3.4.3 பெண்கள் அபிவிருத்தி

- சேமிப்புக்களை ஊக்குவித்தல் மற்றும் வீட்டு நிதி முகாமைத்துவ விடயங்கள் என்பவற்றுக்கு வழிகாட்டுதல் இதன் முக்கியமான நோக்கமாகும்.
- மகாவலி வலயங்களில் வசித்து வரும் பெண்களை வலுவூட்டுவதற்கென இதன் கீழ் பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.
- பெண்கள் வீடுகளில் இருந்தவாறே வருமானத்தை ஈட்டிக் கொள்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இயலுமையை பெற்றுக்கொடுக்கும் விதத்தில் அவர்களுக்கு சுய தொழில்கள் மற்றும் பல்வேறு விதமான தொழில் பயிற்சிகள் என்பன வழங்கப்பட்டு வருகின்றன. தொழில்களுக்குத் தேவையான உபகரணங்களும் இதன் கீழ் வழங்கப்படுகின்றன.
- 2018ஆம் வருடத்தின் போது இது தொடர்பாக முன்னெடுக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களின் இலக்கு 62 ஆக இருந்து வந்ததுடன், முன்னேற்றம் 53 நிகழ்ச்சித்திட்டங்களாக காணப்பட்டது. நிதிசார் செலவு 3.8 மில்லியன் ஆகும்.

### 3.4.4 விவசாயிகள் அமைப்புக்களை மேம்படுத்துதல்

விவசாயிகள் அமைப்புக்களுக்கென தேர்தல்களை நடத்துதல் மற்றும் அந்த அமைப்புகள் தொடர்பான சட்டங்கள், விதிகள், ஒழுங்குவிதிகள் மற்றும் நீர் முகாமைத்துவம் போன்ற விடயங்கள் தொடர்பாக விவசாயிகளுக்கு விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்படுகின்றன. அதே போல விவசாயிகளின் மனப்பாங்குகளை வளர்ப்பதற்கும், ஆற்றல்களை அபிவிருத்தி செய்வதற்கும் பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும், முகாமைத்துவ கமிட்டிகளின் கீழ் விவசாயிகள் பிரச்சினைகளுக்கென தீர்வுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

### 3.4.5 சமூகப் பங்கேற்புடன் கூடிய நீர்ப்பாசன கட்டமைப்பு முகாமைத்துவம்

- சம்பந்தப்பட்ட நீர்ப்பாசனக் கட்டமைப்புக்களின் பராமரிப்பு மற்றும் இயக்குதல் செயற்பாடுகளை செயல்திறன் மிக்க விதத்தில் நடத்துவதன் மூலம் வயல் கால்வாய்களை புனரமைப்புச் செய்யும் சமூகப் பங்கேற்பு முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டம்.

- புனரமைப்புச் செய்ய வேண்டிய நிலையில் இருந்து வரும் வயல் கால்வாய்களை சமூகத்தின் பங்கேற்புடனும், அவர்களுடைய உழைப்பு பங்கேற்புடனும் புனரமைத்தல். இது தொடர்பாக மூலப்பொருட்களுக்கான செலவுகள் மட்டும் வழங்கப்படும்.

(செயல்திறன் மிக்க நீர் பாவனைக்கென விவசாயிகளை பரிச்சயப்படுத்தல் மற்றும் நீர் முகாமைத்துவம் தொடர்பான எண்ணக்கருவில் நடைமுறை ரீதியில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்துதல் என்பன இதன் கீழ் இடம்பெறுகின்றன. மேலும், பாரிய செலவுகளை எடுத்துவரக் கூடிய இந்தச் செயற்பாடு சமூகத்தினரின் உழைப்பு பங்களிப்பின் மூலம் பயனுள்ள விதத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது).

2018ஆம் ஆண்டின் போது இந்த நிகழ்ச்சித்திட்டங்கள் மகாவலி B, C, H, மொறகஹகந்த, L, வளவே மற்றும் ஹுருலுவெவ வலயங்களில் செயற்படுத்தப்பட்டது. ரூ. ஐந்து இலட்சம் உச்ச மட்டத் தொகைக்கு அமைவாக கால்வாய்களை புனரமைப்புச் செய்வதற்கென நிதிகள் வழங்கப்படுவதுடன், அவற்றின் முடிவுப் பெறுமதி ரூ. 15 இலட்சம் அளவில் இருந்து வர முடியும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம் 45.871 கிலோமீற்றர் நீளமான கால்வாய் தொகுதிகள் ரூ. 13.446 மில்லியன் சேமிப்புத் தொகையுடன் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

# 3.5 வணிக அபிவிருத்தி பிரிவு

## 3.5.1 வணிக அபிவிருத்திப் பிரிவின் வகிபங்கு

- விலங்கு வளர்ப்பு, அலங்கார மீன் வளர்ப்பு, தெங்குச் செய்கை, ஏனைய பயிர்களின் உற்பத்தி மற்றும் பழச்செய்கை போன்ற முதலீட்டுக் கருத்திட்டங்களுக்கென காணிகளை வழங்கி, குத்தகை வருமானங்களை பெற்றுக்கொள்ளல்.
- சுற்றாடலுக்கு உசிதமான சுற்றுலா வாய்ப்புக்களை விரிவாக்கும் பொருட்டு நீர்த்தேக்கங்களில் சுற்றுலா படகுச் சேவைகளை நடத்துவதற்கு அனுமதி வழங்கி, வருடாந்த குத்தகைத் தொகையை பெற்றுக்கொள்ளல்.
- மகாவலி வலயங்களைச் சேர்ந்த பிரதேசங்களில் மிகவும் கவர்ச்சிகரமான இடங்களில் அமைந்திருக்கும் சுற்றுலா விடுதிகளை நவீன வசதிகளுடன் புதுப்பித்து, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பணிகளுக்கு வழங்குவதன் மூலம் வருமானத்தை உருவாக்கிக் கொள்ளல்.
- சூரிய ஒளி வலு, உயிரியல் திணிவு மின்சக்தி, நீர் மின்சக்தி போன்ற மின்சார கருத்திட்டங்களுக்கு வழங்கப்பட்டிருக்கும் காணிகளில் குத்தகை வருமானமீட்டுதல் / மகாவலி அதிகார சபையுடன் கூட்டுத் தொழில்களை ஆரம்பிப்பதன் மூலம் இலாபமீட்டுதல்.
- பிராந்திய பொருளாதார அபிவிருத்திக்கு நேரடியாக பங்களிப்புச் செய்யும் கருத்திட்டங்களுக்கு தேவையான நீரை வழங்குவதன் மூலம் வருமானம் ஈட்டுதல்.
- நீர்த்தேக்கங்களின் மேல் மிதக்கும் சூரிய ஒளித்தொகுப்பு கருத்திட்டங்களுக்கென மகாவலி நீத்தேக்கங்களின் மேல் பகுதியில் முதலீட்டு வாய்ப்புக்களை வழங்குதல்.
- உள்நாட்டு சீனித் தேவையை இந்நாட்டிலேயே உற்பத்தி செய்வதற்கென சீனித் தொழிற்சாலைகள் போன்ற கருத்திட்டங்களுக்கு காணிகளை வழங்குதல் மற்றும் பிரதேசத்தை சேர்ந்த விவசாயிகளுக்கு மத்தியில் காணிகளை பகிர்ந்தளிப்பதன் மூலம் குத்தகை ஆதாயத்தையும், அதே போல ஆக்க உரிமைத் தொகையையும் பெற்றுக் கொள்ளல்.
- கருங்கல் / கனிப்பொருட்கள் (டொலமைட், அப்படைட், மைக்கா, சுண்ணக்கல்) என்பவற்றினுடன் சம்பந்தப்பட்ட தொழிற்சாலைகளுக்கென வழங்கப்படும் காணிகளிலிருந்து அகழப்படும் கனிப்பொருட்கள் தொடர்பாக கியுப் அளவின் அடிப்படையில் குத்தகை வருமானத்தை அறவிடுதல்.
- கைத்தொழில் பூங்காக்களை நடத்துவதன் மூலம் பிராந்திய மட்டத்தில் பொருளாதாரத்தை உயர்த்துதல்.
- திலாப்பியா போன்ற நன்னீர் மீன்களை நீர்த்தேக்கங்களில் வலைக்கூடுகளில் வளர்க்கும் கருத்திட்டங்களின் மூலம் வெளிநாட்டுச் செலாவணியை ஈட்டுவதற்கென சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில் முயற்சியாளர்களை ஊக்குவித்தல்.
- சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் பொருட்டு சலுகை வட்டி விகிதங்களின் கீழ் அரச வங்கிகளுடன் இணைந்து கடன்களை வழங்குதல்.

- விவசாய மற்றும் கால்நடை கருத்திட்டங்களின் மூலம் அன்னியச் செலவாணியை ஈட்டிக் கொள்வதற்கென சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில் முயற்சியாளர்களை ஊக்குவித்தல்
- சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிப்பதற்கென சலுகை வட்டி விகதங்களில் அரச வங்கிகளுடன் இணைந்து கடன்களை வழங்குதல்
- பாரம்பரிய உள்ளூர் உணவு வகைகளை பிரபல்யப்படுத்துதல் மற்றும் பெண்களின் தொழில்முனைவினை அபிவிருத்தி செய்தல் என்பவற்றுக்கென மகாவலி ஹெல பொஜுன்ஹல (உள்நாட்டு உணவகங்களை) ஆரம்பித்தல்
- மகாவலி வலயங்களைச் சேர்ந்த இளைஞர் யுவதிகளுக்கு அங்கீகரிக்கப்பட்ட தொழில் பயிற்சி சான்றிதழ்களை பெற்றுக்கொடுப்பதன் மூலம் தொழில் வாய்ப்புக்களுக்கு அவர்களை நெறிப்படுத்துதல்

### 3.5.2 வணிக அபிவிருத்திப் பிரிவின் குறிக்கோள்கள்

01. அதிகார சபையின் வருடாந்த வருமானத்தை அதிகரித்தல்
02. மகாவலி பிரதேசங்களில் வசித்து வரும் இளைஞர் யுவதிகளுக்கு தொழில் வாய்ப்புக்களை உருவாக்குதல்
03. முதலீடுகளுக்கு ஊடாக பிராந்திய அபிவிருத்தியை எடுத்து வருதல்
04. சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில் முயற்சியாளர்களை உருவாக்குதல்
05. சுயதொழில் பயிற்சியின் மூலம் சிறு அளவிலான உற்பத்தித் துறைக்கு பங்களிப்பை வழங்குதல்
06. மூலதனத் தேவைகளை நிறைவேற்றி வைப்பதற்குத் தேவையான தலையீடுகளை மேற்கொள்ளல்.
07. சந்தை ஒருங்கிணைப்பின் மூலம் மகாவலி பிரதேசங்களின் உற்பத்திக்கு உயர் பெறுமதியை பெற்றுக்கொடுத்தல்
08. தொழில் முனைவு ஆற்றலை வளர்தெடுத்தல் மற்றும் தொழில்நுட்ப நிபுணத்துவ அறிவை வழங்குதல்
09. சேதிய உற்பத்திக்கு பங்களிப்பை வழங்குதல் மற்றும் ஏற்றுமதி மேம்பாடு
10. வணிக ஆலோசனைகள் / வணிகத் திட்டங்களைத் தயாரிப்பதற்கு உதவுதல் மற்றும் மதிப்பீடு செய்தல்
11. தேசிய மின் உற்பத்திக்கென புதுப்பிக்கக்கூடிய மின் உற்பத்தி திட்டங்களுக்கூடாக பங்களிப்புச் செய்தல்

### 3.5.3 2018 ஆம் ஆண்டின் போது வணிக அபிவிருத்திப் பிரிவினால் அமுல் செய்யப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்

- இலங்கை மகாவலி அதிகார சபைக்குச் சொந்தமான சுற்றுலா விடுதிகளை புதுப்பிக்கும் கருத்திட்டம்.
- ‘‘மொறஹகந்த அத்வெல’’ கடன் திட்டம் மற்றும் ‘‘மகாவலி சவிய’’ கடன் திட்டம்
- ‘‘மகாவலி ஹெல பொஜுன்ஹல’’ (உள்நாட்டு உணவக) கருத்திட்டம்.

- மகாவலி நீர்த்தேக்கங்களில்/ குளங்களில் சுற்றடாலுக்கு உசிதமான படகுச் சேவைகளை ஆரம்பித்தல்.
- மகாவலி வலயங்களில் வசித்து வரும் வேலையற்ற இளைஞர் யுவதிகளுக்கென தொழில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடத்தி, புலமைப் பரிசில்களை வழங்கும் நிகழ்ச்சித்திட்டம்
- சிறிய மற்றும் நடுத்த அளவு தொழில் முயற்சியாளர்களை மேம்படுத்துதல், பங்களிப்பினை வழங்குதல் மற்றும் சுய தொழில் பயிற்சிக்குத் தேவையான தொழில்நுட்ப அறிவினை வழங்குதல்
- புதிய தொழில் முயற்சியாளர்களை அடையாளம் காணுதல் மற்றும் பயிற்சிக்கென தொழில் முனைவு அபிவிருத்தித் திட்டங்களை அமுல் செய்தல்.
- ஆற்றல் அபிவிருத்தி மற்றும் தொழில்நுட்ப பரிமாற்ற நிகழ்ச்சித்திட்டங்களை அமுல் செய்தல்
- முதலீட்டு மேம்பாட்டு மற்றும் சந்தை மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்களை அமுல் செய்தல்

### 3.5.4 மகாவலி அதிகார சபைக்குச் சொந்தமான சுற்றுலா விடுதிகளை நவீன மயமாக்கும் கருத்திட்டம்

| வரிச எண் | வலயம் | சுற்றுலா விடுதியின் பெயர் | | சுற்றுலா விடுதி எண்ணிக்கை | அருகிலுள்ள நகரம் | அறைகள் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| 1 | B | றுகுணுகெத்த | | 1 | வெலிகந்த | 10 |
| | | பிம்புறத்தாவ | | 2 | அறலகண்வில | 4 |
| 2 | C | தெஹியத்தகண்டிய i | | 3 | தெஹியத்த கண்டிய | 10 |
| | | தெஹியத்தகண்டிய ii | | 4 | தெஹியத்த கண்டிய | 5 |
| | | தெஹியத்தகண்டிய iii | | 5 | தெஹியத்த கண்டிய | 3 |
| | | கிராந்துருகோட்டே பயிற்சி நிலையம் | VIP | 6 | கிராந்துரு கோட்டே | 1 |
| | | | சாதாரண தரம் | | கிராந்துரு கோட்டே | 3 |
| | | | A தரம் | | கிராந்துருகோட்டே | 20 |
| | | | B தரம் | 7 | கிராந்துருகோட்டே | 8 |
| | | உள்ஹிட்டிய / ரத்கிந்த | I | | மெதகம | 2 |
| | | | II | | மெதகம | 3 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 3 | D | சூரியபுர | | 8 | கந்தளாய் | 6 |
| | | பிசோபுர (புதியது) | | 9 | மெதிரிகிரிய | 6 |
| 4 | G | மொறகஹகந்த விசேட கருத்திட்டம் | | 10 | மொறகஹகந்த | 4 |
| | | பக்கமுன | | 11 | பக்கமுன | 6 |
| 5 | H | கலாவெவ | VIP | 12 | கலாவெவ | 2 |
| | | | சாதாரணம் | | கலாவெவ | 3 |
| | | தம்புத்தேகம | | 13 | தம்புத்தேகம | 4 |
| | | நொச்சியாகம | | 14 | நொச்சியாகம | 6 |
| | | நீராவிய | | 15 | தம்புத்தேகம | 4 |
| 6 | L | வெலிஓயா | | 16 | சம்பந்நுவர | 4 |
| 7 | விக்டோரியா | 222 வதிவிடக் கருத்திட்ட அலுவலக சுற்றுலா விடுதி | | 17 | திகன | 4 |
| | | நுவரெலியா (புதிய நிர்மாணம்) | | 18 | நுவரெலியா | 6 |
| | | 119 கொத்மலை | 2 | 19 | கொத்மலை | 3 |
| | | பூவெலிகட | | 20 | கண்டி | 3 |
| **வரிசை எண்** | **வலயம்** | **சுற்றுலா விடுதியின் பெயர்** | | **சுற்றுலா விடுதி** | **அருகிலுள்ள நகரம்** | **அறைகள் எண்ணிக்கை** |
| 8 | வளவே | உடவளவே | | 21 | எம்பிலிபிட்டிய | 4 |
| | | எம்பிலிபிட்டிய | | 22 | எம்பிலிபிட்டிய | 8 |
| | | மயூரபுர | | 23 | சூரியவெவ | 5 |
| 9 | றம்பக்கண் ஓயா | மகா ஓயா | | 24 | மகாஓயா | 4 |
| | | பதுளை | | 25 | பதுளை | 6 |
| 10 | முதன்மை வேலைகள் / பராமரிப்பு நிர்வாகப் பிரிவு | பொல்கொல்ல | | 26 | கண்டி | 4 |
| | | 119 கொத்மலை | 1 | 27 | கொத்மலை | 4 |
| | | றந்தெனிகல | VIP 1 | 28 | மஹியங்கனை | 3 |
| | | போவதன்ன | | 29 | நாஉல | 3 |
| | | மாதுறுஓயா | | 30 | அரலகண்வில | 4 |
| 11 | றத்மலான | றத்மலான | | 31 | றத்மலான | 8 |


03.04.2017 ஆந் திகதி தொடக்கம் அமுலுக்கு வரும் விதத்தில் அதிகார சபைக்குச் சொந்தமான அனைத்து சுற்றுலா விடுதிகளையும் வருமான உருவாக்க கருத்திட்டம் ஒன்றாக மாற்றியமைப்பதற்கென அவை (வணிக அபிவிருத்தி) பணிப்பாளரின் கீழ் எடுத்து வரப்பட்டுள்ளன. வணிக அபிவிருத்தி பிரவில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் இயக்குதல் அலகு (வணிக அபிவிருத்தி) உதவிப் பணிப்பாளரின் கீழ் செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

### 3.5.5 நவீன மயமாக்கப்பட்ட சுற்றுலா விடுதிகள் - 2018

உள்ஹிட்டிய றந்கித சுற்றுலா விடுதி முழுமையாக புதுப்பிக்கப்பட்டுள்ளது. நொச்சியாகம சுற்றுலா விடுதியின் கட்டடங்கள் பழுபார்க்கப்பட்டுள்ளன. கொத்மலை, பக்கமுன சுற்றுலா விடுதிகளின் கட்டடங்கள் பழுது பார்க்கப்பட்டதுடன் புதிய தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் என்பன வழங்கப்பட்டுள்ளன. விக்டோரியா, தம்புத்தேகம, றந்தெனிகல, பூவெலிகட மற்றும் எம்பிலிபிட்டிய ஆகிய சுற்றுலா விடுதிகள் தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் பொருத்தப்பட்டு நவீனமயமாக்கப்பட்டுள்ளன.








களாவெவ, பக்கமுன, நுவரெலியா மற்றும் நொச்சியாகம ஆகிய சுற்றுலா விடுதிகளை நவீனமயமாக்கும் வேலைகள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன.

### 3.5.6 2018ஆம் ஆண்டின் சுற்றுலா விடுதிகளின் வருமானம் உருவாக்கம்

2017 ஆம் வருடத்தின் போது சுற்றுலா விடுதிகள் வருமான உருவாக்க கருத்திட்டம் ஒன்றாக மாற்றியமைக்கப்பட்டிருந்ததுடன், 2016ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது வருமான உருவாக்கத்தில் சார்பு ரீதியில் 3.6 மில்லியன் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

| வருடம் | வருமானம் (ரூ) |
|---|---|
| 2016 | 1,661,000.00 |
| 2017 | 5,260,450.00 |
| 2018 | 11,145,605.00 |




### 3.5.7 சுற்றுலா விடுதிகள் தொடர்பான தற்போதைய நிலைமைகள்

- இணையத்துக்கு ஊடாக ஒதுக்கிக் கொள்ளக்கூடிய வசதி வழங்கப்பட்டிருக்கும் சுற்றுலா விடுதிகளின் எண்ணிக்கை - 13
- இணை வசதிகளுக்கு ஊடாக ஒதுக்கிக் கொள்ளும் வசதிகள் இல்லாத சுற்றுலா விடுதிகளின் எண்ணிக்கை - 10
- நிர்மாண வேலைகள் இடம்பெற்று வரும் சுற்றுலா விடுதிகளின் எண்ணிக்கை -03
- 2018ஆம் ஆண்டின் போது வருமான உருவாக்கம் -ரூ.11.4 மில்லியன்
- இணைய வசதிகளின் ஊடாக ஈட்டப்பட்டுள்ள வருமானம் - ரூ.3.45 மில்லியன்
- இணைய வசதி இல்லாமல் ஈட்டப்பட்டிருக்கும் வருமானம் - ரூ.7.85 மில்லியன்

### 3.5.8 “மகாவலி சவிய” கடன் திட்டம் (2018 டிசம்பர் வரையில்)

2018ஆம் ஆண்டின் போது மகாவலி அதிகார சபை பிரதேச அபிவிருத்தி வங்கியுடன் இணைந்து 225 தொழில்முயற்சியாளர்களுக்கு ரூ. 39.67 மில்லியன் கடன் தொகைகளை வழங்கியிருந்தது.

### 3.5.9 “மொறகஹகந்த அத்வெல” கடன் திட்டம்

மொறகஹகந்த வலயத்தில் மீளக் குடியேற்றப்பட்ட குடியேற்றவாசிகளுக்கு வர்த்தக நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கென 2018ஆம் ஆண்டின் போது 11 தொழில் முயற்சியாளர்களுக்கு ரூ. 3.1 மில்லியன் பெறுமதியான கடன் வசதிகள் வழங்கப்பட்டன.

### 3.5.10 மகாவலி ஹெல பொஜுன்ஹல (உள்நாட்டு உணவக) கருத்திட்டம்

பாரம்பரிய உள்நாட்டு உணவு வகைகளை பிரபல்யப்படுத்துதல் மற்றும் பெண்களின் தொழில் முனைவுத் திறன்களை விருத்தி செய்வதன் மூலம் குடும்பங்களின் பொருளாதார நிலைமையை விருத்தி செய்தல், உள்நாட்டு உணவுப் பொருட்களை நுகர்வோருக்கு குறைந்த விலைகளில் வழங்குதல் மற்றும் வலய ரீதியில் நேரடியான மற்றும் மறைமுகமான தொழில் வாய்ப்புக்களை உருவாக்குதல் என்பவற்றை அடிப்படைக் குறிக்கோளாகக் கொண்டு ஒரு புதிய கருத்திட்டமாக மகாவலி ஹெல பொஜுன்ஹல கருத்திட்டம் B மற்றும் C ஆகிய வலயங்களில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. 2018 ஆகஸ்ட் மாதம் 02ஆம் திகதி B வயலத்தின் மனம்பிட்டிய ஹெல பொஜுன்ஹல உணவகம் திறந்து வைக்கப்பட்டதனை அடுத்து, இப்பொழுது இரு உணவகங்கள் செயற்பட்டு வருகின்றன.

இந்த ஹெல பொஜுன்ஹல உணவகங்கள் ஸ்தாபிக்கப்பட்டதன் மூலம் நச்சுத் தன்மையற்ற உணவுகளை பொதுமக்களுக்கு வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த உணவகங்களின் மூலம் B மற்றும் C வலயங்களில் 40 நேரடி மற்றும் மறைமுக தொழில் வாய்ப்புக்கள் உருவாக்கப்பட்டுள்ளன.





## 3.5.11 மகாவலி நீர்த்தேக்கங்களில் படகுச் சேவைகளை ஆரம்பித்தல்

| வரிசை எண் | நீர்த்தேக்கம் நதி | முதலீட்டாளர்களின் விபரம் (முகவரி) | குத்தகை காலம் | ஆரம்ப வைப்புத் தொகை ரூ. | வருடாந்த குத்தகை தொகை ரூ. |
|---|---|---|---|---|---|
| 01 | விக்டோரியா | விக்டோரியா லெஷர் (பிரைவட்) லிமிடட். 339/6, நீர்கொழும்பு வீதி, பேலியகொட | 2016.01.06 தொடக்கம் 2021.01.05 வரை | 100,000.00 | முதல் 2 வருடங்கள் தொடர்பாக ரூ. 75,000 வீதம் அதன் பின்னர் 5% வருடாந்த அதிகரிப்பு |
| 02 | பொல்கொல்ல | மகாவலி ரீச் ஹோட்டல் 35, பீ.பீ.ஏ. வீரகோன் மாவத்த, கண்டி (மோட்டார் படகு) | 2016.02.09 தொடக்கம் 2019.02.08 வரை | 100,000.00 | 181,912.50 |
| | | சினமன் சிட்டாடல் இல. 117, சேர் சித்தம்பலம் கார்டினர் மாவத்தை, கொழும்பு 02 | 2016.02.09 தொடக்கம் 2019.02.08 வரை | 100,000.00 | 181,912.50 |
| | | மகாவலி ரீச் ஹோட்டல் 35, பீ.பீ.ஏ. வீரகோன் மாவத்த, கண்டி | 2016.08.02 தொடக்கம் 2018.08.02 வரை | 100,000.00 | 300,000.00 |
| 04 | தம்புளுஓயா | டி.பி. தளகல, பிளசர் ஐலண்ட், நீர்த்தேக்க வீதி, தம்புள்ளை | வரு. 01 | 100,000.00 | 330,000.00 |
| 05 | மகாவலி கங்கை | எல். எல். திமுத்து தயானந்த | வரு 01 | 25,000.00 | 25,000.00 |
| 06 | லொக்கல் ஓயா, ஹெப்பொல ஓயா | மோட்டவேஸ் அட்வென்சர்ஸ் (தனியார்) கம்பெனி (ஸ்டான்ட் பட்ல் போட்) | 06 மாதங்கள் | 50,000.00 | (முதல் 6 மாதங்களுக்கு) ரூ. 40,000.00 |


| வரிசை எண் | நீர்த்தேக்கம் நதி | முதலீட்டாளர்களின் விபரம் (முகவரி) | குத்தகை காலம் | ஆரம்ப வைப்புத் தொகை ரூ. | வருடாந்த குத்தகை தொகை ரூ. |
|---|---|---|---|---|---|
| 01 | விக்டோரியா | விக்டோரியா லெஷர் (பிரைவட்) லிமிடட். 339/6, நீர்கொழும்பு வீதி, பேலியகொட | 2016.01.06 தொடக்கம் 2021.01.05 வரை | 100,000.00 | முதல் 2 வருடங்கள் தொடர்பாக ரூ. 75,000 வீதம் அதன் பின்னர் 5% வருடாந்த அதிகரிப்பு |
| 02 | பொல்கொல்ல | மகாவலி ரீச் ஹோட்டல் 35, பீ.பீ.ஏ. வீரகோன் மாவத்த, கண்டி (மோட்டார் படகு) | 2016.02.09 தொடக்கம் 2019.02.08 வரை | 100,000.00 | 181,912.50 |
| | | சினமன் சிட்டாடல் இல. 117, சேர் சித்தம்பலம் கார்டினர் மாவத்தை, கொழும்பு 02 | 2016.02.09 தொடக்கம் 2019.02.08 வரை | 100,000.00 | 181,912.50 |
| | | மகாவலி ரீச் ஹோட்டல் 35, பீ.பீ.ஏ. வீரகோன் மாவத்த, கண்டி | 2016.08.02 தொடக்கம் 2018.08.02 வரை | 100,000.00 | 300,000.00 |
| 04 | தம்புளுஓயா | டி.பி. தளகல, பிளசர் ஐலண்ட், நீர்த்தேக்க வீதி, தம்புள்ளை | வரு. 01 | 100,000.00 | 330,000.00 |
| 05 | மகாவலி கங்கை | எல். எல். திமுத்து தயானந்த | வரு 01 | 25,000.00 | 25,000.00 |
| 06 | லொக்கல் ஓயா, ஹெப்பொல ஓயா | மோட்டவேஸ் அட்வென்சர்ஸ் (தனியார்) கம்பெனி (ஸ்டான்ட் பட்ல் போட்) | 06 மாதங்கள் | 50,000.00 | (முதல் 6 மாதங்களுக்கு) ரூ. 40,000.00 |

### 3.5.12 சுற்றாடலுக்கு உசிதமான சுற்றுலா படகுச் சேவைகளை செயற்படுத்துதல்

விக்டோரியா மற்றும் பொல்கொல்ல நீர்த்தேக்கங்கள் மற்றும் லொக்கல் ஓயா மற்றும் தம்புலு ஓயா குளங்கள் ஆகியவற்றில் சுற்றாடலுக்கு உசிதமான சுற்றுலா படகுச் சேவைகள், தோணிச் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதன் மூலம் வருடத்தின் போது ரூ. 1,091,670.62 வருமானம் ஈட்டிக் கொள்ளப்பட்டுள்ளது.



### 3.5.13 தொழில் முயற்சியாளர்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்

- திறன் அபிவிருத்தி மற்றும் தொழில்நுட்பம் சம்பந்தப்பட்ட 168 நிகழ்ச்சித்திட்டங்கள் 2018ஆம் ஆண்டின் போது மகாவலி வலயங்களில் செயற்படுத்தப்பட்டன.
- புதிய தொழில் ஒன்றை ஆரம்பிப்பதற்கென 2018ஆம் ஆண்டின் போது மகாவலி வலயங்களில் 62 முதலீட்டு மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டன.
- 11 சந்தை மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்களும், 51 தொழில்முனைவு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களும் 2018 ஆம் ஆண்டின் போது செயற்படுத்தப்பட்டன. 2018ஆம் ஆண்டின் போது இவற்றின் மூலம் மகாவலி பிரதேசங்களில் 600 தொழில் வாய்ப்புக்கள் உருவாக்கப்பட்டன.
- 2018ஆம் ஆண்டின் போது மகாவலி பிரதேசங்களில் 600 தொழில் வாய்ப்புக்கள் உருவாக்கப்பட்டுள்ளன.
- மகாவலி வலயங்களைச் சேர்ந்த பிள்ளைகளுக்கென தொழில் திறன்களை பெற்றுக்கொடுக்கும் பொருட்டு தொழில் பயிற்சி அதிகார சபையுடன் இணைந்து 2018ஆம் ஆண்டில் வணிக அபிவிருத்திப் பிரிவினால் இந்த நிகழ்ச்சித்திட்டம் அமுல் செய்யப்பட்டது. இதற்கென ரூ.3.52 மில்லியன் பெறுமதியான 227 புலமைப் பரிசில்கள் வழங்கப்பட்டன.

# நான்காவது அத்தியாயம்

## மனித வளங்கள் மற்றும் நிதி முகாமைத்துவ பிரிவு

## 4.1. ஆளணி மற்றும் நிர்வாகப் பிரிவு

இலங்கை மகாவலி அதிகார சபையின் மனித வளங்கள் முகாமைத்துவம் சம்பந்தப்பட்ட அனைத்து நடவடிக்கைகளும் ஆளணி மற்றும் நிர்வாகப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

**ஆளணி மற்றும் நிர்வாகப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கும் கருமங்கள்:**

ஆளணி மற்றும் நிர்வாகப் பிரிவு இலங்கை மகாவலி அதிகார சபையின் மிக முக்கியமான பிரிவுகளில் ஒன்றாக இருந்து வருவதுடன், அப்பிரிவிடம் அதிகளவிலான கருமங்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

- பணியாட்டொகுதி அளவினை அடையாளம் காணுதல்.
- பணியாட்டொகுதியை திட்டமிடல்.
- பணியாட்டொகுதி தொடர்பாக திருத்தங்களை மேற்கொள்ளல்.
- முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் ஒப்புதலை பெற்றுக்கொள்ளல் மற்றும் ஊழியர்களை பணியில் அமர்த்துதல்.

**மனித வளங்களை பெற்றுக்கொள்ளல்**

- ➢ வெற்றிடங்களை நிரப்புவதற்கு விண்ணப்பங்களை கோரல்.
- ➢ பரீட்சைகளை/ நேர்முகப் பரீட்சைகளை நடத்துதல்.
- ➢ தகுதியான ஆட்களை தெரிவு செய்தல்.

**மனித வளப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி**

- ➢ திசைமுகப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டங்கள்.
- ➢ பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடத்துதல்.
- ➢ உள்நாட்டு, வெளிநாட்டு புலமைப் பரிசில்களை பெற்றுக்கொடுத்தல்.
- ➢ பதவி உயர்வுகள் மற்றும் சம்பள அதிகரிப்புக்களை வழங்குதல்.
- ➢ பதவியை நிரந்தரமாக்குதல்.

- மனித வளச் செயற்தூண்டல் மற்றும் மனப்பாங்கு வளர்ச்சி
- ஓய்வு பெறச் செய்தல்
- இடமாற்றங்கள்
- சேவையை முடிவுறுத்துதல்
- பணிக்கொடை அனுகூலங்களை விடுவித்தல்
- ஊழியர் சேமலாப நிதியம் / ஊழியர் நம்பிக்கை நிதியம் தொடர்பான நடவடிக்கைகள்

- ஒழுக்காற்று நடவடிக்கைகள்
- ஊக்குவிப்புக்கள்
- செயலாற்றுகை மதிப்பீடுகள்
- ஊழியர் அணியை மேற்பார்வை செய்தல் மற்றும் கண்காணித்தல்
- நெறிப்படுத்தல் மற்றும் ஏற்பாடு
  - நிர்வாகம்
  - போக்குவரத்து
  - திட்டமிடல் மற்றும் இயக்குதல்
  - பாதுகாப்பு
  - காணிப் பிரிவு
  - சட்டப் பிரிவு
- ஒருங்கிணைப்பு (பல்வேறு பிரிவுகளுக்கும், வெளித்தரப்புக்களுக்கும் இடையில்)

- பொது மக்கள் தொடர்பு
  - உத்தியோகபூர்வமான வைபவங்களை ஏற்பாடு செய்தல்
  - நிர்வாக விடயங்கள் சம்பந்தப்பட்ட பாராளுமன்ற ஆலோசனைக் குழு
  - பொதுமக்கள் மனுக்கள் கமிட்டி
  - பாராளுமன்றத்தின் வாய்மூலமான கேள்விகளுக்கு பதிலளித்தல், பங்குபற்றல் மற்றும் ஏனைய பிரிவுகளை ஒருங்கிணைத்தல்

- நிர்வாகப் பிரிவு சம்பந்தப்பட்ட வருடாந்த மதிப்பீடுகளை தயாரித்தல்
- அலுவலக நடவடிக்கை முறைகளை செயற்படுத்துதல்
- மதிப்பீடு மற்றும் புதிய முறைமையியல்களை அறிமுகம் செய்து வைத்தல்

### 4.1.1 2018 ஆம் வருடம் தொடர்பான இலக்குகள் மற்றும் முன்னேற்றம்

**2018 ஆம் ஆண்டில் நிர்ணயிக்கப்பட்டிருந்த இலக்குகள்:**

- அனைத்துப் பிரிவுகளிலும் நிலவி வரும் ஊழியர் வெற்றிடங்களை இனங்காணுதல் மற்றும் அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கென விண்ணப்பங்களை கோருவதற்கு நடவடிக்கை எடுத்தல்.
- இலங்கை மகாவலி அதிகார சபை பிரிவுகளின் வருடாந்த இடமாற்றக் கொள்கையை அமுல் செய்தல்.

### 4.1.2. இலங்கை மகாவலி அதிகார சபையில் நிலவி வரும் வெற்றிடங்கள் தொடர்பாக இந்த வருடத்தின் போது மேற்கொள்ளப்பட்ட பதவி உயர்வுகள்/ புதிய ஆட்சேர்ப்புக்கள் தொடர்பான தகவல் அறிக்கை

| வரிசை எண் | பதவி | உள்ளக எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | பிரதிப் பணிப்பாளர் நாயகம் (அபிவிருத்தி – ஒப்பந்த அடிப்படையில்) ) | 1 |
| 2 | உதவிப் பணிப்பாளர் / பிரதிப் பணிப்பாளர் (சட்டம்) | 2 |
| 3 | பொறியியலாளர் / முதன்மைப் பொறியியலாளர் (சிவில்) | 24 |
| 4 | கணக்கு உத்தியோகத்தர் | 5 |
| 5 | அலகு முகாமையாளர் | 1 |
| 6 | அபிவிருத்தி உதவியாளர் | 8 |
| 7 | நீர் தர உதவியாளர் | 5 |
| 8 | கால்நடை வளங்கள் அபிவிருத்தி உதவியாளர் | 26 |
| 9 | பொறியியல் உதவியாளர் (சிவில்) | 8 |
| 10 | தொழில்நுட்ப உதவியாளர் | 48 |
| 11 | முகாமைத்துவ உதவியாளர் | 13 |
| 12 | சுற்றுலா விடுதி பொறுப்பாளர் | 9 |
| 13 | பாதுகாப்பு உத்தியோகத்தர் | 53 |
| 14 | நீர்ப்பாசன ஊழியர் (ஒப்பந்தம்) | 8 |
| | **மொத்தம்** | 211 |

### 4.1.3. இலங்கை மகாவலி அதிகார சபையின் 2018 ஆம் ஆண்டின் உள்ளக பதவி உயர்வுகள் தொடர்பான தகவல் அறிக்கை

| வரிசை எண் | பதவி | உள்ளக எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | பணிப்பாளர் (உள்ளக கணக்காய்வு) | 1 |
| 2 | பணிப்பாளர் (மீன்பிடி மற்றும் கால்நடை வளங்கள்) | 1 |
| 3 | உதவிப் பணிப்பாளர் (திட்டமிடல் மற்றும் நெறிப்படுத்தல்) | 1 |
| 4 | பிரதி வதிவிட கருத்திட்ட முகாமையாளர் (காணி) | 4 |
| 5 | பிரதி வதிவிட கருத்திட்ட முகாமையாளர் (விவசாயம்) | 2 |
| 6 | பிரிவு முகாமையாளர் | 7 |
| 7 | திசு வளர்ப்பு உத்தியோகத்தர் | 1 |
| 8 | மீன்பிடி மற்றும் கால்நடை வளங்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் | 1 |
| 9 | தொழில்நுட்ப பொறியியலாளர் (சிவில்) | 1 |
| 10 | கணக்கு உத்தியோகத்தர் | 1 |
| 11 | உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தர் | 1 |

| வரிசை எண் | பதவி | உள்ளக எண்ணிக்கை |
|---|---|---|
| 12 | திட்டமிடல் உத்தியோகத்தர் | 2 |
| 13 | நிறுவன அபிவிருத்தி உத்தியோகத்தர் | 11 |
| 14 | வணிக அபிவிருத்தி உத்தியோகத்தர் | 2 |
| 15 | காணி உத்தியோகத்தர் | 4 |
| 16 | வழங்கல் உத்தியோகத்தர் | 2 |
| 17 | போக்குவரத்து உத்தியோகத்தர் | 1 |
| 18 | காணி உத்தியோகத்தர் | 1 |
| 19 | நிர்வாக உத்தியோகத்தர் | 3 |
| 20 | முன்னேற்ற மீளாய்வு உத்தியோகத்தர் | 1 |
| 21 | கருத்திட்ட திட்டமிடல் உத்தியோகத்தர் | 1 |
| 22 | அலகு முகாமையாளர் | 10 |
| 23 | அபிவிருத்தி உதவியாளர் | 14 |
| 24 | பொறியியல் உதவியாளர் (சிவில்) | 35 |
| 25 | முகாமைத்துவ உதவியாளர் | 4 |
| 26 | வெளிக்கள உதவியாளர் | 14 |
| 27 | வேலைப் பொறுப்பாளர் | 3 |
| 28 | சாரதி | 1 |
| | **மொத்தம்** | **130** |

### 4.1.4. 2018 ஆம் ஆண்டில் இலங்கை மகாவலி அதிகார சபையின் பயிற்சிப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் சாராம்சம்

| **வரிசை எண்** | **நிகழ்ச்சித்திட்ட வகை** | **பங்கேற்றவர்கள் எண்ணிக்கை** | **பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை** | **செலவு (ரூ.)** |
|---|---|---|---|---|
| 01 | உள்ளக பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் | 19 | 926 | 8,003,288.00 |
| 02 | குறுங்கால பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் | 23 | 111 | 5,92426.00 |
| 03 | உள்நாட்டு புலமைப்பரிசில்கள் - உத்தியோகத்தர்களின் பங்கேற்பு | 22 | 23 | 919,900.00 |
| | **மொத்தம்** | 64 | 1060 | 9,515,614.66 |

## 4.2 சட்டப் பிரிவு

சட்டப் பிரிவிடம் முக்கியமாக ஒப்படைக்கப்பட்டிருக்கும் கடமைகள் வருமாறு: 1979 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க மகாவலி அதிகார சபை சட்டம் மற்றும் அதனுடன் சம்பந்தப்பட்ட 23 சட்டங்கள் என்பன தொடர்பாக சட்ட நடவடிக்கைகளை திட்டமிடுதல், செயற்படுத்துதல், பல்வேறு நிறுவனங்கள் மற்றும் நபர்களுக்கிடையில் இடம்பெறும் சட்ட ரீதியான ஒப்பந்தங்களை தயாரித்தல் மற்றும் நடைமுறைப்படுத்தல், தொழில் தருனர் - ஊழியர்கள் பிரச்சினைகள் தொடர்பாக முன்வைக்கப்படும் முறைப்பாடுகள் குறித்து பாராளுமன்ற செயல் குழு, மனுக்கள் கமிட்டி, நிர்வாக விடயங்கள் தொடர்பான பாராளுமன்ற ஆணையாளர், நடுத்தீர்ப்பு மன்றம், தொழில், நீதிமன்றம், மனித உரிமைகள் ஆணைக்குழு போன்ற சட்ட ரீதியான நிறுவனங்களுடன் ஒருங்கிணைப்பை மேற்கொள்ளல்.

### 4.2.1. சட்டப்பிரிவினால் முன்னெடுக்கப்பட்டு வரும் வழக்குகள்

01. உச்ச நீதிமன்றம்
02. மேன்முறையீட்டு நீதிமன்றம்
03. சிவில் மேன்முறையீட்டு நீதிமன்றம்
04. உயர் நீதிமன்றம்
05. மாவட்ட நீதிமன்றம்
06. மாஜிஸ்ட்ரேட் நீதிமன்றம்
07. கைத்தொழில் நீதிமன்றம்
08. தொழில் நியாயசபை

### 4.2.2. 2018 சட்ட ஆலோசனை வழங்கப்பட்ட துறைகள்

01. ஊழியர் பிரச்சினைகள்
02. வாகன விபத்துக்கள்
03. ஒப்பந்தங்கள் தொடர்பாக
04. நீர்த்தேக்கங்களின் 100 மீட்டர் பாதுகாக்கப்பட்ட பகுதிகள் தொடர்பாக செயற்பட வேண்டிய விதம்
05. அதிகார சபைக்கு வருமதியாக இருக்கும் தொகைகளை அறவிட்டுக் கொள்வது தொடர்பாக அறிவுறுத்தல்களை வழங்குதல்
06. சிறு அளவிலான மின் உற்பத்தி கருத்திட்டங்களுக்கு தேவையான அறிவுறுத்தல்களை வழங்குதல்
07. இலங்கை மகாவலி அதிகார சபைக்குச் சொந்தமான கம்பனிகள் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல் மற்றும் அறிவுறுத்தல் வழங்குதல்

### 4.2.3 வருமதியாக இருக்கும் குத்தகைத் தொகைகளை அறவிட்டுக் கொள்வதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள்

01. வழக்குகளை தாக்கல் செய்தல்
02. அறிவித்தல்களை அனுப்பி வைத்தல்
03. அழைப்பாணைகளை அனுப்புதல்
04. அரச காணிகள் (உரித்தினை மீளப் பெற்றுக் கொள்ளல்) சட்டத்தின் கீழ் வெளியேற்ற அறிவித்தல்களை அனுப்பி வைத்தல்

## 4.3 நிதிப் பிரிவு

நிதிப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கும் பிரதான கருமங்கள் வருமாறு: நிறுவனத்தின் தொகுதித் திட்டம் மற்றும் வருடாந்த திட்டம் என்பவற்றின் பிரகாரம் மதிப்பீடுகளை தயாரித்தல், தேசிய வரவு செலவுத் திட்டத்தின் கீழ் மகாவலி அதிகார சபைக்கென ஒதுக்கப்படும் நிதி ஒதுக்கீடுகளின் அடிப்படையில் வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளை தயாரித்தல், மாதாந்தம் தேவைப்படும் நிதி அளவுகளை முன்னுணர்ந்து கூறல், திறைசேரியிடமிருந்து முற்பணத் தொகைகளை பெற்றுக் கொள்ளல், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கருத்திட்டங்கள் தொடர்பாக வருடாந்த மதிப்பீடுகளை தயாரித்தல், ஊழியர் சம்பளங்கள் மற்றும் ஏனைய கொடுப்பனவுகள், பௌதீக வளங்களின் முகாமைத்துவம், கணக்காய்வு வினாக்கள் மற்றும் அரச தொழில் முயற்சிகள் தொடர்பான பாராளுமன்ற தெரிவுக் கமிட்டியின் வினாக்கள் என்பவற்றுக்கு தகவல்களை வழங்குதல் போன்ற நிதி முகாமைத்துவ செயற்பாடுகள்.

### 4.3.1 ஒதுக்கப்பட்ட தொகைகள் செலவிடப்பட்ட விபரம்

| | | | ரூ'000 |
|---|---|---|---|
| | மூலதன மூலம் | ஒதுக்கு | செலவு |
| மீள வரும் செலவு | | 269,384 | 269,384 |
| மூலதனச் செலவு | | 1,108,000 | 1,108,000 |
| மகாவலி கருத்திட்டங்கள் | | | |
| MCP "B" கருத்திட்டம் | உள்நாடு | 290,000 | 290,000 |
| மாதுருஓய வலதுகரை கருத்திட்டம் | உள்நாடு | 60,000 | 60,000 |
| ரிதிமாலியத்த அபிவிருத்தி கருத்திட்டம் | உள்நாடு | 64,000 | 64,000 |
| ரம்பக்கன்ஓய கருத்திட்டம் | உள்நாடு | 94,000 | 94,000 |
| வெலிஓய ஒருங்கிணைந்த கருத்திட்டம் | உள்நாடு | 247,200 | 247,200 |
| முதன்மை மற்றும் நடுத்தர நீர்ப்பாசன கட்டமைப்புக்களை புனரமைத்தல் | உள்நாடு | 137,000 | 137,000 |
| மகாவலி கெட்டம்பே கருத்திட்டம் | உள்நாடு | | |
| கிவுல்ஓய கருத்திட்டம் | உள்நாடு | 12,800 | 12,800 |
| விவசாய மற்றும் கால்நடை வளங்கள் | உள்நாடு | 175,000 | 175,000 |
| மொத்தம் | | 2,188,000 | 2,188,000 |

## 4.3.2 சொத்துக்கள், ஆதனங்கள் மற்றும் உபகரணங்கள்

| | | | | | | ரூ'000 |
|---|---|---|---|---|---|---|
| விபரம் | 01.01.2018 இல் கொள் விலை | கொள்வனவுகள் | விற்பனை, அகற்றுதல், மாற்றுதல் | 31.12.2018 இல் கொள்விலை | பெறுமானத் தேய்வு | 31.12.2018 இல் பெறுமானத் தேய்வை குறைத்த பின்னர் |
| காணிகள் | - | - | - | 762,325 | - | 762,325 |
| கட்டடங்கள் மற்றும் அலுவலகங்கள் | 2,056,990 | 57,413 | 103,140.84 | 2,144,885 | 520,926 | 1,623,958 |
| கட்டடங்கள் - ஏனையவை | 2,767,143 | 32,184 | 46,328.22 | 2,764,578 | 1,376,730 | 1,387,848 |
| வாகனங்கள் | 1,149,045 | 17,477 | 81,209.33 | 1,167,395 | 943,219 | 224,176 |
| அலுவலக உபகரணங்கள், சேமநலப் பொருட்கள் | 111,355 | 20,508 | 18,932.05 | 135,879 | 54,255 | 81,624 |
| மின்சார ஜெனரேட்டர்கள் | 19,098 | 4,562 | 5.70 | 23,655 | 10,007 | 13,647 |
| இயந்திர உபகரணங்கள் - வேலைத்தல சேவைகள் | 52,095 | 3,048 | 16,465.53 | 43,365 | 26,793 | 16,572 |
| இயந்திர உபகரணங்கள் - கட்டுமானம் | 362,932 | 1,238 | 79,404.03 | 388,731 | 232,400 | 156,331 |
| இயந்திர உபகரணங்கள் - பொது | 97,884 | 13,312 | 5,784.71 | 112,397 | 40,057 | 72,340 |
| தளபாடங்கள் மற்றும் பொருத்துக்கள் | 242,319 | 28,321 | 256,826.06 | 243,518 | 5,397 | 238,121 |
| கணனிகள் மற்றும் துணையுறுப்புக்கள் | 139,194 | 33,968 | 53,320.40 | 184,522 | 89,710 | 94,812 |
| புத்தகங்கள் மற்றும் கைநூல்கள் | 3,557 | 325 | 114.47 | 3,996 | 94 | 3,902 |
| மொத்தம் | **7,001,612** | **212,356** | **661,531** | **7,975,245** | **3,299,588** | **4,675,657** |

## 4.4. மகாவலி பாதுகாப்பு படை

### அறிமுகம்

மகாவலி பாதுகாப்பு படை இலங்கை மகாவலி அதிகார சபையின் முதன்மையான கட்டுமானங்கள், அவற்றுடன் சம்பந்தப்பட்ட கட்டடத் தொகுதிகள் மற்றும் சொத்துக்கள் என்பவற்றை பாதுகாப்பதனை முக்கியமாக கருத்தில் கொண்டும், மகாவலி அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் / குடியேற்றவாசிகள் ஆகியோரை பாதுகாப்பதை கருத்தில் கொண்டும் 1985ஆம் ஆண்டின் நடுப் பகுதியில் ஸ்தாபிக்கப்பட்டது.

அச்சந்தர்ப்பத்தில் மகாவலி பொருளாதார முகவரகம் மற்றும் மகாவலி பொறியியல் மற்றும் வடிவமைப்பு முகவரகம் என்பவற்றின் பாதுகாப்பு நடவடிக்கைகள், அந்தந்த நிறுவனங்களைச் சேர்ந்த பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் ஒரு சிறு தொகையினரால் மேற்கொள்ளப்பட்டு வந்தன. அவர்கள் எண்ணிக்கையில் சிறு அளவினராக இருந்து வந்தனர். இலங்கை மகாவலி அதிகார சபையின் பாதுகாப்பு நடவடிக்கைகளை மத்தியமயப்படுத்தும் நோக்கத்துடனும், முறையான நிர்வாகம் மற்றும் இயக்குதல் செயற்பாடுகள் என்பவற்றுக்கெனவும் மகாவலி அதிகார சபையின் ஆலோசனையின் பிரகாரம் மகாவலி பொருளாதார முகவரகம் மற்றும் மகாவலி பொறியியல் மற்றும் வடிவமைப்பு முகவரகம் என்பவற்றில் பணியாற்றி வந்த பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் 1989ஆம் வருடத்தின் போது மகாவலி பாதுகாப்பு படைக்குள் உள்ளீர்க்கப்பட்டனர்.

### பிரதான நோக்கங்கள்:

- மகாவலி அதிகார சபையின் முதன்மையான கட்டுமானங்கள் மற்றும் அவற்றுடன் சம்பந்தப்பட்ட கட்டுமானங்கள் என்பவற்றை பாதுகாத்தல்
- மகாவலி அதிகார சபைக்குச் சொந்தமான அலுவலகத் தொகுதிகள், பொருட்கள் மற்றும் பண்டங்கள், உபகரணங்கள் என்பவற்றை பாதுகாத்தல்
- மகாவலி அதிகார சபைக்குச் சொந்தமான ஊழியர்கள் மற்றும் குடியேற்றவாசிகள் ஆகியோருக்குத் தேவையான பாதுகாப்பை வழங்குதல்

### 4.4.1. 2018 ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்ட இலக்குகள்

- மட்டக்களப்பு பிரதேசத்தில் நடத்தப்பட்ட 2018 மே தினக் கொண்டாட்டத்தில் எமது பாதுகாப்பு அணியினருக்கு ஒப்படைக்கப்பட்டிருந்த கடமைப் பொறுப்புக்களை 400 க்கும் மேற்பட்ட ஊழியர்களை கடமையில் ஈடுபடுத்தி, வெற்றிகரமாக நிறைவேற்றி வைத்தமை
- இந்தப் படையணியில் வெற்றிடமாக இருந்த பாதுகாப்பு உத்தியோகத்தர் பதவிகளுக்கென 53 பயிலுனர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டனர். அவர்களுடைய ஆரம்ப பயிற்சி 2018.07.02 தொடக்கம் 2018.08.07 ஆம் திகதி வரையில் கொத்மலை நீர்ப்பாசன மற்றும் நீர் முகாமைத்துவ பயிற்சிக் கல்லூரியில் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது. அவர்களின் பயிற்சியின் பின்னர் வெளியேறிச் செல்லும் அணிவகுப்பு அதிமேதகு ஜனாதிபதி அவர்களின் புதல்வி மற்றும் பணிப்பாளர் நாயகம் (இலங்கை மகாவலி அதிகார சபை) ஆகியோரின் பங்கேற்புடன் சம்பந்தப்பட்ட பயிற்சிப் பள்ளியில் 2018.08.08 ஆந் திகதி கோலாகலமாக இடம்பெற்றது.

- 2018 ஆம் ஆண்டின் மகாவலி விளையாட்டு விழாவுடன் இணைந்த விதத்தில் அதன் ஒலிம்பிக் தீபம் 2018.09.05 ஆந் திகதியன்று கொழும்பில் இருந்து ஆரம்பிக்கப்பட்டு, 2018.09.15 திகதி வரையில் ஒட்டுமொத்த மகாவலி வலயங்களையும் உள்ளடக்கிய விதத்தில் எம்பிலிபிட்டிய மகாவலி விளையாட்டு அரங்கிற்கு மரியாதை அணிவகுப்புடன் எடுத்து வரப்பட்டது. அந்த அணிவகுப்பின் போது மோட்டார் சைக்கிள் வீரர்களை பணியில் அமர்த்துதல் மற்றும் ஏனைய பணிகள் இந்தப்படையணியிடம் ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன், அவை வெற்றிகரமாக நிறைவேற்றி வைக்கப்பட்டன.
- 2018.09.15 மற்றும் 16 ஆகிய இரு தினங்களிலும் எம்பிலிபிட்டிய மகாவலி விளையாட்டரங்கில் இடம்பெற்ற மகாவலி விளையாட்டு விழா விருது வைபவம் கடமைகளும், அதே போல ஏனைய பாதுகாப்பு கடமைகளும் இப்படையணியினால் வெற்றிகரமான விதத்தில் மேற்கொள்ளப்பட்டன.
- மேலும் 2018.12.05 ஆந் திகதி தொடக்கம் 2018.12.12 ஆந் திகதி வரையில் ரண்டம்பே வன ஜீவராசிகள் பயிற்சி நிலையத்தில் இப்படையணியின் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் 43 பேருக்கென விசேட பயிற்சி பாடநெறியொன்று நடத்தப்பட்டது. அப்பாடநெறியின் போது விரிவுரைகள் மற்றும் ஆலோசனைகள் இலங்கை இராணுவத்தின் உத்தியோகத்தர்கள் / ஆலோசகர்கள் ஆகியோருக்கு ஊடாக வழங்கப்பட்டமையை முக்கியமாக குறிப்பிட விரும்புகின்றேன்.

- **<u>2018 ஆம் ஆண்டில் சாதித்துக் கொள்ளப்பட்ட நிதி மற்றும் பௌதீக முன்னேற்றம்</u>**

| **நிதி முன்னேற்றம்** | | |
|---|---|---|
| கணக்கு இலக்கம் | ஒதுக்கப்பட்ட தொகை ரூ. மில்லியன் | செலவிடப்பட்ட தொகை ரூ. மில்லியன் |
| 2385 - கட்டடங்கள் | 16.00 | 14.5 |
| 2383 – வாகன பராமரிப்பு | 02.00 | 00.80 |
| 2705 – அலுவலக உபகரணங்கள் | 01.00 | 2.7 |
| 2822 – மகாவலி விளையாட்டுக்கள் | 01.00 | 1.5 |
| | 20.00 | 19.5 |
| **பௌதீக முன்னேற்றம்** | | |
| கணக்கு இலக்கம் | ஒதுக்கப்பட்ட தொகை ரூ. மில்லியன் | செலவிடப்பட்ட தொகை ரூ. மில்லியன் |
| 2385 – கட்டடங்கள் | 13 | 11 |
| 2383 – வாகனங்கள் | 03 | 02 |
| 2705 – அலுவலக உபகரணங்கள் | 60 | 60 |
| 2822 – மகாவலி விளையாட்டுக்கள் | 01 | 01 |
| | 77 | 74 |

# 4.5 மகாவலி நிலையம்

வருடாந்த வேலைத்திட்டத்தின் பிரகாரம் மகாவலி நிலையத்தின் வகிபங்கு பிரதான நான்கு பிரிவுகளுக்கு ஊடாக நிறைவேற்றி வைக்கப்பட்டு வருகின்றது. கலாசாரப் பிரிவின் மூலம் மகாவலி குடியேற்றவாசிகளின் பிள்ளைகளின் அழகியல் மற்றும் கலாசார திறன்கள் மெருகூட்டப்படுவதுடன், விளையாட்டுத் திறன்களை போஷித்து வளர்த்து, தேசிய மற்றும் சர்வதேச மட்டத்திற்கு விளையாட்டு வீரர்களை எடுத்துச் செல்வது விளையாட்டுப் பிரிவின் பொறுப்பாக இருந்து வருகின்றது. இந்த இரு பிரிவுகளின் மூலமும் மகாவலி குடியேற்றவாசிகளின் நான்காவது தலைமுறையைச் சேர்ந்த பிள்ளைச் செல்வங்களின் பொருளாதார, சமூக மற்றும் கலாசார நிலைமையை கட்டியெழுப்புவதற்கென நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன. கல்வி மற்றும் வெளியீட்டுப் பிரிவின் மூலம் மகாவலி வலயங்களின் தற்போதைய செயற்பாடுகள் குறித்து பிரச்சாரத்தை வழங்கும் வெளியீடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தேசிய ரீதியில் அருங்காட்சியகம் மகாவலி நிலையத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருப்பதுடன், மகாவலி பாரம்பரியம் தொடர்பான விடயங்களும், அதே போல நீரியல் நாகரீகம் தொடர்பான விடயங்களும் அதன் மூலம் தேசிய, சர்வதேச மட்டங்களுக்கு பரப்புரை செய்யப்பட்டு வருகின்றது. தொழில்நுட்ப மற்றும் பராமரிப்பு பிரிவின் மூலம் மகாவலி நிலையம் சம்பந்தப்பட்ட அனைத்து விதமான கட்டுமான வேலைகள் மற்றும் புதுப்பித்தல் வேலைகள் என்பனவும், நாளாந்த பராமரிப்பு வேலைகளும் நெறிப்படுத்தப்பட்டு வருகின்றன.

## 4.5.1 விளையாட்டுப் பிரிவு

மகாவலி குடியேற்றங்களைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள், விளையாட்டு வீராங்கனைகள் ஆகியோரின் விளையாட்டுத் துறை திறன்களை மெருகூட்டி, தேசிய மற்றும் சர்வதேச மட்டங்களுக்கு அவர்களை எடுத்துச் செல்வது விளையாட்டுத் துறையின் பொறுப்பாக இருந்து வருவதுடன், அதன் செயற்பாடுகள் பின்வரும் விதத்தில் இடம்பெற்று வருகின்றன.

- விளையாட்டுத் திறன்களைக் கொண்டிருக்கும் மகாவலி பிரதேச இளைஞர் யுவதிகளை அடையாளம் காணுதல் மற்றும் தற்பொழுது விளையாட்டுக்களில் ஈடுபட்டு வரும் விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் தொடர்பான தகவல்களை பெற்றுக்கொண்டு, நீண்ட கால மற்றும் குறுங்காலத் திட்டங்களை தயாரித்தல்.
- விளையாட்டு வீரர்களை பயிற்றுவிக்கும் ஒரு திட்டத்தை உருவாக்கி, அதன் ஊடாக அவர்களுக்கு பயிற்சியை வழங்குதல்.
- விளையாட்டு அமைச்சு மற்றும் மாகாண விளையாட்டு அமைச்சு என்பவற்றின் அளவு கோல்களின் பிரகாரம் பல்வேறு விதமான போட்டிகளுக்கென விளையாட்டு வீரர்களையும், வீராங்கனைகளையும் தெரிவு செய்தல் மற்றும் நெறிப்படுத்துதல்
- மகாவலி விளையாட்டு விழாவில் குழு போட்டிகள் மற்றும் தடகள போட்டிகள் என்பவற்றை ஏற்பாடு செய்தல் மற்றும் அது சம்பந்தப்பட்ட அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளல்.

- விளையாட்டு வீரர்களின் நலனோம்பல் சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
- விளையாட்டு உபகரணங்கள் மற்றும் மைதானம் என்பவற்றை மேம்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல்.
- விளையாட்டுக்கள் தொடர்பாக அரச மற்றும் அரசு சாராத அமைப்புக்களுக்கு இடையிலும், மகாவலி அதிகார சபையின் பல்வேறு பிரிவுகளுக்கு இடையிலும் மிகச்சிறந்த ஒருங்கிணைப்பை மேற்கொள்ளல்.
- விளையாட்டுச் செயற்பாடுகள் தொடர்பான முன்னேற்ற அறிக்கைகள் சமர்ப்பித்தல்
- அலகு மட்டத்தில் விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளை அடையாளம் காணும் நிகழ்ச்சித்திட்டம் ஒன்றை ஏற்படுத்தல் (அனைத்து வலயங்களிலும் )
- மகாவலி விளையாட்டு கழகங்களை அமைக்கும் பொருட்டு விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் ஆகியோரைத் தூண்டுதல்

### 4.5.2 2018ஆம் ஆண்டில் நிகழ்த்திய சாதனைகள்

- விளையாட்டு வீராங்கனை பாத்திமா சஹீன் யமீன் 100 மீற்றர் ஓட்டப் போட்டியில் 12.24 வினாடிகள் ஓடி சாதனை நிகழ்த்தி உள்ளார்.
- வை. எம். ஜனித்த சௌம்ய யாப்பா பண்டார என்ற விளையாட்டு வீரர் நீளம் பாய்தலில் சாதனை நிகழ்ச்சி உள்ளார்.

### 4.5.3 கலாசார பிரிவு – மகாவலி நிலையம்

மகாவலி குடியேற்றவாசிகளின் பிள்ளைகளின் கலைத்திறனை மெருகூட்டி தேசிய மற்றும் சர்வதேச மட்டங்களுக்கு அப்பிள்ளைகளை எடுத்துச் செல்வது கலாசாரப் பிரிவின் வகிபங்காக இருந்து வருவதுடன், அதன் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

- பல்வேறு கலாசார மற்றும் அழகியல் பிரிவுகளின் கீழ் போட்டித் தொடர்களை நடத்துவதன் மூலம் வலய மற்றும் பிரிவு மட்டத்தில் பல்வேறு திறன்களை கொண்டிருக்கும் பிள்ளைகளை அடையாளம் காணுதல் (பாடல், ஆடல், நடனம், அறிவிப்பு போன்ற துறைகளிலும் அதே போல சிறு கதை, கட்டுரை, நாடக ஆக்கம் மற்றும் சித்திரம் வரைதல் போன்ற துறைகளிலும்).
- அடையாளம் காணப்பட்ட பிள்ளைகளுக்கு ஊடாக மகாவலி பிரத்திபா கலை விழாவை ஏற்பாடு செய்தல்
- தேசிய மற்றும் சர்வதேச மட்டங்களில் இடம்பெறும் போட்டிகளில் பங்கேற்பதற்கென உயர் கலைத் திறன்களைக் கொண்டிருக்கும் பிள்ளைகளுக்கு வாய்ப்பினை வழங்குதல்.
- 2018ஆம் ஆண்டில் பிரிவுகளுக்கு இடையிலான அனைத்து போட்டிகளும் நடத்தி முடிக்கப்பட்டிருப்பதுடன், மகாவலி பிரத்திபா 2018 கலை விழா நடத்தப்படவில்லை.

### 4.5.4 கல்வி மற்றும் வெளியீட்டுப் பிரிவு

- 2018ஆம் ஆண்டில் இலங்கையின் நீர்ப்பாசன நாகரீகத்தின் ஆரம்பம் தொடக்கம் நீரியல் துறையின் வளர்ச்சி தொடர்பான அனைத்து தகவல்களையும் உள்ளடக்கிய ''ஹெலவாரி புறாவத்த'' நூல் வெளியிடப்பட்டது.
- 2018 மகாவலி விளையாட்டு விழாவின் நினைவுச் சின்னம் உருவாக்கப்பட்டு, பத்திரிகை அனுபந்தம் மற்றும் பத்திரிகை விளம்பரம் தயாரிக்கப்பட்டு, அனைத்து பிரச்சார நடவடிக்கைகளை மேற்கொண்டமை.

### 4.5.5 அருங்காட்சியகம்

அரச நிறுவனங்களின் உத்தியோகத்தர்களுக்கு விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டம் ஒன்று 2018ஆம் ஆண்டில் நடத்தப்பட்டது. சிறு நூல்நிலையத்திற்கென நீரியல் நாகரீகம் சம்பந்தப்பட்ட நூல்களை கொள்வனவு செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### 4.5.6 பராமரிப்பு மற்றும் நிர்வாகப் பிரிவு

2018ஆம் ஆண்டின் போது வாகன தரிப்பிடம் இன்ரலொக் கற்கள் பதிக்கப்பட்டு திருத்தியமைக்கப்பட்டதுடன், குளிரூட்டல் இயந்திரங்கள் அனைத்தும் புதுப்பிக்கப்பட்டன. அனைத்து கதவுகளும் புதுப்பிக்கப்பட்டதுடன், பெருந்தொகையான காரியாலய உபகரணங்களும் கொள்வனவு செய்யப்பட்டன.

## 2018 ஆம் ஆண்டின் நிதிசார் முன்னேற்றம்

| வரிசை எண் | பிரிவு | ஒதுக்கப்பட்ட தொகை ரூ. மில்லியன் | செலவிடப்பட்ட தொகை ரூ. மில்லியன் |
|---|---|---|---|
| 01 | பல் ஊடக மற்றும் தளபாடக் கொள்வனவு | 6.250 | 3.747 |
| 02 | கட்டுமானம் மற்றும் புதுப்பித்தல் | 0.557 | 0.298 |
| 03 | விளையாட்டுக்கள் | 11.859 | 9.900 |
| 04 | கல்வி மற்றும் வெளியீடுகள் | 0.725 | 0.356 |
| 05 | கலாசாரம் | 2.568 | 1.851 |
| 06 | அருங்காட்சியம் | 0.860 | 0.089 |
| | **மொத்தம்** | **24.800** | **18.010** |

## 4.6 போக்குவரத்துப் பிரிவு

இலங்கை மகாவலி அதிகார சபையின் வருடாந்த வேலைத்திட்டத்தின் பிரகாரம் உள்ளடக்கப்பட்டிருக்கும் நோக்கங்கள் மற்றும் குறிக்கோள்கள் என்பவற்றை நிறைவேற்றிக் கொள்வதற்கு அத்தியாவசியமான சேவைகளில் செயற்திறன் மிக்க, துரித போக்குவரத்து சேவையொன்றினை வழங்கும் பொறுப்பு போக்குவரத்துப் பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கும் ஒரு விசேட பொறுப்பாக இருந்து வருவதுடன், அது அத்துறையின் அடிப்படை நோக்கமாகவும் உள்ளது.

இதற்கென அதிகார சபைக்குச் சொந்தமான 723 வாகனங்களின் ஒரு தொகுப்பு இருந்து வருவதுடன், அவை 666 இலகு ரக வாகனங்கள், 57 பார ஊர்திகள் மற்றும் இயந்திர உபகரணங ்கள் என்ற விதத்தில் இருந்து வருகின்றன.
இந்த வாகனங்களின் செயற்பாடு, பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ நடவடிக்கைகள் என்பவற்றை மேற்கொள்வது போக்குவரத்துப் பிரிவின் பொறுப்பாக இருந்து வருகின்றது. அப்பொறுப்புக்களாவன:

- வாகனங்களை பழுதுபார்த்தல் / பராமரித்தல்
- வருமான அனுமதிப் பத்திரம் மற்றும் காப்புறுதிச் சான்று என்பவற்றை இற்றைப்படுத்தல்
- தலைமை அலுவலகத்தில் இருக்கும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு வாகனங்களை ஒதுக்கிக் கொடுத்தல்
- வாகனப் பராமரிப்பு மற்றும் எரிபொருள் என்பவற்றுக்கென வருடாந்தம் செலவு மதிப்பீடுகளை தயாரித்தல்
- வாகனங்களுக்கு எரிபொருளை பெற்றுக்கொடுத்தல், பதிவுகளை பராமரித்தல், ஓட்டக் குறிப்புக்களை பரீட்சித்தல்
- அதிகார சபைக்கு சொந்தமான வாகனப் பட்டியலை தயாரித்தல் மற்றும் இற்றைப்படுத்தல்
- வாகனங்கள் தொடர்பாக திடீர் விபத்துக்கள் இடம்பெறும் சந்தர்ப்பத்தில் உரிய நடவடிக்கை எடுத்தல், காப்புறுதி நட்டஈட்டை பெற்றுக் கொள்ளும் விடயம் தொடர்பான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்

வலய அலுவலகங்களில் இப்பணிகளை போக்குவரத்து உத்தியோகத்தர் / போக்குவரத்து பிரிவுக்குப் பொறுப்பான உத்தியோகத்தர் ஒருவர் மேற்கொண்டு வருவதுடன், வாகனங்களை பழுதுபார்த்தல் வேலைக்கென தம்புத்தேகம இயந்திரவியல் வேலைத்தலத்தை உள்ளிட்ட 6 இயந்திரவியல் வேலைத்தலங்களின் பொறியியலாளர் ஒருவரின் மேற்பார்வையின் கீழ் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

2018 ஆம் வருடம் தொடர்பாக ஒதுக்கப்பட்ட இலக்காக இருந்து வந்த மூலதனச் செலவு ரூ. 08 மில்லியனாகும். வருட இறுதியின் போது இந்த இலக்கை சாதித்துக் கொள்ள முடிந்தது.
இந்த வருடத்தின் போது 290 பழுதுபார்ப்பு வேலைகள் மேற்கொள்ளப்பட்டதுடன், 148 வாகனங்கள் சேர்விஸ் செய்யப்பட்டன. அதற்கென ரூ. 14,746,713.39 தொகை செலவிடப்பட்டது. மேலும், இந்த வருடத்தின் போது 680 வெளிக்கள பயணங்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன், அதற்கான எரிபொருள் செலவு ரூ. 5,064,878.75 ஆகும்.

தலைமை அலுவலகத்திற்கென ஒதுக்கப்பட்ட வாகனங்களில் 10 வாகனங்கள் முழுமையாக காப்புறுதி செய்யப்பட்டுள்ளன. ஏனைய வாகனங்கள் அனைத்தும் தொடர்பாக மூன்றாம் தர காப்புறுதி பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. அதற்கென ரூ. 857,655.37 தொகையும், வருமான அனுமதிப் பத்திரங்களுக்கென ரூ. 349,552.00 தொகையும் செலவிடப்பட்டிருந்தது. இவ்வருடத்தின் போது 15 வாகன விபத்துக்கள் தொடர்பாக விசாரணை நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டு, தேவையான ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன. போக்குவரத்துப் பிரிவின் ஒட்டுமொத்த ஊழியர் அணி பிரதிப் பணிப்பாளர் (போக்குவரத்து), முதன்மை தொழில்நுட்ப பொறியியலாளர், பொறியியல் உதவியாளர்கள், வேலை பொறுப்பாளர்கள், 13 முகாமைத்துவ உதவியாளர்கள் மற்றும் 62 சாரதிகள் ஆகியோரை உள்ளடக்குகின்றது.

# ஐந்தாவது அத்தியாயம்

## இலங்கை மகாவலி அதிகார சபையின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் கம்பனிகள்

இலங்கை மகாவலி அதிகார சபையினால் மேற்கொள்ளப்பட்டு வந்த வர்த்தக நடவடிக்கைகளின் ஒரு பாகம், கம்பெனிகள் சட்டத்தின் கீழ் முகாமைத்துவத்திற்கென பின்வரும் தனியார் கம்பெனிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

- வ/ப மகாவலி கால்நடை வளங்கள் மற்றும் விவசாயத் தொழில் முயற்சிகள் (தனியார்) கம்பெனி
  (**Mahawali Livestock & Agro Entreprices** (**Pvt**) **Ltd**)
- வ/ப மகாவலி ஆலோசனை சேவைகள் பணியகம் (தனியார்) கம்பெனி
  (**Mahawali Consultancy Bureau** (**Pvt**) **Ltd**)
- வ/ப இயற்கை வளங்கள் முகாமைத்துவச் சேவைகள் (தனியார்) கம்பெனி
  (**Natural Resources Management Services (Pvt) Ltd**)

**2018 ஆம் வருடத்தின் போது கம்பெனிகளின் செயலாற்றுகை**

| வரிசை எண் | கம்பெனி | வருடத்தின் போது மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள்/நிலை |
|---|---|---|
| 01 | வ/ப மகாவலி கால்நடை வளங்கள் மற்றும் விவசாய தொழில் முயற்சிகள் (தனியார்) கம்பெனி | ❖ பிரதேசத்தைச் சேர்ந்த கால்நடை வளர்ப்பு விவசாயிகளிடமிருந்து பாலை சேகரித்தல் மற்றும் சேவைகளை வழங்குதல்.<br>❖ பால் மற்றும் பாலுடன் இணைந்த உற்பத்திப் பொருட்கள், அந்த உற்பத்திகளை மகாவலி வலயங்களிலும், அயல் பிரதேசங்களிலும் சந்தைப்படுத்தல்.<br>❖ நாட்டுக் கோழி வளர்ப்பு கருத்திட்டத்தின் மூலம் விவசாயிகளுக்கு கோழிக் குஞ்சுகளை வழங்குதல்.<br>❖ விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்திற்கு பொலி காளைகளாக பயன்படுத்திக் கொள்வதற்கென எருமை மாடுகளை வழங்குதல்.<br>❖ உயர் தரம் வாய்ந்த புறொய்லர் கோழி இறைச்சி உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல். |
| 02 | வ/ப மகாவலி ஆலோசனை சேவைகள் பணியகம் (தனியார்) கம்பெனி | சாத்தியப்பாட்டு ஆய்வுகளிலிருந்தும், ஒப்பந்த வேலைகளிலிருந்தும் 2018 ஆம் வருடத்தின் போது செயற்பாட்டு வருமானம் ஈட்டிக் கொள்ளப்பட்டுள்ளது. |
| 03 | இயற்கை வளங்கள் முகாமைத்துவச் சேவைகள் (தனியார்) கம்பெனி | 2014 ஆம் வருடத்தின் போது பின்வரும் யற்பாடுகளிலிருந்து செயற்பாட்டு ஆதாயம் ஈட்டிக் கொள்ளப்பட்டுள்ளது:<br>• விக்டோரியா மற்றும் கொத்மலை வலயத்தில் காணி அளவை மற்றும் திட்டங்களை தயாரித்தல் -ரூ. 213,800.00<br>• மண் ஆராய்ச்சி கருத்திட்டம் - ரூ. 1,018,479.01<br>• H – Q measurement of Nanuoya & Coledoniya gauging station – ரூ. 437,472.00<br>• மாத்தளை மாவட்டத்தில் புவக்பிட்டிய மற்றும் இலுக்கும்புர சேதன விவசாயப் பண்ணை கருத்திட்டம் - 200,000.00<br>• ஹப்புத்தளை பெருந்தோட்ட கருத்திட்டம் - ரூ. 160,000.00<br>• அமர லெஷர் ஹோட்டல் பூர்வாங்க சுற்றாடல் மதிப்பீட்டு அறிக்கை தயாரிப்பு: ரூ 300,000.00 |

# வருடாந்த கணக்குகள்

## பாகம் II

# நிதிசார் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

## 1. அறிக்கையிடும் கட்டமைப்பு

1979 ஆம் ஆண்டின் 23 ஆம் இலக்க சட்டத்தின் கீழ் இலங்கை மகாவலி அதிகார சபை ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இலங்கை மகாவலி அதிகார சபையின் கருமங்கள் அச்சட்டத்தின் 12 ஆவது பிரிவில் எடுத்துக் காட்டப்பட்டிருப்பதுடன், மகாவலி அபிவிருத்தி வேலைத்திட்டத்தை அமுல் செய்யும் பொறுப்பு அதன் மூலம் அதனிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மகாவலி சட்டத்தின் பிரகாரம், குறிப்பிட்ட ஒரு விசேட பிரதேசத்தில் அல்லது ஒரு விசேட பிரதேசம் தொடர்பாக அதிகார சபையின் கருமங்கள் பின்வரும் விதத்தில் அமைதல் வேண்டும்:

(அ) நீர்த்தேக்கங்கள், நீர்ப்பாசன நீர் விநியோக அமைப்புக்கள் மற்றும் மின்சார உற்பத்தி, மின்சார விநியோகம் என்பவற்றுக்கான இயந்திர உபகரணங்களை ஸ்தாபித்தல் மற்றும் அதனை மேற்கொள்ளல் என்பவற்றையும் உள்ளடக்கிய மகாவலி கங்கை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தை திட்டமிடுதல் மற்றும் அமுல் செய்தல்;

(ஆ) எவ்வாறிருப்பினும், மின்சாரத்தை பகிர்ந்தளிக்கும் சம்பந்தப்பட்ட கருமத்தை, எழுத்து மூலமான சட்டத்தின் கீழ் அவ்வாறு செய்வதற்கென அதிகாரமளிக்கப்பட்டிருக்கும் வேறு ஏதேனும் ஓர் அதிகார சபையின் மூலம் மேற்கொள்ள முடியும்.

(இ) குறிப்பிட்ட ஒரு விசேட பிரதேசத்தில் முழுமையான, ஒருங்கிணைந்த அபிவிருத்தியை மேற்கொள்ளல் மற்றும் அந்த அபிவிருத்தியை தக்கவைத்துக் கொள்ளல்.

(ஈ) குறிப்பிட்ட ஒரு விசேட பிரதேசத்திற்குள் விவசாய உற்பத்தித் திறன் மற்றும் வேலை வாய்ப்புக்களை உருவாக்கும் ஆற்றல் என்பவற்றை உச்ச மட்டத்தில் பராமரித்து வருதல், பொருளாதார, விவசாய அபிவிருத்தியை ஏற்படுத்துதல் மற்றும் அந்த அபிவிருத்தியை தக்க வைத்துக் கொள்ளல்.

(உ) ஏதேனும் ஒரு விசேட பிரதேசத்திற்குள் பௌதீக சுற்றாடலை பாதுகாத்தல் மற்றும் அதனை பராமரித்து வருதல்.

(ஊ) ஏதேனும் ஒரு விசேட பிரதேசத்திற்குள் சமூகத்தின் சேமநலன் மற்றும் கலாசார முன்னேற்றம் என்பவற்றை விருத்தி செய்தல் மற்றும் அப்பிரதேசத்தை நிர்வகித்தல்.

(எ) உள் மற்றும் வெளி தனியார் மூலதனத்தை குறிப்பிட்ட ஒரு விசேட பிரதேசத்தில் பொருளாதார மற்றும் விவசாய அபிவிருத்தியில் பயன்படுத்துவதனை மேம்படுத்துதல் மற்றும் பாதுகாத்தல்; மற்றும்

(ஏ) மகாவலி கங்கை அபிவிருத்தி திட்டத்தை திட்டமிடுவதிலும், அதனை அமுல் செய்வதிலும், குறிப்பிட்ட ஒரு விசேட பிரதேசத்தை அபிவிருத்தி செய்வதிலும் அரசாங்க திணைக்களங்கள், அரச நிறுவனங்கள், உள்ளூராட்சி மன்றங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் தனியார் அல்லது அரசு சார் வேறு எவரேனும் நபர்கள் ஆகிய தரப்பினரின் ஒத்துழைப்பை பெற்றுக் கொள்ளல், அதனை மேம்படுத்தல் மற்றும் பாதுகாத்தல். இலங்கை மகாவலி அதிகார சபை அதன் கீழ் நிர்வகிக்கப்படும் நான்கு கம்பெனிகளையும், ஒரு இணைக் கம்பெனியையும் கொண்டுள்ளது. அவை வ/ப மகாவலி வென்ச்சர் கெப்பிட்டல் (தனியார்) கம்பெனி, வ/ப இயற்கை வளங்கள் முகாமைத்துவச்

சேவைகள் (தனியார்) கம்பெனி, வ/ப மகாவலி கால்நடை வளங்கள் மற்றும் விவசாய தொழில் முயற்சிகள் (தனியார்) கம்பெனி, வ/ப மகாவலி ஆலோசனை பணியகம் கம்பெனி மற்றும் வ/ப மகாவலி கால்நடை வளங்கள் தொழில் முயற்சிகள் (தனியார்) கம்பெனி என்பனவாகும்.

அனைத்துக் கம்பெனிகளும் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பெனிகள் சட்டத்தின் கீழ் சட்டபூர்வமாக அமைக்கப்பட்டிருப்பதுடன், அவை பின்வரும் முக்கியமான பணிகளை நிறைவேற்றி வருகின்றன.

கம்பெனிகளின் பங்கு மூலதனம் குறித்த விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன:

| **கம்பெனி** | **பங்கின் பெறுமதி** | **முழுமையாக செலுத்தப்பட்ட மூலதன பங்குகளின் எண்ணிக்கை** | **மகாவலி அதிகார சபைக்கு வழங்கப்பட்ட பங்குகளின் எண்ணிக்கை** |
|---|---|---|---|
| M.C.B. (தனியார்) கம்பெனி | ரூ. 10 | 6385 | 6384 |
| NRMS (தனியார்) கம்பெனி | ரூ. 10 | 1502 | 1500 |
| வென்ச்சர் கெப்பிட்டல் (தனியார்) கம்பெனி | ரூ. 10 | 1,039,803 | 1,039,800 |
| M.L.A.E. | ரூ. 10 | 3 | - |

## மகாவலி கம்பெனிகளின் அடிப்படை செயற்பாடுகள் நிர்வகிக்கப்படும் கம்பெனிகள்

அ. வ/ப மகாவலி வென்ச்சர் கெப்பிட்டல் தனியார் கம்பெனி

i. மகாவலி தொழில் முயற்சியாளர்களுக்கு கடன் வசதிகளை வழங்குதல் மற்றும் அது தொடர்பான வழிகாட்டுதல்களை பெற்றுக் கொடுத்தல்

ii. கம்பெனிக்கு நிதிகளை ஈட்டிக் கொள்ளக் கூடிய வர்த்தக தொழில்முயற்சிகளில் முதலீடுகளை மேற்கொள்ளல்.

ஆ. வ/ப இயற்கை வளங்கள் முகாமைத்துவ சேவைகள் (தனியார்) கம்பெனி

i. இயற்கை வளங்கள் முகாமைத்துவப் பிரிவின் கீழ் கட்டுமானங்கள், திட்டங்கள், பொருட்கள் தொடர்பான மதிப்பீட்டாய்வுகள், நிலப் பயன்பாட்டு வரைபடங்கள், நீரேந்து பரப்பு பிரதேசங்களின் பாதுகாப்பு மற்றும் வன வளம் சம்பந்தப்பட்ட செயற்பாடுகள் என்பன தொடர்பாக தொழில்சார் ஆலோசனைகள் மற்றும் சேவைகள் என்பவற்றை வழங்குதல்.

ii. தகவல்கள் மற்றும் தரவுகளை வழங்குதல், சாத்தியப்பாட்டு ஆய்வுகளை தயாரித்தல், சுற்றாடல் மீதான தாக்கங்களை மதிப்பீடு செய்யும் ஆய்வுகள் மற்றும் பூர்வாங்க சுற்றாடல் மதிப்பீட்டு அறிக்கைகள் என்பவற்றை தயாரித்தல்.

இ. வ/ப மகாவலி கால்நடை வளங்கள் மற்றும் விவசாய தொழில் முயற்சிகள் (தனியார்) கம்பெனி

i. மகாவலி விவசாயிகளுக்கு உயர் தரம் வாய்ந்த விலங்குகளை வழங்குதல்.

ii. பால் மற்றும் இறைச்சி உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல்.

ஈ. வ/ப மகாவலி ஆலோசனை சேவைகள் பணியகம் (தனியார்) கம்பெனி

i. கட்டடங்கள், நீர்ப்பாசனம், காணி. நீர் வினியோகம், வீதிகள் போன்ற கட்டுமானச் சேவைத் துறைகள் தொடர்பாக ஆலோசனை சேவைகளை வழங்குதல்.

ii. கட்டங்கள், நீர்ப்பாசனம், காணி, நீர் வழங்கல் மற்றும் வீதி நிர்மாணம் என்பவற்றின் ஒப்பந்த வேலைகளை பொறுப்பேற்றல்.

**இணைந்த கம்பெனி**

வ/ப மகாவலி கால்நடை வளங்கள் தொழில் முயற்சிகள் (தனியார்) கம்பெனி

i. கோழி இறைச்சி (புரொய்லர்) உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல்.

ii. மகாவலி விவசாயிகளுடன், அவர்கள் உற்பத்தி செய்யும் புரொய்லர் கோழி இறைச்சியை கொள்வனவு செய்யும் ஒப்பந்தங்களில் ஈடுபடுதல்.

எவ்வாறிருப்பினும், மகாவலி வென்ச்சர் கெப்பிட்டல் தனியார் நிறுவனத்தை கலைத்து விடுவதற்கு 2012 இல் பணிப்பாளர் சபை தீர்மானித்தது. அதன் காரணமாக இக்கம்பெனியின் கணக்குகள் ஒருங்கிணைந்த கணக்கில் சேர்க்கப்படவில்லை. சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான குறிப்பின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

**2. கணக்கீட்டு அடிப்படை**

**2.1 இணங்கியொழுகும் கூற்று** : நிதி நிலைமை குறித்த கூற்று, செயற்பாட்டு கூற்று, தேறிய சொத்துக்கள் மற்றும் உரித்துக்களில் ஏற்பட்ட மாற்றம் குறித்த கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுக்கள் தொடர்பான குறிப்புக்கள் என்பன இந்த நிதிக் கூற்றுக்களில் அடங்குகின்றன. இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் உருவாக்கப்பட்டிருக்கும் இலங்கை கணக்கீட்டுத் தர நியமங்களின் பிரகாரம் இந்தக் கணக்குக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. இக்கணக்குக் கூற்றுக்கள் முன்னைய நிதியாண்டில் பின்பற்றப்பட்ட தர நியமங்களை பின்பற்றுகின்றன.

**2.2 கணிப்பீடு செய்யும் அடிப்படை**

சொத்துக்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் தொடர்பான வெளிப்படுத்துகைகள் தவிர, இந்நிதிக் கூற்றுக்கள் வரலாற்று ரீதியான செலவு அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன.

**2.3 செயற்படுத்தப்படும் மற்றும் சமர்ப்பிக்கப்படும் நாணய வகை**

இந்த நிதிக் கூற்றுக்கள் இலங்கை ரூபாவில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. இங்கு குறிப்பிடப்படும் அனைத்து நிதித் தகவல்களும் மிகக் கிட்டிய ஆயிரம் ரூபா அளவில் காட்டப்பட்டுள்ளன.

**2.4 மதிப்பீடுகள் மற்றும் முடிவுகள் என்பவற்றை பயன்படுத்துதல்**

இலங்கை கணக்கீட்டு தர நியமங்களின் பிரகாரம் நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும் பொழுது கணக்கீட்டுக் கொள்கைகள், சொத்துக்கள், பொறுப்புக்கள், வருமானம் மற்றும் செலவுகள் என்பவற்றின் வெளிப்படுத்தப்பட்ட பெறுமதிகளின் மீது ஒரு தாக்கத்தை ஏற்படுத்தும் சிறு முடிவுகள், மதிப்பீடுகள் மற்றும் அனுமானங்கள் என்பவற்றை முகாமைத்துவம் மேற்கொள்ள வேண்டியுள்ளது. வரலாற்று ரீதியான அனுபவங்கள் மற்றும் தற்போதைய நிலவரங்கள் என்பவற்றின் பிரகாரம் நியாயமானவை என நம்பக் கூடிய எதிர்பார்ப்புக்களையும் உள்ளடக்கும் விதத்தில் முடிவுகள் மற்றும் மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. நிலைமை இவ்வாறு இருப்பதனால், உண்மையான அனுபவங்கள் மற்றும் பெறுபேறுகள் அத்தகைய மதிப்பீடுகளிலிருந்து வேறுபட முடியும்.

இந்த மதிப்பீடுகள் மற்றும் அடிப்படை அனுமானங்கள் என்பவற்றை தொடர்ச்சியான அடிப்படையில் மேற்கொள்ள வேண்டியுள்ளது. கணக்கீட்டு மதிப்பீடுகளில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படுவதாக இருந்தால், அத்திருத்தங்கள் குறிப்பிட்ட காலப் பிரிவுக்கு உரியதாக இருந்து வரும் சந்தர்ப்பத்தில் மட்டுமே மேற்கொள்ளப்படுகின்றன.

**2.5 கணக்கீட்டுக் கொள்கைகளில் மாற்றங்கள்**

பின்வரும் விடயங்கள் தவிர, முன்னைய வருடங்களின் போது பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் இவ்வருடத்தின் போதும் தொடர்ச்சியாக பயன்படுத்தப்பட்டுள்ளன.

2.5.1 விசேட மகாவலி வலயங்களின் கீழ் தனித்தனியான பண்ணைகள், நாற்றுமேடைகள் மற்றும் சுற்றுலா விடுதிகள் என்பன தொடர்பான புறம்பான வருமான செலவுக் கணக்குகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

2.5.2 உயிர்மச் சொத்துக்கள் சாதாரண பெறுமதியில் கணக்கிடப்படுகின்றன. பண்ணைக் கணக்கில் இலாபம் அல்லது நட்டம் இனங்காணப்படுகிறது.

2.5.3 நடப்பு நிதி வருடத்தின் போது தளபாடங்கள் மற்றும் பொருத்துக்கள் என்பன மீள் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்ட காரணத்தினால், மீள் பெறுமதி மிகை ரூ. 861.469 மில்லியனால் அதிகரித்துள்ளது.

**3. விசேட கணக்கீட்டுக் கொள்கைகள்**

இந்தக் கணக்கீட்டு கூற்றுக்கள் செல்லுபடியாகும் ஒட்டுமொத்த காலப் பிரிவின் போது, கீழே குறிப்பிடப்பட்டிருக்கும் கணக்கீட்டுக் கொள்கைகள் தொடர்ச்சியாக பிரயோகிக்கப்பட்டுள்ளன.

**3.1 ஒருங்கிணைக்கும் அடிப்படை**

**3.1.1** அதிகார சபை மற்றும் அதன் கீழ் நிர்வகிக்கப்பட்டு வரும் கம்பெனிகள் என்பவற்றின் நிதிக் கூற்றுக்களின் மீள் கணிப்பீடுகளையும் உள்ளடக்கிய விதத்தில் ஒருங்கிணைந்த நிதிக் கூற்றுக்கள் தொடர்ச்சியான முறையை பயன்படுத்தி தயாரிக்கப்பட்டுள்ளன. எனவே, இதன் மூலம் தெளிவாகும் விடயம், இந்த ஒருங்கிணைந்த நிதிக் கூற்றுக்களில் எடுத்துக் காட்டப்படும் நிதிசார் தகவல்கள் இலங்கை மகாவலி அதிகார சபையை ஒரு தனி பொருளாதார கட்டமைப்பாக பிரதிபலிக்கின்றன என்பதாகும்.

**3.2 சொத்துக்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள்**

3.2.1 சொத்துக்களின் கொள்விலை அல்லது நிர்மாணச் செலவு மற்றும் அச்சொத்தினை பயன்படுத்தும் நோக்கத்திற்கென அதனை தயாரித்துக் கொள்வதற்கு ஏற்பட்ட நேரடிச் செலவுகள் என்பன சொத்துக்களின் கொள்விலை எனக் குறிப்பிடப்படுகின்றன. அனைத்து தளபாடங்களும், பொருத்துக்களும் மீள் மதிப்பீடு செய்யப்பட்டு, 31.12.2018 இல் உள்ளவாறு கணக்கில் சேர்க்கப்படும்.

3.2.2 முழு உரித்து காணிகள் தவிர, ஏனைய அனைத்துச் சொத்துக்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் தொடர்பாகவும் கொள்விலையின் அடிப்படையில் அல்லது மீள் கணிப்பீட்டின் அடிப்படையில் எளிய நேர்கோட்டு முறையில் பெறுமானத் தேய்வுக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அச்சொத்தின் கொள்விலையை, அச்சொத்து வகையின் ஆயுள் காலத்துடன் சீராக்கம் செய்து பெறுமானத் தேய்வு மேற்கொள்ளப்படுகின்றது. சொத்து உபயோகத்துக்கென பெற்றுக் கொள்ளப்பட்ட திகதி தொடக்கம் பெறுமானத் தேய்வு கணக்கிடப்படுகின்றது. விற்பனைக்கென சொத்து ஒதுக்கப்பட்டிருக்கும் திகதிக்கு முன்னர் பெறுமானத் தேய்வு கணக்கீடு நிறுத்தப்படுகின்றது. மோட்டார் வாகனங்கள் தொடர்பாக பின்வரும் பெறுமானத் தேய்வு விகிதங்கள் பிரயோகிக்கப்படுவதற்கு முன்னர் 10% கீறல் பெறுமதி வழங்கப்படுகிறது.

| | | | **வருடாந்தம்** |
|---|---|---|---|
| 1. | கட்டடங்கள் | - அலுவலகம்<br>- ஏனையவை | 2½%<br>5% |
| 2. | மோட்டார் வாகனங்கள் | | 20% |
| 3 | இயந்திர உபகரணங்கள் | அலுவலக உபகரணங்கள் மற்றும் நலன்புரி பொருட்கள் | 15% |
| 4 | இயந்திர உபகரணங்கள் | - மின்சார ஜெனரேட்டர்கள் | 15% |
| 5 | இயந்திர உபகரணங்கள் | - கட்டுமான வேலை | 15% |
| 6 | இயந்திர உபகரணங்கள் | - பொது | 15% |
| 7 | தளபாடங்கள் மற்றும் பொருத்துக்கள் | - | 10% |
| 8 | கணினிகள் மற்றும் துணை உறுப்புக்கள் | - | 20% |

## 3.3 முதலீடுகள்

### 3.3.1 இணைந்த கம்பெனியில் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகள்

இணைந்த கம்பெனியில் மேற்கொள்ளப்பட்ட முதலீடு கொள்விலையில் கணக்கிடப்பட்டு, ஐந்தொகையில் ஒரு நீண்ட கால முதலீட்டின் கீழ் புறம்பாக காட்டப்பட்டுள்ளது. இந்த முதலீட்டு கம்பெனியின் நிதி மற்றும் செயற்பாட்டு கொள்கை முடிவுகளின் மீது அதிகார சபை குறிப்பிடத்தக்க அளவிலான எத்தகைய செல்வாக்கையும் செலுத்த முடியாதிருப்பதனால் அதனை தனியொரு அலகு என்ற முறையில் கணக்கீட்டுக்கு பயன்படுத்துவது பொருத்தமற்றதாகும்.

### 3.3.2 ஏனைய முதலீடுகள்

ஏனைய முதலீடுகள் நீண்ட கால முதலீடுகளாக கருதப்பட்டு, கொள்விலையில் கணக்கிடப்பட்டு, ஐந்தொகையில் காட்டப்பட்டுள்ளன.

## 3.4 சரக்கு கையிருப்பு அறிக்கைகள்

சரக்கு கையிருப்புக்கள் குறைந்த கொள்விலை மற்றும் பெற்றுக் கொள்ளக் கூடிய தேறிய பெறுமதி என்பவற்றின் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன. அடிக்கடி விநியோகிக்கப்படாத, குறைபாடுகளுடன் கூடிய மற்றும் பழம் பாணியிலான பண்டங்கள் தொடர்பாக தேவையான இடங்களில் ஒதுக்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## 3.5 வியாபார மற்றும் கிடைக்க வேண்டிய ஏனைய ஆதாயங்கள்

ஐயக் கடன்கள் மற்றும் வாராக் கடன்கள் என்பவற்றுக்கான ஒதுக்குகளை மேற்கொண்ட பின்னர் பெற்றுக் கொள்ளக் கூடிய, அனுமானிக்கத்தக்க பெறுமதியின் அடிப்படையிலேயே வியாபார மற்றும் கிடைக்க வேண்டிய ஏனைய ஆதாயங்கள் காட்டப்பட்டுள்ளன.

## 3.6 காசு மற்றும் காசுக்கு இணையானவை

காசு மற்றும் காசுக்கு இணையானவை, காசு நிலுவைகள் மற்றும் கேள்வியின் போது செலுத்தப்பட வேண்டிய வங்கி அதிகப் பற்றுக்கள் என்பவற்றை உள்ளடக்கிய விதத்தில் காட்டப்பட்டிருப்பதுடன், நிதிப் பாய்ச்சலை குறிப்பிடும் பொருட்டு இலங்கை மகாவலி அதிகார சபையின் நிதி முகாமைத்துவமும் ஒரு நிதிக் கூறாக காட்டப்பட்டுள்ளது.

## 3.7 வெளிநாட்டு உதவிகள்

2012 டிசம்பர் 31 வரையிலான காலப் பிரிவின் போது உதவி வழங்கும் நிறுவனங்களினால் மேற்கொள்ளப்பட்ட திரண்ட கொடுப்பனவுகளினால் அறிக்கையிடப்பட்ட வெளிநாட்டு உதவிகளை பயன்படுத்துதல். வெளிநாட்டு நாணயங்களிலான செலவுகள் கொடுப்பனவுத் திகதிகளில் நிலவி வரும் செலாவணி விகிதத்தின் பிரகாரம் ரூபாவுக்கு மாற்றப்பட்டுள்ளது.

## 3.8 பொறுப்புக்கள் மற்றும் ஒதுக்குகள்

ஐந்தொகையில் நடப்புப் பொறுப்புக்களின் கீழ் காட்டப்பட்டிருக்கும் பொறுப்புக்கள், கேள்வியின் போது செலுத்த வேண்டிய கடப்பாடுகள் மற்றும் ஐந்தொகை திகதியிலிருந்து ஒரு வருடத்திற்குள் செலுத்தித் தீர்க்க வேண்டிய தொகைகள் என்பனவாகும். நடப்பல்லாத பொறுப்புக்கள் என்பதன் மூலம் காட்டப்பட்டிருக்கும் அனைத்தும், ஐந்தொகை திகதியிலிருந்து ஒரு வருடம் முடிந்த பின்னரும் செலுத்தப்பட வேண்டியிருக்கும் கடப்பாடுகள் ஆகும்.

நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும் பொழுது, அறிந்திருந்த அனைத்து பொறுப்புக்களும் கணக்கில் பதிவு செய்யப்பட்டு, சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

### 3.10 ஓய்வு அனுகூலத் திட்டம்

அனைத்து ஊழியர்களுக்கும் ஓய்வுப் பணிக்கொடையை வழங்குவதற்கென ஒதுக்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பணிக்கொடையை பெற்றுக் கொள்வதற்கு தகைமையை பெற்றுக் கொள்ளும் அரை மாதச் சம்பளம், முதல் பணியாண்டு தொடக்கம் ஒவ்வொரு வருட இறுதியிலும் கணக்கிடப்பட்டு, இதற்கான ஒதுக்குகள் மேற்கொள்ளப்படுகின்றன.

### 3.11 வருமானக் கூற்று

3.11.1 திறைசேரியிலிருந்து கிடைக்கும் நிதியளிப்புக்கள், இலங்கை மகாவலி அதிகார சபையின் நிர்வாகத்தின் கீழ் இருந்து வரும் காணிகளை குத்தகைக்கு விடுவதன் மூலம் கிடைக்கும் குத்தகைத் தொகைகள், உத்தியோகபூர்வ வாசஸ்தலங்களிலிருந்து கிடைக்கும் கட்டணங்கள், முதலீடுகளிலிருந்து கிடைக்கும் வருமானம் மற்றும் வட்டி என்பன இலங்கை மகாவலி அதிகார சபையின் வருவாயில் அடங்குகின்றன.

3.11.2 இலங்கை மகாவலி அதிகார சபைக்கு பொருளாதார பயன்கள் கிட்டும் அதிக வாய்ப்புக்களின் பிரகாரமும், நம்பகத் தன்மையுடன் கூடிய விதத்தில் அதனை அளவிடக் கூடிய ஆற்றலின் அடிப்படையிலும் வருவாய் கணக்கிடப்பட்டுள்ளது. குத்தகை வருமானங்கள், ஏனைய வாடகைகள், உரிமைப் பங்குத் தொகைகள் மற்றும் வட்டி வருமானம் என்பன திரண்டு வரும் அடிப்படையில் கணக்கிடப்பட்டுள்ளன.

### 3.12 செலவு

நிறுவனத்தின் நாளாந்தச் செலவுகள், சொத்துக்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் என்பவற்றை செயல்திறனுடன் பராமரித்து வருவதற்கு மேற்கொள்ளப்படும் செலவுகள் என்பவற்றையும் உள்ளடக்கிய விதத்தில் அனைத்துச் செலவுகளும் கவனத்தில் எடுக்கப்பட்டு, வருமானக் கூற்றில் குறிப்பிடப்படும் வருடத்தின் இலாபம் / நட்டம் கணக்கிடப்பட்டுள்ளது. வாராக் கடன்கள் மற்றும் ஐயக் கடன்கள், அறிந்திருக்கும் அனைத்துப் பொறுப்புக்கள் தொடர்பாகவும் சொத்துக்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் என்பவற்றின் பெறுமானத் தேய்வு தொடர்பாகவும் ஒதுக்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

### 3.13 ஐந்தொகை திகதியின் பின்னர் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள்

ஐந்தொகை திகதியின் பின்னர் இடம்பெற்ற அனைத்து பௌதீக செயற்பாடுகளும் அவசியமான விதத்தில் சீராக்கம் செய்யப்பட்டுள்ளன.

### 3.14 அவசர கால நிலைமைகள்

இலங்கை மகாவலி அதிகார சபைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டிருக்கும் வழக்குகள் தொடர்பாக 31.12.2018 திகதியன்று நிலவி வரும் அவசர நிலை பொறுப்புத் தொகை ரூ. 42.800 மில்லியனாக இருந்து வந்தது.

**வரையறுக்கப்பட்ட மகாவலி வென்ச்சர் கெபிட்டல் (தனியார்) கம்பெனி**
**31.12.2018 இல் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள்**

| | குறிப்பு | 2018 | 2017 |
|---|---|---|---|
| | ரூ. | ரூ. | ரூ. |
| **சொத்துக்கள்** | | | |
| **நடைமுறை அல்லாத சொத்துக்கள்** | | | |
| சொத்துக்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் | 02 | 3 | 3 |
| முதலீடுகள் | 03 | 2,794,671 | 2,794,671 |
| | | 2,794,671 | 2,794,671 |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | |
| சிங்கர் மெஷின் கையிருப்பு | | 29,480 | 29,480 |
| கிடைக்க வேண்டியவ வட்டி | 04 | 380,726 | 380,726 |
| வெடிமருந்து கட்டுப்பாட்டு கணக்கு | | 28,336 | 28,336 |
| திருப்பிச் செலுத்திய வருமான வரி | 09 | 62,008 | 51,414 |
| ஏனைய கிடைக்க வேண்டியவை | 05 | 25,000 | 25,000 |
| திறைசேரி உண்டியல்கள் | | 9,455,896 | 9,831,457 |
| வங்கியிலிருக்கும் காசு | 06 | 2,817,589 | 3,463,810 |
| கையிருப்பில் இருக்கும் காசு | | 2,521 | 2,521 |
| | | 12,801,556 | 13,812,744 |
| **அனைத்துச் சொத்துக்களின் மொத்தம்** | | **15,596,230** | **16,607,418** |
| **உரித்துக்கள் பொறுப்புக்கள்** | | | |
| **உரித்துக்கள் ஒதுக்குகள்** | | | |
| வெளியிடப்பட்ட மூலதனம் | 07 | 10,398,000 | 10,398,000 |
| கிடைத்த நிதிகள் | 08 | 10,150,325 | 10,150,325 |
| இலங்கை மகாவலி அதிகார சபையின் பங்களிப்பு | | 432,000 | 432,000 |
| பிடித்து வைத்திருந்த இலாபம் / (நட்டம்) | | (5,765,303) | (4,833,615) |
| **உரித்துக்கள் மொத்தம்** | | 15,215,022 | 16,146,710 |
| | | | |
| **திரண்ட செலவுகள்** | 10 | 381,208 | 460,708 |
| **மொத்த பொறுப்புக்கள்** | | 381,208 | 460,708 |
| **மொத்த உரித்துக்கள் மற்றும் பொறுப்புக்கள்** | | 15,596,230 | 16,607,418 |

**(கடனீந்தோர் சுய விருப்பின் அடிப்படையில் முடித்துக் கொள்வதின் கீழ்)**

**இலங்கை மகாவலி அதிகார சபை**

**இல, 500, ரீ.பீ. ஜாயா மாவத்தை,**

**கொழும்பு 10**

**31.12.2018 இல் உள்ளவாறு நிதி நிலைமை தொடர்பான கூற்று**

| | குறிப்பு | குழுமம் | | மகாவலி அதிகார சபை | |
|---|---|---|---|---|---|
| | | ரூ. 000 | ரூ. 000 | ரூ. 000 | ரூ. 000 |
| | | **2018** | **2017** | **2018** | **2017** |
| **சொத்துக்கள்** | | | | | |
| **நடைமுறை அல்லாத சொத்துக்கள்** | | | | | |
| சொத்துக்கள், இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் | (1) | 4,675,657 | 4,120,943 | 4,614,637 | 4,056,757 |
| முதலீடுகள் | (2) | 171,313 | 187,531 | 529,876 | 526,316 |
| இடம்பெற்று வரும் வேலைகள் | | 84,947 | 78,552 | 84,947 | 78,552 |
| நடைமுறை அல்லாத சொத்துக்களின் மொத்தம் | | **4,931,917** | **4,387,026** | **5,229,460** | **4,661,625** |
| | | | | | |
| நடைமுறைச் சொத்துக்கள் - மூலதனம் | (3) | 167,027 | 134,578 | 156,572 | 127,444 |
| உத்தேச பதிவழிப்பு | | - | 859 | - | - |
| **உயிர்மச் சொத்துக்கள்** | | | | | |
| கையிருப்புத் தொகைகள் | (4) | 180,342 | 184,799 | 175,874 | 181,505 |
| உயிர்மச் சொத்துக்கள் -வர்த்தக | (3) | 26,312 | 10,360 | 24,852 | 9,267 |
| வியாபார மற்றும் ஏனைய கிடைக்க வேண்டிய தொகைகள் | (5) | 2,032,715 | 2,231,515 | 1,954,466 | 2,110,549 |
| முற்கொடுப்பனவுகள் | | 4,767 | 3,896 | 4,767 | 3,896 |
| வங்கிப் பிணை முறி | | 6,292 | 6,164 | - | - |
| காசு மற்றும் காசுக்கு இணையானவை | (6) | 312,702 | 343,312 | 304,528 | 325,612 |
| நடைமுறைச் சொத்துக்களின் மொத்தம் | | **2,563,129** | **2,780,045** | **2,464,487** | **2,630,837** |
| அனைத்துச் சொத்துக்களின் மொத்தம் | | **7,662,074** | **7,302,508** | **7,850,519** | **7,419,906** |
| | | | | | |
| **பொறுப்புக்கள்** | | | | | |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | | | | | |
| கடன் ஈந்தவர்களுக்கு கொடுக்க வேண்டிய தொகைகள் | (7) | 651,986 | 886,098 | 609,866 | 770,536 |
| **லீசிங் - எலயன்ஸ் நிதிக் கம்பனி** | | - | 2,153 | - | - |
| திரண்ட செலவுகள் | (8) | 102,067 | 175,190 | 68,075 | 148,407 |
| நடைமுறை பொறுப்புக்களின் மொத்தம் | | **754,053** | **1,063,441** | **677,941** | **918,943** |
| பணிக்கொடைகளுக்கான ஒதுக்குதல் | (9) | 1,379,494 | 1,389,477 | 1,367,485 | 1,376,517 |
| குத்தகை | | 219 | 271 | - | - |
| செலுத்த வேண்டிய வரி | | 612 | 612 | - | - |
| **நடைமுறை அல்லாப் பொறுப்புக்களின் மொத்தம்** | | 1,380,325 | 1,390,360 | 1,367,485 | 1,376,517 |
| **மொத்தப் பொறுப்புக்கள்** | | **2,134,378** | **2,453,801** | **2,045,427** | **2,295,460** |
| . | | | | | |
| **தேறிய சொத்துக்களின் மொத்தம்** | | **5,527,696** | **4,848,708** | **5,805,092** | **5,124,444** |
| **தேறிய சொத்துக்கள் /உரித்துக்கள்** | | | | | |
| திரண்ட நிதியம் | (10) | 24,649,830 | 24,407,260 | 24,646,826 | 24,404,255 |
| ஒதுக்கு : மு /கொ வருமான செலவுக்கணக்கு நிலுவை | | (24,050,551) | (23,615,502) | (23,709,285) | (23,285,893) |
| வருமான ஒதுக்கு – கம்பனிகளின் | | 50,865 | 50,865 | - | - |
| மீள் மதிப்பீட்டு இலாபம் | | 4,867,551 | 4,006,082 | 4,867,551 | 4,006,082 |
| **தேறிய சொத்துக்கள் / உரித்துக்களின் மொத்தம்** | | **5,527,696** | **4,848,708** | **5,805,092** | **5,124,444** |

**இலங்கை மகாவலி அதிகார சபை**

**இல, 500, ரீ.பீ. ஜாயா மாவத்தை,**

**கொழும்பு 10**

## 31.12.2018 இல் முடிவடைந்த வருடம் தொடர்பான காசுப் பாய்ச்சல் கூற்று

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | குழுமம் | | மகாவலி அதிகார சபை |
| | | | (ரூ 000) | | (ரூ. 000) |
| இயக்குதல் செயற்பாடுகளிலிருந்து கிடைத்த காசுப் பாய்ச்சல் | | | (414,206) | | (413,201) |
| | வரி செலுத்துதல் | | (79) | | - |
| | பங்கிலாபங்கள் | | (573) | | - |
| **காசு அல்லாத கொடுக்கல் வாங்கல்கள்** | | | | | |
| | பெறுமானத் தேய்வு | | 530,517 | | 526,636 |
| | பணிக்கொடைகளுக்கென ஒதுக்கப்பட்ட தொகை | | (9,983) | | (9,032) |
| | அதிகரித்த உயிர்மச் சொத்துக்களின் சம்பாத்தியங்கள் | | (32,449) | | (29,128) |
| | சொத்துக்களை மாற்றுதல் | | (30,655) | | (30,655) |
| | சொத்துக்களை ஒப்படைத்தல் | | 5,865 | | 5,865 |
| | **இயக்குதல் செயற்பாடுகள்** | | | | |
| | கையிருப்பில் அதிகரிப்பு / குறைவு | | 4,457 | | 5,631 |
| | உயிர்மச் சொத்துக்கள் அதிகரிப்பு / குறைவு – வியாபாரம் | | (15,952) | | (15,576) |
| | பதிவழிப்பு அதிகரிப்பு / குறைவு | | 859 | | - |
| | கிடைக்க வேண்டிய ஏனையவற்றில் அதிகரிப்பு | | 198,800 | | 156,083 |
| | கொடுப்பனவுகளில் அதிகரிப்பு / குறைவு | | 871 | | (871) |
| | வங்கிப்பிணைகளின் அதிகரிப்பு / குறைவு | | (129) | | |
| | செலுத்த வேண்டியவற்றில் அதிகரிப்பு / குறைவு | | (236,265) | | (160,670) |
| | திரண்ட செலவுகளில் அதிகரிப்பு / குறைவு | | (73,123) | | (80,332) |
| **இயக்குதல் செயற்பாடுகளிலிருந்து கிடைத்த தேறிய காசுப் பாய்ச்சல்** | | | **(73,786)** | | **(45,249)** |
| | | | | | |
| முதலீட்டுச் செயற்பாடுகள் | | | | | |
| | சொத்துக்கள், இயந்திர உபகரணங்கள் என்பவற்றில் ஏற்பட்ட அசைவுகள் | | (212,356) | | (211,641) |
| | சொத்துக்களை விற்பனை செய்ததன் மூலம் கிடைத்த தொகைகள் | | 4,131 | | 4,131 |
| | முதலீடுகளில் அதிகரிப்பு / குறைவு் | | 16,218 | | (3,560) |
| | இடம்பெற்று வரும் வேலைகளில் அதிகரிப்பு / குறைவு | | (6,396) | | (6,396) |
| | | | | | |
| **முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்து கிடைத்த தேறிய காசுப் பாய்ச்சல்** | | | **(198,403)** | | **(217,465)** |
| | | | | | |
| நிதிச் செயற்பாடுகள் | | | | | |
| | நிதி அறவீடு அதிகரிப்பு / குறைவு | | (52) | | - |
| | **திரண்ட நிதிகள் மற்றும் ஒதுக்குகள் அதிகரிப்பு / குறைவு** | | 241,631 | | 241,631 |
| **நிதிச் செயற்பாடுகளிலிருந்து கிடைத்த தேறிய காசுப் பாய்ச்சல்** | | | **241,579** | | **241,631** |
| காசு மற்றும் காசுக்கு இணையானவற்றில் தேறிய அதிகரிப்பு/ குறைவு | | | (30,610) | | (21,083) |
| 01.01.2018 இல் காசு மற்றும் காசுக்கு இணையானவற்றின் நிலுவை | | | 343,312 | | 325,612 |
| 31.12.2018 இல் காசு மற்றும் காசுக்கு இணையானவற்றின் நிலுவை | | | **312,702** | | **304,528** |

**இலங்கை மகாவலி அதிகார சபை**
**இல, 500, ரீ.பீ. ஜாயா மாவத்தை,**
**கொழும்பு 10**

**31.12.2018 இல் முடிவடைந்த வருடத்திற்கான நிதிச் செயலாற்றுகை தொடர்பான அறிக்கை**

| குழுமம் | அதிகார சபை | | | | | குழுமம் | | அதிகார சபை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | |
| **ரூ. 000** | **ரூ. 000** | | | பட்டியல் | | **ரூ. 000** | | **ரூ. 000** |
| **2017** | **2017** | - | | **(1)** | | **2018** | | **2018** |
| | | | | | | | | |
| | | | **வருமானம்** | | | | | |
| 197,530 | 197,530 | | வரிகள் | | | 257,680 | | 257,680 |
| 159,984 | 159,984 | | ஆக்க உரிமைத் தொகைகள் | | | 365,938 | | 365,938 |
| 32,367 | 8 | | ஒப்பந்தச் சேவைகள் | | | 33,822 | | - |
| 5,012 | - | | பண்ணை உற்பத்தி விற்பனைகள் | | | 6,655 | | 915 |
| 206 | 206 | | சுழல் வருமானம் | | | - | | - |
| 9,098 | - | | முதலீட்டு வருமானம் (கம்பெனிகள்) | | | 15,380 | | 8,654 |
| 214,967 | 214,876 | | ஏனைய வருமானங்கள் | | | 53,335 | | 51,264 |
| **619,165** | **572,603** | | **உருவாக்கப்பட்ட வருமானம்** | | | **732,809** | | **684,450** |
| | | | | | | - | | |
| 2,630,010 | 2,630,010 | | திறைசேரி அளிப்புக்கள்<br>- மீளவரும் | **(2)** | | 2,694,384 | | 2,694,384 |
| 2,345,477 | 2,345,477 | | - மூலதன | | | 1,976,359 | | 1,976,359 |
| 5,594,652 | 5,548,090 | | | | | **5,403,552** | | **5,355,93** |
| | | | | | | | | |
| | | | **கழிக்க : செலவுகள்** | **(3)** | | | | |
| 2,502,206 | 2,474,372 | | தனிப்பட்ட சம்பளங்கள் | | | 2,619,433 | | 2,591,043 |
| 42,932 | 42,606 | | பயணச் செலவு மற்றும் தங்குமிடக் கொடுப்பனவுகள் | | | 64,448 | | 64,189 |
| 129,398 | 126,347 | | வழங்கல் /போக்குவரத்து | | | 134,324 | | 128,924 |
| 60,504 | 58,706 | | பராமரிப்புச் செலவுகள் | | | 51,374 | | 51,158 |
| 122,924 | 121,705 | | ஒப்பந்தச் சேவைகள் | | | 127,387 | | 125,010 |
| 293 | 293 | | காப்புறுதி | | | 323 | | 323 |
| 80,311 | 69,278 | | ஏனைய செலவுகள் | | | 78,553 | | 69,018 |
| 502,703 | 499,339 | | பெறுமானத் தேய்வு | | | 525.827 | | 522,620 |
| - | - | | வருமான பதிவழிப்பு | | | - | | - |
| 2,557,832 | 2,557,832 | | புனரமைப்பு, விருத்தி மற்றும் ஏனைய பராமரிப்பு | **(4)** | | 2,182,666 | | 2,182,660 |
| | | | சமூக அபிவிருத்தி மற்றும் குடியேற்றச் சேவைகள் | | | | | |
| 13,810 | 13,810 | | சுற்றுலா விடுதி நட்டங்கள் | **(5)** | | 12,296 | | 12,296 |
| 8,469 | 8,469 | | அபிவிருத்தி பயிற்சி நிலையத்தின் நட்டம் | | | 7,002 | | 7,002 |
| 2,267 | 2,267 | | குடிநீர் கருத்திட்ட முகாமைத்துவ நட்டம் | | | 3,124 | | 3,124 |
| 9,168 | 9,168 | | செயலமர்வு நட்டம் | | | 366 | | 366 |
| 9,779 | 9,779 | | நாற்றுமேடை நட்டம் | **(6)** | | 6,371 | | 6,371 |
| (349) | (349) | | பண்ணை இலாபம் / நட்டம் | **(7)** | | 361 | | 361 |
| | | | | | | | | |
| | | | ஹெல பொஜுன்ஹல நட்டம் | | | 3,924 | | |
| 6,042,246 | 5,993,621 | | **மொத்த இயக்குதல் செலவுகள்** | | | 5,817,759 | | 5,768,394 |
| (447,594) | (445,531) | | **இயக்குதல் செயற்பாடுகள் மூலம் கிடைத்த மிகை / (குறை)** | | | **(414,206)** | | **(413,201)** |
| 11,685 | 11,685 | | கூட்டுக: சொத்துக்களை விற்பனை செய்ததன் மூலம் கிடைத்த இலாபம் / (நட்டம்) | **(8)** | | (10,191) | | (10,191) |
| 1,569 | - | | கழிக்கவும் : வரிகள் | | | 79 | | - |
| | | | பங்கிலாபங்கள் | | | 573 | | - |
| (437,478) | (433,846) | | **வரியின் பின்னர் இலாபம்** | | | (425,049) | | **(423,392)** |
| | | | பங்கிலாபம் | | | | | |
| (23,178,024) | (22,852,047) | | 2018.01.01 இல் முன்கொண்டு சென்ற நிலுவை | | | (23,615,502) | | **(23,285,893)** |
| **(23,615,502)** | **(23,285,893)** | | **மிகை / (குறை)** | | | **(24,040,551)** | | **(23,709,285)** |

**இலங்கை மகாவலி அதிகார சபை**

**இல, 500, ரீ.பீ. ஜாயா மாவத்தை,**

**கொழும்பு 10**

## உரித்துக்களில் ஏற்பட்ட மாற்றங்களை காட்டும் கூற்று

| | | | | |
|---|---|---|---|---|
| | **ரூ. 000** | **ரூ. 000** | **ரூ. 000** | **ரூ. 000** |
| | திரண்ட நிதியம் | ஒதுக்குகள் | வருமானம் மற்றும் செலவு | மொத்தம் |
| | | | | |
| 01.01.2017 இல் நிலுவை | 24,076,159 | 4,058,203 | (23,178,024) | 4,956,338 |
| | | | | |
| வருடத்தின் போது | 331,101 | (1,256) | (437,478) | (107,633) |
| | | | | |
| **31.12.2018 இல் நிலுவை** | **24,407,260** | **4,056,947** | **(23,615,502)** | **4,848,705** |
| | | | | |
| 01.01.2017 இல் நிலுவை | **24,407,260** | **4,056,947** | **(23,615,502)** | **4,848,705** |
| | | | | |
| வருடத்தின் போது | 242,570 | - | (425,049) | (182,479) |
| | | | | |
| **31.12.2018 இல் நிலுவை** | **24,649,830** | **4,056,947** | **(24,040,551)** | **4,666,226** |
| | | | | |
| **உரித்துக்களில் மாற்றங்களை காட்டும் கூற்று** | | மகாவலி அதிகார சபை | | |
| | **ரூ. ‘000** | **ரூ. ‘000** | **ரூ. ‘000** | **ரூ. ‘000** |
| | திரண்ட நிதியம் | ஒதுக்குகள் | வருமானம் மற்றும் செலவு | மொத்தம் |
| | | | | |
| | | - | | |
| 01.01.2017 இல் நிலுவை | 24,073,154 | 4,006,082 | (22,852,047) | 5,227,189 |
| | | | | |
| வருடத்தின் போது | 331,101 | - | (433,846) | (102,745) |
| | | | | |
| **31.12.2017 இல் நிலுவை** | **24,404,255** | **4,006,082** | **(23,285,893)** | **5,124,444** |
| | | | | |
| 01.01.2018 இல் நிலுவை | 24,404,255 | 4,006,082 | (23,285,893) | 5,124,444 |
| | | | | |
| வருடத்தின் போது | 242,570 | 861,469 | (423,392) | 680,647 |
| | | | | |
| **31.12.2018 இல் நிலுவை** | **24,646,825** | **4,867,551** | **(23,709,285)** | **5,805,091** |

# கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

# பாகம் III

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය / எனது இல. / My No. IEN/B/MASL/01/18/41   මබේ අංකය / உமது இல. / Your No.   දිනය / திகதி / Date : 2019 நவம்பர் 22

பணிப்பாளர் நாயகம்,
இலங்கை மகாவலி அதிகார சபை

**இலங்கை மகாவலி அதிகார சபை மற்றும் அதனால் நிர்வகிக்கப்படும் கம்பனிகள் உள்ளிட்ட குழுமத்தின் 2018 டிசம்பர் 31 ஆந் திகதியில் நிறைவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்று, ஏனைய சட்ட மற்றும் முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகள் தொடர்பான 2018 ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆம் உறுப்புரைக்கு அமைவாக கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை**

---

## 1. நிதிக் கூற்று

### 1.1 தகுதிவாய்ந்த அபிப்பிராயம்

இலங்கை மகாவலி அதிகார சபை மற்றும் அதன் கீழ் நிர்வகிக்கப்படும் கம்பனிகள் உள்ளிட்ட குழுமத்தின் 2018 டிசம்பர் 31 ஆந் திகதியில் நிதிநிலைக் கூற்று மற்றும் அந்த திகதியில் நிறைவடைந்த ஆண்டுக்கான விரிவான வருமானக் கூற்று, உரித்து மாற்றமடைதல் கூற்று மற்றும் அந்த திகதியில் நிறைவடைந்த ஆண்டுக்கான காசுப் பாய்ச்சல் கூற்று, நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள், சாராம்சப்படுத்தப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் என்பவற்றுடன் கூடிய 2018 டிசம்பர் 31 ஆந் திகதியில் முடிவவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள் இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154 (1) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக எனது பணிப்புரையின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. அரசியலமைப்பின் 154 (6) உறுப்புரைக்கு அமைவாக எனது அறிக்கை உரிய காலத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

எனது தகுதிவாய்ந்த அபிப்பிராயத்துக்கான அடிப்படை பிரிவுகளில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலான தாக்கங்கள் தவிர, இலங்கை மகாவலி அதிகார சபை மற்றும் அதனால் நிர்வகிக்கப்படும் கம்பனிகள் உள்ளடங்கிய குழுமத்தின் 2018 டிசம்பர் 31 ஆந் திகதியில் நிதிநிலை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிச் செயலாற்றுகை மற்றும் காசுப் பாய்ச்சல் என்பன இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு தரநியமங்களுக்கு ஏற்புடையதாக உண்மையான மற்றும் நியாயமான ஒரு நிலையை பிரதிபலிப்பதாக கருதுகிறேன்.


අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව   இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை.   No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34   +94 11 2 88 72 23   ag@auditorgeneral.gov.lk   www.naosl.gov.lk

## 1.2 தகுதிவாய்ந்த அபிப்பிராயத்துக்கான அடிப்படை

(அ) அதிகார சபை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு தரநியமங்களையும், அதன் கீழ் நிர்வகிக்கப்படும் கம்பனிகள் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளுக்கான கணக்கீட்டு தரநியமங்களையும் பின்பற்றியிருந்த போதிலும், கம்பனியினால் பின்பற்றப்பட்ட அடிப்படை காரணமாக நிதிக் கூற்றுகளில் ஏற்பட்டிருந்த தாக்கம் வெளிப்படுத்தப்படவில்லை.

(ஆ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு தரநியமம் 3 இற்கு அமைவாக மகாவலி ஆலோசனை சேவைகள் பணியகம் (தனியார்) கம்பனியினதும், மகாவலி கால்நடை வளங்கள் மற்றும் விவசாய தொழில்முயற்சிகள் (தனியார்) கம்பனியினதும் நடைமுறையற்ற சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாமை காரணமாக முறையே ரூ. 3,058,326 மற்றும் ரூ. 20,713,263 கிரயத்தை கொண்ட நிலையான சொத்துக்கள் தொடர்பாக முழுமையாக பெறுமானத் தேய்வு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அவை தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வந்திருந்தன. அதன் காரணமாக ஏற்பட்ட மதிப்பீட்டுத் தவறை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மகாவலி கால்நடை வளங்கள் மற்றும் விவசாய தொழில்முயற்சிகள் (தனியார்) கம்பனியின் நிதிக் கூற்றுகளில் அடங்கியுள்ள ரூ. 14,117,550 நிலுவையுடன் கூடிய தொங்கல் கணக்கு தொடர்பில் பரிசீலனை மேற்கொள்ளாமல், ஒருங்கிணைந்த நிதிக் கூற்றுகளில் அத் தொகை கடன்பட்டோர் பிரிவில் காட்டப்பட்டுள்ளது.

(ஈ) அதிகார சபைக்கு உரித்தில்லாத இரண்டு காணித் துண்டுகள் ரூ. 466,325,000 என மதிப்பீடு செய்யப்பட்டு, கணக்கில் எடுக்கப்பட்டிருந்தது. மேலும், அதிகார சபையினால் 1984-1989 காலப் பகுதியில் கொள்வனவு செய்யப்பட்ட கிரயம் ரூ. 64,320,853 பெறுமதியான 02 காணித்துண்டுகள் கணக்கில் பதியப்பட்டிருக்கவில்லை.

(உ) 2016 ஆம் ஆண்டில் அரலகன்வில விதைப் பண்ணையில் இறுதிக் கையிருப்பு மிகையாக காட்டப்பட்டமை 2017 ஆம் ஆண்டில் திருத்தப்பட்டிருந்தது. இருந்தபோதிலும், மீளாய்வு ஆண்டின் போது மீண்டும் அந்த மிகை கணக்குகளில் சீராக்கப்பட்டமை காரணமாக, மீளாய்வு ஆண்டின் இலாபம் ரூ. 5,286,227 வினால் மிகையாக காட்டப்பட்டிருந்தது.

(ஊ) குடியேற்றவாசிகளுக்கு கடன்களை வழங்குவதற்காக திறைசேரியிலிருந்து கிடைத்து, வங்கிக்கு வழங்கப்பட்டிருந்த ரூ. 147,750,000 பணத்திலிருந்து வழங்கப்பட்ட கடன் தொகைகள் கடன்பட்டோர் மீதியாகவும், எஞ்சிய தொகை வங்கியிலுள்ள காசு மீதியாகவும் கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. அந்த நிதியிலிருந்து வழங்கப்பட்ட கடன் தொகைகள், அறவிடப்பட்ட தொகைகள் மற்றும் ஈட்டப்பட்ட வட்டி வருமானம்

என்பன தொடர்பான வெளிப்படுத்துகைகளும் ஒரு குறிப்பின் மூலம் காட்டப்பட்டிருக்கவில்லை.

(எ) அணைக்கட்டு பாதுகாப்பு மற்றும் நீர் வளங்கள் திட்டமிடல் கருத்திட்டத்திலிருந்து அதிகார சபைக்கு மாற்றப்பட்டிருந்த கிரயம் ரூ. 671,503,748 தொகை நிலையான சொத்துக்களின் ஒரு பகுதி ரூ. 201,640,037 ஆக மீள மதிப்பிடப்பட்டு, கணக்கு வைக்கப்பட்டிருந்த போதிலும், எஞ்சிய சொத்துக்கள் மீள மதிப்பிடப்பட்டு கணக்கில் சேர்த்து கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும், அந்த கருத்திட்டத்தின் திட்ட முகாமைத்துவ வசதிகளின் கீழ் பல்வேறு ஒப்பந்த வேலைகளிலிருந்து அதிகார சபைக்கு கிடைத்திருந்த ரூ. 4,369,284 பெறுமதியான சொத்துக்களும் கணக்கில் சேர்க்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) மீளாய்வு ஆண்டில் **'C'** வலயத்திலிருந்து கிடைக்க வேண்டிய குத்தகை நிலுவைத் தொகை கணக்கிடப்பட்டு, சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஐ) மீளாய்வு ஆண்டில் அதிகார சபைக்கு ரூ. 2,188 மில்லியன் மூலதனக் கொடை கிடைத்திருந்த போதிலும், அந்தக் கொடையை கணக்கு வைப்பதற்கான ஒரு கணக்கீட்டுக் கொள்கை தயாரிக்கப்பட்டிருக்காமை காரணமாக பிற்போடப்பட்ட வருமானம், முறையான வருமானமாக அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக திரண்ட நிதி அதிகரித்து, மீளாய்வு ஆண்டின் இறுதியில் ரூ. 24,647 மில்லியனாக இருந்தது.

(ஒ) புனரமைப்பு மற்றும் மேம்படுத்தல் செயற்பாடுகளுக்கான செலவுகளிலிருந்து உருவாகும் மூலதன இயல்பிலான சொத்துக்கள் அங்கீகரிக்கப்பட்டு, கணக்கு வைக்கப்படுவதற்குப் பொருத்தமான ஒரு கணக்கீட்டுக் கொள்கை அறிமுகப்படுத்தபட்டிருக்கவில்லை. மீளாய்வு ஆண்டில் மேற்கொள்ளப்பட்டிருந்த புனரமைப்பு மற்றும் மேம்படுத்தல் செயற்பாடுகளுக்கான செலவுகள் ரூ. 2,182 மில்லியன் ஆகும்.

(ஓ) அதிகார சபையால் நிர்வகிக்கப்படும் 10 வலயங்களில் 637,810 ஹெக்டெயார் அரச காணிகள், 12 நீர்த்தேக்கங்கள், 8708 கி.மீ. வாய்க்கால்கள், 463 குளங்கள், 1127.5 கி.மீ. வீதிகள் மற்றும் 1046 பல்வேறு நீர்வள மூலாதாரங்கள் என்பவற்றின் பராமரிப்பு மற்றும் நவீனமயப்படுத்தல் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதுடன், அந்தச் சொத்துக்கள் அதிகார சபையின் நிர்வாகத்துக்கு உரித்தாக்கப்பட்டிருந்தன. இருப்பினும், அந்தச் சொத்துக்களின் விபரங்கள் ஒரு குறிப்பின் மூலம் நிதிக் கூற்றுகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஔ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு தரநியமம் 01 ற்கு அமைவாக ஒருங்கிணைந்த நிதிக் கூற்றுகளில் உள்ளடக்கப்பட்ட ரூ. 156,572,000 பெறுமதியான விவசாய மற்றும் கால்நடை வளங்கள் கையிருப்பின் பெறுமதி, மதிப்பீடு செய்யப்பட்ட முறை ஒரு குறிப்பின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஃ) 2016 ஆம் ஆண்டில் முன்னனைய ஆண்டு தொடர்பாக கிடைத்திருந்த ரூ. 20,960,226 பாக்கி குத்தகை வருமானத்தை 2016 ஆம் ஆண்டு வருமானமாக கணக்கில் எடுத்திருந்த தவறு திருத்தப்படும் போது, திரண்ட நட்டக் கணக்குக்கு பற்று வைத்து, கிடைக்க வேண்டிய குத்தகை வாடகை கணக்கில் வரவு வைக்க வேண்டியிருந்த போதிலும், முன்னைய ஆண்டு மற்றும் மீளாய்வு ஆண்டில் திரண்ட நட்டக் கணக்கில் வரவு வைக்கப்பட்டு, கிடைக்க வேண்டிய குத்தகை வாடகை கணக்கில் பற்று வைக்கப்பட்டதன் காரணமாக ஆண்டின் இறுதியில் திரண்ட நட்டம் ரூ. 83,840,904 ஆக குறைவடைந்து, கிடைக்க வேண்டிய குத்தகை வாடகை கணக்கு அந்தத் தொகையால் அதிகரித்திருந்தது.

(க) மீளாய்வு ஆண்டில் சிறிய அளவிலான நீர் மின் உற்பத்தி நிலையங்களிலிருந்து கிடைக்க வேண்டிய ரூ. 5,373,634 அரச உரிமைத் தொகை கணக்கில் சேர்க்கப்பட்டிருக்கவில்லை.

(கா) 2009, 2010 ஆகிய ஆண்டுகளில் தலா ரூ. 500,000 என்றவாறு ரூ. 1,000,000 பெறுமதியான இரண்டு ஏழுநாள் வைப்புகள் முறையே 3 % மற்றும் 10.5 % வருடாந்த வட்டி விகிதங்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தன. அந்த வட்டி வருமானம் முதலீடு செய்த திகதியிலிருந்து 2018 ஆம் ஆண்டு வரையும் கணக்கில் சேர்த்துக்கப்பட்டிருக்கவில்லை.

(கி) ஒருங்கிணைந்த நிதிக் கூற்றுகளில் உள்ளடக்கப்பட்டுள்ள மகாவலி கால்நடை வளங்கள் கம்பனியின் முதலீட்டுப் பெறுமதியை, அந்தக் கம்பனியின் நிதிக் கூற்றுகளில் காட்டப்பட்டுள்ள பெறுமதியுடன் ஒப்பிடும் போது ரூ. 2,694,781 வேறுபாடு நிலவியது.

(கீ) ரூ. 20,477,000 முதலீடுகளுக்குரிய பங்குப் பத்திரங்கள், ரூ. 2,632,908 சேமிப்புக் கணக்கு மற்றும் ரூ. 727,481 நிலையான வைப்பு என்பன தொடர்பான மீதிகளை உறுதிப்படுத்துதல், வங்கி பாஸ் புத்தகங்கள் மற்றும் வைப்புச் சான்றிதழ் என்பன கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படாமை காரணமாக அவற்றை கணக்காய்வில் திருப்திகரமாக பரிசீலிக்க முடியாதிருந்தது.

இலங்கை கணக்காய்வு தரநியமங்களுக்கு அமைவாக என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்தக் கணக்காய்வு தரநியமங்களின் கீழான எனது பொறுப்புக்கூறல், இந்த அறிக்கையின் நிதிக் கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புகூறல் எனும் பகுதியில் மேலதிகமாக விபரிக்கப்பட்டள்ளது.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பான முகாமைத்துவத்தினதும், நிர்வகிக்கும் தரப்பினரதும் பொறுப்புகூறல்

---

இந்த நிதிக் கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு தரநியமங்களுக்கு அமைவாக தயாரித்தல், நியாயமாக சமர்ப்பித்தல் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகள்

காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிழையான கூற்றுக்கள் இல்லாத விதத்தில் நிதிக் கூற்றுகளை தயாரிப்பதற்குத் தேவையான உள்ளக கட்டுப்பாடுகளை தீர்மானித்தல் என்பன முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக் கூற்றுகளை தயாரிக்கும் போது அதிகார சபையை தொடர்ச்சியாக இயக்கிச் செல்வதற்கான இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும் என்பதுடன், முகாமைத்துவம் அதிகார சபையை கலைக்க வேண்டுமென கருதினால் அல்லது வேறு மாற்று வழிகள் இல்லாத சந்தர்ப்பத்தில் செயற்பாடுகளை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தால் தவிர, தொடர்ச்சியாக இயக்கப்படும் என்ற அடிப்படையில் கணக்கு வைத்தல் மற்றும் அதிகார சபையின் தொடர்ச்சியான இருப்புக்குரிய விடயங்களை வெளிப்படுத்துதல் என்பன முகாமைத்துவத்தின் பொறுப்பாக உள்ளது.

அதிகார சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பிலான பொறுப்பு, நிர்வகிக்கும் தரப்பினரால் வகிக்கப்படுகிறது.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16 (1) உப பிரிவுக்கு அமைவாக, அதிகார சபையின் வருடாந்த மற்றும் பருவகால நிதிக் கூற்றுகளை தயாரிக்கக்கூடிய வகையில் வருமானம், செலவு, சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் கணக்கேடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்பட்டு வர வேண்டும்.

### 1.4 நிதிக் கூற்றுகளின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஓட்டுமொத்தமாக நிதிக் கூற்றுகள், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிழையான கூற்றுக்களை கொண்டிருக்கவில்லை என நியாயமான உறுதிப்படுத்தலை வழங்குவதும், எனது அபிப்பிராயத்துடன் கூடிய கணக்காய்வாளரின் அறிக்கையை வெளியிடுவதும் எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலாக இருந்து வந்த போதிலும், இலங்கை கணக்காய்வு தரநியமங்களுக்கு அமைவாக கணக்காய்வை மேற்கொள்ளும் போது, அது எப்போதும் போதுமானளவு தவறான கூற்றுக்கள் வெளிப்படுத்தப்பட்டிருப்பதனை உறுதிப்படுத்தபடுவதாக அமையாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ, கூட்டாகவோ தாக்கம் செலுத்துவதன் காரணமாக அளவு ரீதியான தவறான வெளிப்படுத்தல்கள் இடம்பெறலாம் என்பதுடன், இந்த நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பரிசீலனையாளர்கள் மேற்கொள்ளும் பொருளாதார தீர்மானங்கள் தொடர்பில் அது தாக்கத்தை ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தொழில்வாண்மையான தீர்ப்பு மற்றும் தொழில்வாண்மையான சந்தேக உணர்வுடன் இலங்கை கணக்காய்வு தரநியமங்களுக்கு அமைவாக என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும்,

- மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக நிதிக் கூற்றுகளில் ஏற்படக்கூடிய குறிப்பிடத்தக்க அளவு பிழையான கூற்றுகளின் ஆபத்தை இனங்காணும் போதும், மதிப்பீடு செய்யும் போதும் சந்தர்ப்பத்துக்கு ஏற்றவாறு பொருத்தமான கணக்காய்வு ஒழுங்குவிதிகள் திட்டமிடப்பட்டு, மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்ப்பதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வு சான்றுகளை பெறுதல் எனது அபிப்பிராயத்துக்கு அடிப்படையானதாகும். அளவு ரீதியான பிழையான கூற்றுக்கள் காரணமாக ஏற்படும் தாக்கத்தை விடவும் மோசடிகளால் ஏற்படும் தாக்கம் வலுவானதாகும்; களவு வேலைகளில் கூட்டு, போலி ஆவணங்களை தயாரித்தல், வேண்டுமென்றே தவிர்த்தல் அல்லது உள்ளக கட்டுப்பாடுகளை தந்திரமாக தவிர்த்தல் போன்றவற்றுக்கு அது வழிகோலுகின்றது.
- சந்தர்ப்பத்துக்கு ஏற்றவாறு பொருத்தமான கணக்காய்வு ஒழுங்குவிதிகளை திட்டமிடுவதற்கென அதிகார சபையின் உள்ளக கட்டுப்பாடு தொடர்பிலான தெளிவு பெறப்பட்ட போதிலும், உள்ளகக் கட்டுப்பாட்டின் வினைத்திறன் தொடர்பாக ஒரு அபிப்பிராயத்தை வெளியிடுவதற்கு இங்கு எதிர்பார்க்கப்படவில்லை.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மை மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தப்பாடு என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- சம்பவங்கள் அல்லது நிலைமைகள் காரணமாக அதிகார சபையின் தொடர்ச்சியான இருப்பு தொடர்பில் போதுமானளவு நிச்சயமற்ற தன்மை உள்ளதா என்பது தொடர்பில், பெறப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளின் அடிப்படையில் கணக்கீட்டுக்காக நிறுவனத்தின் தொடர்ச்சியான இருப்பு தொடர்பான அடிப்படையை பாவிப்பதற்கான பொருத்தப்பாடு தீர்மானிக்கப்பட்டது. போதுமானளவு நிச்சயமற்ற தன்மை உள்ளதாக நான் தீர்மானித்தால் நிதிக் கூற்றுக்களில் அது தொடர்பிலான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையில் கவனம் செலுத்த வேண்டும்; அந்த வெளிப்படுத்தல் போதுமானதாக இருந்து வராவிட்டால், எனது அபிப்பிராயம் மாற்றியமைக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால சம்பவங்கள் அல்லது நிலமைகளின் அடிப்படையில் தொடர்ச்சியான இருப்பு முடிவடையலாம்.

- வெளிப்படுத்துகைகள் அடங்கலாக நிதிக் கூற்றுகளை சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கம் என்பன மதிப்பீடு செய்யப்பட்டதுடன், அதற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக் கூற்றுகளில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், பிரதான உள்ளக கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் நிர்வகிக்கும் தரப்பினருக்கு தெளிவுபடுத்தப்பட்டது.

## 2. ஏனைய சட்டபூர்வ மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

---

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் கீழே குறிப்பிடப்படும் தேவைப்பாடுகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தில் 12 (அ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு அமைவாக, அறிக்கையில் அபிப்பிராயத்துக்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களால் ஏற்படும் தாக்கங்கள் தவிர, கணக்காய்வுக்கு தேவையான அனைத்து தகவல்கள் மற்றும் தெளிவுபடுத்தல்கள் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டதுடன், எனது பரிசீலனையில் தெரிய வரும் விதத்தில் உரிய நிதி அறிக்கைகளை அதிகார சபை பேணி வந்துள்ளது.

- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (ஈ) (iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு ஏற்ப, அதிகார சபையால் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுகள் முன்னைய ஆண்டுடன் ஏற்புடையதாகின்றன.

- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6 (1) (ஈ) (iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு ஏற்ப, பின்வரும் விதந்துரைகள் தவிர, முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட விதந்துரைகள், சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுகளில் அடங்கியுள்ளன.

  (அ) உடவளவே வலயத்துக்குரிய 03 வீடுகள், 02 படுக்கை அறைகள், 01 விடுமுறை விடுதி மற்றும் 01 கட்டிடம் என்பவற்றின் கிரயம் இனங்காணப்பட்டு, கணக்கில் சேர்க்கப்பட்டிருக்கவில்லை.

  (ஆ) மொரகஹகந்த கருத்திட்டம் மற்றும் ஆற்றுப் பள்ளத்தாக்கு அலுவலம் என்பற்றிலிருந்து நீராவிய பண்ணைக்கு 2010 - 2016 காலப் பகுதியில் வழங்கப்பட்டிருந்த 12 மோட்டார் சைக்கிள்கள், 02 மல்டி சொப்பர் இயந்திரங்கள், பால் போக்குவரத்து லொறி 01, 03 உழவு இயந்திரங்கள், 04 கோழி வளர்ப்பு கட்டிடங்கள், 02 இலத்திரனியல் தராசுகள், 01 பெலின் இயந்திரம் ஆகிய சொத்துக்கள் கணக்கில் சேர்க்கப்பட்டிருக்கவில்லை.

பின்பற்றப்பட்ட செயற்பாடுகள் மற்றும் பெறப்பட்ட சான்றுகள் அடிப்படையில் அளவு ரீதியான விடயங்களின் வரையறைகளுக்கு அமைவாக, கீழே குறிப்பிடப்படும் கூற்றுக்களை மேற்கொள்ளக்கூடிய அளவுக்கு எவையும் எனது கவனத்தில் படவில்லை.

- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஈ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு அமைவாக, அதிகார சபையின் பணிப்பாளர் சபையின் எவரேனும் ஓர் உறுப்பினர் அதிகார சபை தொடர்பான ஏதாவது உடன்படிக்கையில் நேரடியாகவோ, வேறு வகையிலோ, பொதுவான வர்த்தக நிலைமைக்கு புறம்பான விதத்தில் தொடர்புகளை வைத்திருந்ததாக.

- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஊ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு அமைவாக, கீழே குறிப்பிடப்படும் அவதானிப்புகள் தவிர, ஏதாவது தொடர்புடைய எழுத்திலான சட்டத்துக்கு அல்லது அதிகார சபையின் பணிப்பாளர் சபையினால் வெளியிடப்பட்ட வேறு பொதுவான அல்லது விசேட ஆணைகளுக்கு இணங்கி ஒழுகாத விதத்தில் செயற்பட்டதாக.

| சம்பந்தப்பட்ட ஒழுங்குவிதிகள் / ஆணைகள் | விபரம் |
|---|---|
| (அ) 2013 ஆண்டின் 17 ஆம் இலக்க பெறுமதி சேர் வரி (திருத்த) சட்டத்தின் 10 (ஆ) பிரிவு | 12 மாத காலப் பகுதியில் பொருட்கள் மற்றும் சேவைகள் வழங்கலின் மொத்தப் பெறுமதி ரூ. 12 மில்லியனை மிகைத்துக் காணப்பட்டால் இச் சட்டத்தின் கீழ் பெறுமதி சேர் வரிக்கு பதிவு செய்ய வேண்டும். இருப்பினும் அதிகார |

| | |
|---|---|
| | சபையின் வருமான மூலங்களிலிருந்து முன்னைய ஆண்டில் 93 மில்லியன் ரூபாவும், மீளாய்வு ஆண்டில் 152 மில்லியன் ரூபாவும் சேகரிக்கப்பட்டிருந்த போதிலும் பெறுமதி சேர் வரி தொடர்பாக பதிவு செய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2003 ஜுன் 02 ஆந் திகதிய PED 12 இலக்க சுற்றறிக்கையின் பிரிவு 6.5.1 | நிதியாண்டு நிறைவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் மற்றும் வருடாந்த அறிக்கை வரைபு என்பன கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். மீளாய்வு ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 05 மாதங்கள் தாமதமாக 2019 ஜுலை 31 ஆந் திகதி கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அதனுடன் சேர்த்து ஆண்டு அறிக்கை வரைபு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 2016 மார்ச் 24 ஆந் திகதிய 01 / 2016 இலக்க முகாமைத்துவச் சேவைகள் திணைக்களச் சுற்றறிக்கையின் பந்தி 2.3.3 | உத்தியோகத்தர் ஒருவரை அரசாங்கத்தின் தேவையின் பிரகாரம் கருத்திட்டம் ஒன்றுக்கு முழு நேர அடிப்படையில் 5 வருட காலத்துக்கு விடுவிக்க முடியும்; அல்லது சம்பளமற்ற அடிப்படையில் ஊழியரின் வேண்டுகோளின் பிரகாரம் 05 வருட காலத்துக்கு மட்டும் விடுவிக்க முடியும். இருப்பினும் 03 அலுவலர்கள் 10 ஆண்டுகளுக்கு கூடுதலான காலம் அணைக்கட்டு பாதுகாப்பு மற்றும் நீர் வளங்கள் திட்டமிடல் கருத்திட்டதின் சேவைக்காக விடுவிக்கப்பட்டிருந்தனர். |
| (ஈ) அதிகார சபையின் நிதி ஒழுங்குவிதிக் கோவையின் பந்தி 1.5.1 மற்றும் பணிப்பாளர் நாயகத்தின் 02 / 2012 இலக்க 2012 மார்ச் 15 ஆந் திகதிய உள்ளக சுற்றறிக்கையின் பிரிவு 05 | முற்பணமாக பெறப்பட்ட பணத் தொகைகள் வேலை முடிவடைந்து 7 நாட்களுக்குள் தீர்த்து வைக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 10 வலயங்கள் மற்றும் 02 பிரிவுகளுக்குரிய ரூ. 175,963,000 முற்பணத் தொகைகள் ஒரு வருடத்துக்கு கூடுதலான காலப் பிரிவின் போது நிலுவையில் இருந்து வந்தன. |
| (உ)அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரிவு 4.2.1 (ஆ) மற்றும் (இ) | பெறுகை நிறுவனத்தினால் ஆகக்குறைந்தது மூன்று ஆண்டு காலத்துக்கான உத்தேச பெறுகை செயற்பாடுகளை உள்ளடக்கிய பிரதான பெறுகை திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். அடுத்து வரும் ஆண்டுக்கான பெறுகை செயற்பாடுகள் விபரமாக தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அதிகார சபை அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை. அடுத்து வரும் ஆண்டுக்கான பெறுகை திட்டம் அந்த ஆண்டு ஆரம்பமாவதற்கு முன்னரே தயாரிக்கப்பட்டு, பணிப்பாளர் சபையின் ஒப்புதல் பெறப்பட்டிருக்கவில்லை. |
| (ஊ) பெறுகை கையேட்டின் வழிகாட்டல் 4.1 (இ) | அசல் பெறுகை திட்டம் தொடர்ச்சியாக ஒழுங்குமுறைப்படுத்தப்பட்டு, இற்றைப்படுத்தப்பட வேண்டும்; எனினும், |

| | |
|---|---|
| | மீளாய்வுக்கு உட்படுத்தப்படும் ஆண்டுக்கான அதிகார சபையின் பெறுகை திட்டம் அவ்வாறு இற்றைப்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதுடன், செயல் திட்டத்தில் அடங்கியுள்ள செயற்பாடுகளுக்கும், பெறுகை திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த செயற்பாடுகளுக்கும் இடையில் வேறுபாடுகள் காணப்பட்டன. |

- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (எ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு அமைவாக, அதிகார சபையின் அதிகாரம், பணிகள் மற்றும் கருமங்கள் என்பவற்றுக்கு இணங்கி ஒழுகாத விதத்தில் செயற்பட்டிருப்பதாக.

- 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஏ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளுக்கு அமைவாக, கீழே குறிப்பிடப்படும் அவதானிப்புகள் தவிர, அதிகார சபையின் வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், பயனுள்ள விதத்திலும் குறிப்பிட்ட காலப் பகுதியில் உரிய ஒழுங்குவிதிகளுக்கு அமைவாக பெறுகை செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு, பாவிக்கப்பட்டிருக்கவில்லையென.

(அ) 2017 ஆம் ஆண்டில் ரூ. 8,550,788 செலவில் பழுது பார்க்கப்பட்டிருந்த கொத்மலை பணிப் பொறுப்பு பொறியியலாளர் அலுவலகத்துக்குரிய பாரந்தூக்கி, உரிய வகையில் பழுது பார்க்கப்பட்டிருக்காத காரணத்தினால் 2017 டிசம்பர் 29 திகதியிலிருந்து 2019 மே மாதம் வரை செயலற்றுக் கிடந்தது.

(ஆ) கொத்மலை பணிப் பொறுப்பு பொறியியலாளர் அலுவலகத்தின் பழைய அணைக்கட்டு மாதிரி அகற்றப்பட்டிருந்ததுடன், புதிய அணைக்கட்டு மாதிரியை தயாரித்தல் மற்றும் தற்போதுள்ள பார்வையாளர் இடத்தை புனரமைத்தல் என்பவற்றுக்கென 2017 ஆம் ஆண்டில் ரூ. 6,990.000 வேலை ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது; எனினும், ரூ. 2,060,000 செலவிடப்பட்டு நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த அணைக்கட்டு மாதிரி 2019 மே மாதம் வரையிலும் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) அதிகார சபையின் வருடாந்த பெறுகை திட்டத்திலும், மொரகஹகந்த கருத்திட்டத்தின் அங்கீகரிக்கப்பட்ட திட்டத்திலும் உள்ளடக்கப்படாதிருந்த அதிகார சபையின் தலைமை அலுவலகத்துக்கு முன்னால் மொரகஹகந்த நீர்த்தேக்கத்தின் மாதிரியை நிர்மாணிப்பதற்கு ரூ.2,580,000 செலவிடப்பட்டிருந்தது. அதற்குரிய செலவு மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை என்பதுடன், இந்தச் செயற்பாட்டுக்கான நிதி ஒதுக்கீட்டை வழங்குவதற்காக உத்தேச செலவு மதிப்பீட்டை சமர்ப்பிக்குமாறு அமைச்சின் செயலாளர் கோரியிருந்த போதிலும், அது சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மொரகஹகந்த திட்டத்தின் மூலம் செலவுகளை ஈடு செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், உத்தேச செலவு மதிப்பீடு அமைச்சின் செயலாளருக்கு சமர்ப்பிக்கப்படாமை காரணமாக கருத்திட்டத்தினால் செலவுகள் ஈடு செய்யப்பட்டிருக்கவில்லை. அரசின் பெறுகை வழிகாட்டல் கோவையின் 2.5.1 (அ) பந்திக்கு முரணாகவும், அங்கீகரிக்கப்பட்ட செலவு மதிப்பீடு இன்றியும் 2018 ஜூலை 10 ஆந் திகதி பெறுகை குழுவினால் மேற்குறித்த பெறுகை செயற்பாட்டுக்கு

அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்ததுடன், அதிகார சபையினால் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**3. ஏனைய அவதானிப்புகள்**

(அ) சூரியவெவ பிரிவு முகாமையாளர் பிரதேச அதிகார எல்லையில் உள்ள 6758 இலக்க காணியின் அனுமதிப் பத்திரதாரர் குத்தகை பணத்தை செலுத்தாமை காரணமாக காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் 107 தொடக்கம் 112 வரையான பிரிவுகளுக்கு அமைவாக, அனுமதிப் பத்திரத்தை முறைப்படி இரத்து செய்யாமல் மீண்டும் இரு நபர்களுக்கு அக்காணி வழங்கப்பட்டிருந்தது. அதில் ஒரு நபர் 2013 ஆம் ஆண்டிலிருந்து உத்தேச மதிப்பீட்டின் அடிப்படையில் குத்தகை தொகைகளை செலுத்தியிருந்த போதிலும், மற்றைய நபரிடமிருந்து ரூ. 53,600 அறவிடப்பட வேண்டியிருந்தது.

(ஆ) 6438 இலக்க காணிக்கு சூரியவெவ பிரிவு முகாமையாளர் வழங்கியிருந்த அனுமதிப்பத்திரம் போலியானது என வளவே வதிவிட கருத்திட்ட முகாமையாளரால் தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்தக் காணியில் 80 பேர்ச் அளவு அத்துமீறிய காணி முறைப்படுத்தலின் கீழ் பிறிதொரு நபருக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும், அதனை பெற்றுக் கொண்ட தினத்திலிருந்து அவர் குத்தகை தொகைகளை செலுத்தியிருக்கவில்லை. உத்தேச மதிப்பீட்டின் அடிப்படையில் அறவிடப்பட வேண்டிய பாக்கி குத்தகை தொகை ரூ. 111,680 ஆகும். குத்தகை செலுத்தப்படாத போதிலும், காணியை இரத்து செய்வதற்கென நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) சூரியவெவ முகாமையாளர் பிரிவில் உள்ள 6407 இலக்க காணியை ஒரு நபர் அத்துமீறிய விதத்தில் அனுபவித்து வருகிறார். 2019 ஆம் ஆண்டு வரையில் அதிகார சபை அது தொடர்பாக எத்தகைய நடவடிக்கைகளையும் மேற்கொண்டிருக்கவில்லை.

(ஈ) கடன்களை வழங்குவதற்கென 2002 ஆம் ஆண்டில் ஒரு சுழல் நிதியத்தை உருவாக்குவதற்காக ரூ. 48 மில்லியன் பிரதேச அபிவிருத்தி வங்கியில் வைப்புச் செய்யப்படிருந்த போதிலும், 2019 ஆம் ஆண்டு வரை கடன் தொகைகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மீளாய்வு ஆண்டின் இறுதியில் வைப்பு பெறுமானம் ரூ. 88.2 மில்லியனாக இருந்து வந்ததுடன், சாதாரண சேமிப்பு வட்டியை விடவும் குறைவான 4 % வட்டியில் இந்த நிதி நீண்ட காலமாக வங்கியில் இருந்து வந்த போதிலும், அது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) **C** வலய விவசாய முகாமைத்துவ நிலையத்தின் வருமானம் மாதாந்தம் தலைமை அலுவலகத்துக்கு செலுத்தப்பட்டிருக்கவில்லை. வங்கிக் கணக்கின் மீதி 2018 டிசம்பர் 31 ஆந் திகதியில் ரூ. 87,856,695 ஆக இருந்து வந்தது. முதலீடுகள் எவையும் மேற்கொள்ளப்படாமல் அந்தத் தொகை வெறுமனே வங்கியில் வைக்கப்பட்டு இருந்தது.

(ஊ) மீளாய்வு ஆண்டில் அதிகார சபையினால் ரூ. 1,193,155,190 வருமானம் மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும், அதில் 63% ஆன ரூ. 753,493,183 தொகையே உண்மையாக ஈட்டப்பட்டிருந்தது. அதில் ‘H’, உடவளவே, ‘C’ வலயங்களில் மதிப்பீடு செய்யப்பட்டிருந்த வருமானத்தில் ஈட்டப்பட்ட வருமானம் 50% தை விடவும் குறைவடைந்திருந்தது.

(எ) மீளாய்வு ஆண்டில் சிறு அளவிலான நீர்மின் உற்பத்தி நிலையங்களிலிருந்து மகாவலி அதிகார சபைக்கு ரூ. 330 மில்லியன் வருமானமாக கிடைக்கும் என மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும், அதில் 60% ஈட்டப்பட்டிருந்தது. முன்னைய கணக்காய்வு ஐயவினாக்கள் ஊடாக அவதானிக்கப்பட்ட மேல் மகாவலி நீரேந்து பிரதேசங்களில் உள்ள 70 சிறு அளவிலான நீர்மின் நிலையங்களும், மொரகஹகந்த மூன்று சிறிய மின் உற்பத்தி நிலையங்களும் வருமான மதிப்பீட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. கணக்காய்வு திகதி

வரையில் அந்த மின் உற்பத்தி நிலையங்களிலிருந்து எந்தவொரு வருமானத்தையும் அதிகார சபையால் ஈட்ட முடியாதிருந்தது. மீளாய்வு ஆண்டில் மே தொடக்கம் டிசம்பர் வரையிலான காலப்பகுதியில் மொரகஹகந்த சிறு அளவிலான நீர்மின் உற்பத்தி நிலையங்கள் மூன்றின் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட 28,566,405 கிலோ வோற் மின்சக்திக்கு ரூ. 496.8 மில்லியன் தொகை மின்சார சபையிடமிருந்து வருமதியாக இருந்தது. எனினும், கணக்காய்வு திகதி வரையில் அந்தத் தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. 2018 ஆம் ஆண்டில் அறவிடப்பட வேண்டிய தொகையும் அடங்கலாக 2019 ஆண்டின் மே மாதம் வரை அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகை ரூ. 964.1 மில்லியனாகும்.

(ஏ) மாதுறு ஓயா வலது கரை அபிவிருத்தி கருத்திட்டத்துக்கு (‘B’ வலயம்) வருடாந்த வரவுசெலவுத் திட்ட மதிப்பீட்டிலிருந்து நிதி ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், அந்த செயற்பாடுகள் நடைபெற்றதாக தகவல்கள் கிடைக்கவில்லை. அந்த நிதியை பயன்படுத்தி 2014 ஆம் ஆண்டிலிருந்து ரூ. 935 மில்லியன் செலவு மதிப்பீட்டில் மாதுறு ஓயா இடது கரை (‘B’ வலயம்) சிங்கபுர பிரிவின் மகவெலிதென்ன மற்றும் மல்வென்ன அலகுகளில் ஒரு மீள் குடியேற்றத் திட்டம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. இந்தத் திட்டத்துக்கு திறைசேரியின் அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை. கருத்திட்டக் காலம் 2016 ஆம் ஆண்டில் முடிவடைந்திருந்த போதிலும், கால நீடிப்பு செய்யப்பட்டிருக்கவில்லை என்பதுடன், 2018 ஆம் ஆண்டில் 2019 வரையான கால நீடிப்புக்காக அமைச்சு செயலாளரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டது. 2018 ஆம் ஆண்டில் மாதுறு ஓயா வலது கரை அபிவிருத்தித் திட்டத்தை மீண்டும் உள்நாட்டு மற்றும் சீன வெளிநாட்டு நிதியளிப்பு கருத்திட்டம் ஒன்றாக அமுல்படுத்துவதற்கென வருடாந்த மதிப்பீட்டிலிருந்து ரூ. 5,145,000 ஒதுக்கப்பட்டிருந்தது.

(ஐ) வெலிஓயா ஒருங்கிணைந்த அபிவிருத்தி கருத்திட்டத்துக்கு 2013 ஆம் ஆண்டிலிருந்து 2018 ஆம் ஆண்டு வரையில் ரூ.3,957 மில்லியன் செலவு மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன், கருத்திட்ட காலம் நிறைவடைந்த போதிலும், கால நீடிப்புக்கு மத்திய அமைச்சு மற்றும் திறைசேரி என்பவற்றின் ஒப்புதல் கிடைத்ததற்கான சான்றுகள் இருக்கவில்லை. 2021 வரை கால நீடிப்புக்காக அமைச்சு செயலாளரிடம் வேண்டுகோள் மட்டும் விடுக்கப்பட்டிருந்தது. 2018 டிசம்பர் 31 ஆந் திகதியில் கருத்திட்டத்தின் திரண்ட செலவு ரூ. 2018.2 மில்லியனாகவும், பௌதீக முன்னேற்றம் 66 % ஆகவும் குறைந்த மட்டத்தில் இருந்து வந்தன. இந்தத் திட்டத்தின் நோக்கமான போரினால் இடம்பெயர்ந்து, காணி இழந்த 6,963 குடும்பங்களை மீளக் குடியமர்த்துதல், 6,258 ஹெக்டெயார் காணியை அபிவிருத்தி செய்தல் மற்றும் 150 கி.மீ. வீதிகள் மற்றும் 132 கி.மீ. உள் வீதிகளை அபிவிருத்தி செய்தல் ஆகியவற்றின் முன்னேற்றத்தை மதிப்பீடு செய்யவதற்கென திட்ட முன்னேற்ற அறிக்கையோ, செயலாற்றுகை அறிக்கையோ தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. மீளாய்வு ஆண்டின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், கிவுல்ஓயா நீர்த்தேக்கத் திட்டத்துக்கு திறைசேரியால் நிதி ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்படாதிருந்த நிலையில், ரூ. 12,800,000 செலவிடப்பட்டிருந்தது.

(ஒ) வெலிகந்த வதிவிடக் கருத்திட்ட முகாமையாளர் அதிகாரப் பிரதேசத்தில் முதலீட்டு கருத்திட்டங்களுக்கென ஒதுக்கப்பட்டிருந்த 08 காணிகளில் 06 காணிகளில் எந்தகைய அபிவிருத்தி செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அதற்கமைய காணி வழங்கப்பட்டதன் மூலம் அதிகார சபை எதிர்பார்த்த நோக்கம் நிறைவேற்றப்படவில்லை. காணிகளை பகிர்ந்தளிக்கும் 1947 ஆம் ஆண்டின் 08 ஆம் இலக்க அரச காணிகள் கட்டளை சட்டத்தின் 199 (3) பந்தியின் பிரகாரம், பொதுமக்களுக்கு ஆட்சேபனை தெரிவிப்பதற்கு வாய்ப்புக்களை வழங்கும் விதத்தில், குத்தகை வழங்கும் முன்மொழிவு வர்த்தமானி அறிவித்தல் ஊடாக பகிரங்கப்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும், காணி பகிர்ந்தளிக்கப்பட முன்னர் மகாவலி ஆரம்ப திட்டங்களில் உத்தேச காணிகள் அமைந்துள்ள இடங்களினதும், காணிப் பயன்பாட்டு மாதிரி தொடர்பிலும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, அந்தக் காணிகள் எதிர்பார்க்கப்படும் முதலீட்டுச் செயற்பாடுகளுக்கு

பகிர்ந்தளிப்பதற்கு பொருத்தமானவையா என தீர்மானிப்பதற்கென தலைமை அலுவலகத்தின் காணிப் பயன்பாட்டுத் திட்டமிடல் பிரிவின் விதந்துரை பெறப்பட்டிருக்கவில்லை. இந்தக் காணிகளில் 04 காணிகள் அடிப்படை திட்டங்களில் ரிதிதென்ன மற்றும் ஜயந்தியாய அலகுகளில் குடியேற்றவாசிகளின் குடியிப்புகளுக்கான மேட்டுக் காணிகளாக ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், அந்த நோக்கத்துக்கு முரணாக, முதலீட்டு கருத்திட்டங்களுக்கு வழங்கப்பட்டிருந்தன. மூன்று காணித் துண்டுகள் உரிய வகையில் அபிவிருத்தி செய்யப்படாமை காரணமாக பல சந்தர்ப்பங்களில் தெரிவு செய்யப்பட்டவர்கள் தொடர்பில் மீள ஆராய்ந்து பார்ப்பதற்கான பரிசீலனை மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், கணக்காய்வு திகதி வரையில் முன்னர் தெரிவு செய்யப்பட்டோரின் உரித்து முறையாக இரத்து செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஓ) 2013 ஆம் ஆண்டில் அப்பொழுது பதவியிலிருந்த விடயத்துக்கு பொறுப்பான அமைச்சரின் ஒப்புதலுக்கு அமைவாக, தொழிற் பயிற்சி நிலையமொன்றை நிர்மாணிப்பதற்கென இலங்கை ஹிரா மன்றத்துக்கு வழங்கப்பட்டிருந்த 35 ஏக்கர் காணி பின்னர் 2016 ஆம் ஆண்டில் இலங்கை மகாவலி அதிகார சபையினால் விடயத்துக்கு பொறுப்பான அமைச்சரின் முன் அனுமதியின்றி பற்றிக்கலோ கெம்பஸ் (பிறைவேற்) லிமிற்றட் என மாற்றப்பட்டு, நீண்டகால குத்தகை உறுதி அந்தக் கம்பனியின் தலைவரின் பெயரில் வழங்கப்பட்டிருந்தது. வழங்கப்பட்டிருந்த 35 ஏக்கர் காணியை விடவும் கூடுதலான காணியை அனுமதியின்றி அனுபவித்து வருவதாக வெளிக்கள பரிசீலனையின் போது தெரியவந்த போதிலும், அந்த காணிப்பகுதி இதுவரையில் அதிகார சபைக்கு மாற்றப்படவில்லை. 2017 ஆம் ஆண்டில் ஹிரா மன்றம் எனும் பெயரில் மேலும் 45 ஏக்கர் கோரப்பட்டிருந்துடன், அது தொடர்பில் தொடர் நடவடிக்கை மேற்கொள்வதற்காக அமைச்சின் செயலாளரால் விடயத்துக்கு பொறுப்பான அமைச்சரின் முன் அனுமதி கோரப்பட்டிருந்தது. அமைச்சர் தனது கையொப்பத்தை மட்டும் இட்டிருந்ததுடன், அதற்கமைய அந்த 45 ஏக்கர் காணியை வழங்குவதற்கு அதிகார சபையின் பணிப்பாளர் சபையினால் ஒப்புதல் வழங்கப்பட்டிருந்தது.

(ஔ) வெலிக்கந்த வலயத்தில் காணி வழங்கப்பட்டுள்ள முதலீட்டு கருத்திட்டங்களிலிருந்து 2018 டிசம்பர் 31 ஆந் திகதி அன்றுள்ளவாறு ரூ. 31,114,866 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது.

(ஃ) 2016 ஆம் ஆண்டிலிருந்து 2018 ஆம் ஆண்டு வரை நீர்ப்பாசன திணைக்களத்தினால் பயன்படுத்தப்பட்டுவரும் ரத்மலான, கல்தெமுல்லவில் உள்ள காணி, கட்டிடங்கள் மற்றும் இயந்திர, உபகரணங்கள் என்பவற்றுக்கென அறவிடப்பட வேண்டிய ரூ. 9,450,000 குத்தகை வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை. நுகரப்பட்ட மின்சாரம் மற்றும் நீர் என்பவற்றுக்கான கட்டணங்களை கணக்கிட்டு, அறவிடுவதற்காக பொருத்தமான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(க) ஜாவத்த வளாகத்தில் உள்ள வெளித் தரப்புக்களால் பயன்படுத்தப்படும் 13 கட்டிடங்களுக்காக மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் அறவிடப்பட வேண்டிய வாடகையை அறவிடுமாறு தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும், ரூ. 35,112,000 வாடகைத் தொகை 2019 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் வரை அறவிடப்பட்டிருக்கவில்லை. அதிகார சபையால் அந்தக் கட்டிடங்கள் தொடர்பாக மின்சாரம் மற்றும் நீர் கட்டணங்களாக செலுத்தப்பட்டிருந்த ரூ. 10,616,946 தொகை சம்பந்தப்பட்ட தரப்புக்களினால் ஈடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(கா) ‘B’ வலயத்தின் 19 கட்டிடங்கள், 11 தலைமை அலுவலக கட்டிடங்கள், வளவே வலயத்தின் 07 கட்டிடங்கள் மற்றும் முதன்மை வேலைகள் கட்டுப்பாடு, செயற்பாடுகள் மற்றும் பராமரிப்பு பிரிவின் 49 கட்டிடங்கள் ஆகியவை வெளித் தரப்பினர்களுக்கு எத்தகைய ஒப்பந்தங்களும் மேற்கொள்ளப்படாமல் அதிகார சபையால் வழங்கப்பட்டிருந்தன.

(கி) மீளாய்வு ஆண்டின் இறுதியில் கிடைக்க வேண்டிய குத்தகை வாடகை வருமானம் ரூ.896,499,000 ஆகும்; அதில் ரூ. 428,065,000 தொகை 05 ஆண்டுகள் கடந்தவை ஆகவும், ரூ. 157,225,000 தொகை 03 தொடக்கம் 05 ஆண்டுகள் வரையிலான காலப் பிரிவை கடந்தவையாகவும் இருந்து வந்தன. குத்தகை வருமானத்தை சேகரிப்பதற்கான நியமங்கள் மற்றும் நிபந்தனைகள் அமுல்படுத்தப்படாமை காரணமாக குத்தகை வருமான பாக்கித் தொகைகள் வருடாந்தம் அதிகரித்து வந்துள்ளன.

(கீ) மீளாய்வு ஆண்டின் இறுதியில் வேலைக்கு முந்திய முற்பணத் தொகைகள் ரூ. 454,398,000 ஆக இருந்து வந்ததுடன், அதில் ரூ. 3,467,000 தொகை 05 ஆண்டுகளுக்கு மேல் நிலுவையாக இருந்து வந்தது. எனினும், அதனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(கு) 2018 டிசம்பர் 31 ஆந் திகதியில் செலுத்த வேண்டிய நிலுவை ரூ. 651,986,000 ஆக இருந்து வந்ததுடன், அதில் ரூ. 46,443,000 தொகை 05 ஆண்டுகளுக்கு மேல் நிலுவையாக இருந்து வந்தது. அந்த மீதிகளில் அடங்கியுள்ள ரூ. 7,747,000 பிடிகாசுகளுக்கு உரிய ஒப்பந்த வேலைகளின் முழுமைத்தன்மை உறுதிப்படுத்தப்பட்டு, பிடிகாசுத் தொகைகளை செலுத்தித் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(கூ) முதன்மை வேலைகள் கட்டுப்பாடு, செயற்பாடுகள் மற்றும் பராமரிப்பு பிரிவின் நடைமுறை சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டுள்ள வேலை ஆரம்ப முற்பணம் ரூ. 780,070 மற்றும் ரூ. 460,701 நிலுவைத் தொகைகள் 05 ஆண்டுகளுக்கு மேல் இனங்காணப்பட்டு, சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(கெ) அதிகார சபையின் மகாவலி பாதுகாப்பு படையணியில் பணியாற்றிய 44 பேர் 2015 ஆம் ஆண்டிலிருந்து பல்வேறு அரச நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்டிருந்ததுடன், அவர்களில் 12 பேர் 2018 ஆம் ஆண்டில் மீண்டும் பாதுகாப்பு படையணி சேவைக்கு திரும்பியுள்ளனர். மேற்குறித்த அலுவலர்களுக்கு 2018 டிசம்பர் 31 ஆந் திகதி வரையில் செலுத்தப்பட்ட சம்பளம் ரூ. 66,141,532, மேலதிக நேர கொடுப்பனவு மற்றும் பயணக் கொடுப்பனவு ரூ. 31,448,940 ஆகிய தொகைகளை 2019 பெப்ரவரி 13 ஆந் வரையிலும் உரிய நிறுவனங்களிடமிருந்து ஈடு செய்து கொள்வதற்கு அதிகார சபை தவறியுள்ளது.

(கே) அதிகார சபையின் தலைமை அலுவலகத்தின் 28 அலுவலர்கள், மொரகஹகந்த வலயத்தின் ஒரு அலுவலர், ‘B’ வலயத்தின் 03 அலுவலர்கள், ஹுருளுவெவ வலயத்தின் ஒரு அலுவலர் உள்ளிட்ட 33 அலுவலர்கள் மத்திய அமைச்சுக்கள் மற்றும் ஏனைய வெளி நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்டிருந்தனர். மத்திய அமைச்சுக்களுக்கு விடுவிக்கப்பட்ட 19 பேர் மற்றும் வெளி நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்ட 14 பேர் ஆகியோருக்கு செலுத்தப்பட்ட ரூ. 22,732,617 மற்றும் ரூ. 12,761,670 சம்பளம், மேலதிக நேர கொடுப்பனவு, பயணக் கொடுப்பனவுத் தொகைகளை ஈடு செய்து கொள்வதற்கு 2018 டிசம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(கை) பேண்தகு அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் 2030 ஆண்டு நிகழ்ச்சி நிரலுக்கு அமைவாக, அரச நிறுவனங்கள் செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டியுள்ளதுடன், மீளாய்வு ஆண்டு தொடர்பாக அதிகார சபையின் விடயப் பரப்பின் கீழான இது தொடர்பான கருமங்கள் எவ்வாறு மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பது தொடர்பில் ஆராய்ந்து பார்ப்பதற்கு தேவையான தகவல்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

டப்ளியு.பி.சி. விக்கிரமரத்ன
கணக்காய்வாளர் நாயகம்

# கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை தொடர்பாக பணிப்பாளர் நாயகத்தின் விளக்கங்கள்

# பாகம் IV

**இலங்கை மகாவலி அதிகார சபை மற்றும் அதனால் நிர்வகிக்கப்பட்டு வரும் கம்பெனிகள் என்பவற்றின் 2018 டிசம்பர 31 ஆந் திகதி முடிவடைந்த வருடம் தொடர்பான நிதிக் கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட ரீதியான மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைகள் தொடர்பான 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆவது உறுப்புரையின் கீழ் சமர்ப்பிக்கப்படும் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை**

மேற்குறித்த விடயம் தொடர்பாக தங்களால் எனக்கு அனுப்பி வைக்கப்பட்ட இல. IEN/B/MASL/01/18/41 மற்றும் 2019.11.22 தேதியிடப்பட்ட 2018 ஆம் ஆண்டின் இல. 19 தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11வது உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை தொடர்பான எனது பதிலை கீழே சமர்ப்பிக்கின்றேன

**1.2. நிபந்தனையுடன் கூடிய அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

அ) நிர்வகிக்கப்பட்டு வரும் கம்பெனிகளினால் சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில் முயற்சிகள் தொடர்பான கணக்கீட்டு தர நியமம் பின்பற்றப்பட்டதன் காரணமாக நிதிக் கூற்றுக்களில் ஏற்பட்ட தாக்கத்தை, 2019 திரண்ட நிதிக் கூற்றின் மூலம் அடுத்து வரும் வருடங்களில் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்வேன்.

ஆ) ரூ. 3,058,326.00 மற்றும் ரூ. 20,713,263.00 கொள்விலை பெறுமதியை கொண்ட நிலையான சொத்துக்களின் மதிப்பு 2017.12.31 ஆந் திகதியில் முழுவதுமாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்டுள்ளது. அத்துடன், 2019 ஆம் வருடம் தொடர்பான பயனுள்ள ஆயுள் காலத்தை மீளாய்வு செய்து, அந்த நிலையான சொத்துக்களை 2019 ஆம் ஆண்டு தொடக்கம் மீள் பெறுமதி மதிப்பீடு செய்து, கணக்குகளில் சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட கம்பெனிகளுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

இ) மகாவலி கால்நடை வளங்கள் மற்றும் விவசாய தொழில் முயற்சிகள் (தனியார்) கம்பெனியின் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கும் ரூ. 14,117,550.00 தொங்கல் கணக்கை தீர்த்து வைப்பதற்கு தேவையான விடயங்களை கண்டறிந்து, ஜேர்னல் குறிப்பொன்றின் மூலம் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஈ) ரத்மலானை கல்தேமுள்ள வீதி, இல. 100 இடத்தில் அமைந்திருக்கும் 34.70 பேர்ச்சஸ் பரப்பளவைக் கொண்ட காணி மகாவலி அதிகார சபையினால் நிர்மாணிக்கப்பட்ட கட்டடங்களுடன் சேர்த்து 2018 ஆம் ஆண்டில் கணக்கில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளது. எவ்வாறிருப்பினும், அந்தக் காணியின் உரித்து ரத்மலானை பிரதேச செயலகத்திற்குச் சொந்தமானதாக இருந்து வந்துள்ளது. 1993 ஆம் ஆண்டு மார்ச் மாதம் மெஷின் லீசிங் கம்பெனியின் இயந்திர உபகரணங்களுடன் மகாவலி அதிகார சபைக்கு இந்தக் காணி ஒப்படைக்கப்பட்டிருந்தது. இக்காணியின் ஒரு பிரிவை நீர்ப்பாசன திணைக்களத்தின் இயந்திர வேலைத் தலத்திற்கென 05 வருட கால குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கு பெறுமதி மதிப்பீட்டு திணைக்களத்திடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட பெறுமதி மதிப்பீடு கணக்கில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளது. இந்தக் காணியின் உரித்து அரசாங்கத்திற்கு (ரத்மலானை பிரதேச செயலகத்திற்கு) சொந்தமாக இருந்து வரும் காரணத்தினால் நிலையான

சொத்துக்களின் பட்டியலிலிருந்து அதனை நீக்குவதற்கும், கணக்கில் சேர்க்கப்பட்டிருந்த ரூ. 15,80,00,000.00 பெறுமதியை கணக்குகளிலிருந்து நீக்கி, திருத்தங்களை மேற்கொள்வதற்கும் 2019 ஆம் வருடத்தின் போது நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அதே போல இல 04, ஜாவத்தையில் அமைந்திருக்கும் தற்பொழுது மகாவலி பாதுகாப்புப் படை அலுவலகம் செயற்பட்டு வரும் 01 ரூட் 1.11 பேர்ச்சஸ் பரப்பளவைக் கொண்ட காணி 1980.06.16 தேதியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானியின் மூலம் நெலும்குளிய தோட்ட கம்பெனியிலிருந்து கொழும்பு அரசாங்க அதிபரினால் கையகப்படுத்தப்பட்டிருந்தது. இந்தக் காணியும் அரசாங்கத்திற்கு சொந்தமானதாகும். அதே போல மகாவலி பொறியியல் மற்றும் நிர்மாண முகவரகத்தின் மூலம் அங்கு கட்டடங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. இந்தக் காணியை குத்தகை அடிப்படையில் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கு வழங்கும் பொருட்டு பெற்றுக் கொள்ளப்பட்ட காணியின் பெறுமதி மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் ரூ. 30,83,25,000.00 பெறுமதி கணக்கில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளது. இந்தக் காணியும் அரசாங்கத்தினால் கையகப்படுத்தப்பட்டிருக்கும் ஒரு காணியாக இருந்து வருவதனால் கணக்கில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கும் ரூ. 30,83,25,000.00 பெறுமதியை 2019 ஆம் ஆண்டில் கணக்குகளிலிருந்து நீக்கி, திருத்தங்கள் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை மகாவலி அதிகார சபைக்குச் சொந்தமான 1984 மற்றும் 1989 காலப் பிரிவுகளில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூ. 64,320,853.00 கொள்விலையை கொண்ட கொழும்பு 10 ரீ.பி. ஜாயா மாவத்தை இல. 493 மற்றும் இல. 500 ஆகிய காணித் துண்டுகள் இரண்டையும் கணக்கில் சேர்த்துக் கொள்வதற்கென பெறுமதி மதிப்பீட்டை பெற்றுக் கொள்ளும் பொருட்டு முறையே 2015.12.21, 2016.03.02, 2018.09.18 மற்றும் 2018.09.20 ஆகிய திகதிகளில் பெறுமதி மதிப்பீட்டு திணைக்களத்தின் முதன்மை பெறுமதி மதிப்பீட்டாளருக்கு கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. எனினும், இதுவரையில் பெறுமதி மதிப்பீடு கிடைக்கவில்லை. சம்பந்தப்பட்ட பெறுமதி மதிப்பீடு கிடைத்தவுடனேயே அவற்றை கணக்கில் சேர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பேன்.

உ) 2019 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களின் ஜேர்னல் பதிவுகள் மூலம் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஊ) குடியேற்றவாசிகளுக்கு கடன் தொகைகளை வழங்குவதற்கென திறைசேரியிடமிருந்து நிதிகள் கிடைக்கும் பொழுது காசேட்டிலும், "மூலதன அளிப்புக்கள்" கீழ் வரும் கணக்குகளிலும் பதிவுகள் இடப்பட்டு, கணக்குகளில் சேர்த்துக் கொள்ளப்படுகின்றது. அந்த பணத்தொகையை வங்கிக்கு அனுப்பும் பொழுது, அது பிரதேச அபிவிருத்தி வங்கியினால் மேற்கொள்ளப்படும் ஒரு முதலீடாக இருந்து வரும் காரணத்தினால் காசேட்டுக்கூடாக சீராக்கங்கள் செய்யப்பட்டு, முதலீடு மற்றும் மூலதன அளிப்பாக கணக்கில் சேர்த்துக் கொள்ளப்படுதல் வேண்டும். எனினும், அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. அதனை திருத்தம் செய்யும் பொழுது 2018 ஆம் ஆண்டில் "முதலீடுகளாக" அல்லாமல் ஒரு நடப்புச் சொத்தாக பதிவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. 2019 ஆம் ஆண்டின் ஜேர்னல் குறிப்பு (JE) மூலம் காசு மற்றும் காசுக்கு இணையானவை என்பவற்றின் கீழ் "வங்கி மற்றும் காசு நிலுவை" என திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

மேலும், ரூ. 165,747.00 வட்டி வருமானம் முன்னைய ஆண்டுகளின் ஒரு சீராக்கமாக 2019 ஆம் ஆண்டில் ஜேர்னல் பதிவின் மூலம் திருத்தப்பட்டுள்ளது.

எ) அணைக்கட்டு பாதுகாப்பு மற்றும் நீர் வளங்கள் திட்டமிடல் கருத்திட்டத்தின் முதலாவது கட்டத்தின் கீழ் இலங்கை மகாவலி அதிகார சபைக்கு கிடைத்திருந்த ரூ. 671,503,748.00 பெறுமதியான நிலையான சொத்துக்களில் 2018.12.31 திகதியன்று உள்ளவாறு பெறுமதி மதிப்பீட்டு திணைக்களத்தினால் கிடைத்திருந்த பெறுமதி மதிப்பீடு ரூ. 201,640,037.00 பெறுமதியை கொண்ட நிலையான சொத்துக்களின் ஒரு தொகுதி 2018 ஆம் ஆண்டளவில் கணக்கில் சேர்க்கப்பட்டிருந்தன. ஏனைய சொத்துக்கள் சம்பந்தமாக கீழே குறிப்பிட்டுள்ள சாராம்சத்தின் பிரகாரம் பெறுமதி மதிப்பீட்டு அறிக்கைகள் பெறுமதி மதிப்பீட்டு திணைக்களத்திடமிருந்து 2019 ஆம் ஆண்டில் கிடைத்திருப்பதுடன், அந்தப் பெறுமதிகளை 2019 ஆம் அண்டில் கணக்குகளில் சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது:

| வலயம் | பெறுமதி மதிப்பீடு (ரூ.) | பெறுமதி மதிப்பீட்டு அறிக்கை கிடைத்த திகதி |
|---|---|---|
| B வலயம் | 61,896,500.00 | 2019.05.09 |
| L வலயம் | 19,750,000.00 | 2019.05.09 |

மேலே குறிப்பிடப்பட்ட கருத்திட்டத்தின் கீழ் மகாவலி அதிகார சபைக்கு கிடைத்திருக்கும் மிகுதி நிலையான சொத்துக்களையும் பெறுமதி மதிப்பீடு செய்வதற்கென பெறுமதி மதிப்பீட்டு திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்த போதிலும், இதுவரையில் பெறுமதி மதிப்பீட்டு அறிக்கைகள் கிடைத்திருக்கவில்லை. அதன் காரணமாக நிதி மற்றும் ஊடகத் துறை அமைச்சின் இல. CGO/ASM/Cir/2018 மற்றும் 2018.12.31 திகதியில் வெளியிடப்பட்ட "சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை இல. 04/2018" இன் இல. 06 மற்றும் 07 பந்திகளின் பிரகாரம் மேலே குறிப்பிடப்பட்ட கருத்திட்டத்திலிருந்து கிடைத்த சொத்துக்களை பெறுமதி மதிப்பீடு செய்வதற்கு ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. "சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை இல. 04/2018" இல் கட்டுப்பாட்டாளர் நாயகம் அலுவலகத்தினால் வெளியிடப்பட்டிருக்கும் "நிதியல்லாத சொத்துக்களை பெறுமதி மதிப்பீடு செய்வதற்கான வழிகாட்டுதல்" இதற்கான ஒரு அடிப்படையாக பயன்படுத்தப்படுகின்றது. அதன் பிரகாரம் மேலே குறிப்பிடப்பட்ட முறைமையியலின் படி அணைக்கட்டு பாதுகாப்பு மற்றும் நீர் வளங்கள் திட்டமிடல் கருத்திட்டத்திலிருந்து கிடைத்த அனைத்துச் சொத்துக்களையும் பெறுமதி மதிப்பீடு செய்து, அந்த மதிப்பீட்டு பெறுமதி கிடைத்த உடனேயே சம்பந்தப்பட்ட பெறுமதிகளை கணக்குகளில் சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்வேன்.

மேலும், மேலே குறிப்பிடப்பட்ட கருத்திட்டத்திலிருந்து B வலயத்திற்கு கிடைத்திருக்கும் சொத்துக்களில், பெறுமதி மதிப்பீட்டு திணைக்களத்திடமிருந்து பெறுமதி மதிப்பீட்டு அறிக்கை கிடைக்காத கணினிகளின் பெறுமதி "சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை இல. 04/2018" இன் அறிவுறுத்தல்களின் பிரகாரம் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு, அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அவற்றின் பெறுமதியையும் 2019 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

“சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை இல. 04/2018” இன் அறிவுறுத்தல்களின் பிரகாரம் மேலே குறிப்பிடப்பட்ட முறைமையியலை பின்பற்றி அணைக்கட்டு பாதுகாப்பு மற்றும் நீர் வளங்கள் திட்டமிடல் கருத்திட்டத்தின் கருத்திட்ட முகாமைத்துவ வசதிகளின் கீழ் கிடைத்திருக்கும் அனைத்துச் சொத்துக்கள் தொடர்பாகவும் ஏற்கனவே பெறுமதி மதிப்பீடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அந்த நடவடிக்கைகள் பூர்த்தியடைந்த உடனேயே கணக்குகளில் சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

ஏ) C வலயத்தின் சம்பந்தப்பட்ட பிரிவு முகாமைத்துவ அலுவலகம், வலய அலுவலகத்தின் காணிப் பிரிவு மற்றும் நிதிப் பிரிவு ஆகிய ஒரு சில பிரிவுகளின் வரி அறிக்கைகளை ஒன்றுடன் ஒன்று ஒப்பீடு செய்து, 2019 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களின் மூலம் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ஐ மற்றும் ஒ)

ஒரு நிலையான சொத்தை கொள்வனவு செய்வதற்கு ஏற்பட்ட செலவு அல்லது தற்பொழுது இருக்கும் சொத்தொன்று தொடர்பாக மேற்கொள்ளப்பட்டிருக்கும் செலவின் விளைவாக, அச்சொத்தின் மூலம் பெறுமதி, ஆயுள் காலம் மற்றும் பொருளாதார பயன்கள் கிடைப்பதாக இருந்தால் அந்தச் செலவுகள் மூலதனமயமாக்கப்பட்டுள்ளன. மேலும், ஒரு சொத்து அது இருந்து வரும் நிலையிலேயே செயற்படுவதற்கு ஏற்படும் செலவுகள் வருமானமாக காட்டப்பட்டிருப்பதுடன், 2018.12.31 திகதியில் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றில் கணக்கீட்டுக் கொள்கைகளின் கீழ் அதாவது 3.2.1 தலைப்பின் கீழ் வெளிப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஓ) இந்த மூன்று விடயங்களும் சம்பந்தப்பட்ட தகவல்களை ஒரு குறிப்பு மூலம் முன்வைப்பதற்கு 2009.11.11 திகதியன்று இடம்பெற்ற 316 ஆவது பணிப்பாளர் சபை கூட்டத்தில் எடுக்கப்பட்ட ஒரு தீர்மானத்தின் மூலம் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் 2019.12.31 திகதியில் முடிவடையும் வருடத்தின் ஒருங்கிணைந்த நிதிக் கூற்றின் மூலம் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

ஔ) இலங்கை கணக்கீட்டு தர நியமம் இல. 01 இன் பிரகாரம் ஒருங்கிணைந்த நிதிக் கூற்றுக்களில் ரூ. 156,572,000.00 பெறுமதியை கொண்ட விவசாய மற்றும் கால்நடை வளங்கள் கையிருப்புத் தொகையின் மதிப்பு மற்றும் அது மதிப்பீடு செய்யப்பட்ட விதம் என்பவற்றை ஒரு குறிப்பின் மூலம் 2019 ஆம் ஆண்டின் ஒருங்கிணைந்த நிதிக் கூற்றின் மூலம் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்வேன்.

ஃ) 2019 ஆம் ஆண்டு தொடக்கம் சம்பந்தப்பட்ட வரித் தொகைகளை சரியாக இணங்கண்டு, அதன் பிரகாரம் கணக்குகளில் சேர்க்குமாறு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

க) மீளாய்வுக்குட்படுத்தப்படும் ஆண்டில் சிறு அளவிலான நீர்மின் உற்பத்தி நிலையங்களிலிருந்து கிடைக்க வேண்டிய ரூ. 5,373,634.00 தொகை ஜேர்னல் பதிவுகள் மூலம் 2019 ஆம் ஆண்டின் போது திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

கா) 2009 மற்றும் 2010 ஆகிய வருடங்களில் ரூ. 500,000.00 வீதம் இரண்டு 07 நாள் வைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. மொத்தம் ரூ. 1,000,000.00 பெறுமதியான இந்த வைப்புக்கள் தொடர்பான வருடாந்த வட்டி வருமானத்தை MASL/FIN/BANK/RE/2019 மற்றும் 2019.10.02 தேதியிட்ட கடிதத்தின் மூலம் வங்கியிலிருந்து கோரிப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன் பிரகாரம், 07 நாள் வைப்புக்கள் சம்பந்தப்பட்ட வட்டித் தொகை, அந்த வைப்பை மீளப் பெற்றுக் கொள்ளும் சந்தர்ப்பத்தில் மட்டுமே செலுத்தப்படுமென இலங்கை வங்கி, ஹைட்பார்க் கிளை முகாமையாளரின் (நுகர்வோர் சேவைகள்) இல. PBU/RLR/AU மற்றும் 2019.10.02 தேதியிட்ட கடிதத்தின் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

கி) **(I) மகாவலி கால்நடை வளங்கள் கம்பெனியில் முதலீடுகள்**

இலங்கை மகாவலி அதிகார சபையின் கணக்குகள் மற்றும் வரையறுக்கப்பட்ட மகாவலி கால்நடை வளங்கள் மற்றும் விவசாய தொழில் முயற்சிகள் (தனியார்) கம்பெனி கணக்குகள் என்பவற்றில் “முதலீடுகள்” தொடர்பான நிலுவைத் தொகைகளில் நிலவி வரும் வித்தியாசங்களுக்கான காரணங்கள் கண்டறியப்பட்டுள்ளன. அவை வருமாறு:

(i) வரையறுக்கப்பட்ட மகாவலி கால்நடை வளங்கள் மற்றும் விவசாய தொழில் முயற்சிகள் (தனியார்) கம்பெனியினால் இலங்கை மகாவலி அதிகார சபையிடம் மீண்டும் ஒப்படைக்கப்பட்டிருக்கும் நிலையான சொத்துக்களின் பெறுமதி ரூ. 8,967,600.00 ஆகும். இத்தொகை தலைமை, அலுவலகம் C வலயம் மற்றும் H வலயம் என்பவற்றின் கணக்குகளில் திருத்தம் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ii) இலங்கை மகாவலி அதிகார சபையினால் மகாவலி கால்நடை வளங்கள் மற்றும் விவசாய தொழில் முயற்சிகள் கம்பெனிக்கு வழங்கப்பட்டிருக்கும் மகாவலி C வலயத்தின் கிராந்துருகோட்டே கால்நடை பண்ணையை ஒப்படைத்தல் தொடர்பான ரூ. 628,000.00 பெறுமதியான தொகை C வலயத்தினால் கணக்கில் சேர்க்கப்பட்டிருக்கவில்லை.

(iii) வரையறுக்கப்பட்ட மகாவலி கால்நடை வளங்கள் மற்றும் விவசாய தொழில் முயற்சிகள் (தனியார்) கம்பெனியினால் இலங்கை மகாவலி அதிகார சபையிடம் மீண்டும் ஒப்படைக்கப்பட்டிருக்கும் நிலையான சொத்துக்களின் பெறுமதி ரூ. 1,256,000.00 ஆகும். இத்தொகை தலைமை அலுவலகத்தினால் கணக்குகளில் சேர்க்கப்பட்டிருக்கவில்லை

மேலே குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பான இலக்க ரீதியான பெறுமதிகளை பின்வரும் விதத்தில் சமர்ப்பிக்க முடியும்.

| சொத்துக்கள் பரிமாற்றம் (2016) | (ரூ.) |
|---|---|
| ○ தலைமை அலுவலகம் | (2,441,808.00) |
| ○ C வலயம் | (628,000.00) |
| ○ H வலயம் | (7,336,850.00) |
| சொத்துக்களை கையகப்படுத்தல் | <u>8,967,600.00</u> |
| | (1,439,058.00) |
| சொத்துக்களின் பரிமாற்றம் (2017) | |
| • தலைமை அலுவலகம் | (1,256,000.00) |
| | <u>2,695,058.00</u> |

அதன் பிரகாரம் 2019 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களுடன் இவற்றை திருத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்வேன்.

கீ) **முதலீடுகள் - மகாவலி கால்நடை தொழில் முயற்சிகள் கம்பெனி**

இலங்கை மகாவலி அதிகார சபையினால் மகாவலி கால்நடை தொழில் முயற்சிகள் கம்பெனியில் முதலீடு செய்யப்பட்டிருக்கும் ரூ. 10 மில்லியன் தொடர்பாக "சம்பந்தப்பட்ட நிலுவையை ஊர்ஜிதப்படுத்தும்" கடிதம் இக்கம்பெனியின் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

சொத்துக்கள் - சேமிப்பு கணக்கு - தேடிப் பார்த்து சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வேன்.
சொத்துக்கள் - நிலையான வைப்புக்கள் - தேடிப் பார்த்து சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வேன்.

**2. ஏனைய சட்ட ரீதியான தேவைகள் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைகள் தொடர்பான அறிக்கை**

அ) உடவளவை வலயத்தைச் சேர்ந்த சம்பந்தப்பட்ட கட்டடங்களின் பெறுமதியை மதிப்பீடு செய்யும் பொருட்டு இல. MA/ASSET/2019/09 மற்றும் 2019.01.31 தேதியிட்ட கடிதத்தின் மூலம் பெறுமதி மதிப்பீட்டு திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அவற்றில் ஒரு சிலவற்றின் பெறுமதி மதிப்பீட்டு அறிக்கைகள் 2019 ஆம் ஆண்டில் கிடைத்துள்ளன. அதன் பிரகாரம் இதுவரையில் பெறுமதி மதிப்பீட்டு அறிக்கைகள் கிடைத்திருக்கும் கட்டடங்கள் தொடர்பாக 2019 ஆம் ஆண்டு கணக்குகளில் சீராக்கங்களை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஏனைய பெறுமதி மதிப்பீட்டு அறிக்கைகளை வெகு விரைவில் பெற்றுக்

கொள்வதற்கும், அவை கிடைத்தவுடனேயே அதிகார சபையின் கணக்குகளில் சீராக்கங்களை செய்வதற்கும் நடவடிக்கை மேற்கொள்வேன்.

ஆ) 12 மோட்டார் சைக்கிள்கள், பால் போக்குவரத்து செய்யும் லொரி 01, 02 உழவு இயந்திரங்கள் (36 -7113 மற்றும் RD- 8619) 02 இலத்திரனியல் எடை பார்க்கும் இயந்திரங்கள் மற்றும் 04 கோழி வளர்ப்பு கட்டடங்கள் என்பன உரிய விதத்தில் கையகப்படுத்தப்பட்டு, மீள் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு அத்தொகைகள் கணக்குகளில் சேர்க்கப்பட்டுள்ளன. 02 மல்டி சொப்பர் யந்திரங்கள், 01 டேலின் மெஷின் மற்றும் ஒரு உழவு யந்திரம் ( 37-5740) என்பவற்றை அடுத்த ஆண்டில் கணக்கில் சேர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வேன்.

**<u>எழுத்து மூலமான ஒரு சட்டத்திற்கு அல்லது அதிகார சபையின் முகாமைத்துவ சபையினால் வெளியிடப்பட்டிருக்கும் ஏனைய பொதுவான அல்லது விசேட ஒழுங்குவிதிகளுக்கு இணங்கியொழுகாது செயற்பட்டிருத்தல் தொடர்பாக</u>**

அ) பெறுமதிசேர் வரி தொடர்பாக பதிவு செய்து கொள்வதற்கு மேற்கொண்டு நடவடிக்கை மேற்கொள்வேன்.

ஆ) மரத் தளபாடங்கள் மற்றும் பொருத்துக்கள் என்பன தொடர்பாக வருடாந்தம் 10% பெறுமதித் தேய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன் பிரகாரம், மரத் தளபாடங்கள் மற்றும் பொருத்துக்கள் என்பன 2008 ஆம் ஆண்டில் முடிவடைந்த வருடத்தில் மீள் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டிருந்தன. அதன் பிரகாரம், 2018.01.01 திகதியன்று உள்ளவாறு 2008 இல் மீள் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளில் சேர்க்கப்பட்டிருந்த பெறுமதி “0” ஆக கணக்குகளில் காட்டப்பட்டிருந்தது. (2008 இல் மீள் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்ட உருப்படி). அதன் பிரகாரம் 2018.01.01 திகதியன்று அந்த மரத் தளபாடங்கள் மற்றும் பொருத்துக்கள் என்பவற்றை மீள் பெறுமதி மதிப்பீடு செய்து, கணக்குகளில் சீராக்கம் செய்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியிருந்தது.

அதன் பிரகாரம் 10 வலயங்கள், 06 பிரிவுகள் மற்றும் தலைமை அலுவலகம் என்பவற்றையும் உள்ளிட்ட இடங்களில் உள்ள மரத் தளபாடங்கள், பொருத்துக்கள் தொடர்பான சுமார் 703 உருப்படிகள் மற்றும் 68,000 க்கும் மேற்பட்ட உப உருப்படிகள் என்பவற்றை மீள் பெறுமதி மதிப்பீடு செய்ய வேண்டியிருந்தது. அதனால் அந்தப் பெறுமதிகளை கணக்குகளில் சீராக்கம் செய்தல் மற்றும் அதிகார சபை இதுவரையில் கணினிமயப்படுத்தப்பட்ட கணக்குத் தொகுதியொன்றை செயற்படுத்தாதிருத்தல் என்பவற்றின் காரணமாக நிதிக் கூற்றுக்களை தயாரித்து, சமர்ப்பிப்பதில் ஒரு தாமதம் ஏற்பட்டுள்ளது.

இ) கருத்திட்டங்களுக்கென தொடக்க காலத்தில் அதிகார சபையின் உத்தியோகத்தர்களை விடுவிக்கும் விடயத்தில் ஒரு சில சிக்கல் நிலைமைகள் காணப்பட்ட போதிலும், தங்களுடைய கணக்காய்வு ஐயவினா இல. LP/H/MASL/01/14/40 மற்றும் 2015.10.16 திகதியிட்ட கணக்காய்வு ஐயவினாவின் மூலம் சுட்டிக் காட்டப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன: கருத்திட்டங்களுக்கு முழு நேர அடிப்படையில்

(முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை 01/2016 இல் பந்திகள் 2.3.3 (a) இன் கீழ்) விடுவிக்கப்படக் கூடிய உச்ச மட்ட சேவை காலப் பிரிவுகள் 05 வருடங்களை தாண்டியிருக்கும் உத்தியோகத்தர்களை மீண்டும் அதிகார சபையின் சேவைக்கு அழைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. ஆனால், இறுதிக் கட்டத்தில் இருந்து வந்த அணைக்கட்டு பாதுகாப்பு மற்றும் நீர் வளங்கள் திட்டமிடல் கருத்திட்டத்திற்கு புதிய உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பு செய்வதன் மூலம் எதிர்பார்க்கப்படும் பெறுபேறுகளை சாதித்துக் கொள்வது கடினமானதாகும் என பணிப்பாளரினால் தெரிவிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், எதிர்வரும் இரண்டு வருட கால பிரிவுக்கென புதிய உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பு செய்வது நடைமுறைச் சாத்தியமற்றதாக இருந்து வரும் காரணத்தினால் அந்த உத்தியோகத்தர்கள் முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை 01/2016 இன் பந்தி இல. 2.3.3 (b) இன் பிரகாரம், எஞ்சிய காலத்திற்கும் சம்பளம் இல்லாத அடிப்படையில் விடுவிக்கப்பட்டிருந்தார்கள். இந்த விதமாக 2015 ஆம் ஆண்டு தொடக்கம் கருத்திட்டங்களுக்கென விடுவிக்கப்பட்டிருந்த அதிகார சபையின் ஊழியர்கள் தொடர்பாக, முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கைக்கு இணங்கிய விதத்தில் (புதிய சுற்றறிக்கை 01/2016) சீராக்கங்கள் செய்யப்பட்டுள்ளன.

எவ்வாறிருப்பினும், உலக வங்கி உதவியின் கீழ் அமுல் செய்யப்பட்ட அணைக்கட்டு பாதுகாப்பு மற்றும் நீர் வளங்கள் திட்டமிடல் கருத்திட்டத்திற்கென இலங்கை மகாவலி அதிகார சபையிடமிருந்து விடுவிக்கப்பட்டிருந்த ஊழியர்கள் அத்தகைய கருத்திட்டங்கள் தொடர்பாக பெற்றுக் கொண்டிருந்த அனுபவங்கள், உலக வங்கி பிரதிநிதிகளுடன் ஒருங்கிணைப்புக்களை மேற்கொள்வதில் பெருமளவுக்கு அனுகூலமாக இருந்து வந்தன. அதனால் அந்த ஊழியர்களை உலக வங்கி உதவியின் கீழ் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் ஒருங்கிணைந்த நீராதாரங்கள் மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ கருத்திட்டத்தின் சேவைக்கென பயன்படுத்திக் கொள்வதற்கு ஒப்புதலை கோரி எனது இல. MA/APM/24/SWRMP/Staff மற்றும் 2019.07.04 தேதியிட்ட கடிதத்தின் மூலம் முகாமைத்துவ சேவைகள் பிரிவின் பணிப்பாளர் நாயகத்திற்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

ஈ) இந்த முற்பணத் தொகைகள் இப்பொழுது தீர்த்து வைக்கப்பட்டுள்ளன. எதிர்காலத்தில் வழங்கப்படும் முற்பணத் தொகைகளை 07 நாட்களுக்குள் தீர்த்து வைக்கும் விடயத்தில் கவனம் செலுத்த வேண்டுமென உள்ளக சுற்றறிக்கை மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

(உ) மற்றும் (ஊ)

ஏற்றுக் கொள்கின்றேன். அரசின் கொள்வனவு வழிகாட்டுதல் கைநூலின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்குமாறு சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

**அதிகார சபையின் வளங்களை சிக்கனமான விதத்திலும், செயல்திறனுடனும், ஆக்கபூர்வமான விதத்திலும் உரிய கால பிரிவுகளுக்குள் சம்பந்தப்பட்ட சட்டத்திட்டங்களுக்கு இணங்கியொழுகும் விதத்தில் கொள்வனவு செய்து, பயன்படுத்தாதிருந்த நிலை**

அ) 2017.12.29 ஆந் திகதியன்று கொண்டு வரப்பட்ட என்ஜின், இயந்திரத்தில் பொருத்தப்பட்ட பின்னர் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டதுடன், பின்னர் ஹைட்ரோலிக் தொகுப்பில் பொருத்தப்பட்டு அந்த இயந்திரம் இயக்கப்பட்டுள்ளது. அச்சந்தர்ப்பங்களில் எத்தகைய கோளாறுகளும் இல்லாமல் அது இயங்கி வந்ததுடன், பாரம் தூக்கும் இயந்திரத்தின் BOOM பொறியை இயக்கும் பொழுது அதன் 02 பிரதான குழாய்கள் (Main Hydrolic hose) இரு சந்தர்ப்பங்களில் வெடித்துச் சிதறியுள்ளன. அதனால் ஹைட்ரோலிக் இயக்குதல் தொகுப்பின் அனைத்து பாகங்களையும் (Actuator, Hoses, Jacks, seals etc) மீண்டும் பழுதுபார்த்து, அவற்றுக்கு உதிரிப்பாகங்களையும் பொருத்தி மீளத் தயாரிப்பது பொருத்தமானதென அச்சந்தர்ப்பத்தில் அவதானிக்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக, அந்த இயந்திரங்களின் நிலைமை தொடர்பான அறிக்கையொன்றை முகவர்களுக்கூடாக பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

முகவர்களின் சிபார்சுகளின் பிரகாரம் முகவர்களினால் போக்குவரத்துக்கென பயன்படுத்தப்பட்ட பிரதான இயந்திரத்தை துப்புரவு செய்தல், அனைத்து ஹைட்ரோலிக் குழாய்களையும் புதிதாக எடுத்து வந்து, பொருத்துதல் மற்றும் ஹைட்ரோலிக் இயக்குதல் தொகுப்புடன் சம்பந்தப்பட்ட அனைத்து பாகங்களையும் (Swing Control Unit, Outrigger Jack, Control Unit , Elecrtrical System,Valves, Actuator etc) சேர்விஸ் செய்தல் என்பவற்றுக்கென 2018.08.18 திகதியன்று ஒரு செலவு மதிப்பீடு பெற்றுக் கொள்ளப்பட்டது.

மேலும், தோராயமான மதிப்பீட்டின் பிரகாரம் 2018 ஆம் ஆண்டில் வேலைக்கான ஒப்புதல் எதிர்பார்க்கப்பட்ட போதிலும், நிதியொதுக்குகளை பெற்றுக்கொள்ள முடியாதிருந்த காரணத்தினால் வேலைக்கான ஒப்புதலை பெற்றுக்கொள்ள முடியவில்லை. அதனால், 2019 ஆம் ஆண்டில் நிதியொதுக்குகளை பெற்றுக் கொள்வதற்கென சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆ) இந்த கட்டுமான வேலை விசேட கலை வடிவமைப்பு கலைப் படைப்பு நிர்மாண வேலையொன்றாக இருந்து வந்த காரணத்தினால் தோராயமான செலவு மதிப்பீட்டொன்றை தயாரித்துக் கொள்வதில் நடைமுறைச் சிக்கல் காணப்பட்டது. மேலும், அதற்கு தேவையான வடிவமைப்புக்கள் மற்றும் விபரங்கள் என்பவற்றை சமர்ப்பித்து திறன்களுடன் கூடிய 06 நிறுவனங்களிடமிருந்து விலை மனுக்களை கோருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இ) இந்த வேலை தொடர்பாக அமைச்சினால் பெயர் குறிப்பிடப்பட்ட உறுப்பினர் ஒருவரையும் உள்ளடக்கிய விதத்தில் 05 உறுப்பினர்களை கொண்ட தொழில்நுட்ப மதிப்பீட்டு கமிட்டி நியமனம் செய்யப்பட்டது. அந்த கமிட்டியின் உறுப்பினர்களின் பரிந்துரையின் பேரில் ஆகக் குறைந்த விலை கோரலை முன்வைத்த 'Livework Creation ” என்ற நிறுவனத்திற்கு சம்பந்தப்பட்ட நிர்மாண வேலைக்கான ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ளது. இந்த வேலைக்கென

திணைக்கள கொள்வனவு கமிட்டியினால் 2018.07.01 திகதியன்று நடத்தப்பட்ட கூட்டத்தின் பத்திர இல. 2018/09.12 இன் கீழ் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இந்தக் கருத்திட்டத்துடன் சம்பந்தப்பட்ட முழுத் தொகையான ரூபா 2,580,000 தொகையை ஈடு செய்யுமாறு கேட்டு இல. MA/HO/PM/B/47 மற்றும் 2019.04.25 தேதியிட்ட கடிதத்தின் மூலம் மொரகஹகந்த களுகங்க கருத்திட்டத்தின் கருத்திட்ட பணிப்பாளருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக கிடைக்க வேண்டிய தொகையின் நிதிப் பெறுமதியை இலங்கை மகாவலி அதிகார சபைக்கு ஈடு செய்யுமாறு கேட்டு என்னுடைய இல. MASL/FIN/ACC/2019 மற்றும் 2019.08.02 ஆந் தேதியிட்ட கடிதத்தின் மூலம் தெரிவிக்கப்பட்டிருந்தது. அது 2018.12.31 ஆந் திகதியன்று முடிவடைந்த வருடம் தொடர்பான நிதிக்கூற்றுக்களில் கிடைக்க வேண்டிய நிலுவையாக உள்ளடக்கப்பட்டுள்ளது.

**3. ஏனைய அவதானிப்புக்கள்**

அ) இல. 6758 கொண்ட வர்த்தக காணி 0.0065 ஹெக்டயார் மற்றும் 0.0064 ஹெக்டயார் வீதம் இரு பாகங்களாக பிரிக்கப்பட்டு, முறையே சுதுசிங்க விஜயகாந்தி நயனா மற்றும் ஹெட்டியாராச்சி சந்தியா காந்தி வெஹெரகொட ஆகிய ஆட்கள் சட்ட ரீதியாக தெரிவு செய்யப்பட்டு, அவர்களுக்கு வழங்கப்பட்டதாகவும், பாக்கி வரித் தொகைகளை செலுத்துமாறு அவர்களுக்கு அறிவிக்கப்பட்டிருந்ததாகவும், வரித்தொகைகள் செலுத்தப்படாதிருந்த காரணத்தினால் அது தொடர்பாக சட்ட ரீதியாக நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் வதிவிட கருத்திட்ட முகாமையாளர் (வளவே வலயம்) தெரிவித்துள்ளார்.

இலங்கை மகாவலி அதிகார சபையினால் அரச காணிகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் பகரிந்தளிக்கப்பட்டிருக்கும் காணிகளின் நில அளவை நடவடிக்கைகள் இதுவரையில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அத்தகைய நில அளவை நடவடிக்கைகள் காணியை பெற்றுக் கொள்பவரின் செலவில் மேற்கொள்ளப்பட வேண்டியிருப்பதாக (வளவே வலயத்தின்) வதிவிட கருத்திட்ட முகாமையாளர் தெரிவித்துள்ளார். காணியை பெற்றுக் கொண்டவர் அதனை செய்யத் தவறியமை காரணமாக நீண்ட கால குத்தகை உறுதிப் பத்திரத்தை வழங்க முடியாதிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஆ) மற்றும் (இ)

உரிய விதத்திலான பரீட்சிப்பின் மூலம் இக்காணி தொடர்பாக திரு. ரத்நாயக்க வீரக்கோன் ஜயவீர தெரிவு செய்யப்பட்டிருந்தார். இதுவரையில் அவரிடம் இக்காணி ஒப்படைக்கப்படவில்லை; அது தொடர்பான உத்தரவு பத்திரமும் வழங்கப்படவில்லை. இக்காணி தொடர்பாக நீண்ட காலமாக இரு தரப்புக்களுக்கிடையில் ஒரு தகராறு நிலவி வருவதன் காரணமாக வரிகளை அறவிட்டுக் கொள்ள முடியாதுள்ளது என்றும், சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்கள் இது தொடர்பாக இப்பொழுது களப் பரீட்சிப்புக்களை மேற்கொண்டு, நடவடிக்கை எடுப்பதற்கு முன்வந்திருப்பதாகவும் வதிவிட கருத்திட்ட முகாமையாளர் (வளவே வலயம்) தெரிவித்துள்ளார். இது தொடர்பாக சட்ட ரீதியாக நடவடிக்கை எடுப்பதற்கு முன்வருமாறு (வளவே வலயத்தின்) வதிவிட கருத்திட்ட முகாமையாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

ஈ) 2019.02.12 திகதியன்று இடம்பெற்ற இலங்கை மகாவலி அதிகார சபையின் 304 ஆவது பணிப்பாளர் சபை கூட்டத்தின் இல. 2019/304/4550 தீர்மானத்தின் பிரகாரம் இந்தப் பணத்தொகைகளை பிரதேச அபிவிருத்தி வங்கியிலிருந்து மீளப் பெற்று, பயனுள்ள காரியங்களில் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தெரிவிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், என்னுடைய இல. MASL/ENT.Dev/71 மற்றும் 2019.03.13 தேதியிட்ட கடிதத்தின் மூலம் இப்பணத்தொகைகளை விரைவில் அதிகார சபைக்கு பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பிரதேச அபிவிருத்தி வங்கியின் பொது முகாமையாளருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதற்கு திருப்திகரமான பதில் கிடைக்காமையினால் அந்த வைப்புத் தொகையை வெகு விரைவில் அதிகார சபைக்கு பெற்றுத் தருமாறு எனது 2019.06.28 தேதியிட்ட கடிதத்தின் மூலம் மீண்டும் அறிவிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், உதவிப் பொது முகாமையாளர்/நுண்நிதி மற்றும் விசேட கருத்திட்டங்கள் 2019.08.15 தேதியிட்ட கடிதத்தின் மூலம் மேலே குறிப்பிடப்பட்ட பணத்தொகைகள் மற்றும் அவற்றுடன் சம்பந்தப்பட்ட வட்டி என்பவற்றை வழங்கும் பொருட்டு, அந்த வங்கியின் “சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் முகாமைத்துவ கமிட்டியின்” ஒப்புதலை பெற்றுக் கொள்வதற்கென சமர்ப்பித்துள்ளதாக தெரிவித்திருந்தார்.

உ) C வலயத்தின் விவசாய முகாமைத்துவ நிலையத்தின் வருமானத்தை அந்த நிலையத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொருட்டு பயன்படுத்திக் கொள்வதற்கு முன்னர் தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், அந்த வருமானத் தொகைகளை வைப்புக்களாக வைத்திருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. எவ்வாறிருப்பினும், இந்தப் பணத்தொகைகள் தலைமை அலுவலகத்தின் வருமான கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தன.

ஊ) ஏற்றுக் கொள்கின்றேன். அதிகார சபையின் வருமான ஈட்டலை உயர்த்திக் கொள்வது தொடர்பாக முன்னேற்ற மீளாய்வு கூட்டங்களின் மூலமும், அதேபோல எழுத்து மூலமும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு இலக்குகள் வழங்கப்பட்டிருந்தன. அது தொடர்பான முன்னேற்றத்தை இடையறாது மீளாய்வு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. எவ்வாறிருப்பினும், 2019 ஆம் வருடத்தில் அதிகார சபையின் வருமானம் ரூ. 903,712,048.23 வரையில் வளர்ச்சியடைந்திருந்தது.

எ) மொறகஹகந்த மூன்று சிறு அளவு நீர்மின் உற்பத்தி நிலையங்கள் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட மின்சாரம் தொடர்பாக 2018 மற்றும் 2019 வருடங்கள் தொடர்பாக கிடைக்க வேண்டிய அனைத்து பணத்தொகைகளும் இப்பொழுது இலங்கை மின்சார சபையிடமிருந்து அறவிடப்பட்டுள்ளன.

ஏ) மாதுரு ஓயா வலது கரை கருத்திட்டம் (B வலயம்)

B வலயத்தின் மாதுரு ஓயா இடது கரை மல்வன்ன மற்றும் மகாவலிதென்ன அலகுகளை உள்ளடக்கும் பிரதேசத்தின் அபிவிருத்திக்கென ரூ. 935.5 மில்லியன் செலவுத் தொகை ஒதுக்கப்பட்டிருந்தது. இதற்கான அபிவிருத்தி முன்மொழிவொன்று தொடர்பாக 2013 ஆம் ஆண்டில் தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் அனுமதிக்கென விண்ணப்பிக்கப்பட்டிருந்தது. அந்தக் கருத்திட்டத்திற்கென தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் பரிந்துரையின் கீழ் திறைசேரியின் ஒப்புதல் கிடைத்திருந்தது. எனினும், அந்த கருத்திட்டத்தை மாதுரு ஓயா வலது கரை கருத்திட்டத்தின் ஒரு உப பிரிவாக அமுல் செய்யுமாறு அறிவுறுத்தல்கள் கிடைத்திருந்தன. அதன் பிரகாரம், அதனை மாதுரு ஓயா வலது கரை அபிவிருத்தி கருத்திட்டம் என்ற பெயரில் அமுல் செய்வதற்கு செலவு ஒதுக்கு 162-5-8-2506 இன் கீழ் திறைசேரியின் மூலம் அதற்கு தேசிய வரவு செலவு திட்டத்தினூடாக நிதி ஒதுக்கப்பட்டிருந்தது.

ஐ) மேலே குறிப்பிடப்பட்ட கருத்திட்டத்தின் காலத்தை நீடித்துக் கொள்வதற்கென அமைச்சின் செயலாளர் தேசிய திட்டமிடல் திணைக்களத்திற்கு 2018.12.31 ஆந் திகதி சம்பந்தப்பட்ட வேண்டுகோளை முன்வைத்திருந்தார். அந்த வேண்டுகோளுக்கு தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் அனுமதி வழங்கப்பட்டு, அது திறைசேரிக்கு அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாக மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் பணிப்பாளர் (கொள்கை திட்டமிடல்) தொலைபேசி மூலம் தெரிவித்துள்ளார். 2019 ஆந் ஆண்டுக்கான நிதியொதுக்குகளுக்கு ஒப்புதல் கிடைத்துள்ளது.

கருத்திட்டத்தின் முன்னேற்றம் தொடர்பாக மாத மற்றும் காலாண்டு அடிப்படையில் அமைச்சுக்கும் ஏனைய நிறுவனங்களுக்கும் உரிய படிவங்களில் அறிக்கையிடப்பட்டுள்ளதுடன், செயலாற்றுகை அறிக்கைகளும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

வெலிஓயா ஒருங்கிணைந்த கருத்திட்டத்தின் கீழ் ரூ. 12.8 மில்லியன் செலவொதுக்கு மேற்கொள்ளப்பட்டிருந்துடன், அது கிவுல்ஓயா நீர்த்தேக்க நடவடிக்கைகளுக்கென மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அந்த நிதியொதுக்கு L வலயத்தில் அமைந்திருக்கும் “வெலி எல” அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கென ஒதுக்கப்பட்டிருந்தது. அந்த அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்குத் தேவையான அலுவலக பராமரிப்பு மற்றும் இயக்குதல் நடவடிக்கைகளுக்கென மேற்கொள்ளப்பட்டது என்பதனை தெரிவித்துக் கொள்கின்றேன். கிவுல்ஓயா நீர்த்தேக்கம் L வலயத்தின் நீர் பிரச்சினையை தீர்த்து வைப்பதற்கான உத்தேச கருத்திட்டமாக இருந்து வருவதுடன், சுற்றாடல் பிரச்சினைகள் காரணமாக நீர்த்தேக்கத்தின் நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. இக்காலப் பிரிவின் போது (கிவுல்ஓயா) பிரதிப் பணிப்பாளரினால் சுற்றாடல் மதிப்பீட்டு அறிக்கையில் காணப்பட்ட சிக்கல்களை தீர்த்துக் கொள்வதற்கென நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. அதே வேளையில், ஊழியர்களை பயன்படுத்தி, மேலே குறிப்பிடப்பட்ட அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. எவ்வாறிருப்பினும், தற்பொழுது இந்தக் கருத்திட்டத்திற்கான சுற்றாடல் அனுமதி கிடைத்திருப்பதுடன், சம்பந்தப்பட்ட கருத்திட்டத்திற்கென வரவுசெலவு திட்டத்தின் மூலம் நிதியொதுக்குகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஒ) முதலீட்டு கருத்திட்டங்களாக கருதப்படுபவை முதலீட்டாளர்களினால் பாரிய பணத் தொகைகள் முதலீடு செய்யப்பட்டு, கிராமிய தொழில் வாய்ப்புக்களின் உருவாக்கத்திற்கென குறிப்பிடத்தக்க அளவிலான பங்களிப்பை வழங்கும் கருத்திட்டங்களாகும். இத்தகைய விசேட காரணங்களினால் இவற்றுக்கு வழங்கப்படும் காணிகள் தொடர்பாக பொது மக்கள் ஆட்சேபணைகளை தெரிவிப்பதற்கென வர்த்தமானி அறிவிப்புக்கள் வெளியிடப்படுவதில்லை. விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரின் ஒப்புதலின் பேரில் அரச காணிகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் காணித் துண்டுகள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. அதன் பிரகாரம், மேலே குறிப்பிடப்பட்ட காணித் துண்டுகளுக்கென பொது மக்களின் ஆட்சேபணைகளை முன்வைப்பதற்கு வேண்டுகோள் விடுக்காமல் காணிகள் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தன.

முதலீட்டு கருத்திட்டங்களுக்கென ஒதுக்கப்பட்டிருக்கும் 8 காணித் துண்டுகளில் 3 காணித் துண்டுகள் அபிவிருத்தி செய்யப்பட்டிருக்கவில்லை. அதன் அடிப்படையில் அவற்றை ரத்துச் செய்யும் பரீட்சிப்புக்கள் நடத்தப்பட்டிருப்பதுடன், அவற்றின் முன்னேற்றம் கீழே எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

1. திருமதி எம். எம். இந்திராணி மல்லிகா – 05 ஏக்கர் ஜயந்தியாய : 2019.07.30 ஆந் திகதியன்று மேற்கொள்ளப்பட்ட பரீட்சிப்பின் போது இக்காணியை அபிவிருத்தி செய்வதற்கென 06 மாத கால அவகாசம் கேட்டுக் கொள்ளப்பட்டிருந்தது. பரீட்சிப்புச் சபையின் முடிவின் பிரகாரம் அபிவிருத்தி செய்வதற்கென 06 மாத கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. 2019 ஆம் ஆண்டு வரையில் அனைத்து குத்தகைத் தொகைகளும் செலுத்தப்பட்டுள்ளன.

2. எச். எம். முத்து – ½ ஏக்கர் பழச் செய்கை : இக்காணி அபிவிருத்தி செய்யப்படாமை காரணமாக 2019.07.30 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட ரத்து செய்யும் பரீட்சிப்பின் தீர்மானத்தின் பிரகாரம், அது அபிவிருத்தி செய்யப்படாமை காரணமாக ரத்து செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. குத்தகை தொகை முழுவதுமாக செலுத்தப்பட்டுள்ளது.

3. எஸ். எச். ரகுமான் - 40 பேர்ச்சஸ் : ரத்து செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

இந்த முதலீட்டு காணிகள் தொடர்பாக வலயத்தின் பௌதீக திட்டமிடல் கமிட்டியின் பரிந்துரையின் பேரில் காணியை பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பூர்வாங்க திட்டங்களில் வீட்டுத் தோட்டத்திற்கென ஒதுக்கப்பட்ட காணியில் வசிப்பிடத்திற்கென காணிகள் வழங்கப்பட்டிருந்தன. எனினும், பயங்கரவாத தாக்குதல் காரணமாக, பிரதான வீதியோரத்தில் பயிர்ச் செய்கைக்கென ஒதுக்கப்பட்ட காணியில் கிராமத்தைச் சேர்ந்த குடும்பங்களை குடியேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம், மனித நடமாட்டமில்லாத வீட்டுத் தோட்ட காணிகள் இருந்து வந்த பிரதேசங்களை முதலீட்டு கருத்திட்டத்தின் சாகுபடி நடவடிக்கைகளுக்கென பயன்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஓ) இலங்கை ஹிரா மன்றத்தின் மூலம் ஒரு முதலீட்டு திட்டமாக தொழிற் பயிற்சி பொறியியல் பல்கலைக்கழகமொன்றை ஸ்தாபிப்பதற்கென மகாவலி B வலயத்தில் 35 ஏக்கர் காணியை பெற்றுக் கொள்வதற்கான வேண்டுகோளுடன் கூடிய விண்ணப்பப் படிவம் 2013.05.02 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

அந்த வேண்டுகோளின் பிரகாரம் 2013.07.12 ஆந் திகதி நடத்தப்பட்ட 245 ஆவது பணிப்பாளா சபை கூட்டத்தில் சம்பந்தப்பட்ட கருத்திட்டத்திற்கென மகாவலி B வலயத்திலிருந்து 35 ஏக்கர் காணியைப் பெற்றுக் கொடுப்பதற்கு ஒப்புதல் வழங்கப்பட்டிருந்தது.

இலங்கை ஹிரா மன்றத்தின் மூலம் ஆரம்பிக்கப்பட்ட மேலே குறிப்பிடப்பட்ட கருத்திட்டத்தை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவில் பதிவு செய்ய வேண்டிய தேவையின் அடிப்படையில் முதலீட்டாளர் பெயரை “பெட்டிக்ளோ கம்பஸ் (பிரைவட்) லிமிடட்” என மாற்றிக் கொள்ள வேண்டுமென வேண்டுகோள் விடுக்கப்பட்டிருப்பதுடன், அது தொடர்பாக 2016.10.27 ஆந் திகதி நடத்தப்பட்ட 278 ஆவது பணிப்பாளர் சபை கூட்டத்தில் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம், “பெட்டிக்ளோ கம்பஸ் (பிரைவட்) லிமிடட்” நிறுவனத்திற்கு குத்தகை அடிப்படையில் 14.1646 ஹெக்டயார் காணியை வழங்குவதற்கென 2017.12.08 ஆம் திகதி விடயத்திற்கு பொறுப்பான கௌரவ அமைச்சரின் ஒப்புதல் பெறப்பட்டிருந்தது. அந்த ஒப்புதலை அடிப்படையாகக் கொண்டு “பெட்டிக்ளோ கம்பஸ் (பிரைவட்) லிமிடட்” நிறுவனத்தின் தலைவருக்கு நான்கு குத்தகை உறுதிப் பத்திரங்கள் மூலம் சம்பந்தப்பட்ட காணியை குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அந்த குத்தகை ஒப்பந்தங்கள் 2018.02.01 ஆந் திகதி ஜனாதிபதி அலுவலகத்தின் மூலம் அத்தாட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

இது தவிர, பல்கலைக்கழகத்தின் தங்குமிட வசதிகள் மற்றும் ஏனைய தேவைகள் என்பவற்றுக்கு ஹிரா மன்றத்திற்கு மேலும் 45 ஏக்கர் காணியை பெற்றுத் தர வேண்டுமென வேண்டுகோள் முன்வைக்கப்பட்டிருந்தது. அந்தக் காணியை பெற்றுக் கொடுப்பது தொடர்பாக விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரின் உடன்பாட்டை பெற்றுக் கொள்வதற்கென 2017.04.18 ஆம் திகதி பணிப்பாளர் நாயகத்தினால் ஒரு கடிதம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

2017.05.25 ஆம் திகதி இடம்பெற்ற 285 ஆவது பணிப்பாளர் சபை கூட்டத்தில் ஹீரா மன்றத்திற்கு குத்தகை அடிப்படையில் 18.2109 ஹெக்டயார் பரப்பளவு காணியை பெற்றுக் கொடுப்பதற்கு பூர்வாங்க அனுமதி வழங்கப்பட்டிருந்தது. சம்பந்தப்பட்ட காணியை வழங்குவதற்கு முன்னர் இலங்கை முதலீட்டு சபையின் ஒப்புதல், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் ஒப்புதல் மற்றும் விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரின் ஒப்புதல் என்பவற்றை பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற விடயம் குறிப்பிடப்பட்டிருந்தது.

“பெட்டிக்ளோ கம்பஸ் (பிரைவட்) லிமிடட்” நிறுவனத்தினால் தோராயமாக சுமார் 08 ஏக்கர் காணி ஒப்புதல் இல்லாமல் பயன்படுத்தப்பட்டு வருவதாக அறிக்கையிடப்பட்டுள்ளது. அந்தக் காணியின் பரப்பளவை சரியாக அடையாளம் கண்டு கொண்டு கொள்வதற்கும், மீள பெற்றுக்

கொள்வதற்குமென நீதிமன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொருட்டு 2019.08.13 ஆந் திகதி இடம்பெற்ற 311 ஆவது பணிப்பாளர் சபை கூட்டத்தில் ஒப்புதல் பெறப்பட்டிருந்தது.

ஔ) B வலயத்திற்குள் 411 முதலீட்டு கருத்திட்டங்கள் தொடர்பாக காணித் துண்டுகள் வழங்கப்பட்டிருப்பதுடன், அவற்றில் கருத்திட்டங்களை ஆரம்பிக்காமை மற்றும் குத்தகை தொகைகளை செலுத்தாமை ஆகிய விடயங்களின் அடிப்படையில் 96 கருத்திட்டங்களை ரத்து செய்வதற்கு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அதன் பிரகாரம், 41 கருத்திட்டங்களை ரத்து செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதே போல 77 கருத்திட்டங்கள் தொடர்பாக பாக்கி வரித் தொகைகளை அறவிட்டுக் கொள்வதற்கென கோரிக்கை கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டிருப்பதுடன், அவற்றில் 7 கருத்திட்ட முதலீட்டாளர்களுக்கு எதிராக வழக்குத் தொடர்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

B வலயத்திற்குள் காணிகள் வழங்கப்பட்டிருக்கும் முதலீட்டு கருத்திட்டங்களில் 2018.12.31 இல் உள்ளவாறு ரூ. 31,114,866.59 தொகையை பாக்கி வரித் தொகைகளாக அறவிடப்பட வேண்டியுள்ளது. அந்த பாக்கி வரித்தொகையில் ரூ. 20,557,691.80 தொகையை 2019.08.31 திகதியளவில் அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மேலும் அறவிட்டுக் கொள்ள வேண்டிய பாக்கி வரித்தொகை ரூ. 10,557,174.79 ஆகும்.

இந்த பாக்கி வரித்தொகைகளை அறவிட்டுக் கொள்வதற்கென மேலே குறிப்பிடப்பட்ட விதத்தில் கோரிக்கை கடிதங்களை அனுப்புவதற்கும், வழக்குத் தொடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

∴) 2016 ஆம் ஆண்டு தொடக்கம் 2018 ஆண்டு வரையில் பாக்கி வாடகை தொகைகளைச் செலுத்துவது தொடர்பாக கலந்துரையாடுவதற்கென இலங்கை மகாவலி அதிகார சபை மற்றும் நீர்ப்பாசன திணைக்களம் என்பவற்றுக்கிடையில் 2019.07.04 ஆந் திகதி ஒரு கலந்துரையாடல் இடம்பெற்றது. அச்சந்தர்ப்பத்தில் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கும் வாடகை தொகையை செலுத்துவதற்கு நீர்ப்பாசன திணைக்களத்திடம் நிதிகள் மற்றும் நிதியொதுக்குகள் இருந்து வரவில்லையென நீர்ப்பாசன பணிப்பாளர் நாயகம் தெரிவித்தார். மேலும், நீர்ப்பாசன திணைக்களத்திற்கு திறைசேரியிலிருந்து நிதிகள் கிடைத்து வருவதாகவும், இலங்கை மகாவலி அதிகார சபைக்கு வாடகை தொகைகளைச் செலுத்திய பின்னர் அந்த பணத் தொகைகள் மீண்டும் இலங்கை மகாவலி அதிகார சபையினால் திறைசேரிக்குச் செலுத்தப்படுவதன் காரணத்தினால் மதிப்பிடப்பட்டிருக்கும் வாடகைத் தொகையில் (ரூ. 31,50,000.00 இல்) 50% ஐ (அதாவது ரூ. 15,75,000.00 தொகையை) செலுத்துவதற்கு ஏற்பாடு செய்து தருமாறும் கேட்டுக் கொண்டிருந்தார். அது தொடர்பாக இலங்கை மகாவலி அதிகார சபையின் வலயங்களில் திருத்தல் வேலைகள் மேற்கொள்ளப்படும் நீர்ப்பாசனத் தொகுதிகள் தொடர்பாக நீர்ப்பாசன நீர் கதவுகளை (சலுகை) விலையில் உற்பத்தி செய்து வழங்குவதற்கும், மகாவலி E வலயத்தில் ஹசலகவில் நிர்மாணிப்பதற்கு எதிர்பார்க்கப்படும் மூன்று மாடி கட்டடத்திற்கு

இரும்பு பொருட்களை (சலுகை) விலைகளில் நிர்மாணித்து தருவதற்கும் உடன்பாடு எட்டப்பட்டது.

மேலே குறிப்பிடப்பட்ட விடயங்களுக்கு ஒப்புதலைப் பெற்றுக் கொள்வதற்கென பணிப்பாளர் சபை பத்திரமொன்று தயாரிக்கப்பட்டு, 2019.08.13 ஆம் திகதி இடம்பெற்ற 311 ஆவது பணிப்பாளர் சபை கூட்டத்தில் சமா்ப்பிக்கப்பட்டிருந்தது. அப்பொழுது மதிப்பிடப்பட்ட வாடகைத் தொகையில் 50% ஐ செலுத்துவதற்கான ஒப்புதல் கோரி, இலங்கை மகாவலி அதிகார சபையிடம் எழுத்து மூலமான ஒரு வேண்டுகோளை முன்வைக்குமாறு பணிப்பாளர் சபை நீர்ப்பாசன பணிப்பாளர் நாயகத்திற்கு தெரிவித்திருந்தது. அந்த வேண்டுகோள் கிடைத்த பின்னர் அதற்கென திறைசேரியின் ஒப்புதலை பெற்றுக் கொள்ளுமாறு இலங்கை மகாவலி அதிகார சபைக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்து. மேலும், நீர்ப்பாசன பணிப்பாளா நாயகத்தினால் சம்பந்தப்பட்ட வாடகை தொகைகளைச் செலுத்துவதற்கு நிதிகள் மற்றும் நிதியொதுக்குகள் 2019 ஆம் வருடம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக 2020 ஆம் ஆண்டில் அதற்கென ஒதுக்குகளை மேற்கொண்டு, கொடுப்பனவுகளை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

க) ஜாவத்தை பணிமனையிலிருக்கும் கட்டடங்கள் தொடர்பாக அதிகார சபையினால் மின்சார மற்றும் நீர்க் கட்டணங்களாக செலுத்தப்பட்டிருந்த ரூ. 10,616,946.00 தொகையில் ரூ. 1,815,490.55 தொகையை அதிகார சபை ஈடு செய்து கொண்டுள்ளது. மிகுதி தொகையான ரூ. 8,801,455.45 தொகையை ஈடு செய்து கொள்வதற்கென சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு எழுத்து மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கா) **தலைமை அலுவலக கட்டடங்கள் II**

| வரிசை எண் | | வாடகைக்கு வழங்கப்பட்ட தரப்பு | தற்பொழுது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் |
|---|---|---|---|
| | தலைமை அலுவலக கட்டடத்தின் | | |
| 1 | **8 ஆவது தளம்** | | இந்த அனைத்து கட்டடங்களினதும் குத்தகை வாடகை பெறுமதியை மதிப்பீடு செய்வதற்கென இல. MA/MT/08-03 B மற்றும் 2017.08.09 தேதியிட்ட கடிதம் முதன்மை பெறுமதி |
| 2 | **10 ஆவது தளம்** | மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு மகாவலி நீர் பாதுகாப்பு முதலீட்டு கருத்திட்டம் | |
| 3 | **11 ஆவது தளம்** | | |
| 4 | **12 ஆவது தளம்** | | |
| 5 | **493** | | |
| | | | |
| | **493 / 1** | | |

| | | | |
|---|---|---|---|
| | | | மதிப்பீட்டாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இக்கட்டடங்களின் சம்பந்தப்பட்ட குத்தகை வாடகைத் தொகைகளின் மதிப்பீடு இதுவரையில் கிடைக்கவில்லை. அதன் காரணமாக வாடகை ஒப்பந்தங்களில் கையொப்பமிடுவதில் ஒரு தாமதம் காணப்படுகின்றது. சம்பந்தப்பட்ட பெறுமதி மதிப்பீடுகள் கிடைத்த உடனேயே வாடகை ஒப்பந்தங்களில் கையொப்பமிட்டு, பாக்கி வாடகைத் தொகைகளுடன் அனைத்து வாடகைகளையும் அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| 6 | **ஜாவத்தை** | மகாவலி ஆலோசனை பணியகம் | 2018.01.01 ஆந் திகதி தொடக்கம் பாக்கி வாடகை தொகைகளுடன் வாடகை தொகைகளை செலுத்துமாறு கேட்டு இல. MA/MT/08/03-B மற்றும் 2019.06.24 ஆந் தேதியிட்ட கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இதுவரையில் வாடகைத் தொகைகள் செலுத்தப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| 7 | **ஜாவத்தை** | நீர்ப்பாசன மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ அமைச்சு | 2018.05.01 ஆந் திகதி தொடக்கம் பாக்கி வாடகை தொகைகளுடன் வாடகை தொகைகளை செலுத்துமாறு கேட்டு இல. MA/MT/08/03-B மற்றும் 2019.02.05 ஆந் தேதியிட்ட கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இதுவரையில் வாடகை தொகைகள் செலுத்தப்படவில்லை. |
| 8 | **ஜாவத்தை** | மத்திய பொறியியல் ஆலோசனை பணியகம் (CECB) | 2018.01.01 ஆந் திகதி தொடக்கம் பாக்கி வாடகை தொகைகளுடன் வாடகை தொகைகளை செலுத்துமாறு கேட்டு இல. MA/MT/08/03-B மற்றும் 2019.06.24 ஆந் தேதியிட்ட கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இதுவரையில் வாடகை தொகைகள் செலுத்தப்படவில்லை. |
| 9 | **ஜாவத்தை** | காலநிலை தாக்கங்களை குறைக்கும் கருத்திட்டம் (CRIP ) | 2018.05.01 ஆந் திகதி தொடக்கம் பாக்கி வாடகை தொகைகளுடன் வாடகை தொகைகளை செலுத்துமாறு கேட்டு இல. MA/MT/08/03-B மற்றும் 2019.02.05 ஆந் தேதியிட்ட கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இதுவரையில் வாடகை தொகைகள் செலுத்தப்படவில்லை. |
| 10 | **ஜாவத்தை** | மொறகஹகந்த களுகங்கை | 2018.01.01 ஆந் திகதி தொடக்கம் பாக்கி |

| | | | |
|---|---|---|---|
| | | அபிவிருத்தி கருத்திட்டம் | வாடகை தொகைகளுடன் வாடகை தொகைகளை செலுத்துமாறு கேட்டு இல. MA/MT/08/03-B மற்றும் 2019.06.24 ஆந் தேதியிட்ட கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இதுவரையில் வாடகை தொகைகள் செலுத்தப்படவில்லை. |
| 11 | **தெமட்டகொடை – பேஸ்லைன் வீதி** (206/20) | கடல் சுற்றாடல் பாதுகாப்பு அதிகார சபை | இந்தக் காணி மற்றும் கட்டடம் என்பவற்றின் ஒரு பாகத்தை கரையோர பாதுகாப்புத் திணைக்களத்திடம் ஒப்படைப்பதற்கும், ஏனைய பாகத்தை கடல் சுற்றாடல் பாதுகாப்பு அதிகார சபைக்கு நீண்ட கால குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கும் அமைச்சரவையின் ஒப்புதல் கிடைத்துள்ளது. அதன் பிரகாரம் மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வந்தன. பின்னர் மீண்டும் ஒரு முறை மேற்படி அமைச்சின் தீர்மானத்தை ரத்துச் செய்து அக்காணிகளை மீண்டும் இலங்கை மகாவலி அதிகார சபையிடம் ஒப்படைப்பதற்கு அமைச்சு தீர்மானித்துள்ளது. |

## B வலயத்தின் கட்டடங்கள்

B வலயத்திலுள்ள 39 கட்டடங்கள் தொடர்பாக ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படவில்லை என தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும், சமர்ப்பிக்கப்பட்டிருந்த பட்டியலின் பிரகாரம் ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படாத கட்டடங்களின் எண்ணிக்கை 19 ஆகும். அந்த 19 கட்டடங்கள் தொடர்பாக 2019 ஆம் ஆண்டு வரையில் மேற்கொள்ளப்பட்டிருக்கும் நடவடிக்கைகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| வரிசை எண் | கட்டட இலக்கம் | கட்டட வகை | வாடகைக்கு வழங்கப்பட்ட தரப்பு | 2019 ஆம் ஆண்டு வரையில் எடுக்கப்பட்ட நடவடிக்கை |
|---|---|---|---|---|
| 1 | SB/PO/RQ/08/BD/Q4/242 | A02 | திரு. எஸ்.எச். துஷார பிரேமலால் | உத்தியோகபூர்வ வாசஸ்தலத்திலிருந்து அகற்றுவதற்கு சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| 2 | SB/PO/RQ/08/BD/Q4/246 | A06 | தலைவர், ஸ்ரீ லங்கா டெலிகொம் நிறுவனம் தலைமை அலுவலகம், லோட்டஸ் வீதி, கொழும்பு 1 | ஒப்பந்தம் கைசாத்திடப்பட்டுள்ளது. |
| 3 | SB/SE/BM/08/BD/QS/577 | தரம் II | திரு. எம். பீ. கே. ஜயசிங்க | ஒப்பந்தத்தில் கைசாத்திடுவதற்கு அங்கு வசிப்பவர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. கையெப்பமிடும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன. |
| 4 | SB/SE/BM/08/BD/QS/581 | - | திரு. பீ. கிங்ஸ்லி சிரிரத்ன | |
| 5 | SB/SE/SU/08/BD/Q3/549 | தரம் III | திருமதி எச். ஏ. டீ. சுசீலாவதி | |
| 6 | SB/SE/BM/08/BD/QS/577 | விருந்தினர் விடுதி | திரு. பீ. ஆர்.பீ. நவரத்ன | |
| 7 | SB/SE/BM/08/BD/QS/581 | விருந்தினர் விடுதி | திரு. டப்ளியு. எம். வீரசேகர | |
| 8 | SB/SI/BM/08/BD/SQ/136 | தற்காலிக வீடு | திரு. கே. பீ. எஸ். ருவன் குமார | |

| | | | | |
|---|---|---|---|---|
| 9 | SB/SI/BM/08/BD/SQ/137 | தற்காலிக வீடு | திரு. ஏ. ஏ. சமன் குமார | |
| 10 | SB/SI/BM/08/BD/SQ/138 | தற்காலிக வீடு | திரு. எம். ஏ. பியதிகா கருணாரத்ன | |
| 11 | SB/SI/BM/08/BD/SQ/141 | தற்காலிக வீடு | திருமதி எஸ். லசந்தி பிரியதர்ஷனி | |
| 12 | SB/SI/BM/08/BD/SQ/143 | தற்காலிக வீடு | திரு. ஏ. ஏ. தரிந்து லகஷ்மன் | |
| 13 | SB/WJ/08/BD/Q3/ | தரம் IV | கடற்படை | |
| 14 | SB/EL/PA/08/BD/Q2/811 | தரம் II | திரு. ஆர்.எம்.ஜயரத்ன | |
| 15 | SB/EL/PA/08/BD/Q2/820 | தரம் II | திரு. பீ.வீ. மகீபால | |
| 16 | SB/EL/PA/08/BD/Q3/810 | தரம் III | திரு. ஆர்.விஜேரத்ன | |
| 17 | SB/EL/PA/08/BD/Q3/812 | தரம் III | திருமதி எச்.ஜீ. நிலந்தி பிரியங்கிகா | |
| 18 | SB/EL/PA/08/BD/Q4/826 | தரம் IV | திரு. ஆர். ஏ. செனவிரத்ன | |
| 19 | SB/EL/PA/08/BD/Q4/828 | தரம் IV | திரு. டப்ளியு. ஏ. சுசந்த குமார | |

**<u>முதன்மை வேலைகள் கட்டுப்பாடு மற்றும் இயக்குதல், பராமரிப்பு பிரிவு (கட்டடங்கள் 49)</u>**

மேலே குறிப்பிடப்பட்ட கட்டடங்களில் 13 கட்டடங்கள் மத்திய பொறியியல் ஆலோசனை பணியகத்திற்கு வழங்கப்பட்டிருக்கும் கட்டடங்களாக இருந்து வருவதுடன், அக்கட்டடங்களை மத்திய பொறியியல் ஆலோசனை பணியகத்திடம் (CECB) ஒப்படைப்பதற்கென நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

மிகுதி அனைத்து கட்டடங்களிலும் 09 கட்டடங்கள் தொடர்பாக மீண்டும் ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளன. ஏனைய கட்டடங்கள் தொடர்பான ஒப்பந்தங்களை கைச்சாத்திடுவதற்கு வருமாறு சம்பந்தப்பட்ட தரப்புக்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ள போதிலும், இதுவரை அவர்கள் வராத காரணத்தினால் தற்பொழுது அவர்கள் தொடர்பாக சட்ட ரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**வளவே வலயம் (07 கட்டடங்கள்)**

சம்பந்தப்பட்ட தரப்புக்களுடன் ஒப்பந்தங்களில் கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கி) ஏற்றுக் கொள்கிறேன். திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்வேன்.

கீ) ஏற்றுக் கொள்கிறேன். திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்வேன்.

கு) 05 வருடங்கள் தாண்டிய வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கும் ஒப்பந்தங்களில் பிடித்து வைத்திருக்கும் தொகை ரூ. 7,747.000 இருந்து வருகின்றது. அந்தப் பணத்தொகைகள் இதுவரையில் சம்பந்தப்பட்ட தரப்புக்களினால் கோரப்படவில்லை. அதன் காரணமாக அதனுடன் சம்பந்தப்பட்ட வைப்புத் தொகைகளை வருமானமாக கணக்கில் எடுத்து, கணக்குகளை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

கூ) இந்த ஒப்பந்ததாரர் 2018 ஆம் ஆண்டில் இந்த ஒப்பந்த வேலையை கைவிட்டுச் சென்றிருந்ததுடன், 2019 ஆம் ஆண்டின் போது அவர் மீண்டும் வேலையை ஆரம்பித்திருந்தார். அதன் காரணமாக, 2020 ஆம் ஆண்டில் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

கெ) 2018.12.31 திகதியன்று உள்ளவாறு மகாவலி பாதுகாப்புப் படையில் பணியாற்றி வந்த நிலையில் அரச நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்டிருந்த உத்தியோகத்தர்களுக்குச் செலுத்தப்பட்ட மேலதிக வேலை நேர கொடுப்பனவு மற்றும் பயணச் செலவுகள் என்பன ரூ. 31,448,940.00 ஆகும். இத்தொகையை ஈடு செய்யுமாறு ஜனாதிபதி செயலகத்திற்கும், பாதுகாப்பு அமைச்சுக்கும் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

கே) அதிகார சபையின் தலைமை அலுவலகத்தின் 28 உத்தியோகத்தர்கள் மத்திய அமைச்சு மற்றும் கருத்திட்டங்கள் என்பவற்றுக்கு விடுவிக்கப்பட்டுள்ளார்கள். 2018.12.31 திகதியன்று உள்ளவாறு இவ்விதம் விடுவிக்கப்பட்ட உத்தியோகத்தர்களின் சம்பளங்கள் ஈடு செய்யப்பட்டுள்ளன. மத்திய அமைச்சு மற்றும் ஏனைய அமைச்சுக்கள் என்பவற்றுக்கு விடுவிக்கப்பட்டிருக்கும் உத்தியோகத்தர்களின் சம்பளங்கள் மற்றும் மேலதிக நேர வேலை கொடுப்பனவுகள் என்பவற்றை ஈடு செய்யுமாறு அப்பிரிவுக்கு கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கை) சம்பந்தப்பட்ட தகவல்கள் (திட்டமிடல் மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல்) பணிப்பாளர் வசம் உள்ளன.



**பொறியியலாளர் பீ. ஏ. சுனில் எஸ். பெரேரா**
**பணிப்பாளர் நாயகம்**
**இலங்கை மகாவலி அதிகார சபை**

# இலங்கை மகாவலி அதிகார சபையின் செயலாற்றுகை அறிக்கை

# முதலீட்டுத் திட்டம்

# 2018

# 2018 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி செயற்பாடுகள்

## 1.1 நிதிசார் முன்னேற்றம்

2018ஆம் ஆண்டு தொடர்பான மொத்த மதிப்பீடு செய்யப்பட்ட முதலீடு ரூ. **2,733.50** மில்லியனாகும். நிதிசார் முன்னேற்றம் கீழே எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

ரூமில்

| விபரம் | வரவுசெலவு ஒதுக்கு ரூ (ரூ. மில்.) | செலவு (ரூ. மில்.) (2018.12.3) |
|---|---|---|
| | 2018 | |
| **மகாவலி கருத்திட்டங்கள்** | **1,158.00** | **1,109.18** |
| மகாவலி ஒருங்கிணைந்த கருத்திட்டம் (ஒருங்கிணைந்த நிதியம் ) | 290.00 | 290.00 |
| B வலயத்தின் மாதுறுஓயா வலது கரை அபிவிருத்திக் கருத்திட்டம். (ஒ.நி) | 60.00 | 60.00 |
| ரீதிமாலியத்த ஒருங்கிணைந்த கருத்திட்டம் (ஒ.நி) | 76.00 | 64.00 |
| றம்பக்கண்ஓயா ஒருங்கிணைந்த அபிவிருத்திக் கருத்திட்டம் (ஒ.நி) | 108.00 | 94.00 |
| வெலிஓயா ஒருங்கிணைந்த அபிவிருத்தி கருத்திட்டம் - L வலயம் (ஒ.நி) | 260.00 | 260.00 |
| அவசர உள்கட்டமைப்பு பழுதுபார்ப்பு வேலைகளையும் உள்ளடக்கிய பாரிய மற்றும் நடுத்தர நீர்ப்பாசன கருத்திட்டங்களின் புனரமைப்பு (ஒ.நி) | 150.00 | 142.50 |
| விவசாய மற்றும் கால்நடை வளங்களின் அபிவிருத்தி கருத்திட்டம் (ஒ.நி) | 214.00 | 198.67 |
| **நிர்வாகம் மற்றும் பராமரிப்பு (ஒ.நி)** | **1,575.50** | **1,498.18** |
| **மொத்தம்** | **2,733.50** | **2,607.34** |

## 1.2 மகாவலி கருத்திட்டங்கள்

### 1.2.1 மகாவலி ஒருங்கிணைந்த கருத்திட்டம்

நிதி ஒதுக்கீடு : உள்நாட்டு நிதிகள்

மதிப்பிடப்பட்ட செலவு : ரூ. 4,910 மில்லியன் (திருத்தப்பட்ட செலவு ஒதுக்கு)

கருத்திட்ட காலம் : 2007-2018

மகாவலி ஒருங்கிணைந்து கருத்திட்டம் நீர்ப்பாசன நீர் விநியோகத்தை உறுதிப்படுத்தி, விவசாயப் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கூடாக மாதுறுஓயா இடது கரைப் பிரதேசத்தில் வாழ்ந்து வரும் கிராமிய சமூகத்தினரின் பொருளாதாரத்தினை அபிவிருத்தி செய்வதனை நோக்கமாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டது. கருத்திட்ட செயற்பாடுகளில் 1982- 1986 காலப்

பிரிவில் நிர்மாணிக்கப்பட்ட நீர்ப்பாசனத் தொகுதிகளை புனரமைப்பதும் உள்ளடக்கும். அ) மாதுறுஓயா வலது கரை நீர்ப்பாசன புனரமைப்பின் கீழ் 52 கிலோமீற்றர் நீளமான பிரதான கால்வாய், 65 கிலோமீற்றர் நீளமான கிளைக் கால்வாய்கள், 459 கிலோமீற்றர் நீளமான நீர் விநியோக கால்வாய்கள், 1,138 கி.மீ வயல் கால்வாய்கள், 54 கி.மீ நீளமான நீர் போக்குவரத்து கால்வாய்கள், 80 கி.மீ நீளமான கிராமிய பாதைகளை இயக்குதல் மற்றும் பராமரித்தல் செயற்பாடுகள் மற்றும் சிறு குள புனரமைப்பு நடவடிக்கைகளையும் உள்ளடக்கிய விதத்தில் நீர் முகாமைத்துவத்திற்கென மாதுறுஓயா இடது கரையில் 1981-1986 காலப் பிரிவில் நிர்மாணிக்கப்பட்ட நீர்ப்பாசன வலைப்பின்னலை புனரமைப்புச் செய்தல்; ஆ) கிராமிய சுய உதவிக் கருத்திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டிருக்கும் தெரிவு செய்யப்பட்ட நீர் விநியோக சேவைகளை முறைப்படி மேம்படுத்துதல்; இ) விவசாய அபிவிருத்திக்கு உதவியை பெற்றுக்கொடுத்தல் மற்றும் விவசாய அமைப்புக்களை வலுவூட்டுதல் மற்றும் ஈ) பொருத்தமான சுற்றாடல் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டங்களை அமுல் செய்தல் என்பன அடங்குகின்றன.

2018ஆம் ஆண்டிற்கான (திருத்தப்பட்ட) நிதி ஒதுக்கு ரூ. 290 மில்லியன் ஆகும். வருட இறுதியில் அனைத்து நிதித் தொகைகளும் பயனுள்ள விதத்தில் பயன்படுத்தப்பட்டிருந்தன.

| **இல.** | **விபரம்** | **பௌதீக முன்னேற்றம் 31.12.2018** |
|---|---|---|
| 01 | நீர் விநியோக கால்வாய்களை நிர்மாணித்தல் / புனரமைத்தல் | 13.2 *கி.மீ.* |
| 02 | வயல் கால்வாய்களை நிர்மாணித்தல் / புனரமைத்தல் | 70.4 *கி.மீ.* |
| 03 | நீரோட்டங்களை புனரமைத்தல் | 03 |
| 06 | கட்டங்களை பழுதுபார்த்தல் | 2.5 |
| 09 | பங்கேற்பு அடிப்படையில் வயல் கால்வாய் புனரமைத்தல் | 2.1 *கி.மீ.* |

### 1.2.2 B வயலத்தின் மாதுறுஓயா வலது கரை கருத்திட்டம் (மல்வன்ன மற்றும் மகாவலி தன்ன)

நிதி ஒதுக்கீடு : உள்நாட்டு நிதிகள்
மதிப்பிடப்பட்ட செலவு : ரூ. 935,49 மில்லியன்
கருத்திட்ட காலம் : 2014-2018

பொலன்னறுவை மற்றும் மட்டக்களப்பு நிர்வாக மாவட்டங்களில் மகாவலி B வலயத்தில் சிங்கபுர மேல் பிரிவில் மகாவலிதன்ன மற்றும் மல்வென்ன மகாவலி வலயங்கள் அமைந்துள்ளதுடன், அவை இக்கருத்திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்யப்படுகின்றன. இப்பிரதேசங்களில் கடந்த ஒரு சில தசாப்தங்களில் நிலவி வந்த உள்நாட்டு நெருக்கடி நிலை காரணமாக மீள் குடியேற்றவாசிகள் பெரும்பாலானவர்கள் உள்நாட்டில் இடம்பெயர்ந்தவரக்ளாக இருந்து வந்தார்கள். அதன் விளைவாக, மீள குடியேற்றப்பட்ட குடும்பங்களின் சுமார் 1200 குடும்பங்கள் மீண்டும் தமது பூர்வீக கிராமங்களுக்குத் திரும்பிச் சென்றிருந்தார்கள்.

நெருக்கடியான சூழல் தணிந்ததன் பின்னர் 2014 ஆம் ஆண்டில் இந்த விசேட கருத்திட்டத்தின் கீழ் மீள் குடியேற்றம் மற்றும் புனர் வாழ்வளிப்பு நடவடிக்கைகள் ஆரம்பித்து வைக்கப்பட்டன. இங்கு சிங்கபுர பிரிவில் மல்வென்ன மற்றும் மகாவலிதென்ன அலகுகளில் 859 வீட்டுத் தோட்டக் காணிகள் மற்றும் 859 நீர்ப்பாசன காணிகள் என்பவற்றை அபிவிருத்தி செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்தது. பின்வருவன இக்கருத்திட்டத்தின் முதன்மையான பணிகளாக இருந்து வந்தன: (அ) இடம்பெயர்ந்திருக்கும் 859 குடும்பங்களை சிங்கபுர பிரிவில் மீண்டும் குடியேற்றுதல் மற்றும் அவர்களுடைய வதிவிடங்களை மீண்டும் ஸ்தாபித்தல்; (ஆ) தற்போது நீர்ப்பாசன வசதியைக் கொண்டிருக்கும் 521 ஹெக்டயார் நிலப்பரப்பை விவசாயத்திற்கென அபிவிருத்தி செய்தல்; மற்றும் 174 ஹெக்டயார் நிலப்பரப்பை வீட்டுத் தோட்டங்களுக்காக அபிவிருத்தி செய்தல்; (இ) மகாவலிதென்ன குளம் மற்றும் ஏனைய நீர்ப்பாசன கட்டமைப்புக்களை உருவாக்குவது வகையிலான பணிகள் பூர்த்தியடைந்துள்ளன. 2018 ஆம் ஆண்டுக்கான நிதியொதுக்கீடு (திருத்தப்பட்டது) ரூ. 60 மில்லியனாகும். வருட இறுதியில் அனைத்து நிதித் தொகைகளும் பயனுள்ள விதத்தில் செலவிடப்பட்டிருந்தன.

| இல. | விபரம் | பௌதீக முன்னேற்றம் 31.12.2018 |
|---|---|---|
| 01 | *நீர் விநியோக கால்வாய்களின் நிர்மாணம்* | 6.8 *கி.மீ* |
| 02 | *வயல் கால்வாய்களின் நிர்மாணம்* | 3 *கி.மீ* |
| 03 | சந்தைகள் மற்றும் கிராமப் பாதைகளின் நிர்மாணம் | 4 *கி.மீ* |
| 04 | மீள்நடுகை – 2000 கன்றுகள் | 2000 |





### 1.2.3 ரிதிமாலியத்த ஒருங்கிணைந்த அபிவிருத்தி கருத்திட்டம்

**நிதி ஒதுக்கீடு** : **உள்நாட்டு நிதிகள்**

**மதிப்பிடப்பட்ட செலவு** : **ரூ. 1,100 மில்லியன்**

**கருத்திட்ட காலம்** : **2012 -2018**

குடிசனக் கணிப்பீட்டு, புள்ளி விபரவியல் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட குடும்ப வருமானம் மற்றும் செலவு மதிப்பீட்டாய்வின் பிரகாரம், பதுளை நிர்வாக மாவட்டத்தைச் சேர்ந்த ரிதிமாலியத்த பிரதேச செயலகப் பிரிவு தொலை தூரத்தில் அமைந்திருக்கும், மிக மோசமான வறுமையைக் கொண்டிருக்கும் பிரதேச செயலகமாக இனங்காணப்பட்டிருந்தது. எனவே, மேலே

குறிப்பிடப்பட்ட பிரதேசத்தை அபிவிருத்தி செய்யும் நோக்கத்துடன் இலங்கை மகாவலி அதிகார சபையினால் ஐந்தாண்டு முதலீட்டுத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டது. இப்பிரதேசத்தில் உள்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்தல், அதே போல இப் பிரதேசத்தில் வாழ்ந்து வரும் குடும்பங்களுக்கு விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட பயனுள்ள நிலையான பொருளாதார வாய்ப்புக்களை திறந்து விடுதல் என்பன இக்கருத்திட்டத்தின் அடிப்படைக் குறிக்கோள்களாகும். இதன் கீழ் (அ) வர்த்தக பயிர் உற்பத்தியை விருத்தி செய்தல் (ஆ) கால்நடை வளங்களின் அபிவிருத்தி (இ) தொழில் முனைவு அபிவிருத்தி போன்ற விடயங்கள் தொடர்பாக முக்கியமாக கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது.

2018 ஆம் ஆண்டுக்கான (திருத்தப்பட்ட) நிதி ஒதுக்கீடு ரூ.76 மில்லியன் ஆகும். 2018 டிசம்பர் மாதம் முடிவின் போது இத்தொகையில் ரூபா 64 மில்லியன் பயனுள்ள விதத்தில் செலவிடப்பட்டிருந்தது.

| **இல.** | விளக்கம் | **பௌதீக முன்னேற்றம் யூலை 2017 – யூன் 2018** |
|---|---|---|
| 01 | நீர்ப்பாசனத் தொகுதிகளை புனரமைப்புச் செய்தல் | 2 அணைக்கட்டுக்கள் |
| | | 3.3 கி.மீ. நீர்ப்பாசனக் கால்வாய்கள் |
| 02 | வீதிகளை புனரமைத்தல் | 5.2 கி.மீ. தார்ப் பாதை |
| | | 150 மீ கொங்கிறீட் பாதை |
| 03 | கட்டடங்களின் நிர்மாணம் | 09 |
| 04 | பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் | 74 நிகழ்ச்சித்திட்டங்கள் |
| 05 | விவசாய மற்றும் கால்நடை நிகழ்ச்சித்திட்டம் | 1,439 குடும்பங்கள் |







**1.2.4 றம்பக்கண்ஓயா ஒருங்கிணைந்த அபிவிருத்திக் கருத்திட்டம்**

நிதி ஒதுக்கீடு : உள்நாட்டு நிதிகள்

மதிப்பிடப்பட்ட செலவு : ரூ. 1,086 மில்லியன்

கருத்திட்ட காலம் : 2012 -2019

றம்பக்கண்ஓயா ஒருங்கிணைந்த அபிவிருத்திக் கருத்திட்டத்தின் மூலம் அம்பாறை மாவட்டத்தில் மகாஓய மற்றும் பதியத்தலாவ பிரதேச செயலகப் பிரிவுகளைச் சேர்ந்த நீர்த்தேக்கங்கள் மற்றும் நீர்ப்பாசனக் கட்டமைப்புக்கள் என்பவற்றின் அபிவிருத்தி

தொடர்பாக முதன்மையாக கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது. இக்கருத்திட்டத்தின் முதன்மையான நோக்கங்கள் வருமாறு: (அ) சிறிய மற்றும் நடுத்தரக் குளங்கள் மற்றும் அணைக்கட்டுக்கள் என்பவற்றை புனரமைத்தல்; (ஆ) 70 கி.மீ. நீளமான கிராமியப் பாதைகளை புனரமைத்தல்; (இ) விவசாய உற்பத்தியை 50% ஆல் அதிகரித்தல்; (ஈ) குடிநீர் கிணறுகளை அமைப்பதன் மூலம் நீர் விநியோகம்; (ஈ) கிணறுகள் மற்றும் பொதுச் சுகாதார பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டம் (கழிப்பறைகளை அமைத்தல்).

2018 ஆம் ஆண்டுக்கான (திருத்தப்பட்ட) நிதி ஒதுக்கீடு ரூ. 108 மில்லியன் ஆகும். 2018 டிசம்பர் மாதம் முடிவின் போது இத்தொகையில் ரூபா 94 மில்லியன் பயனுள்ள விதத்தில் செலவிடப்பட்டிருந்தது.

| **இலக்கம்** | விவரம் | பௌதீக முன்னேற்றம் 31.12.2018 |
|---|---|---|
| 01 | நீர்ப்பாசனத் தொகுதிகளை புனரமைப்புச் செய்தல் | 2 அணைக்கட்டுக்கள் |
| | | 1.925 கி.மீ. நீர்ப்பாசனக் கால்வாய் |
| 02 | வீதிகளை புனரமைத்தல் | 0.55 கி.மீ. பாதை |
| | | 4 கி.மீ தார்ப் பாதை |
| 03 | கட்டடங்களை நிர்மாணித்தல் | 06 |
| 04 | காணி மற்றும் காணி அபிவிருத்தி (நட்ட ஈடு வழங்குதல் ) | 22 காணித் தூண்டுகள் |
| 05 | விவசாய மற்றும் கால்நடை வளர்ப்பு நிகழ்ச்சித்திட்டம் | 1,557 குடும்பங்கள் |








### 1.2.5 **வெலிஓய ஒருங்கிணைந்த அபிவிருத்திக் கருத்திட்டம் - L வலயம்**

நிதி ஒதுக்கீடு : உள்நாட்டு நிதிகள்

மதிப்பிடப்பட்ட செலவு : ரூ. 3,957 மில்லியன்

கருத்திட்ட காலம் : 2012 – 2018

மகாவலி வலயத்தின் அபிவிருத்திக்கென அநுராதபுரம், வவுனியா, திருகோணமலை மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கும் விதத்தல் இக்கருத்திட்டம் அமுல் செய்யப்பட்டு வருகின்றது. இடம்பெயர்ந்த 6,788 குடும்பங்களுக்கான வீட்டுத் தோட்டச் செய்கைக்கான காணிகள், நீர்ப்பாசனக் காணிகள், தேவையான பௌதீக மற்றும் சமூக உள்கட்டமைப்பு வசதிகள் என்பவற்றை வழங்குதல் இக்கருத்திட்டத்தின் நோக்கமாகும்.

இதன் கீழ் (அ) 11கிராமங்களில் 6,788 விவசாயக் குடும்பங்களை மீளக் குடியேற்றுதல் . (ஆ)4187 ஹெக்டேயார் பரப்பளவைக் கொண்ட விவசாயக் காணிகளை அபிவிருத்தி செய்தல் (இ) சந்தை மற்றும் கிராமியப் பாதைகளை நிர்மாணித்தல் மற்றும் விருத்தி செய்தல் (ஈ) சமூக உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்தல் என்பன இடம்பெற்று வருகின்றன.

2018ஆம் ஆண்டுக்கான (திருத்தப்பட்ட) நிதி ஒதுக்கு ரூ. 260 மில்லியன் ஆகும். 2018ஆம் ஆண்டின் முடிவின் போது அனைத்து நிதித் தொகைகளும் ஆக்கபூர்வமான விதத்தில் பயன்படுத்தப்பட்டிருந்தன.

| **இலக்கம்** | விவரம் | பௌதீக முன்னேற்றம் யூலை 31.12.2018 |
|---|---|---|
| 01 | காணிகளை அடையாளப்படுத்தல் மற்றும் அளவை செய்தல் | 2000 காணித் துண்டுகள் |
| 01 | நீர்ப்பாசனக் கால்வாய்களை புனரமைத்தல் | 5 கி.மீ. |
| 02 | கட்டடங்களை நிர்மாணித்தல் | 23 |
| 03 | வீதிகளை நிர்மாணித்தல் | 55 கி.மீ. |
| 04 | விவசாயக் கிணறுகளை அமைத்தல் | 19 |
| 05 | குடிநீர் விநியோக கருத்திட்டம் | 80 தாங்கிகள் |
| 06 | பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் | 157 நிகழ்ச்சித்திட்டங்கள் |
| 07 | விவசாய மற்றும் கால்நடை வளர்ப்பு நிகழ்ச்சித்திட்டம் | 3000 குடும்பங்கள் |








### 1.2.6 அவசர உள்கட்டமைப்பு புனரமைப்பை வேலைகளையும் உள்ளடக்கிய விதத்தில் பாரிய மற்றும் நடுத்தர நீர்ப்பாசனக் கருத்திட்டங்களை புனரமைத்தல்

நிதியொதுக்கு : உள்நாட்டு நிதிகள்

மதிப்பிடப்பட்ட செலவு : ரூ. 825 மில்லியன்.

கருத்திட்ட காலம் : 2015 - 2018

முதன்மை வேலைகள், நீர்த்தேக்கங்களின் பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்புப் பணிகள் (ஆ) நீர்ப்பாசன உள்கட்டமைப்பு வசதிகளை புனரமைத்தல் மற்றும் (இ) இலங்கை மகாவலி அதிகார சபையின் கீழ் வரும் ஹுருலுவெவ, உடவளவே, மகாவலி வலயங்கள் B, C, H, L மற்றும் முதன்மை வேலைகள் நிர்வாகம் மற்றும் பராமரிப்பு பிரிவு என்பவற்றின் கீழ் வரும் பொறுப்பு பொறியியலாளர் பிரிவுகளின் நீர்ப்பாசன நீர் விநியோகக் கால்வாய்களுக்கு இடையில் பாதைகளை அமைத்தல் மற்றும் புனரமைத்தல் என்பன இந்தக் கருத்திட்டத்தின் நோக்கங்களாக இருந்து வருகின்றன. 2018ஆம் ஆண்டுக்கான (திருத்தப்பட்ட) நிதியொதுக்கு ரூ. 150 மில்லியனாகும். 2018 டிசம்பர் முடிவின் போது அதில் ரூ. 142.50 மில்லியன் பயனுள்ள விதத்தில் பயன்படுத்தப்பட்டிருந்தது.

| **இலக்கம்** | விவரம் | பௌதீக முன்னேற்றம் யூலை 2017 – யூன் 2018 |
|---|---|---|
| 01 | *முதன்மை* நீர்த்தேக்கங்கள் தொடர்பான அவசர உள்கட்டமைப்பு வசதிகளின் புனரமைப்பு | பாரிய நீர்த்தேக்கங்கள் 8 இல் 95% |
| 01 | 2018ஆம் ஆண்டு தொடர்பாக கீழ் பிரதேச நீர்ப்பாசன உள்கட்டமைப்பு வசதிகளின் புனரமைப்பு | 100 % |

### 1.2.7 விவசாய மற்றும் கால்நடை வளங்கள் அபிவிருத்திக் கருத்திட்டம்

நிதியொதுக்கு : உள்நாட்டு நிதிகள்

மதிப்பிடப்பட்ட செலவு : ரூ. 220 மில்லியன்

கருத்திட்ட காலம் : வருடாந்தம் (01.01.2018- 31.12.2018)

தேசிய உணவு உற்பத்தி நிகழ்ச்சித்திட்டத்துடன் இணைந்த விதத்தில் நாட்டின் உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்ளும் பொருட்டு உள்நாட்டு விவசாய இறக்குமதிகளை குறைத்துக்கொள்ளக்கூடிய விதத்தில் உள்நாட்டு உணவுப் பயிர்களின் சாகுபடி மற்றும் கால்நடை உற்பத்திகள் என்பவற்றை முழுமையாக விருத்தி செய்வதற்கென இக் கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

2018ஆம் ஆண்டு தொடர்பான விவசாய முன்னுரிமைத் துறைகள் வருமாறு: பயிர் பன்முகப்படுத்தல், மகாவலி L வயத்திற்கு பொருத்தமான மிளகாய் வகைகளை அடையாளம் காணுதல், தரம் வாய்ந்த விதை உற்பத்திக்கான நிகழ்ச்சித்திட்டங்கள், பழ மரங்கள் தொடர்பான புனரமைப்பு நிகழ்ச்சித்திட்டங்கள், சேதன உரப் பாவனையை அதிகரித்தல், வறட்சியுடன் கூடிய காலநிலைக்கு ஈடு கொடுக்கக்கூடிய விதத்தில் விவசாயக் கிணறுகளை அமைத்தல் மற்றும் புனரமைப்புச் செய்தல், உள்நாட்டு பொருளாதார அபிவிருத்திக்கான நிகழ்ச்சித்திட்டம் மற்றும் நீரின் செயற்திறனை உயர்த்துதல். விருத்தி செய்யப்பட்ட கால்நடை அபிவிருத்தி வேலைத்திட்டம், திரவப் பால் உற்பத்தி, கோழி உற்பத்தி, நன்னீர் மற்றும் அலங்கார மீன் உற்பத்தி நடவடிக்கைகள் என்பன தொடர்பாக அறிவூட்டும் செயலமர்வுகள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டன.

2018ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கு ரூ. 220 மில்லியனாக இருந்து வந்துடன், அதில் ரூ.75.5 மில்லியன் இக்காலப் பிரிவின் போது பயன்படுத்தப்பட்டிருந்தது.

## விவசாயப் பயிர் சாகுபடி

2017/2018 பெரும்போகத்தின் போது மகாவலி பிரதேசங்களில் நெல் உற்பத்தி செய்யப்பட்ட நிலப்பரப்பு 84,460 ஹெக்டயார்களாகும். மகாவலி வலயங்களில் நெல் உற்பத்தி சுமார் 469,176 மெற்றிக் தொன்களாக இருந்து வந்தது. 2018 சிறு போகத்தின் போது நெற் சாகுபடி செய்யப்பட்ட நிலப்பரப்பு 80,960 ஹெக்டயார்களாக இருந்து வந்துடன், அறிக்கையிடப்பட்ட உற்பத்தி 436,875 மெற்றிக் தொன்களாக இருந்து வந்தது. 2017/2018 பெரும்போகம் மற்றும் 2018 சிறுபோகம் என்பவற்றின் போது அறிக்கையிடப்பட்டிருக்கும் மொத்த நெல் உற்பத்தி 906,052 மெட்ரிக் தொன்களாகும். இவ்வருடத்தின் போது மகாவலி வலயங்களின் சராசரி நெல் அறுவடை ஹெக்டெயார் ஒன்றுக்கு 5.5 மெற்றிக் தொன்களாக இருந்து வந்தது.

ஏனைய பயிர்களின் (ஏனைய களப் பயிர்கள், பழ வகைகள், மரக்கறி வகைகள், மற்றும் நிலையான பயிர்கள்) சாகுபடி 36,164 ஹெக்டெயார் நிலப்பரப்பில் மேற்கொள்ளப்பட்டிருந்தது. சோயா அவரை 1,510 ஹெக்டெயார், சோளம் 3,805 ஹெக்டெயார், பெரிய வெங்காயம் 535 ஹெக்டெயார், மிளகாய் 683 ஹெக்டெயார், கறுப்பு கௌபி 137 ஹெக்டெயார். கௌபி 443 ஹெக்டெயார் மற்றும் நிலக்கடலை 704 ஹெக்டயார் என்ற விதத்தில் சாகுபடி செய்யப்பட்டிருந்தது. மேலும், 13,557 ஹெக்டெயார் நிலப்பரப்பில் பழ வகைகளும், 6,312 ஹெக்டெயார் நிலப்பரப்பில் நிலையான பயிர்களும் சாகுபடி செய்யப்பட்டிருந்தன. விவசாயத் திணைக்களத்தின் தரவுகளின் பிரகாரம், இக்காலப் பிரிவின் போது உள்நாட்டு விவசாய உற்பத்தி மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகளுக்கு இலங்கை மகாவலி அதிகார சபை உயரளவிலான பங்களிப்பினை வழங்கியிருந்தது: தேசிய உற்பத்திக்கு வழங்கிய பங்களிப்பு – நெல் 24%, சோயா அவரை 85%, நிலக்கடலை 6%, மிளகாய் 9%.

## பால் உற்பத்தி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

மகாவலி பிரதேசங்களில் மேலதிக வருமான மார்க்கங்களை அறிமுகம் செய்து வைத்தல் மற்றும் மகாவலி குடியேற்றவாசிகளின் போஷணை மட்டத்தை உயர்த்துதல் என்பவற்றை நோக்கமாகக் கொண்டு இலங்கை மகாவலி அதிகார சபையின் கால்நடை வளங்கள் அபிவிருத்திப் பிரிவுக்கூடாக கால்நடை வளர்ப்பை மேம்படுத்துவதற்கென நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. மகாவலி வலயங்களில் பால் உற்பத்தியை அபிவிருத்தி செய்தல் மற்றும் நெறிப்படுத்துதல் என்பன இலங்கை மகாவலி அதிகார சபையின் கால்நடை வளங்கள் அபிவிருத்தி பிரிவின் பொறுப்புக்களாக இருந்து வருகின்றன.

2018ஆம் ஆண்டு யூன் மாதம் தொடக்கம் டிசம்பர் மாதம் வரையிலான காலப் பிரிவின் போது மகாவலி பிரதேசங்களில் இருந்த மொத்த கால்நடைகளின் எண்ணிக்கை 109,060 ஆகும். இக்காலப் பிரிவின் போது சுமார் 27.1 மில்லயின் லீற்றர் பால் உற்பத்தி செய்யப்பட்டிருந்தது.

இக்காலப் பிரிவின் போது 98 மாட்டுக் கொட்டில்கள் அமைக்கப்பட்டதுடன், கால்நடைகளின் இனப்பெருக்க ஆற்றலை விருத்தி செய்யும் திட்டத்தின் கீழ் 02 இனப்பெருக்க நிலையங்கள் உருவாக்கப்பட்டிருந்தன. மேலும், மாதிரிப் பண்ணைகளுக்காக நடமாடும் பால் கறக்கும் இயந்திரங்கள் 22 விநியோகிக்கப்பட்டிருந்ததுடன், விலங்குகளுக்குகான 42 வைத்திய முகாம்கள் மற்றும் தடுப்பு மருந்தேற்றல் நிகழ்ச்சித்திட்டங்கள் என்பன நடக்கப்பட்டிருந்தன.

## நன்னீர் மீன் வளர்ப்பு மற்றும் அலங்கார மீன் வளர்ப்பு

மகாவலி குடியேற்றவாசிகளின் போஷாக்கு நிலை மற்றும் பொருளாதார நிலை என்பவற்றை மேம்படுத்தும் விடயத்தில் மகாவலி நீர்த்தேக்கங்களில் நன்னீர் மீன்பிடித் தொழிலை அபிவிருத்தி செய்வது ஒரு முதன்மையான செயற்பாடாக இருந்து வருகின்றது. 2018 ஆம் ஆண்டின் முடிவின் போது மீன் உற்பத்தி 13.7 மெட்ரிக் தொன்களாக இருந்து வந்தது. மீன் உற்பத்தியை அதிகரிக்கும் பொருட்டு 20 இனப்பெருக்க நிலையங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. அலங்கார மீன் உற்பத்தியை விருத்தி செய்வதற்கென சம்பந்தப்பட்ட காலப் பிரிவின் போது 41 சேற்றுப் பொய்கைகள் மற்றும் 26 சீமெந்து தொட்டிகள் என்பன அமைக்கப்பட்டிருந்தன. மீன்பிடி சமூகத்தினை மேலும் வலுவூட்டுவதற்கென 36 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டிருந்தன.

## 1.3 பராமரிப்பு மற்றும் அபிவிருத்தி

தேசிய உணவு உற்பத்தி நிகழ்ச்சித்திட்டத்துடன் இணைந்த விதத்தில் விவசாயத் துறையை அபிவிருத்தி செய்யும் நோக்கத்துடன் இலங்கை மகாவலி அதிகார சபை அதன் 10 வலயங்களில் 106,971 ஹெக்டெயார் நீர்ப்பாசன நிலப் பரப்புக்கு நீர் விநியோகத்தை உத்தரவாதப்படுத்தும் பொருட்டு பாரிய நடுத்தர மற்றும் சிறு அளவிலான 484 நீர்த்தேக்கங்களை கொண்டுள்ளது. 10,202 கிலோமீற்றர் நீளமான நீர்ப்பாசனக் கால்வாய் வலையமைப்பின் இயக்குதல் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான பொறுப்பைக் கொண்ட நிறுவனமாக அது இருந்து வருகின்றது. அதே வேளையில் 330,000 இற்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு பயன்களை பெற்றுக்கொடுக்கும் பொருட்டு மகாவலி வீதிக் கட்டமைப்பு மற்றும் ஏனைய உள்கட்டமைப்பு வசதிகள் என்பவற்றை பராமரித்து, புனரமைப்புச் செய்யும் பொறுப்பினையும் இலங்கை மகாவலி அதிகார சபை கொண்டுள்ளது.

மேலும் இப்பிரதேசத்தில் ஏற்கனவே வசித்து வரும் மக்கள் மற்றும் எதிர்கால சந்ததியினர் ஆகியோரின் மேம்பாட்டை கருத்தில் கொண்டு வினைத்திறன் மிக்க விதத்தில் காணிகளை நிர்வகித்தல், தொழில்முனைவு அபிவிருத்தி, சுற்றாடல் பாதுகாப்பு மற்றும் நிறுவன அபிவிருத்தி என்பன தொடர்பான நடவடிக்கைகளும், மகாவலி குடியேற்றப் பிரதேசங்களில் விளையாட்டு செயற்பாடுகளை அபிவிருத்தி செய்வதும் இலங்கை மகாவலி அதிகார சபையின் பிரதான பணிகளாக இருந்து வருகின்றன. இதற்கென 2018ஆம் ஆண்டு வரவுசெலவுத் திட்டத்தில் ரூ. 1,575.00 மில்லியன் தொகை ஒதுக்கப்பட்டிருந்ததுடன், இக்காலப் பிரிவின் போது இத்தொகையில் ரூ. 1,498.18 மில்லியன் ரூபா பயனுள்ள விதத்தில் செலவிடப்பட்டிருந்தது.

### 1.3.1 நீர்ப்பாசனக் கட்டமைப்பை பராமரித்தல்

இரண்டாம் தடவை காடுகளை துப்புரவு செய்தல், நீர்ப்பாசன கால்வாய் கட்டமைப்பில் இருக்கும் சேற்றுப் படிவுகளை அகற்றுதல், நீர்ப்பாசன கட்டமைப்பின் பழுதுபார்ப்பு மற்றும் அபிவிருத்தி, வீதிகளுக்கு கற்களை பதித்தல் போன்ற செயற்பாடுகள் மகாவலி நீர்ப்பாசன கட்டமைப்பு பராமரிப்பு நடவடிக்கைகளின் கீழ் வருகின்றன. 2018 ஆம் ஆண்டுக்கென இதற்கான நிதி ஒதுக்கு ரூ. 482.65 மில்லியன் ஆகும். நீர்ப்பாசனக் கட்டமைப்பின் பராமரிப்புச் செயற்பாடுகளுக்கென இத்தொகை ஒதுக்கப்பட்டிருப்பதுடன், மேலே குறிப்பிடப்பட்ட பணிகளை நிறைவேற்றிக் கொள்ளும் பொருட்டு 2018 டிசம்பர் மாதம் வரையில் அத்தொகையில் ரூ. 430.31 பயனுள்ள விதத்தில் செலவிடப்பட்டிருந்தது.

மகாவலி வலயங்களில் 1,014 விவசாயிகள் சங்கங்கள் செயற்பட்டு வருவதுடன், நீர் விநியோக கால்வாய் தொகுதியின் பராமரிப்பு மற்றும் செயற்பாட்டு நடவடிக்கைகள் அவற்றினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், நிறுவன அபிவிருத்திப் பிரிவின் அறிவுறுத்தலின் பேரில் 2018ஆம் ஆண்டில் 16 விவசாய அமைப்புக்கள் வர்த்தக மட்டத்திற்கு உயர்த்தப்பட்டன.

### 1.3.2 காணி உறுதிகளை வழங்குதல்

காணி உறுதிகளை வழங்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் முன்னேற்றம் கீழே காட்டப்பட்டுள்ளது.

| வலயம் | இலக்கு (2018) | 31.12.2018 இல் முன்னேற்றம் அளிப்பு பத்திரம் / அனுமதிப் பத்திரம் / நீண்ட கால குத்தகை |
|---|---|---|
| B | 9,174 | 8,270 |
| C | 8,440 | 8,440 |
| D | 1,198 | 1,990 |
| H | 5,230 | 4,240 |
| L | 2,750 | 2,750 |
| மொறகஹகந்த | 1,857 | 1,857 |
| விக்டோரியா | 920 | 255 |
| ஹுருலுவெவ | 1,302 | 1,300 |
| வளவே | 8,570 | 8,570 |
| றம்பக்கண் ஓயா | 1,500 | 1,500 |
| **மொத்தம்** | **41,741** | **39,172** |



### 1.3.3 நிறுவன அபிவிருத்தி

தொழில்முனைவு வாய்ப்புக்கள், தனிநபர் அபிவிருத்தி, நிறுவனங்களை வலுவூட்டுதல், பெண்களை வலுவூட்டுதல், குடியேற்றவாசிகளுக்கு சமூக மற்றும் கலாசார அபிவிருத்தியை பெற்றுக்கொடுத்து, மகாவலி பிரதேசத்தில் வசித்து வருபவர்களின் சமூக பொருளாதார நிலைமையை உயர்த்துதல் என்பன குடியேற்றத்தின் பின்னர் இலங்கை மகாவலி அதிகார சபை மேற்கொண்டு வரும் முக்கியமான பணிகளாக இருந்து வருகின்றன. அதன் பிரகாரம் குடியேற்ற வாசிகளின் இரண்டாவது மற்றும் மூன்றாவது தலைமுறையினரின் அபிவிருத்தியைக் கருத்தில் கொண்டு இலங்கை மகாவலி அதிகார சபையின் நிறுவன அபிவிருத்திப் பிரிவினால் மேலே குறிப்பிடப்பட்ட துறைகளை உள்ளடக்கும் விதத்தில் பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் செயலமர்வுகள் என்பன ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

அதன் பிரகாரம் 2018 காலப் பிரிவின் போது நிறுவன அபிவிருத்தி பிரிவு 3,090 நிறுவன அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களையும், 651 சனசமூக அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களையும், பெண்கள் அபிவிருத்தி தொடர்பான 88 நிகழ்ச்சித்திட்டங்களையும் நடத்தியிருந்தது.

### 1.3.4 வனவளம் மற்றும் சுற்றாடல்
### வனவள மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு

மகாவலி பிரதேசத்தின் சுற்றாடல் சார்ந்த விடயங்களை முகாமைத்துவம் செய்து, ஒருங்கிணைக்கும் பொறுப்பு சுற்றாடல் பிரிவினால இடையறாது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.
தேசிய சுற்றாடல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் "புனருதய" மூன்றாண்டு கால செயற்திட்டத்திற்கு முன்னுரிமை வழங்கப்படுவதுடன், மகாவலி பிரதேசங்களுக்குள் பசுமை கருதுகோள் எண்ணக்கருவை நடைமுறையில் செயற்படுத்துவதற்கென சுற்றாடல் அமைச்சினால் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

வன வள மற்றும் சுற்றாடல் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கென 2018ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட தொகை ரூ.35 மில்லியன் ஆகும். அதில் ரூ.30.66 மில்லியன் தொகை வருட இறுதியின் போது பயனுள்ள விதத்தில் பயன்படுத்தப்பட்டிருந்தது.

இயற்கை வளங்கள் பாதுகாப்பின் கீழ் 2018 டிசம்பர் மாதம் வரையில் 15367 மீற்றர் சாகுபடி மண் பாதுகாக்கப்பட்டிருந்தது. மேலும் நாற்றுமேடைகளின் முகாமைத்துவம் மற்றும் கன்று உற்பத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 357,934 கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டதுடன், பிரதேசத்தின் வன அடர்த்தியை உயர்த்தும் நோக்கத்துடன் 33,595 கன்றுகள் நடப்பட்டன. நீரின் தரத்தை அளவிடுவதற்கும், மேம்படுத்துவதற்கும் இவ்வாண்டின் போது நீரின் தரத்தை அளவிடும் 19 நிலையங்களும், சேற்றுப்படிவு மட்டத்தை அளவிடும் 07 நிலையங்களும் ஸ்தாபிக்கப்பட்டன.

சுற்றடால் கல்வி மற்றும் விழிப்புணர்வூட்டும் 23 நிகழ்ச்சித்திட்டங்கள் பாடசாலை மாணவர்களின் பங்கேற்புடன் இக்காலப் பிரிவின் போது நடத்தப்பட்டதுடன், மகாவலி பிரதேசங்களில் காணப்படும் கடுமையான ஆக்கிரமிப்பு இயல்பிலான தாவரங்களை கட்டுப்படுத்துவதற்கும், முகாமைத்துவம் செய்வதற்குமென 24 குளங்களில் நிகழ்ச்சித்திட்டங்கள் அமுல் செய்யப்பட்டன. மகாவலி பிரதேசங்களில் யானை - மனித மோதலை கட்டுப்படுத்தும் பொருட்டு 2018ஆம் ஆண்டின் போது 18.6 கிலோமீற்றர் நீளமான யானை வேலி அமைக்கப்பட்டது. மேலும், (மொறகஹகந்த கருத்திட்டத்தின் 299 கிலோமீற்றர் வேலியையும் உள்ளடக்கிய விதத்தில் ) மொத்தம் 666 கிலோமீற்றர் நீளமான யானை வேலியை பராமரிக்கும் செயற்பாடும் இக்காலப் பிரிவின் போது மேற்கொள்ளப்பட்டது.

### புதுப்பிக்கத்தக்க சக்தி உற்பத்தியை அதிகரித்தல் (சிறு அளவிலான நீர் மின் சக்தி கருத்திட்டங்கள்)

மகாவலி பிரதேசங்களில் சிறு அளவிலான 21 நீர்மின் உற்பத்தி கருத்திட்டங்களை உருவாக்குவதன் மூலம் 56.03 மெகாவோட் மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. 2018 டிசம்பர் மாதம் முடிவின் போது அவற்றில் 12 கருத்திட்டங்கள் வர்த்தக செயற்பாடுகளை ஆரம்பித்திருந்ததுடன். அவற்றின் கொள்திறன் 39.85 மெகாவோட் ஆகும்.

### 1.3.5 வணிக அபிவிருத்தி

நவீன தளபாடங்களுடன் இணைந்த விதத்தில் 08 சுற்றுலா விடுதிகளை புதுப்பிக்கும் செயற்பாடுகள் இப்பொழுது பூர்த்தியடைந்துள்ளன. 04 சுற்றுலா விடுதிகளில் தளபாடங்ள் புதுப்பிக்கப்பட்டுள்ளன. 12 சுற்றுலா விடுதிகள் தொடர்பாக இணையத்திற்கு ஊடாக தங்குமிட வசதிகளை ஒதுக்கிக் கொள்ளும் வாய்ப்பு வழங்கப்படுகின்றது.





கொத்மலை மாதுறுஓயா றுகுணுகெத

**மகாவலி ஹெல பொஜுன்ஹல உணவகங்கள்**

வெலிகந்த, தெஹியத்தகண்டிய மற்றும் மொறகஹகந்த ஆகிய இடங்களில் விற்பனை நிலையங்களுடன் இணைந்த விதத்தில் மூன்று மகாவலி ஹெல பொஜுன்ஹல (உணவகங்கள்) உருவாக்கப்பட்டுள்ளன.





**மகாவலி வலயங்களில் தனியார் துறை முதலீடுகளுக்கான வாய்ப்புக்கள்**

2018ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் வரையில் மகாவலி வலயத்தில் 36 புதிய முதலீடுகள் மற்றும் ஏனைய அபிவிருத்திக் கருத்திட்டங்கள் தொடர்பாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| முதலீட்டு கருத்திட்டங்கள் | 29 |
| *புதுப்பிக்கத்தக்க சக்தி கருத்திட்டம் (சூரிய ஒளி / உயிர்த்திணிவு)* | 07 |

**சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில்துறை மேம்பாடு**

பிராந்திய அபிவிருத்தி வங்கியின் ஒத்துழைப்புடன் ஏற்பாடு செய்யப்பட்ட “மகாவலி சவிய” நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில்களை மேம்படுத்தும் நிகழ்ச்சித்திட்டங்களுக்கு ஊடாக சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சியாளர்கள் 1722

பேருக்கு ரூ. 285 மில்லியன் வழங்கப்பட்டுள்ளது. ‘‘மொறகஹகந்த அத்வெல’’ புதிய கடன் திட்டத்தின் கீழ் ‘‘மகாவலி திரிய’’ விசேட கடன் திட்டத்தின் கீழ் 33 தொழில் முயற்சியாளர்களுக்கு ரூ. 9.6 மில்லியன் வழங்கப்பட்டிருந்தது. 2017ஆம் ஆண்டு தொடக்கம் 2018ஆம் ஆண்டின் முடிவு வரையில் இக்கடன் தொகைகள் வழங்கப்பட்டுள்ளன.

**படகுச் சேவைகள்**

சுற்றாடலுக்கு உசிதமான படகுச் சேவைகள் வணிக அபிவிருத்தியின் மற்றொரு பிரதான வருமான உருவாக்க கருத்திட்டமாக இருந்து வருகின்றது. 2018ஆம் ஆண்டின் முடிவின் போது மகாவலி அதிகார சபையின் கீழ் விக்டோரியா, பொல்கொல்ல, தம்புலுஓய மற்றும் லொக்கல்ஓயா ஆகிய பிரதேசங்களில் 6 படகுச் சேவைகள் செயற்பட்டு வந்தன. இதன் மூலம் கிடைத்த வருடாந்த குத்தகை வருமானம் ரூ.1.1 மில்லியன் ஆகும்.

### 1.3.6 கடமைகளை பொருத்தமான விதத்தில் மேற்கொள்வதற்கு உசிதமான சூழலொன்றை உருவாக்குவதற்கான வசதிகளை வழங்குதல்

### I. மனித வள அபிவிருத்தி / புதிய ஆட்சேர்ப்புக்கள் / ஊழியர்களுக்கான பதவி உயர்வுகள்

வினைத்திறன் மிக்க பயனுறுதி வாய்ந்த சேவை ஒன்றை வழங்கும் பொருட்டு திருத்தப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறைகளின் பிரகாரம் 2018 டிசம்பர் மாதம் முடிவு அளவில் பெரும்பாலான புதிய ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்ளக்கூடிய வாய்ப்பு அதிகார சபைக்கு கிடைத்திருந்தது.

| நிரப்பப்பட்ட வெற்றிடங்களின் எண்ணிக்கை | | பதவி உயர்வுகள் | |
|---|---|---|---|
| சிரேஷ்ட முகாமைத்துவம் (சி.மு) | 1 | சிரேஷ்ட முகாமைத்துவம் (சி.மு) | 02 |
| நடுத்தர முகாமைத்துவம் (ந.மு) | 26 | நடுத்தர முகாமைத்துவம் (ந.மு) | 14 |
| கனிஷ்ட முகாமைத்துவம் (க.மு) | 5 | கனிஷ்ட முகாமைத்துவம் (க.மு) | 33 |
| முகாமைத்துவ ஊழியர் அணி<br>அலுவலக உதவியாளர் 3,<br>அலுவலக உதவியாளர் 2-2<br>அலுவலக உதவியாளர் 1-2 | 109 | முகாமைத்துவ ஊழியர் அணி<br>அலுவலக உதவியாளர் 3,<br>அலுவலக உதவியாளர் 2-2<br>அலுவலக உதவியாளர் 1-2 | 77 |
| ஆரம்ப மட்டம் | 70 | ஆரம்ப மட்டம் | 04 |
| **மொத்தம்** | **211** | **மொத்தம்** | **130** |

### ii. பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள்

ஊழியர்களின் ஆற்றல்கள் மற்றும் அறிவுத் திறன் என்பவற்றை உயர் மட்டத்திற்கு எடுத்து வரும் விதத்தில் அவர்களுடைய திறன்களை அபிவிருத்தி செய்வதற்கென மகாவலி அதிகார சபையின்

| நடத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் ஜனவரி – டிசம்பர் 2018 | | |
|---|---|---|
| | நிகழ்ச்சித்திட்டம் | பங்கேற்றோர் எண்ணிக்கை |
| சிரேஷ்ட முகாமைத்துவம் (சி.மு) | 10 | 40 |
| நடுத்தர முகாமைத்துவம் (ந.மு) | 27 | 151 |
| கனிஷ்ட முகாமைத்துவம் (க.மு) | 24 | 218 |
| முகாமைத்துவ ஊழியர் அணி | 35 | 447 |
| ஆரம்ப மட்டம் | 4 | 202 |
| **மொத்தம்** | **100** | **1058** |

பயிற்சிப் பிரிவின் மூலம் பல்வேறு தலைப்புக்களின் கீழ் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் நடத்தப்பட்டன.

### 1.3.7 சட்டத்தை அமுலாக்குதல்

வருடத்தின் இக்காலப் பிரிவின் போது சட்டமா அதிபர் திணைக்களத்தின் அறிவுறுத்தல்களின் கீழ் சட்டப் பிரிவின் மூலம் 160 வழக்குகள் தொடர்பாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதுடன், முதன்மை வேலைகள் பிரிவு 32 வழக்குத் தவணைகளில் பங்கேற்றது. மேலும் 3 புதிய வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

### 1.3.8 நீர் முகாமைத்துவம்

இலங்கை மின்சார சபை, நீர் விநியோக சபை, நீர்ப்பாசன திணைக்களம் மற்றும் வளிமண்டலவியல் திணைக்களம் என்பவற்றுடன் இணைந்து, உரிய ஒருங்கிணைப்பு வேலைகளை மேற்கொண்டு, விவசாயம், நீர் மின்சாரம் மற்றும் குடிநீர் என்பவற்றுக்கான தேவைகளுக்கும், அதே போல நீருக்கான ஏனைய தேவைகளுக்கும் மகாவலி நீர்த்தேக்கங்களிருக்கும் நீர் வளம் பயனுள்ள விதத்தில் பயன்படுத்தப்படுவதனை நீர் முகாமைத்துவ செயலகம் உறுதிப்படுத்துகின்றது. அதே போல நீர் முகாமைத்துவ சபையின் இயக்குதல் கொள்கை தீர்மானங்களை எடுப்பதில் நீர் முகாமைத்துவ செயலகம் அதற்கான தகவல்கள் மற்றும் பரிந்துரைகள் என்பவற்றை பெற்றுக் கொடுக்கின்றது.

**மகாவலி நீர்த்தேக்கங்களில் நீர் சேகரிப்பு கொள்திறன்**

| நீர்த்தேக்கம் | நேரடி கொள்திறன் (கன மில்லி மீற்றர் ) (31.12.2018) | செயற்பாட்டு கொள்திறன் (கன மில்லி மீற்றர்) |
|---|---|---|
| கொத்மலை | 143.5 | 121.3 |
| விக்டோரியா | 593.8 | 559.8 |
| ரந்தெனிகல | 770.1 | 376.7 |
| ரன்டெம்பே | 5.2 | 0.8 |
| போவதென்ன | 17.2 | 14.9 |
| உடவளவே | 266.2 | 237.9 |
| மொறகஹகந்த | 556.3 | 503.7 |
| தம்புளு ஓயா | 10.8 | 5.4 |
| கண்டலம | 31.4 | 27.6 |
| கலாவெவ | 116.9 | 101.9 |
| உல்ஹிட்டிய / ரத்கிந்த | 124.6 | 61.2 |
| மாதுரு ஓயா | 521.3 | 402.3 |
| **மொத்தம்** | **3,157.3** | **2,413.5** |

### 1.3.9 உள்ளக் கணக்காய்வு

அதிகார சபையின் பணிகள் தொடர்பாக செயல்திறனை உறுதிப்படுத்திக் கொள்ளும் பொருட்டு உள்ளக கணக்காய்வு பிரிவின் மூலம இவ்வாண்டின் போது 17 கணக்காய்வு அறிக்கைகளும், 17 கணக்காய்வு ஐய வினா அறிக்கைகளும் வெளியிடப்பட்டிருந்தன.

2. **மகாவலி நீர்த்தேக்கங்களின் மின்சக்தி உற்பத்தி கொள்திறன்**

| நீர்த்தேக்கம் | மொத்த கொள்திறன் (தோராயமாக) (MCM) | மொத்த மின் சக்தி கொள்திறன் (MW) | மின் சக்தி உற்பத்தி - 2017 | மின் சக்தி உற்பத்தி - ஜனவரி – யூன் 2018 |
|---|---|---|---|---|
| கொத்மலை | 174 | 201 (67 x 3) | 230.44 | 208.79 |
| விக்டோரியா | 722 | 210 (70x3) | 193.59 | 250.48 |
| ரந்தெனிகல | 860 | 126 (63x2) | 53.53 | 118.36 |
| ரன்டெம்பே | 7.001 | 49 (24.5x2) | 38.37 | 66.26 |
| உள்ஹிட்டிய/ ரத்கிந்த | 146 | - | - | - |
| மாதுரு ஓயா | 596 | - | - | - |
| போவதென்ன | 23.5 | 40 (40x1) | 47.21 | 23.13 |
| உடவளவே | 268.65 | 6 (LB- 2x2+RB- 2x1) | 1.25 | 8.98 |
| உக்குவலை | - | 40 (20x2) | 99.36 | 84.44 |
| பொல்கொல்ல | 4.112 | - | | |
| மொறகஹகந்த | 570 | 25 | - | 28.57 |
| **மொத்தம்** | **3,371** | **697** | **664** | **789** |

**03 . புணருதய சுற்றாடல் பாதுகாப்பு தேசிய நிகழ்ச்சித்திட்டம் (2016-2018)**

**நிறுவனத்தின் / பிரிவின் பெயர்: சுற்றாடல் மற்றும் வன வளப் பாதுகாப்பு பிரிவு, இலங்கை மகாவலி அதிகார சபை**

| துறை | | துறைகள் தொடர்பான நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் உத்திகள் . | சுட்டெண்கள் | கடந்த ஆண்டு சாதனைகள் | | | எதிர்பார்க்கப் படும் இலக்கு |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | 2016 | 2017 | 2018 | 2019 |
| **நிலைத்திருக்கக்கூடிய நில முகாமைத்துவப் பிரிவின் சுருக்கக் குறிப்பு** | 1 | இயற்கை வளங்களின் பாதுகாப்பு மற்றும் மேல் நீரேந்து பிரதேசங்களின் முகாமைத்துவம் | சோலட், வன்பர், ஓரங்குல கோட்டு சாய்வுகள், வடிகான்கள், செக் டாம் | 16574m<br>$19.36m^3$ | 14754m<br>$30.48m^3$ | 15367m,<br>176.17m3<br>(அக்.80) | 16000m<br>$100m^3$ |
| | | | கன்று உற்பத்தி (கன்றுகள் ) | 332705 | 169178 | 143619 | 240000 |
| | | | கல்வி மற்றும் அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் | 68 | 29 | 23 | 80 |
| | | | மர நடுகை (கன்றுகள்) | 118701 | 13360 | 33595 | 25000 |
| | 2 | உயிர் பன்முகத் தன்மை, நீரேந்து பரப்புக்களின் தரம், நீர் மூலங்களின் பேண் தகு தன்மையை உயர்த்துதல் | இழைய வளர்ச்சி மூங்கில் கன்றுகளின் உற்பத்தி | 387574 | 114813 | 166558+ இழையங்களுக்கான பாத்திரங்கள் 25275 | 100000 |
| | | | நீரியல் மற்றும் நீரின் தரத்தை அளவிடும் அறிக்கைகள் | 7 அளவீட்டு நிலையங்கள் அறிக்கையிடப்பட்டுள்ளன . | 7 அளவீட்டு நிலையங்கள் அறிக்கையிடப்பட்டுள்ளன . | மகாவலி கங்கை மேல் நீரேந்து பரப்பின் பரிந்துரை செய்யப்பட்ட 19 இடங்களில் நீரின் தரம் ஆய்வு செய்யப்படுகின்றது. | அளவீட்டு நிலையங்கள் 7 |
| | | | ஆக்கிரமிப்பு தாவரங்களை அகற்றுதல் (பாரிய நிதிக்கு முன் தாவரம்) | ஹெக். 2.5 | - | ஹெக். 10.75 | ஹெக். 15 |

| துறை | | துறைகள் தொடர்பான நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் உத்திகள் . | சுட்டெண்கள் | கடந்த ஆண்டு சாதனைகள் | | | எதிர்பார்க்கப் படும் இலக்கு |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | 2016 | 2017 | 2018 | 2019 |
| | 3 | குளங்களை / நீர்த்தேக்கங்களை அண்மித்த பிரதேசங்களில் ஆக்கிரமிப்பு இயல்பைக் கொண்ட தாவரங்கள் பரவுவதனை தடுப்பதற்கான ஒருங்கிணைந்த நிகழ்ச்சித்திட்டம் (கீழ் பள்ளத் தாக்கு) | குளங்கள்/ நீர்த் தேக்கங்கள் | 15 | 26 | நீர்த்தேக்கங்கள் -24, பாரிய நிதிகும்பா தாவரம் - ஹெக்டெயார் 6.8 | 50 |
| | 4 | மகாவலி வலயங்களில் தாவரப் போர்வையை அதிகரிப்பதற்கென கன்றுகளை நடும் நிகழ்ச்சித்திட்டம் (50 இலட்சம் கன்றுகள் நிகழ்ச்சித்திட்டம் ) | கன்று உற்பத்தி (கன்றுகள்) | 279369 | 325383 | 214315 (சுற்றாடல் பிரிவின் கீழ் ஒரு வலயம் தொடர்பாக மட்டுமே நிதி ஒதுக்கப்படுகின்றது). ஏனைய கன்று உற்பத்தி செயற்பாடுகள் விவசாயப் பிரிவின் கீழ் இடம்பெறுகின்றன. | 300000 |
| | | | மர நடுகை (கன்றுகள்) | 61320 | 35563 | 352590 | 200000 |
| | 5 | யானை – மனித மோதலை தணிப்பதற்கான நிகழ்ச்சித்திட்டம் | மின்சார வேலி அமைத்தல் | 2.5 | 7 | 1.6 | 10 |
| | | | தற்போதைய மின்சார வேலிகளை பராமரித்தல் - கி.மீ | 55 | 75 | கி.மீ. 666 (மொறகஹகந்த கருத்திட்டம் - 299 கி.மீ களை உள்ளடக்கிய விதத்தில் | 350 |
| | | | உயிரியல் வேலி உருவாக்குதல் மற்றும் பராமரிப்பு கி.மீ. | 12 | 7 | 17 | 50 |